வரு.75 இல. 29 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-

தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2023 ஜுலை 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

July 23 Sunday, 2023



## கருணை இல்லம் கோகுலம்



ஆதரவற்ற சிறுவர்களுக்கு கல்வி, நல்வாழ்வு, சிறந்த எதிர்காலம் ஏற்படுத்திக்கொடுக்கும் கருணை இல்லம் கோகுலம், பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்கள் திருமண நாள், அன்புக்குரியவர்களின் நினைவு தினம் போன்ற எந்தவொரு விசேட நிகழ்வுகளுக்காகவும் இச்சிறியோரின் ஒரு நாளுக்கான பராமரிப்புச் செலவு தொகை 65,000 ரூபாவை வழங்கி உதவலாம்.

நிதியை வைப்பிலிட வங்கி விபரம்:

Commercial Bank A/C No : 1050669901 Office : Sri Sri Radhakirshna Temple.
A/C Name :- ISKCON,Shift Code CCEYLKLX No : 188, Newchetty Street, Colombo-13
Gokulam No : 607 A, Negombo Road Mobola, Wattala. Phone : 0112433325 , Email: iskcon@slt.lk



## ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ணா கட்டிட வேலைகள் இறுதிக்கட்டத்தில்



ஆலய திருப்பணிக்கு நிதியை பணமாகவோ காசோலையாகவோ வங்கிக் கணக்கிலோ செலுத்தலாம்

Commercial Bank - Colombo-13
A/C Name: ISKCON Temple Fund
A/C No:- 1120017042
Hatton National Bank - Colombo-13
A/C Name: ISKCON
A/C No- 207010000891

ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண (ஆலயம்)
188, புதுச்செட்டித்தெரு, கொழும்பு – 13, தொலைபேசி:– 011–2433325
Fax:2471089, Email:iskcon@slt.lk Web: www.iskcon.lk


/ Thinakaran.lk / ThinakaranLK



தாய், சேய் உயிரைப் பறித்த கோர கொலைச் சம்பவம் 07



இந்தியாவின் சமகால வன்முறைக் களமாக மணிப்பூர் 10



மத்திய வங்கியின் சுயாதீனத்தைப் பேணும் மத்திய வங்கிச் சட்டமூலம் 12



இலங்கை தடகளத்தின் திருப்பம் 24

# இலங்கை-இந்தியாவுக்கிடையே வலுவான உறவுக்கான பொருளாதாரக் கூட்டாண்மை

## ஜனாதிபதி ரணில் – பிரதமர் மோடிக்கிடையிலான பேச்சுவார்த்தை வெற்றி

புரிந்துணர்வு மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் வலுவான உறவுக்காக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் ஒரு விரிவான பொருளாதார பங்காளித்துவ இலக்கு இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கடல்வழி மற்றும் விமானப் போக்குவரத்து, எரிசக்தி மற்றும் மின்சாரம், வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் நிதி விவகாரங்கள் மற்றும் தனிப்பட்ட உறவுகள் ஆகிய 5 துறைகள் மூலம் இந்தக் கூட்டாண்மை இலக்கு கடந்த 21ஆம் திகதி இரு நாடுகளினுடைய தலைவர்களின் ஒருமித்த கருத்துடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் மற்றும் பிராந்தியத்தின் நீண்டகால அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்துக்காக செயல்படுத்தப்பட்ட இந்தக் கூட்டாண்மை இலக்கில் விரைவான முன்னேற்றத்தை அடைவதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இலங்கை – இந்திய தலைவர்கள் அறிவுறுத்தல்களை வழங்கினர்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையில் புதுடில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தை மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளது.

இந்தியாவின், புதுடில்லியில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற சந்திப்புகளின் போது, இந்தியப் பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடியும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பெறுபேறுகளை இலக்காகக் கொண்ட பயனுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபட்டிருந்தனர்.



1. இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகளை வெற்றி கொள்வதில் இந்திய - இலங்கை பங்குடமை, வலுவான மூலாதாரமாக இருந்ததாக இரு நாடுகளினதும் தலைவர்கள் ஏற்றுக்கொண்ட அதேசமயம், இலங்கை மக்களுக்காகவும் அரசாங்கத்துக்காகவும் முன்னொருபோது இல்லாத வகையில், இந்தியாவால் தக்கதருணத்தில் வழங்கப்பட்ட ஆதரவுக்காக இந்தியாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட பாராட்டுகளை தெரிவித்தார்.

2. இலங்கையில் ஜனநாயகம், ஸ்திரத்தன்மை, பொருளாதார மீட்சி, ஆகியவற்றுக்கான தமது அர்ப்பணிப்பையும் நம்பிக்கையையும் இரு தலைவர்களும் இச்சந்திப்புகளின் போது மீண்டும் வலியுறுத்திய 06

**• மின்சக்தி, வலுசக்தி இணைப்புகள், வான், கடல்வழிப் போக்குவரத்து, சுற்றுலாத்துறை, வர்த்தகம், பொருளாதார மற்றும் நிதி ரீதியான தொடர்புகள், துறைமுக உட்கட்டமைப்பு மேம்படுத்தல் தொடர்பாகவும் பேச்சில் இணக்கம்**









மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் 36ஆவது ஆண்டு ஆடிப்பூர மஹோற்சவ பாற்குட பவனி, ஆலய தர்மகர்த்தா சுந்தரலிங்கம் தலைமையில் நேற்று (22) சிறப்பாக நடைபெற்றது. பாற்குட பவனி, பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக மயூராபதி ஆலயத்துக்கு வந்தது. ஆலய குருக்கள் சிவஸ்ரீ உதயராகவக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெற்று அபிஷேகத்துக்காக பாற்குடம் வழங்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள். *(படங்கள்: கொழும்பு வடக்கு நிருபர்)*

13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதுடன்

# தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசு நிறைவேற்றும்

## இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளதாக பிரதமர் மோடி தெரிவிப்பு

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி, அதன் மூலம் தமிழ் மக்களுக்கு கண்ணியமும் மரியாதையும் கொண்ட வாழ்க்கையை இலங்கை உறுதி செய்யுமென்று தான் எதிர்பார்ப்பதாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஹைதராபாத் இல்லத்தில் சந்தித்த பின்னர் பேசும் போதே, இந்தியப் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஒரு வருடத்தை நிறைவு செய்துள்ளதாகவும் இலங்கையின் முன்னேற்றத்துக்காக சிறந்த உத்வேகத்துடன் செயலாற்றுகின்றமைக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது பாராட்டுக்களெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்பதில் மகிழ்ச்சியடைவதாகவும், 06

இந்துசமுத்திர பிராந்தியத்திலுள்ள

# அபிவிருத்தி வாய்ப்புகளை அதிகளவில் பயன்படுத்துவதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பு

## எந்தவொரு நாட்டுக்கும் தனியாக முன்னேற முடியாது



வளர்ந்து வரும் உலகின் மிகப்பெரிய பொருளாதாரப் பிராந்தியங்களில் ஒன்றான இந்துசமுத்திர பிராந்தியத்தின் அபிவிருத்தி வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகுமென, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இன்று உலகில் எந்தவொரு நாடும் தனித்து முன்னேற முடியாது. உலகிலுள்ள அனைத்து அபிவிருத்தியடைந்த 06


## எங்கள் கருத்து

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி


# ஆற்றல் மிகுந்த இரு தலைவர்களின் ஆளுமையினால் வலுவடையும் நட்புறவு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயம் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி உட்பட இந்தியாவின் முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் இலங்கையின் ஆட்சித் தலைவர்கள் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள போதிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இவ்விஜயமானது மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்ததைக் காண முடிந்தது. ஏனெனில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததன் பின்னர் பதவி வகித்த இலங்கையின் ஆட்சித்தலைவர்கள் ஒவ்வொருவரும் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் காத்திரமான நகர்வுகளை முன்னெடுக்காததன் காரணமாக இந்தியாவுடன் மாத்திரமன்றி ஒட்டுமொத்த சர்வதேசத்துடனும் இலங்கை தனது உறவுகளை சீராக்கிக் கொள்ளத் தவறியிருந்தது.

இதன் காரணமாக இலங்கை ஜனாதிபதிகள் ஒவ்வொருவரும் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயங்கள் புதுடில்லிக்கு முக்கியத்துவம் மிகுந்ததாகத் தோன்றவில்லையென்பதே உண்மை. இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்திலும், இந்தியாவுடனான இதயசுத்தியான நல்லுறவைப் பேணுவதிலும் இலங்கை நம்பகத்தன்மையை வெளிப்படுத்தவில்லையென்பதே இந்தியாவின் கவலையாக இருந்தது.

எனினும் தற்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தை 06

**13ஆவது** தொடர்பாக தமிழ் தரப்பிடம்

# ஜனாதிபதி ரணில் முன்வைத்த திட்டத்துக்கு மோடி வரவேற்பு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



நடைமுறைச் சாத்தியமான முறையில் மாகாணசபை முறைமையை நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றிருப்பதுடன், தேவையான 06



# பிரமிட் திட்டம் நடத்தியவரின் சொகுசு கார் தீயிட்டு எரிப்பு

## ஆத்திரமுற்ற வைப்பீட்டாளர்கள் கைவரிசை

06

# மட்டக்களப்பு ரயில் பாதையில் சட்டவிரோத கட்டடங்கள்

## அகற்றி சுத்தப்படுத்த அமைச்சர் பந்துல நடவடிக்கை



பொலன்னறுவை மட்டக்களப்பு ரயில் பாதையின் இரு புறங்களும் அனுமதியற்ற கட்டட நிர்மாணங்கள் மற்றும் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்கள் தொடர்பாக உடனடியாக விசாரணை நடத்தி, அவற்றை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளருக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் 06

# நாட்டில் மேலும் இரு மருந்துகளுக்கு தடை

## தரமற்ற மருந்து இறக்குமதிக்கு அனுமதி இல்லை



இலங்கையில் மேலும் இரண்டு வகையான மயக்க மருந்துகள் தடை செய்யப்பட்டுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார். 06

ஜனாதிபதியின் இந்திய விஜயம் பெரு வெற்றி

# இந்திய வம்சாவளி மக்களது மேம்பாட்டுக்கு ரூ. 3,000 மில்.

## இந்தியப் பிரதமரால் ஒதுக்கீடு



இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியான மலையக மக்களின் மேம்பாட்டுக்காக பாரதப் பிரதமர் நரேந்திர மோடியால் 3 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் 06

# ஆர்ப்பாட்டம் இல்லாத அற்புதக் கலைஞன் சாந்திநாதன்



இலங்கை அன்னை பெற்றெடுத்த இணையற்ற கலைஞர்களில் ஒருவரான நாகமுத்து சாந்திநாதனுக்கு நாம் நிரந்தர பிரியாவிடை கொடுத்து ஒரு மாதம் கடந்து விட்டது. இலங்கையிலும், கனடாவிலும் கலைத்துறையில் அவர் பதித்த சுவடுகள் காலத்தால் அழியாதவை.

அவர் நாடகக் கலைமீது கொண்டிருந்த அபரிமிதமான ஆற்றல், செயல் நேர்த்தி, கலைஞர்களை தேடிச் சென்று பாராட்டும் பெருந்தன்மை, நேரந்தவறாமை, அழகுணர்ச்சி, நகைச்சுவை கொப்பளிக்கும் உரையாடல்கள் என்பவற்றை அன்பார்ந்த நண்பர்கள் சுட்டிக்காட்டி அஞ்சலி செய்து வருகிறார்கள்.

சாந்திநாதன் கட்டுப்பத்தை தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தில் பயிலும் காலத்தில் தமது நாடக ஆற்றலை வெளிப்படுத்தினார். அவரது கலைத்துவத்தை கணித்த இலங்கை வானொலி ஒலிபரப்பாளர் வி.என்.மதிஅழகன் தனது தேசிய சேவை சங்கநாதம் என்ற இளைஞர் நிகழ்ச்சிக்கு அவர் பொருத்தமானவர் என இனம் கண்டார். கலையகம் அழைத்தார். ஒலிபரப்பு பயிற்சிகளையும் செவ்வனே கொடுத்தார். பின்னர் அவர் நடத்திய வர்த்தக சேவை ஆடவர் அரங்கு நிகழ்ச்சியிலும் பங்குபெற வைத்தார். சாந்திநாதனின் புகழ் பரவியது.

1950 ஒக்ரோபர் 27 இல் சாந்திநாதன் பிறந்தார். இவர் ஆரம்பக் கல்வியை அளவெட்டி ஞானோதயா, பின்னர் மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலைகளில் கற்றார். இடைநிலைக் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலும் உயர் நிலைக் கல்வியை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் நிறைவு செய்தார். மொறட்டுவ தொழில் நுட்ப பல்கலைக்கழக பட்டப் படிப்புக்குத் தெரிவாகிய சாந்திநாதன் கனிஷ்ட தொழில் நுட்பவியல் பட்டதாரி ஆனார். இலங்கை நீர்ப்பாசன திணைக்களத்தில் பொறுப்பதிகாரியாக ரம்பாவ, பாவற்குளம் ஆகிய இடங்களில் கடமையாற்றிய சாந்தி, இரண்டாண்டு காலம் ஈராக்கில் தொழில்நுட்ப அதிகாரியாக பணிபுரிந்தார்.

1989இல் மனைவி பிள்ளைகளுடன் கனடாவிற்கு புலம்பெயர்ந்தார்.

மகாஜனக் கல்லூரியில் பயின்ற காலத்தில் இல்லங்களுக்கு இடையேயும் கல்லூரிகளுக்கு இடையேயும் இடம்பெறும் பேச்சுப் போட்டிகளில், முதலிடம் பெறும் மாணவனாக சாந்தி திகழ்ந்தார்.

கதிரேசர்பிள்ளை ஆசிரியரின் நெறியாள்கையில் சாந்தி நடித்த 'ஜீவமணி', 'காங்கேயன் சபதம்' எனும் இரு நாடகங்களும் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற நாடகங்களாகும்.

பல்கலைக்கழக காலங்களில் 'பிச்சை வேண்டாம்', 'புதியதொரு வீடு', 'எழிலரசி', 'விழிப்பு' ஆகிய நாடகங்களில் நடித்துள்ளார்

கனடாவில் 1993 ஒக்ரோபர் 16 மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய முதல் முத்தமிழ் விழா நாடகமொன்றில் நடித்த என்னைத் தேடிவந்து ஒருவர் பாராட்டுகிறார். இவர் தன்னை சாந்திநாதன் நடிகர், இயக்குனர், வானொலிக் கலைஞர் என அறிமுகம் செய்கிறார். மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அன்று பாராட்டியதில் ஆரம்பமான சாந்திநாதனின் நட்பு குடும்ப உறவாகி தொடர்ந்தது.

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களுக்கு மதிப்பளித்துப் பாடறிந்து ஒழுகும் சாந்திநாதனை அனைவரும் நேசித்தார்கள். சொந்தம் கொண்டாடினார்கள்.

அழைத்த விழாக்களுக்கு குறித்த நேரத்திற்கு தவறாது செல்லும் சாந்தி, விழா முடிந்த பின் அமைப்பாளரையும் கலைஞர்களையும் பாராட்டத் தவறமாட்டார். திருத்தங்கள் இருப்பின் நாசூக்காக அவர்களுக்கு எடுத்துக் கூறவும் தேவையெனின் உதவவும் தயங்க மாட்டார்.

நேர்மை, நேர்த்தி, என்பன சாந்தியின் தாரக மந்திரங்கள். பொறியியல் துறை சார்ந்த சாந்தி திட்டமிடலின்றி எதுவும் தொடங்கமாட்டார். முடியும் வரை ஓயவும் மாட்டார்.

நேருக்கு நேர் சந்தித்து முகம் பார்த்து உரையாடுவதுதான் சிறந்த தொடர்பாடலாக இருக்கும் என்பது சாந்தியின் கோட்பாடு. இதற்காக நேரத்தையும் தூரத்தையும் பொருட்படுத்தாமல் பயணிப்பார்.

சாந்தி விழாக்களைப் பொறுப்பேற்றால் ஒவ்வொரு நிகழ்வும் பார்வையாளரைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக கடினமாக உழைப்பார். நாடக இயக்குனராக சிறந்து விளங்கிய சாந்தி பாலேந்திரா நெறியாள்கையில் கனடாவில் மேடையேறிய 'ஐயா எலெக்சன் கேட்கிறார்' 'யுகதர்மம்' ஆகிய நாடகங்களில் பாத்திரமேற்று நடித்துள்ளார். கனடிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வானொலியில் 'இனி இப்படித்தான்' நாடகத்தை தயாரித்து வழங்கிய சாந்தி, இளையபாரதி தயாரித்த 'அப்பே ரட்ட' என்ற மூன்று நாள் நாடக நிகழ்வின் மேடை நிர்வாகப் பொறுப்பேற்று அதை வெற்றி பெறச் செய்தார்.

மனவெளிக் கலையாற்றுக் குழுவின் அரங்காடல் நிகழ்வுகளுக்கு 'இரு துயரங்கள்' 'இப்படிக்குப் பிள்ளைகள்' 'போகாத வழிமீது' 'ஆக்குவாய் காப்பாய்' ஆகிய நாடகங்களை இயக்கியுள்ளார்.

25 ஆண்டுகளுக்கு மேலாக மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க முத்தமிழ் விழாவின் சூத்திரதாரியாக செயற்பட்ட சாந்தி, 'கீறாத கோடுகள்' 'ஆசை ஆசை' 'தோற்ற மாயை' 'உனை நீ அறிவாய்' 'மனசுக்கு மனசு' என்ற நாடகங்களை நெறியாள்கை செய்து மேடை ஏற்றியவர். தலைவராப் பணியாற்றிய பின் காப்பாளராக இருந்து மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையை வழிநடத்தி வந்தார்.

இவரின் நாடகங்கள் புரியக்கூடியதாகவும் பார்வையாளருக்கு செய்தி ஒன்றைக் கூறுவதாகவும் அமையும். அரங்காடலின் "ஆக்குவாய் காப்பாய்" நாடகத்தில் என்னை ஒரு வைத்திய நிபுணராக நடிக்கச் செய்து அதை ஐந்து மேடை ஏற்றி, பலர் பாராட்டைப் பெற வைத்த இயக்குனர் சாந்தி என்னை அண்ணை என்றே அழைப்பார்.

தமிழர் தகவல் ஆண்டு மலர்களில் சாந்தி எழுதி வந்த கட்டுரைகள் அவரின் எழுத்துவன்மைக்கு எடுத்துக்காட்டு. காலம் தாழ்த்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம். இந்த நான்கும் சாந்தியிடம் இல்லாதவை.

சாந்தியின் நடை, உடை, இரசனை, உரையாடல், நகைச்சுவை, விமர்சனம் அனைத்துமே தனித்துவமானவை.

எல்லோருக்கும் நண்பனாகவும், எல்லோருக்கும் இனியவராகவும், எல்லோருக்கும் உதவுபவராகவும், எல்லோருக்கும் பொதுவானவராகவும், எல்லோரது மதிப்பிற்கும் உரியவராகவும் எம்மத்தியில் வாழ்ந்த நாகமுத்து சாந்திநாதன் ஓர் ஆர்ப்பாட்டம் இல்லாத அற்புதக் கலைஞன்.

அன்னார் தமது மனைவி வனிதாமணியையும் (உஷா) நிஷாந், றெஜிஷாந் என்ற இரு புதல்வர்களையும் பிரிந்து சென்றுள்ளார்.



**கதிர் துரைசிங்கம்**

கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் கடந்த 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்ற 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' எனும் நூல் வெளியீட்டு விழாவில் வாசிப்பதற்காக எழுதப்பட்ட கவிதை.

# முஸ்லிம்களின் அன்பைப் பெற்ற "ஆஷிக் மில்லத்" சிவகுருநாதன்






மண்ணையும் விண்ணையும் மனுத் தேவை அத்தனையும்
மகிமையாய்ப் படைத்ததன் பின் எம்மை படைத்தவனே
மரமாக மலையாக மறைவாக மண்ணில் ஒரு
புழுவாகப் படைக்காமல் மனுவாய் படைத்தவனே
மனுவாய் படைத்த பின்பும் அன்னைத் தமிழ் மொழியை
என் தாய் மொழியாய் அடைகின்ற தகுதியையும் தந்தவனே
தாரணியின் காவலனே பெரிய பரிபூரணனே
காரணனே நீ இதற்குக் காப்பு

இலங்கை இதழியலை எத்தனையோ ஆண்டுகளாய்த்
திறம்படவே ஆண்டவராய் இருந்ததன் பின்
இருபது ஆண்டுகளாய் எம் இதயங்களில் வாழ்பவராய்
இலங்கும் கலாசூரி 'ஆஷிக் மில்லத்'
இ. சிவகுருநாதன் ஐயா அவர்களின் நினைவரங்கு
மேலவர்தான் போனாலும்
செந்தில் வேலவர் இங்கிருப்பதனால்
அவர்தம் முயற்சியிலே அவரது தலைமையிலே
அமைந்திருக்கும் புகழரங்கு
அமைந்திருக்கும் அரங்கினிலே அன்பாய் இணைந்திருக்கும்
அனைவரையும் வரவேற்று

முன்னிலையில் வீற்றிருக்கும்
முதற் பிரதி நாயகராம்
எம் இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் அவர்களே
பிரதம அதிதியாய் இங்கே பரிணமித்துக் கொண்டிருக்கும்
சிசிர பரணதந்த்ரி லேக்ஹவுஸின் ஆளுமையே
தமிழ்ச்சங்கத் தலைவராய் மீண்டும் வரம் பெற்ற
நடராஜன் காண்டீபன் என்னருமைத் தம்பியுடன்
என்மீது அன்பு மிகும் அண்ணன்
ஆழ்வாப்பிள்ளை எனும் செயல் வீரருடன்
பல்துறையும் சாதித்த பெரும் துரை
எங்கள் சாகித்திய ரத்னா ஞானம் ஐயாவுடன்
தமிழ் மொழிமேல் இன்னாளில் மேலதிக அன்புடைய
முன்னாளின் மேலதிக செயலாளர்
தில்லை எஸ். நடராஜா
தொல்லை ஏதுமின்றித்
தகவல் பெற உதவும் ஏ.எம். நஹியாவுடன்
பவுத்திரமாய் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த
பெரியார் முருகபூபதியையும் மனதுருகி வரவேற்று
ஒருங்கிணைப்புச் செயல்வீரர் பொன்னான பொன்னுத்துரை
அனைவருக்கும் எந்தன் அன்புஸலாம் வணக்கமுடன்
வரிசை மிகு சபையோரே
எந்தன் வரிகளுக்கு வருகின்றேன்

இது அஞ்சலிக் கவிதை அல்ல
ஒரு சாதனை நாயகனுக்குச் சாற்றுக்கவி
அவர் சேவைகளைப் பறைசாற்றும் கவி
அவரைப் போற்றும் கவி
எங்கள் ஆதங்கங்களை நிறைவேற்றும் கவி
ஆ தங்கம் என்று ஆங்காங்கே கண்டெடுத்து
அவர் தமக்குத் தங்கும் புகழ் சேர்த்துத் தரமுயர்த்திவிட்டவரை
விட்டிடாமல் நாமும் விழாவெடுத்து வாழ்த்தும் கவி
வளம் பல பெற்ற கவிஞர் கதாசிரியர்களை எல்லாம்
வாழ்க்கையில் உயர்த்திவிட்ட குருவாம் சிவகுருநாதன்
அவர் செத்தும் கொடை தந்த சீதக்காதி
வாழும் போதும் எனக்கும்
இன்னும் பலருக்கும் வரமளித்தார்
இறந்தபிறகும் தன் விழாவிலே
எனக்கொரு அரும் வாய்ப்பளித்தார்

சிவகுருநாதன்
சிவ என்றால் பெரியவராம்
குருவும் பெரியவர்தான்
நாதன் என்றாலும் பெரியவர்தான்
சிவகுருநாதன் என்றால் எழுத்துலகின்
பெரியவர்க்கெல்லாம் பெரியவர் எனலாம்

பெரியவர் என்று பெயர் பெறுவது பெரியதல்ல
பெரிய பதவியிலே அமர்ந்திருப்பதுவும் பெரியதல்ல
அந்தப் பதவியாலே என்ன பலன்பெற்றாய் என்பதல்ல
நீ வகித்த பதவியினால் சமுதாயம் என்ன பலன்
பெற்றது என்பதுவே பெறுமதிக்குரிய கேள்வி
உனக்குப் பெருமதிப்பைத் தரும் கேள்வி

அவ்வாறு
தான் பெற்ற கல்வியை
தான் பெற்ற பதவியை
பாரில் தான் வாழப் பெற்ற ஆயுளை எல்லாமே
வேள்வியாய்
மற்றவரை வளம்பெற வைக்கவே
வழங்கிய பெருந்தகை
அவரால் தமிழ் கூறும் நல்லுலகம்
பலன் பலவும் பெற்றது
நல்ல பலமும் பெற்றது

ஏரியிலே நீர் இருந்தால்
மீனினங்கள் வாழ்ந்துவரும்
புள்ளினங்கள் சூழ்ந்து வரும்
பூத்துக் குலுங்குகின்ற பூங்கொடிகள் மிகுந்திருக்கும்
லேக் ஹவுஸ் எனும் ஏரிக்கரை மனையில்
நீர் இருந்த காரணத்தால்
இலக்கியத்தில் எழுத்துலகில்
ஏறிக்கரை சேர்ந்தோர் எத்தனைபேர்
அதனாலே ஏரிக்கரை வீட்டார்க்கு "எத்தனைபேர்"
அத்தனை "பேரும் புகழும்"
அத்தனை பேரும், புகழும் கொண்ட அச்சகத்தாராக
இச் செகத்தார் மெச்சுகின்ற அச்சகத்தாராக
ஏரிக்கரை வீட்டாரை ஏற்றியவர் நீர்தானே
எத்தனை பத்திரிகை ஆசிரியர்கள் இருந்தாலும் இன்றுவரை
நெஞ்சுகளில் இருந்தாள்பவர் நீர்தானே

ஜானாகக் குறுகி இருந்தோரையும் எழுத்துலகில்
ஜாம்பவான் ஆக்கிய ஜாம்பவான் நீங்கள்தான்
பௌத்தர் கிறிஸ்தவர்கள்
இந்து முஸ்லிம்கள் என
எல்லோர்க்கும் தினகரனில்
உரிய இடம் கொடுத்தீர்
வேடிக்கையாய் ஒருமுறை சொன்னீர்கள்

"தினகரன் பத்திரிகை
சிங்களவர் அடிக்கிறது
தமிழ்க் கடையில் விற்கிறது
முஸ்லிம்கள் படிக்கிறது"

நீங்கள் சொன்னது இன்றைக்கும்
காதுகளில் ஒலிக்கிறது
உண்மைதான் தினகரன் வாசகரில்
கணிசமானவர்கள் முஸ்லிம் தான் ஏன்
உங்களுடன் சிநேகமானவர்களிலும்
அநேகமானவர்கள் முஸ்லிம்கள்
எழுத ஆரம்பித்திருந்த
அநேக மாணவர்களும் அதில் இருக்க
அதிலே ஒரு மாணவன் நான் அதிலும்
உங்கள்மேல் மிகப் பிரியமானவன் நான்

அநேக முஸ்லிம்களின்
அன்பைப் பெற்றிருந்ததனால்
"ஆஷிக் மில்லத்" எனும்
அழகான பெயர் சூட்டி
வாழும் போதே உம்மை
வாழ்த்தி மகிழ்ந்தோம் நாம்
சிவகுருநாதன் ஐயா நீங்கள் எங்களுக்குச்
சமபந்தி தந்திட்ட சம்பந்தி
உங்களை உள்ளத்தில் உயர்வாக வைத்துள்ளோம்
எம் இதயத்து உறவாக வைத்துள்ளோம்
உங்களுக்கு
'ஆஷிக் மில்லத்' என்று அழகாகப் பெயர் மாற்றி
பெண்ணைக் கொடுத்திருக்கின்றோம் ஆமாம்
எல்லாப் பத்திரிகை ஆசிரியர்களையும் விட
உங்களுக்கு அதிக மதிப்
பெண்ணைக் கொடுத்திருக்கிறோம்

எல்லோர்க்கும் வாழ்க்கையிலே 'வலீமா' விருந்து
வருவது ஒருமுறைதான்
மாப்பிள்ளை எங்கள் சிவகுருநாதருக்கு
வருடாவருடம் வருகிறது வலீமா
இன்றைக்கு இது
இருபதாவது முறையும் வந்த வலீமா விருந்து

எல்லோரும் அவர்
இனிய நினைவென்னும்
விருந்தருந்தி மகிழ்வோம்
நன்றி வணக்கம்!



**கலாபூஷணம்**
**தமிழ்த் தென்றல் அலி அக்பர்**

# பொன் பாலசுந்தரம்: சரித்திரத்தின் சாட்சி

'தினகரன்' பத்திரிகையில் துணை ஆசிரியராக நான் இணைந்தபோது, அங்கிருந்த சீனியர் பத்திராதிபர்கள் அனைவருமே என்னிடம் காட்டிய அன்பையும் ஒத்துழைப்பையும் இப்போது நினைத்துப் பார்க்கையில் ஆச்சரியமாயிருக்கிறது. அவர்களில் முதன்மையானவர் பொன் பாலசுந்தரம் ஆவார்.

ஆஜானுபாகுவான தோற்றம். தூய வெள்ளை ஆடையில் எப்போதும் வருவார். என்றும் மலர்ந்த முகம். அப்போது தினகரனின் பாராளுமன்றச் செய்தியாளராகவிருந்தார். நானோ பல்கலைக்கழகத்திலிருந்து நேரே புதிதாய்ப் பத்திரிகைத் துறைக்குள் நுழைந்திருக்கும் இளம் பத்திரிகையாளன். அங்கிருந்தவர்கள் எல்லோருமே பத்திரிகைத் துறையில் அனுபவமும் எழுத்தாற்றலும் மிக்கவர்கள்.

ஆங்கிலம், சிங்களம், தமிழ் என்று மும்மொழிகளிலும் தினசரிப் பத்திரிகைகளை வெளியிடும் லேக்ஹவுஸ் நிறுவனம், எப்போதும் பரபரப்பில் மூழ்கியிருக்கும். அந்தப் பத்திரிகை உலகம் இன்னுமொரு பல்கலைக்கழகம் மாதிரித்தான். டெய்லி நியூசில் பணியாற்றிய ஒரு மூத்த ஆங்கிலப் பத்திரிகையாளர் என்னிடம் ஒருமுறை கூறினார்: *'Son It's a good stepping stone but you shouldn't stay here for long.'* என்னவோ நீண்ட காலம் நான் அங்கு இருக்கவில்லைதான். அறியவும் புதிதாய்க் கற்கவும் அங்கு ஏராளமான விடயங்கள் இருந்தன. பொன் பாலசுந்தரம் பத்திரிகை உலகில் அப்போதே பழுத்த அனுபவம் கொண்டவராகவிருந்தார்.



சுதந்திரன், வீரகேசரி ஆகிய பத்திரிகைகளிலும் பணியாற்றிய அனுபவம் அவருக்கிருந்தது. எதைப் பற்றிக்கேட்டாலும், நிதானமாக உதவும், விளக்கும் பண்பு அவரிடமிருந்தது. ஓரிரு மாதங்களிலேயே ஒரு முழுப் பதிப்பினையும் subbing செய்து வெளியிடும் ஆற்றலைப் பெற்றேன் என்றால், அது பொன் பாலசுந்தரம் போன்ற மூத்த பத்திரிகையாளர்கள் எங்களைக் கைபிடித்து வழிநடத்தியதால் தான் என்று கூறவேண்டும். அவர் பத்திரிகைத் துறையில் எங்களுக்கு நல்லாசானாக இருந்தார். நான் நம்பிக்கையோடு பணியாற்றுவதற்கு பொன் பாலசுந்தரம் போன்றோர் தந்த சீரிய ஒத்துழைப்பும், காட்டிய அன்பும் மிக முக்கியமானது என்று சொல்வேன். பொன் பாலசுந்தரம் கனிவான மனிதர். சந்தேகங்களைக் கேட்டால் முக மலர்ச்சியோடு பதிலிறுப்பார். அந்த வகையில் நான் பாக்கியசாலிதான். வேறு நிறுவனங்களில் பகையும் பூசலும் நிலவுவதை நானறிவேன்.

பத்திரிகைகளில் உலகிற்கு செய்திகளை வழங்குவது நாங்கள் தான். ஆனால், வெளியான செய்திகளைவிட, வெளிவராத செய்திகள்தான் சுவையானவை. அதிலும் பாராளுமன்றச் செய்தியாளர்கள் கொள்ளைத் தகவல்களை வைத்திருப்பார்கள். அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியாத தகவல்கள் இந்தச் செய்தியாளர்களுக்குத் தெரிந்திருக்கும். உள்வீட்டுப் பிரச்சினைகளும் இவர்களுக்கு அத்துப்படி. பத்திரிகை அலுவலகத்தில் சுவாரஸ்யத்துக்குப் பஞ்சம் இருக்காது. பொன் பாலசுந்தரம் நல்ல தமிழ்ப் பற்றாளர். தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர் என்றும் அறிவேன். அரசின் கெடுபிடித்தனம், பேரம் பேசுவதில் தமிழ்க் கட்சிகளின் பலவீனமான நிலை என்பதை எல்லாம் எடைபோட்டு நிதானமான நிலைப்பாட்டை எடுக்கும் பண்பு அவரிடமிருந்தது. இலங்கை அரசியலின் ஒரு காலகட்டத்தை பொன் பாலசுந்தரம் போன்றோரே ஆளுமையுடன் பேச வல்லவர்கள்.

பாராளுமன்ற கலரிகளில் அமர்ந்திருந்து, நாட்டை ஆளுபவர்கள் நாட்டை ஆளும் விதத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இவர்கள். எதிர்க்கட்சிகள் எழுப்பும் வினாக்களுக்கு இவர்களிடம் பளிச்சென்று பதிலிருக்கும். ஆளும் கட்சிகள் கூறும் சாரமற்ற பதில்களை இவர்கள் எள்ளலோடு கேட்டுக் கொண்டிருப்பவர்கள்.

தினகரன் ஆசிரியர் குழு ஒரு நல்ல குடும்பம் போலவே உறவு பேணியது. நான் பணிபுரிந்த காலத்தில் அங்கிருந்த எல்லோரையும் நினைத்துப் பார்க்கையில் மனம் நிறைவில் தோய்கிறது. இலங்கையில் முதல் பத்திரிகையாக வெளிவந்த 'உதயதாரகை'யின் தோற்றத்துடன் நமது பத்திரிகை வரலாறு இந்த ஆண்டுடன் 182 ஆண்டுகளை எட்டிப்பிடிக்கிறது. யாழ்ப்பாணத்தில் ஹென்றி மார்ட்டின் என்ற பத்திரிகையாளருடன் ஆரம்பமாகும் நீண்ட பத்திரிகை மரபில் பொன் பாலசுந்தரம் ஒரு முக்கிய கண்ணியாவார். இங்கிலாந்திலும் முக்கிய ஆலய மலர்கள், சிறப்பு மலர்கள் என்றால், உரியவர்களிடம் ஆக்கங்களைப் பெற்றுப் பொலிவாக ஒரு மலரைத் தயாரித்துத் தருவதில் பொன் பாலசுந்தரத்துக்கு நிகர் யாருமில்லை. விரிந்த தொடர்பாடலும், மரபு பேணுகையும், நேசமும் அவரது இத்திறனுக்குப் பலம் சேர்த்துள்ளது.

பொன் பாலசுந்தரம் தனது பத்திரிகை அனுபவத்தை, அரசியல் அவதானிப்பை எழுத்தில் வடித்தாரானால், நடந்து முடிந்த சரித்திரத்தின் ஒரு பக்கம் உயிர் பெறும்.

பொன் பாலசுந்தரம் நூறாண்டுகாலம் சுகபலத்துடன் வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**மு.நித்தியானந்தன்**

# மீண்டும் உயிர்ப்பிக்கப்படும் கொழும்புத் திட்டம்

**கொழும்புத் திட்டம் என்பது இலங்கையின் தனித்துவத்தை அடிப்படையாக கொண்டு இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கு இன்றும் செல்லுபடியாகும் பிரேரணையாகும். 1949ம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் நிதி அமைச்சர்களது மாநாட்டில் கொழும்புத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கான முதல் அடித்தளம் அப்போதைய இலங்கையின் நிதியமைச்சராக இருந்த ஜே.ஆர். ஜய–வர்தனவினால் இடப்பட்டது. பின்னர் 1951ம் ஆண்டில் இந்த முன்மொழிவு வெற்றியடைந்தது நமது நாட்டிற்கு ஏராளமான நன்மைகளை வழங்கிய 'கொழும்புத் திட்டம்' 2023 ஜூலை 1ஆம் திகதி 72 ஆண்டுகளை நிறைவு செய்தது.**





இம்முறை கொழும்புத் திட்டத்தின் (Colombo plan) 72வது ஆண்டு நிறைவு நிகழ்வு போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் தலைமையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது. இந்த ஆண்டு நிறைவு விழாவின் போது 1951 ஜூலை 01ம் திகதி ஆரம்பமான கொழும்புத் திட்டத்தின் 72வது ஆண்டு நிகழ்வுக்காக தயாரிக்கப்பட்ட விசேட நினைவு மலர் அமைப்பின் தற்போதைய செயலாளர் நாயகம் கலாநிதி பெஞ்ஜமின் பீ. ரெயிஸினால் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் கையளிக்கப்பட்டது. இம்முறை அதனை தூக்கி நிறுத்தக்கூடிய தலைவர் என்ற வகையில் நிகழ்வின் பிரதம அதிதி உரையை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நிகழ்த்தினார். அன்று போல் இன்றும் கொழும்பு அமைப்பு திட்டத்தில் உள்ளடங்கியுள்ள பல நாடுகளின் பிரதிநிதிகள், உள்நாட்டு வெளிநாட்டு இராஜதந்திர பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருமளவிலானோர் இந் நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

கொழும்புத் திட்டத்துக்கு அடிப்படையாக இருந்த நாடு என்ற பெயரை தொடர்ந்தும் தக்கவைக்கும் பணிகளில் தான் தொடர்ந்தும் ஈடுபடுவதாக அமைச்சர் பந்துல குணவர்தன இதன்போது வலியுறுத்தினார். கொழும்புத் திட்டத்தின் அங்கத்துவ நாடுகளுக்கிடையில் எமது கலாசாரத்தைப் பகிர்ந்து கொண்டு, நிலையான நட்புறவைக் கட்டியெழுப்புவதன் மூலம், நாடு பெற வேண்டிய நன்மைகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த நிகழ்வை மகிழ்ச்சியுடன் கொண்டாடிய அமைச்சர், இலங்கைக்கும் கொழும்பு திட்டத்திற்கும் இடையிலான நீடித்த மற்றும் நிரந்தரமான நட்புறவை மீளக் கட்டியெழுப்ப தன்னுடன் இணைந்து கொள்ளுமாறும் புத்திசாலித்தனமான அரசியல்வாதியின் தலையீட்டால் இலங்கை மீண்டும் புத்துயிர் பெறும் என்ற எதிர்பார்ப்புடனும் அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

1951ம் ஆண்டு ஜூலை 1ம் திகதி முதல் செயற்பட்ட கொழும்புத் திட்டத்தினால் இன்றும் எமக்கு பல நன்மைகள் கிடைத்துள்ளன. 2023 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்கமான முறையில் தீர்க்க வேண்டிய சமயத்தில் இன்று மீண்டும் கொழும்புத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான காலம் கனிந்துள்ளது.

1950ம் ஆண்டில் இதில் முக்கிய பங்கு வகித்தது ஒரு தனித்துவமான அரசியல்வாதியாகும். அவரது பெயர் ஜே. ஆர். ஜயவர்தனவாகும். அன்று அந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜே. ஆர். ஜயவர்தன, கொழும்புத் திட்டம் தொடர்பிலான பிரேரணையினை சமர்ப்பித்து இவ்வாறு உரையாற்றினார்.





"எமது பொதுநலவாய அமைப்புக்குள் உள்ளடங்கும் மற்றும் உள்ளடங்காத ஆசிய பிராந்தியத்தின் அபிவிருத்தி அடையாத நாடுகளை முன்னேற்றுவதற்காக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவது அத்தியாவசியமான விடயமாகும். அந்நாடுகளில் விவசாய துறையையும், கைத்தொழில் துறையையும் வளர்ச்சியடையச் செய்து அதனை வெற்றி கொள்ள முடியும். அதேபோன்று அந்நாடுகளை அபிவிருத்தி செய்யும் பத்து வருட திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அதற்குத் தேவையாக தரவுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், அந்நாடுகளுக்குத் தேவையான அதிகாரிகளை நியமித்துக் கொள்வதற்கும் இந்த மாநாட்டில் அனுமதி கிடைக்க வேண்டும். அதேபோன்று நிதி, தொழில்நுட்ப அறிவு, இயந்திரங்கள் மற்றும் உற்பத்திப் பங்களிப்பை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பிலும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்"

ஜே. ஆர். ஜயவர்தன இவ்வாறு பிரேரணையினை சமர்ப்பித்தாலும் கொழும்புத் திட்டம் தொடர்பிலான முழுமையான பிரேரணையை இலங்கை, நியுசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் இணைந்தே சமர்ப்பித்தன.

நாட்டின் இருந்த செழிப்பு காரணமாக, 1950 ஜனவரி 12ம் திகதி பெரும்பான்மை வாக்குகளினால் இந்தப் பிரேரணைக்கு அனுமதி கிடைத்ததோடு, 1950 மே 10ம் திகதி அந்தக் குழுவின் முதலாவது கூட்டத்தின் பின்னர் கொழும்புத் திட்டம் ஆரம்பமானது. அதன்பிரகாரம் கொழும்பு திட்டமானது உதவி வழங்கும் திட்டமாக நிறுவப்பட்டு அதன் ஆரம்ப அங்கத்துவ நாடுகளாக இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நியுசிலாந்து, அவுஸ்திரேலியா, பிரிட்டன் மற்றும் கனடா ஆகிய ஏழு நாடுகள் அமைந்தன. 1951ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவின் பூரண ஆதரவுடன் அவ்வாண்டு ஜூலை 01ம் திகதியிலிருந்து கொழும்புத் திட்டமானது செயற்படத் தொடங்கியது. ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் ஏனையவர்களால் இலங்கைக்குக் கிடைத்த பாரிய வெற்றியே இதுவாகும்.

'கொழும்புத் திட்டம்' ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இலங்கையின் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயத் துறைகளின் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட்டது. கொழும்புத் திட்டத்தின் காரணமாக எமக்கு கிடைத்த நன்மைகளுள் விவசாய நடவடிக்கையினை விரிவாக்குவதற்காக நாற்று மேடைகளை ஆரம்பித்தல், ஹிங்குரான சீனி தொழிற்சாலையை ஆரம்பித்தல், லக்ஷபான மின்சாரத் திட்டத்தின் ஆரம்பம் மற்றும் குடியேற்றவாசிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதலும், பொதுச் சுகாதார சேவைகளை விரிவுபடுத்தல் என்பன இடம்பெற்றன. மேலும் கொழும்புத் திட்டத்தின் உப நன்மையாகவே இலங்கை மத்திய வங்கியும் 1950ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1962ம் ஆண்டு கொழும்புத் திட்டத்தின் கீழ் கனடா அரசின் உதவியுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளும், கனடா டீசல் புகையிரத இயந்திரப் பயன்பாடும் இந்நாட்டில் ஆரம்பமானது.

தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளும் அமெரிக்காவும் கொழும்பு திட்டத்தில் இணைந்து கொண்டதன் பின்னர், 1965ம் ஆண்டளவில் சில ஆபிரிக்க நாடுகளுக்கு அபிவிருத்திற்கான சிறப்பு உதவிகள் வழங்கப்பட்டன. 1977ம் ஆண்டு முதல் இந்த வேலைத்திட்டம் 'ஆசிய பசுபிக் நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பு அபிவிருத்தி திட்டம் (Colombo Plan for Cooperative Economic Development in South and Southeast Asia) என மாற்றப்பட்டதுடன், பின்னர் அதில் அங்கத்துவம் பெற்றிருந்த இரண்டு வலுவான உறுப்பினர்களான பிரிட்டன் மற்றும் கனடா ஆகிய நாடுகள் 90ம் ஆண்டின் முற்பகுதியில் அமைப்பை விட்டு வெளியேறின. தற்போது இந்த அமைப்பில் 28 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.

இந்த அமைப்பு செயற்பாட்டில் இருக்கும் வரைக்கும் இதனை நிறுவுவதற்கு முன்வந்த இலங்கை அரசியல்வாதியின் யோசனைக்கு அமைவாக ஆரம்பமான கொழும்பு திட்டம் என்ற உதவித் திட்டத்தின் பலன்கள் இன்னமும் இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு கிடைப்பதோடு, இந்த அமைப்பு இன்றும் செயற்பாட்டு நிலையில் இருப்பதால் அந்தக் காலத்தைப் போன்ற அறிவார்ந்த தலைமைத்துவத்தைக் கொண்ட ஒரு அரசியல்வாதியால் அந்த நன்மைகள் மீண்டும் எமக்குக் கிடைக்கவுள்ளன. இந்த அமைப்பின் மூலம் தற்போது செயற்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை ஆறாகும்.

01. தனியார் துறை அபிவிருத்தி வேலைத் திட்டம்.

02. மூலிகைத் தாவர வளர்ப்பு ஆலோசனை வேலைத்திட்டம்.

03. மக்கள் நிர்வாகம் மற்றும் சுற்றாடல் தொடர்பான வேலைத்திட்டம்.

04. நீண்டகால புலமைப்பரிசில் வேலைத் திட்டம்.

05. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான வேலைத்திட்டம்.

06. பாலியல் கல்வி தொடர்பான வேலைத் திட்டம்.

1950ம் ஆண்டு ஜனவரி 09ம் திகதி கொழும்பு 'விஹார மகாதேவி பூங்காவில்' பொதுநலவாய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு நடாத்தப்பட்டதோடு, இலங்கை நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்தன, 'ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் பொருளாதார மற்றும் சமூக ஒத்துழைப்பு அபிவிருத்திக்கான கொழும்புத் திட்டம்' (The Colombo Plan for Cooperative Economic and Social Development in Asia and the Pacific) தொடர்பில் கருத்துக்களைத் தெரிவித்தார். அந்த மாநாட்டுக்குத் தலைமை வகித்தவர் பிரதமர் டி. எஸ். சேனநாயக்கவாகும். இந்திய பிரதிநிதி குழுவுக்கு பிரதமர் நேரு தலைமை தாங்கினார். பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் எர்னஸ்ட் பெவன் உள்ளிட்ட பல உலகத் தலைவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். நிதி அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்தன, வீதிகள் மற்றும் கைத்தொழில் அமைச்சர் சேர் ஜோன் கொத்தலாவல, உள்நாட்டலுவல்கள் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் சேர் ஒலிவர் குணதிலக்க ஆகியோர் ஏற்பாட்டுக் குழு அங்கத்தவர்களாச் செயற்பட்டனர்.

இவ்வாறு இந்த அமைப்பு செயற்படும் காலம் வரைக்கும் அதற்கு ஆரம்பகர்த்தாவாக இருந்த இலங்கை அரசியல்வாதியின் பெயர் இன்றைக்கும் கொழும்புத் திட்டத்தினால் வெற்றியடைந்த நாடுகளிடையே பிரகாசிக்கும். 2023ல் கொழும்புத் திட்டத்திற்கு உயிர் கொடுப்பதற்கு நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைவருக்கும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் என நாம் எதிர்பார்ப்போம்.

நாமலீ மாகலந்தாவ
அரசாங்க தகவல் திணைக்களம்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# சிங்கள மொழிபெயர்ப்பு குர்ஆன் பிரதி அன்பளிப்பு



முஹர்ரம் இஸ்லாமிய புதுவருடம் (ஹிஜ்ரி 1445) இன்று மலர்வதை முன்னிட்டு, லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசமுக்கு அண்மையில் அல்குர்ஆன் சிங்கள மொழிபெயர்ப்பு பிரதியொன்று வழங்கப்பட்டது. கலாபூஷணம் யாழ். பரீட் இக்பால் லேக்ஹவுஸ் நிறுவன தலைவரின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் வைத்து இதை அன்பளிப்பாக வழங்கினார். அருகில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், தினகரன் பிராந்திய செய்தி ஆசிரியர் எம்.எப்.எம். அஜ்வாத் பாஸி ஆகியோரும் காணப்படுகின்றனர். (படம்: கயான் புஷ்பிக்க)



தென் மாகாண பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட அறிவுக்களஞ்சிய போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஹம்பாந்தோட்டை ஸாஹிரா கல்லூரி அணியினர் பொறுப்பாசிரியை எம். இஸட்.எப். நிஸ்மா மற்றும் ஏற்பாட்டுக் குழுவினருடன் காணப்படுகின்றனர். படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

# அநுராதபுரம் மாவட்ட மக்களின் பிரச்சினைகள்: குவைத் தூதுவருடன் இஷாக் எம்.பி விசேட சந்திப்பு

<u>கெக்கிராவ குறூப் நிருபர்</u>

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமான் மற்றும் இலங்கைக்கான குவைட் நாட்டுத்தூதுவர் கலாப் அல் புதைர் ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பு கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தில் (18) நடைபெற்றது.

இதன்போது அநுராதபுரம் மாவட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் சிறுநீரக நோயால் பாதிக்கப்படுவோரின் நிலை தொடர்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டது.



மேலும் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் நிலவிவருகின்ற பௌதீக வளப் பற்றாக்குறை, பாடசாலைகளுக்கு புதிய வகுப்பறை கட்டிடங்களை பெற்றுக்கொள்வது தொடர்பிலும் இச்சந்திப்பில் தூதுவருடன் நீண்டநேரம் கலந்துரையாடியதோடு மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் அதிகளவில் பாதிக்கப்படும் கிராமங்களுக்கு சுத்தமான குடிநீரினை பெற்றுக்கொடுப்பதற்கான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை பெற்றுக்கொள்வது தொடர்பில் தூதுவரிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

அதனை ஏற்றுக்கொண்ட தூதுவர், விரைவில் புதிய பாடசாலை வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் குடி நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களையும் பெற்றுத்தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹுமானிடம் உறுதியளித்தார்.

CAR CARRIER FOR HIRE



Colombo City Limit:
Rs. 7,250.00
Outside City Limit:
Rs 105.00 Per Km

AA CEYLON
The Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Marker Mawatha,
Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 210)
Web: www.aaceylon.lk

## பகிரங்க அறிவித்தல்!

பவர் ஹேன்ட்ஸ் பிளான்டேஷன் தனியார் நிறுவனம் இலக்கம் 65/1, மஹபாகே வீதி, எலபிட்டிவெல, ராகம என்ற முகவரியில் தலைமைக்கிளை அலுவலகம் மற்றும் நாடு முழுவதும் உள்ள எமது பிரதிக்கிளை அலுவலகங்கள் மூலம் வர்த்தகக் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோதும், எமது நிறுவனத்தின் எந்த ஒரு கிளை அலுவலகமும் இலக்கம் 45, சுவிசுத்தாராம வீதி, கொழும்பு 06 என்ற முகவரியில் செயற்படவில்லை என்றும், எமது நிறுவனத்தின் உத்தியோகபூர்வ முத்திரை, நிரந்தர முகவரி, உத்தியோகபூர்வ தொலைபேசி இலக்கம் மற்றும் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் மற்றும் பணிப்பாளர் சபை கீழுள்ளவாறு அமையும் என்பதோடு, எமது நிறுவனம் அல்லது அடையாளத்துடன் தோன்றுகின்ற நிறுவனத்துடன் மேற்கொள்கின்ற எந்த ஒரு கொடுப்பனவு தொடர்பில் எமது நிறுவனம் பொறுப்பேற்காது என்றும் இங்கு அறியத்தருகிறோம்.



பிரபாத் குலசிங்க
தலைவர்
பவர் ஹேன்ட்ஸ் குழுமம்



எஸ்.ஜே.டி. லூட்விக்
முகாமைத்துவப் பணிப்பாளர்



எஸ். குலசிங்க
பணிப்பாளர்

கீழுள்ள திட்டங்கள் மாத்திரம் தற்போது செயற்படுகின்றன என்பதைக் கருத்தில்கொள்ளவும்.

- பவர் ஹேன்ட்ஸ் முதலீட்டுத் திட்டம்
- பவர் ஹேன்ட்ஸ் ஓய்வுத் திட்டம்
- பவர் ஹேன்ட்ஸ் கல்வித் திட்டம்
- பவர் ஹேன்ட்ஸ் பிரிவிலேஜ் திட்டம்

விசாரணைக்கு: 0113 605 605

POWER HANDS™
PLANTATION (PVT) LTD

பவர் ஹேன்ட்ஸ் பிளான்டேஷன் தனியார் நிறுவனம்
இலக்கம் 65/1, மஹபாகே வீதி, எலபிட்டிவெல, ராகம.
தொலைபேசி: 0113 605 605/ 0112 959 630
மின்னஞ்சல்: info@powerhandsplantation.com
இணையத்தளம்: www.powerhandsplantation.com
Reg. No. PV 00212339




மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய 36ஆவது ஆண்டு ஆடிப்பூர மஹோற்சவ பால்குட பவனி 2023, நேற்று சனிக்கிழமை காலை ஆலய தர்மகர்த்தா சுந்தரலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பம்பலப்பிட்டி மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக மயூரபதி அம்பாள் ஆலயம் நோக்கிபால்குட பவனி புறப்பட்டுச் செல்வதையும் ஆலய குருக்கள் சிவஸ்ரீ உதயராகவக் குருக்கள் தலைமையில் கிரிகைகள் நடைபெற்று பொற்குடத்தில் பால் அபிஷேகம் நடைபெறுவதையும் கலந்து கொண்ட அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பக்தர்கள் ஆகியோரையும் காணலாம்.

(படங்கள் கொழும்பு வடக்கு நிருபர்)

# ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது...






## வரலாற்றுப் பொறுப்பை ஏற்றுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணில்

# ஓராண்டுகால சாதனைப் பயணம்

- பொருளாதார வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்டெழுந்து வரும் இலங்கைத் தேசம்
- இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுள்ள எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று ஒருவருட காலம் நிறைவு




மனிதன் மீது வரலாறு சுமத்துகின்ற பணிகளை செய்து முடிக்க வேண்டியது கட்டாயமாகும். எக்காலத்திலாவது, எவ்விதத்திலாவது அதனை செய்து முடிக்க நேரிடும். அதற்கு தனிப்பட்ட விருப்புவெறுப்புகள் அவசியமில்லை. இந்த வரலாற்றுப் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதும் சுமத்தப்பட்டது. அல்லது சவால்கள் நிறைந்த அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். அந்தப் பணிகளை அவர் தற்போது செய்து வருகிறார்.

சவால்கள், நெருக்கடிகள் நிறைந்த காலப் பகுதியில் அவற்றைச் சமாளித்து நாட்டை வழிநடத்துவது மட்டுமன்றி இன்னும் 25 வருடங்கள் கடந்து அடுத்த தலைமுறைக்கு அபிவிருத்தி அடைந்த நாட்டை கையளிக்கும் வரலாற்றுப் பணியை அவர் படிப்படியாக ஆற்றிக்கொண்டிருக்கிறார். டிஜிட்டல் மயமாக்கல் பசுமை பொருளாதாரம், விவசாய நவீனமயமாக்கல் உள்ளிட்ட அனைத்துத் துறைகளையும் நவீனமயப்படுத்தி, 2048 இற்குள் சர்வதேசத்தை வெற்றி கொள்ளக்கூடிய அபிவிருத்தி அடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதே எனது திட்டம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களுக்குள் நாம் வரலாற்றில் ஒருபோதும் காணாத பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் 7.8 % ஆக முடங்கிப் போனது. வெளிநாட்டு வருமானம் அற்றுப் போனது. பணவீக்கம் விண்ணைத் தொட்டது. பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டது. உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டது. பணம் இருந்தும் பொருட்களை வாங்க வரிசையில் நிற்க நேரிட்டது. எரிபொருள், எரிவாயு பெற்றுக்கொள்ள இரவுபகலாக வரிசையில் நின்ற அனுபவங்கள் கசப்பானவை. உரம் இல்லாமையினால் விவசாயிகள் நிர்க்கதியாகினர். வியாபாரங்கள் சரிவடைந்து பலர் வேலைகளை இழந்தனர். வருமான வழிவகைகளும் முடங்கிப் போயிருந்தன. மருந்து தட்டுப்பாடு, மின்தடை மக்களை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியது. பொருளாதார சரிவிற்கு மத்தியில் வெளிநாட்டு கடனுக்கான வட்டிகளை மீளச் செலுத்த முடியாத நிலையில் இலங்கை வங்குரோத்து நாடு என்ற பெயரையும் பெற்றுக் கொண்டது.

இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நாடு மீட்சிபெறும், அபிவிருத்தியை நோக்கிய பாதையில் அடிவைக்கலாம் என்ற நம்பிக்கை எவருக்கும் இருக்கவில்லை. அதனால் சவால் மிகுந்த வரலாற்றுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள எவரும் முன்வரவில்லை. இத்தனை நெருக்கடிகளையும் மிகவும் அமைதியாக அவதானித்துக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, தனது வாழ்நாள் ஆளுமையைக் கொண்டு வீழ்ச்சி அடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியை ஏற்றுக்கொண்டார். அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். உலகில் அராஜக நிலை உச்சமடைந்த பெருமளவான நாடுகள், பல வருடங்களாக முடங்கிக் கிடக்கும் போது ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தால் ஒரு வருடம் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் இலங்கைக்கு மீண்டெழும் இயலுமை கிட்டியது.

**சட்டம் ஒழுங்கை பாதுகாத்தல்:**

போராட்டம் என்ற பெயரில் அரச சொத்துக்களை சேதப்படுத்திய சிலர் நாடு முழுவதும் வன்முறைகளைப் பரப்பி நாசவேலைகளில் ஈடுபட்டனர். அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வீடுகளை எரித்து சாம்பலாக்கியவர்கள், கொழும்பு றோயல் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்க தீர்மானித்திருந்த ஜனாதிபதியின் பிரத்தியேக சொந்த வீட்டிலுள்ள நூலகத்திற்கும் தீமூட்டினர். இந்த நூலகத்தில் ஆசியாவின் பல முக்கியமான புத்தகங்கள் இருந்தன. பொருளாதாரம், சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன நலிவடைந்து கிடந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டார்.

அரசியல் நோக்கம் கொண்ட ஒருதரப்பு வன்முறையாளர்கள் நாட்டின் ஜனநாயகத்தின் மீது பார்வையை திருப்பியிருந்தனர். நாட்டுத் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகை, இந்நாட்டின் முக்கியமான நிர்வாக நிறுவனங்களில் ஒன்றான ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட இடங்களை தம்வசப்படுத்திக் கொண்டனர். அதன் பின்னர் இந்நாட்டு ஜனநாயகத்தின் உச்ச அம்சமாகக் கருதப்படும் பாராளுமன்றத்தை கையகப்படுத்தும் முயற்சிகளும் இடம்பெற்றன. அதனையடுத்து நிறைவேற்று மற்றும் சட்டவாக்க துறைகளை முடக்க மேற்கொள்ளப்படவிருந்த நாசகார செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானங்களை எடுத்து, உத்தரவுகளைப் பிறப்பித்தார். இதனால் பொது மக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது, சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது, நாட்டில் அமைதி திரும்பியது.

**வரிசையுகம் நிறைவு:**

மின்தடை, உணவு எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயுவுக்கான வரிசை என்பவற்றினால் மக்கள் அன்றாடம் நெருக்கடிகளைச் சந்தித்தனர். எரிபொருள் தட்டுப்பாட்டினால் வீதிகளிலும் கூட அமைதியின்மை நிலையே காணப்பட்டது. கொழும்பிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், வீதிகளை மறித்து, மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வீதிகளில் இறங்கிப் போராடினாலும் அடுத்து தாம் எந்தப் பாதையில் செல்வது என்ற கேள்விக்குறியுடன் இருந்த மக்கள் பெரும் நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருந்தனர். எந்த வரிசையில் நிற்பது என்று தெரியாமல் திண்டாடி வந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பெற்ற பின்னர், அத்தியாவசியான எரிவாயு, எரிபொருள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட சேவைகளையும், தேவைகளையும் படிப்படியாக பெற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். அதேநேரம் சரியான பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்தார். வரிசை யுகத்திற்கும் முற்றிப்புள்ளி வைக்கப்பட்டது. விரக்தியை ஏற்படுத்திய பணவீக்கத்தை குறைக்க ஆரம்பித்தார். நாட்டின் பிரச்சினையைக் கண்டறிந்தார். பிரச்சினைகளுக்கான குறுகிய, இடைக்கால, நீண்டகால திட்டங்களை வகுத்து, நோய்க்குரிய சரியான மருந்தை கொடுக்க ஆரம்பித்தார்.

**சர்வதே நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம்:**

பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அல்லது நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான ஒரே வழியாக சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை மாத்திரமே செய்ய முடியுமென அறிந்திருந்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட பல சுற்று நீண்ட பேச்சுவார்த்தைகளை வெற்றிப் பாதையில் நகர்த்தினார். நீடிக்கப்பட்ட வசதிகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்தது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் இணைந்து நாட்டிற்கு கடன் வசதிகளை பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு அயல்நாடான இந்தியாவின் ஆதரவு பெருமளவில் கிடைத்தது. பங்களாதேஷ் மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிலிருந்து மனித நேய உதவிகளும் கிடைத்தன. அதேபோல் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற இந்நாட்டின் பிரதான கடன் வழங்குநர்களுடன் பெரிஸ் சமவாய நாடுகளும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு இணக்கம் தெரிவித்தன. கடன் மறுசீரமைப்பின் பலன்களை அடைந்துகொள்ள இலங்கையால் முடிந்துள்ளது. அந்த வரிசையில் உள்நாட்டு கடன்களையும் மறுசீரமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு கடன்களை விடவும் உள்நாட்டு கடன்கள் அதிகமாக காணப்படுவதால், நாம் மீண்டும் வங்குரோத்து நிலையை அடையாமல் இருக்க கடன் மறுசீரமைப்பு அவசியமானது. இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு கடன்களை மீளச்செலுத்தும் நிலைக்கு வரவேண்டுமாயின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் பொதுமக்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படும், நிதித்துறைக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படும் என்பது போன்ற போலிப் பிரசாரத்தை எதிர்கட்சிகள் முன்னெடுத்தன. ஊழியர் சேமலாப மற்றும், நம்பிக்கை நிதியங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூச்சலிட்டார்கள்.

ஆனால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்புகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. பொது நிதியங்களுக்கும் 57 மில்லியன் வங்கிக் கணக்குகளுக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. உண்மையாகவே இந்த கடன் மறுசீரமைப்பு பணிகள் அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான திட்டமிடலை திறைசேரி, மத்திய வங்கி மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நிதி ஆலோசகர்களின் பங்கேற்புடனேயே முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் பலனாக மக்களால் தற்போது நிம்மதிப் பெருமூச்சுவிட முடிந்துள்ளது. ஓரளவு நிவாரணம் கிட்டியுள்ளது. முடங்கிக் கிடந்த நாடு நகர ஆரம்பித்துள்ளது.

**விவசாயப் புரட்சி:**

இலங்கை விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்துறையில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும். கடந்த காலங்களில் விவசாயிகள் எதிர்கொண்ட பெரும்பாலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. ஆனால் இது போதுமானதாக இல்லை. விவசாய நவீனமயமாக்கல் காலத்தின் கட்டாயம் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி வருகிறார். இதனை விரைந்து முன்னெடுப்பதால் விவசாயிகளுக்கு நம்பிக்கை பிறந்துள்ளது.

2020/21 ஆம் ஆண்டுகளில் இயற்கை உரம் கட்டாயமாகப்பட்டதால் விவசாயிகள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டனர். உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலை வந்தது. இதனை அறிந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விவசாயிகளுக்கு அவசியமான உர வகைகளை உரிய விதத்தில் பெற்றுக் கொடுக்க உத்தரவிட்டார். இதனால் பெரும் உணவுப் பஞ்சத்தில் விழுந்துவிடாமல் நாடு தப்பிக் கொண்டது. விவசாய அறுவடைகள் மேம்பட்டதன் பலனாக நாட்டின் உணவுத் தட்டுப்பாடு சடுதியாக தணிந்தது. 2022/2023 களில் தன்னிறைவான நெல் உற்பத்தியை மேற்கொள்ள முடிந்தது. குறைந்த வருமானம் ஈட்டும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசியை இரு மாதங்களுக்கு இலவசமாக வழங்க முடிந்தது. அரிசியின் விலை குறைந்தது. நுகர்வோருக்கும் நிவாரணம் கிடைத்தது.

விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களின் கீழ் 2025 ஆம் ஆண்டளவில் இந்நாட்டுத் தேவைக்கான 80 வீத விவசாய உற்பத்திகளை உள்நாட்டிலேயே மேற்கொள்ள முடியும் என விவசாய அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நிலையான விவசாய அபிவிருத்தியின் ஊடாக 2048 ஆம் ஆண்டில் 'அபிவிருத்தி அடைந்த இலங்கை' என்ற இலக்கை அடைய அவசியமான ஏற்றுமதியை இலக்குவைத்த விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதே நோக்கமாகும்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ருஹுனு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காமினி சேனாநாயக்க தலைமையில் அனைத்து நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தும் வகையில் விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்கான தேசிய கொள்கை கட்டமைப்பொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கொள்கை கட்டமைப்பு ஒகஸ்ட் 2023 இறுதிக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது.

விவசாயத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக விவசாய நவீனமயமாக்கல் செயலகம் நிறுவப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு வெளிநாட்டு உதவித் திட்டங்களின் மூலம் விவசாயத்தை நவீனமயமாக்கும் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக விவசாய பொருளாதாரம் ஒன்றை கட்டமைக்க முடியும் என்பதே ஜனாதிபதியின் நம்பிக்கையாகும்.

போட்டித்தன்மை நிறைந்த உலகை எதிர்கொள்ளும் வகையில் நாட்டின் பொருளாதாரத்தை வடிவமைக்கத் தேவையான பொருளாதார சீர்திருத்தங்கள் ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த பொருளாதார மறுசீரமைப்புக்கள் மூலம், தவறான கொள்கைகள், பலவீனமான திட்டங்கள் மற்றும் தோல்வியடைந்த திட்டங்களுக்கு பதிலாக, புதிய சிந்தனைகளுடன் புதிய பாதையில் நாட்டைக் கொண்டு செல்ல வேண்டும் என்பதையே ஜனாதிபதி வலியுறுத்துகிறார்.

இருப்பினும், பாரம்பரிய அரசியலில் ஈடுபட்டுள்ள சில குழுக்கள் இந்தப் பொருளாதார மறுமலர்ச்சியைத் தடுக்க பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. பொருளாதார மறுசீரமைப்புக்கள் குறித்து மக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. 'நாடு விற்கப்பட போகிறது' என்ற முழக்கத்தை முன்வைத்து மக்களை தவறாக வழிநடத்தி வருகின்றனர்.

நவீன உலகத்துக்கும், நவீன தொழில்நுட்பத்துக்கும் ஏற்றவாறு நமது பொருளாதாரத்தை வடிவமைக்காவிட்டால், பின்னோக்கிச் செல்ல வேண்டியிருக்கும். அவ்வாறான கொள்கைகளினால் நாடு பொருளாதார காலனித்துவ நிலைமைக்குள் தள்ளப்படும் என்பதோடு, நாட்டை விற்றாலும் கடன் பெற முடியாது என்ற நிலைமை உருவாகிவிடும்.

எனவே எமது நாட்டுக்குத் நிலையான அபிவிருத்தியையும் வெற்றியையும் பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புக்களை முன்னெடுக்கப்பட வேண்டும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

கணேசன் கமலநாதன்



# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



# பொதுஜன பெரமுனவுக்கு தேர்தல் அச்சம் கிடையாது!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு

**தேர்தல் நடத்தப்படுவதைவிட, நாட்டைப் பொருளாதார சிக்கலில் இருந்து மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதையே பெரும்பான்மையான மக்கள் விரும்புவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். எந்தவொரு தேர்தலையும் சந்திக்க நாங்கள் பயப்படவில்லை. தேர்தலை எதிர்கொள்வதற்கு பொதுஜன பெரமுன தயங்கவில்லை. தேர்தலொன்று நடத்தப்படுவதாயின் அது தேசிய ரீதியிலான தேர்தலாகவே அமைய வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து எமது நிறுவனத்துக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அமைச்சர் இந்தக் கருத்துக்களை முன்வைத்தார்.**

**கே: நாட்டின் தற்போதைய அவலநிலைக்கு பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் பொறுப்பேற்க வேண்டும் என நீங்கள் அண்மையில் சபையில் கூறியிருந்தீர்கள். இவ்வாறு கூறுவதற்குத் தூண்டிய காரணி எது?**

பதில்: ஒரு குறிப்பிட்ட குழுவை நோக்கி நாம் விரல் நீட்ட முடியாது. குறிப்பாக 1977ஆம் ஆண்டு திறந்த பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் எடுக்கப்பட்ட தவறான முடிவுகளே தற்போதைய நிலைமைக்கு வழிவகுத்துள்ளன. எனவே, 1977 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் இந்த நிலைமையை உருவாக்குவதற்கு பொறுப்பேற்க வேண்டும். அதேபோன்று, அந்தந்தக் காலப்பகுதியில் பதவி வகித்த அரச அதிகாரிகளும் பொறுப்புக்கூற வேண்டும்.

மண்சரிவு உள்ளிட்ட இயற்கை அழிவுகளையும் நாடு அவ்வப்போது சந்தித்து வந்தது. 2004 சுனாமி பேரழிவும் பொருளாதாரத்தில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனைவிடவும் 1983 கறுப்பு ஜூலை, 198889 கிளர்ச்சி, உள்நாட்டு யுத்தம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் தொற்றுநோய் போன்றவையும் பொருளாதாரத்தை இந்த நிலைக்கு கொண்டுவந்தன. இவ்வாறான நிலையில் நாடு மோசமான நிலைக்குச் செல்ல 225 உறுப்பினர்களும்தான் காரணம் என்பது சமூக ஊடகங்களில் உருவாக்கப்பட்ட தவறான கருத்து. ஜே.வி.பியின் 3 உறுப்பினர்களும் இந்த 225 பேரில் உள்ளடங்கவில்லை என்றவாறு பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைத் தவிர, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க முதல் மைத்திரிபால சிறிசேன வரை அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளையும் தெரிவு செய்வதற்கு ஜே.வி.பி தனது ஆதரவை வழங்கியது. ஜனாதிபதி குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட தகுதிகாண் அரசாங்கத்திலும் ஜே.வி.பி இருந்தது. எனவே, ஜே.வி.பியும் குற்றச்சாட்டில் இருந்து விடுபட முடியாது.

**தேர்தலை நடத்துவதை விட பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டத்தையே மக்கள் நடைமுறைப்படுத்த விரும்புகிறார்கள். தேர்தலுக்காக கூக்குரலிடுபவர்கள் இந்த இக்கட்டான தருணத்தில் அரசாங்கத்துடன் கைகோர்த்து தற்போதைய நெருக்கடியை சமாளிக்க தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்**

**கே: தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது. இதற்கு சாதகமான பதிலை வழங்குவதை விடுத்து தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதிலேயே எதிர்க்கட்சிகள் முனைப்புக் காட்டியுள்ளன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை. சில நாடுகளில் ஒரு அழிவு அல்லது பேரழிவு சூழ்நிலைக்குப் பிறகு, அனைவரும் ஒன்றுசேர்ந்து கைகோர்த்து நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்பதற்கு முயற்சிப்பார்கள். அதேபோல், தற்போதைய நெருக்கடியை சமாளிக்க நாம் அனைவரும் கைகோர்க்க வேண்டும். சமீபகாலமாக வரிகள் குறைக்கப்பட்டபோது சில பிரிவினர் அதைப் பாராளுமன்றத்தில் விமர்சித்தனர். இப்போது சில வரிகள் விதிக்கப்படும் போது அதையும் விமர்சிக்கிறார்கள்.

சமுர்த்தி மானியம் பொருத்தமற்ற சிலருக்கு வழங்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் பெரும் கூச்சலிட்டனர். இதை சரிசெய்ய அரசு முயலும் போது, அதை எதிர்த்துப் பேசுகின்றனர். முன்னதாக, சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்லக் கூடாது என்று எதிர்க்கட்சிகள் கூறின. நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெற்ற பின்னர், 'ஏன் அப்படிச் செய்தீர்கள்' எனக் கேட்கின்றார்கள். இது மிகவும் வெளிப்படையானது. தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் உண்மையான எண்ணம் அவர்களிடம் இல்லை, மேலும் அவர்கள் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்ற அதை மோசமாக்க விரும்புகிறார்கள்.

**கே: ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும இடையில் முரண்பாடு இருப்பதாக சில பிரிவினர் சித்திரிக்க முயற்சிக்கின்றனர். இதில் ஏதேனும் உண்மை உள்ளதா?**

பதில்: கடந்த இரண்டு மூன்று மாதங்களாகவே இவ்வாறு கூறி வருகின்றனர். எவ்வாறாயினும், பல்வேறு சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, எங்களால் 124, 125 வாக்குகளைப் பெற முடிந்தது. ஜனாதிபதிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டிருந்தால், பாராளுமன்றத்தில் இவ்வளவு பெரும்பான்மையை எம்மால் பெற்றிருக்க முடியாது. சில சமயங்களில், நமக்குள் கருத்தியல் வேறுபாடுகள் இருக்கலாம். விவாதங்களுக்குப் பிறகு, தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க நாட்டின் சார்பில் ஒருமித்த கருத்தை எட்ட முடியும். சில சமயங்களில், நாங்கள் எங்கள் தரப்பிலிருந்து தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும். மேலும் ஜனாதிபதியும் சில முடிவுகளை மாற்ற வேண்டியிருக்கும். எனினும், இது அரசியல் நெருக்கடிக்கு வழிவகுக்காது. எங்களுடைய அரசியல் சார்புகளைப் பொருட்படுத்தாமல் நாட்டின் சார்பாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு நாங்கள் எப்போதும் முன்னுரிமை அளிக்கிறோம்.

**கே: ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தினால் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டத்தின்படி பொருளாதாரம் மீண்டுவரும் என நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: அது நடக்குமா, நடக்காதா என்று கருத்துத் தெரிவிப்பதற்கு இன்னும் சிறிது காலம் தேவைப்படுகிறது. மற்றவர்கள் அனைவரும் சவாலை ஏற்கத் தயங்கிய போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிபந்தனையின்றி தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஒரு வருடத்திற்கு முன்னர் நாட்டில் நிலவிய நிலைமையைப் பார்க்கும் போது இன்று பொருளாதாரத்தில் ஒருவித ஸ்திரத்தன்மை உருவாகி வருகின்றது.

நம் நாடு வங்குரோத்து நிலைக்கு மாறுவதற்கு முன்பே சரிந்த சில நாடுகளால் நெருக்கடியிலிருந்து மீள முடியவில்லை. எவ்வாறாயினும், எடுக்கப்பட்ட சில தீர்மானங்களினால் ஓராண்டுக்குள் ஓரளவு முன்னேற்றம் அடைய முடிந்துள்ளது.

தற்போது நாம் எடுத்த சரியான முடிவுகளாலும், மக்கள் செய்த தியாகத்தாலும் பொருளாதார ரீதியாக ஓரளவுக்கு நிலையாக இருக்கின்றோம். இன்று எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு இன்றி கிடைப்பதால் உணவுப் பொருட்களின் விலைகள் குறைந்து வருகின்றன. தற்போதைய சூழ்நிலையில் நாம் திருப்தி அடையலாம்.

**தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்கும் உண்மையான எண்ணம் எதிர்க்கட்சியினரிடம் இல்லை. அவர்கள் தங்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றுவதற்காக நிலைமையை மோசமாக்க விரும்புகிறார்கள்**

எதிர்காலத்தில் ஒரு நல்ல அல்லது மோசமான சூழ்நிலையை எதிர்கொள்வதா என்பது அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் மக்கள் வழங்கும் பங்களிப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**கே: நாட்டின் வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்வதற்கு எதிர்க்கட்சிகள் தனியான குழுவொன்றை நியமிக்க வேண்டும் எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தெரிவுக்குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசத்தை நியமிக்கப்பட்டமையை விமர்சித்திருந்தார். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில்: சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சியில் இருந்த ஒவ்வொரு அரசாங்கமும் பாராளுமன்ற உறுப்பினரும் நாட்டில் இந்த நிலைமையை ஏற்படுத்தியதற்கு பொறுப்பேற்க வேண்டும். இந்த குழுவிற்கு ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை நியமிக்க இணங்கியுள்ளோம். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட பாராளுமன்ற விசேட குழுவில் ஆளும்கட்சி உறுப்பினர்கள் மாத்திரமே இருந்ததை நாம் பார்த்தோம். இங்கு அவ்வாறானதொரு நிலை இல்லை, எதிர்க்கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கியுள்ளோம்.

சில துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் மற்றும் அரசாங்க நிதி பற்றிய குழு ஆகியவற்றின் தலைவர்களாக எதிர்க்கட்சி உறுப்பினர்களை நியமிக்கவும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. நேர்மையான நோக்கத்துடன் அந்தப் பதவிகளை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கினோம். அவர்கள் தங்கள் கடமைகளை சரியாக நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம். ஆனால் அவர்கள் அத்தகைய நேர்மையான அர்ப்பணிப்பை செய்யவில்லை என்பது வெளிப்படையானது.

(17ஆம் பக்கம் பார்க்க)



**'எம்மிடம் பொருத்தமான வேட்பாளர் இல்லை என்றால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என பெரும்பான்மையான மக்கள் கருதினால், அதனை எமது கட்சி கவனத்தில் கொள்ளும் என நினைக்கின்றேன். எனவே, ஜனாதிபதி ரணிலுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்குவதை நான் எதிர்க்கவில்லை'**



## மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# தென்னிந்திய பௌத்த அடையாளத்தை உறுதிப்படுத்தும் நீதிமன்றத் தீர்ப்பு!

கடந்த ஆண்டு ஜுன் மாதம், தென்னிந்தியாவில் பௌத்த பின்னணியை உறுதிப்படுத்தும் முக்கியமான தீர்ப்பை சென்னை நீதிமன்றம் வழங்கியது. முப்பத்தெட்டு மாவட்டங்களை கொண்ட தமிழகத்தின் தொழில் மாவட்டமான சேலத்தில் பூஜைகள் நடக்கும் இடம் கோவில் அல்ல புத்தவிகாரை என்று ஆனந்த வெங்கடேஷ் உள்ளிட்ட நீதிபதிகள் குலாம் தீர்ப்பளித்தது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

சட்ட அறிஞர்கள், அரசியல்வாதிகள் மற்றும் ஊடகங்களைச் சேர்ந்தோர் நீண்ட காலமாக சேலத்தில் உள்ள பெரியார் கிராமத்தின் புனிதத் தலத்தைப் பற்றி ஒரு மாற்றான கருத்தை நிறுவியுள்ளனர். இங்குள்ள ஒரு பிரதேச மதஸ்தலத்தில் சிலையொன்றுக்கு பூஜை செய்யப்பட்டு வந்தது. இந்தக் கருத்துக்கு எதிராக தீர்ப்பு வழங்கக் கோரி பௌத்தர்கள் குழுவொன்று நீதிமன்றத்திற்குச் சென்றுள்ளது.

அச்சூழல் மற்றும் அதன் கடந்த காலங்கள் தொடர்பான தொல்பொருள் சான்றுகளை உறுதி செய்த பின்னர், இந்தச் சிலை புத்தர் பெருமானுடையது என்று முடிவு செய்யப்பட்டு, அதனை உறுதியாக குறிக்கும் முகமாக விளம்பரப் பலகையை நிறுவ அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. மக்கள் அங்கு பிரவேசிக்க முடியும், ஆனால் அங்கு இந்து மத அனுட்டானங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.

மதநம்பிக்கையின் அடிப்படையில் தெரியாமல் தவறு நடந்திருக்கும் போது, அதைத் திருத்திக் கொள்ளாமல் அதைத் தொடர அனுமதிப்பது நீதியல்ல என்று தீர்ப்பை அறிவித்த நீதிபதிகள் நீதிமன்றத்தில் குறிப்பிட்டுள்ளனர். சுமார் இரண்டு தசாப்த வரலாற்றில், தென்னிந்தியாவில் உள்ள நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட முக்கிய வரலாற்று வழக்கு தீர்ப்பாக இந்திய ஊடகங்கள் இதனைக் குறிப்பிட்டிருந்தன. மேலும் இந்த முடிவை எடுப்பதற்கு முன்னதாக தொல்லியல் துறை அதிகாரிகளிடம் அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிமன்றம் அழைப்பு விடுத்திருந்தமை விசேட அம்சமாகும். அந்தச் சிலை புத்தர் பெருமானின் சிலை என்பதை உறுதிப்படுத்திய பிறகு, அதை வேறு ஏதோவொன்றாகக் கருதுவது பொருத்தமற்றது மற்றும் புத்தர் பெருமானின் தத்துவக் கொள்கைகளுக்கு எதிரானது என வழக்குத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தியாவின் தென்பகுதியான தமிழ்நாடு மற்றும் இலங்கைக்கு இடையிலான மனித, கலாசார மற்றும் மத உறவுகளில் பௌத்தம் முதலிடத்தில் இருந்ததற்கான சான்றுகள் உள்ளன. தேரவாத, மஹாயான மற்றும் வஜ்ரயனா பிக்குகள் அங்கு வாழ்ந்துள்ளனர். அத்துடன் கற்றறிந்த அறிஞர்களாக போதிதர்மர், தர்மபால, தம்மகித்தி மற்றும் சந்தகித்தி போன்றோர் இறைவனைப் பற்றி கற்றறிந்த பிக்குகள் என பழைய நூல்களில் சிறப்புக் குறிப்புகள் உள்ளன.

பேரரசர் அசோகரின் தலைமையில், மஹிந்த தேரர் தமிழ்நாடு முழுவதும் பௌத்த மதத்தைப் பரப்பினார். இலங்கையை நோக்கி பயணிக்கும் வேளையில் தமிழ்நாட்டின் கிழக்குக் கரையோரத்தில் உள்ள காவேரி பட்டணத்தை வந்தடைந்ததாகவும் குறிப்பிடப்படுகிறது. மதுரைக்கு அருகில் பாண்டியர் சாம்ராஜ்யத்தில் மஹிந்த தேரருக்காக கட்டப்பட்ட மடம் மற்றும் காஞ்சிபுரத்தில் அசோக பேரரசர் கட்டிய ஸ்தூபி குறித்தும் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. பேரரசர் அசோகரின் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகளில் (சோழர்கள் மற்றும் பாண்டியர்கள் அதாவது தமிழ்நாடு மற்றும் தம்பபன்னி) இலங்கையில் பௌத்த தர்மம் பரவியது பற்றி எழுதப்பட்டுள்ளது. அசோகர் காலத்து கல்வெட்டுகள் பிராஹ்மி எழுத்துக்களில் எழுதப்பட்டவை.

அவை மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சோழர், பாண்டவர், பல்லவ சாம்ராஜ்யங்கள் ஆசியா முழுவதும் பெரும் நாகரிகங்களாகப் பரவி, பௌத்த இடிபாடுகளைப் பாதுகாக்கும் கொள்கையைப் பின்பற்றியதாகத் தெரிகிறது. பௌத்தம் ஏனைய மதங்களுடன் நல்லிணக்கத்துடன் இணைந்து காணப்பட்டுள்ளது. புத்தர் பெருமான் கூட விஷ்ணுவின் ஒரு அவதாரமாக்க் கருதப்பட்டார்.

தமிழ்நாட்டின் மிகப்பெரிய பௌத்த மையமாக காஞ்சிபுரம் கருதப்படுகிறது. சீனர்கள் அங்கு வந்து புத்த மதத்தைப் படித்ததாக பண்டைய சீன ஆவணங்களில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. கடலோரப் பகுதியான காவேரிப்பூம்பட்டினம், சேலம் மாவட்டத்தில் உள்ள தியாகனாறு மற்றும் ஒரு சிறிய கடற்பரப்பு கிராமமான நாகப்பட்டணம் ஆகியவை பௌத்த விஹாரைகள் இருந்த இடங்களாக குறிப்பிடப்படுகின்றன.

2004 ஆம் ஆண்டில், திருவண்ணாறு மாவட்டத்தில் உள்ள செல்லூர் கிராமத்தில் புத்தர் பெருமான் சிலைகள் உட்பட மதம் தொடர்பான குறிப்பிடத்தக்களவு சின்னங்களை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர்.

ஏழாம் நூற்றாண்டுக்குப் பின்னர் வைஷ்ணவ, சைவ மதங்களின் வளர்ச்சியால் பௌத்தம் தமிழகத்தில் வீழ்ச்சியடைந்ததாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தமிழக பௌத்த பிக்குகள் இலங்கையில் வசிக்க வந்துள்ளனர். எனினும் பௌத்தம் தமிழகப் பகுதிகளில் பாதுகாக்கப்பட்டிருந்தது. மேலும் 13 ஆம் நூற்றாண்டில் தம்பபன்னியவில் ஆட்சி செய்த மன்னன் பராக்கிரமபாகு,இலங்கையில் பௌத்தம் வளர்க்க சோழ நாட்டிலிருந்து பிக்குளை அழைத்து வந்ததாக மகாவம்சத்தில் காணப்படுகிறது.

இலங்கையில் பௌத்தமக்கள் பல சந்தர்ப்பங்களில் பௌத்தமத வளர்ச்சிக்கும் அதன் தனித்தன்மையை பாதுகாக்கவும் பெரும் முயற்சியுடன் செயல்படுகிறார்கள். வரலாற்றை அறிந்து கொள்வதும் பாதுகாப்பதும் முக்கியம் என்பதோடு அவை சட்டரீதியான அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படவேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

## இந்திய வம்சாவளி மக்களது...

நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் வழங்கப்படவுள்ள இந்த நிதியை கல்வி மற்றும் சுகாதாரத்துறை அபிவிருத்திகளுக்கு பயன்படுத்தவுள்ளதுடன், மலையகத்துக்கான பல்கலைக்கழகத் திட்டமும் இதில் உள்ளடங்குமெனவும், அவர் தெரிவித்தார்.

இந்திய விஜயம் வெற்றிகரமாக அமைந்ததாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் (21) இரவு நாடு திரும்பிய அவர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, இதனைத் தெரிவித்தார்.

இந்திய விஜயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாம் இந்தியா சென்றதுடன், மலையக மக்களின் பிரச்சினைகள், 13ஆவது திருத்தச்சட்டம், எரிசக்தி மற்றும் மின்சக்தி துறைக்கான முதலீடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தினோம். இவை தொடர்பாக எமக்கு சாதகமான பதில்கள் கிடைத்துள்ளன.

குறிப்பாக மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடிய போது, வீடுகளை நிர்மாணிப்பதால் மாத்திரம் பிரச்சினை தீர்வாகாது, வீடுகள் அமைக்கப்பட்ட பின்னர் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த வேண்டுமெனவும் அதற்கு கல்வியே சிறந்த தீர்வாக அமையுமென்றும் சுட்டிக்காட்டினேன்.

இதன்போதே, மலையக பெருந்தோட்ட சமூகத்தின்மேம்பாட்டுக்காக 3 ஆயிரம் மில்லியன் ரூபா வழங்கப்படுமென்று உத்தரவாதம் வழங்கப்பட்டதுடன், கல்வி, சுகாதாரத்துறைக்கு அந்நிதி பயன்படுத்தப்படும்" எனத் தெரிவித்தார்.

இதேவேளை, மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில் அவர்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் அரச அங்கீகாரத்துடன் தேசிய விழாவொன்று எதிர்வரும் நவம்பரில் நடத்தப்படவுள்ளது. இவ்விழாவுக்கு இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சிறப்புத் தூதுவர் பங்கேற்பாரென்று எதிர்பார்ப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் இந்திய விஜயம் நிறைவு வெள்ளி இரவு நாடு திரும்பினார்



இந்தியாவுக்கு இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது விஜயத்தை நிறைவு செய்துகொண்டு நேற்று முன்தினம் (21) இரவு நாடு திரும்பியுள்ளார்.

ஜனாதிபதியுடன் 17 பேர் அடங்கிய தூதுக்குழுவினர் இந்தியாவின் புதுடில்லிக்கு கடந்த 20ஆம் திகதி சென்றிருந்தனர்.

அவர்கள் அனைவரும் புதுடில்லியிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL196 இல் நேற்று முன்தினம் இரவு 11.25 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதியை, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் வரவேற்றார்.

அதன் பின்னர், இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவாலை சந்தித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட முக்கியஸ்தர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

கடந்த வருடம் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க, ஒரு வருடத்தின் பின்னர், இந்தியாவுக்கான முதல் விஜயத்தை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நாட்டில் மேலும் இரு...

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அவர் இதனை தெரிவித்தார். தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின் பிரகாரம், இந்த இரண்டு வகை மயக்க மருந்துகளும் பாவனையிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார். தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு ஒருபோதும் அனுமதி கிடையாதென்பதுடன், அரச மருந்தக கூட்டுத்தாபனத்தினூடாக எப்போதும் தரத்துக்கு அமையவே மருந்துகள் இறக்குமதி செய்யப்படுவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரமிட் திட்டம் நடத்தியவரின் சொகுசு கார் தீயிட்டு எரிப்பு

## ஆத்திரமுற்ற வைப்பீட்டாளர்கள் கைவரிசை

பிரமிட் நிதி சேகரிப்பு திட்டத்தில் ஈடுபடுவதாக கூறப்படும் நபருக்கு சொந்தமான சொகுசு காரொன்று, சிலரால் தீ வைத்து எரிக்கப்பட்டதாக, ஹுங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் ஹுங்கம பிரதேசத்தின் ரன்ன, ஹெரோதர மாவத்தையிலுள்ள அவரது வீட்டின் முன்பாக இடம்பெற்றது.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த பலரும் பிரமிட் திட்டத்தில் பணம் வைப்புச் செய்துள்ளதாகவும் இருப்பினும், அதற்கானகொடுப்பனவோபணமோ இந்த நபரால் மீள வழங்காமை காரணமாக ஆத்திரமடைந்தவர்கள், காருக்கு தீ வைத்திருக்கலாமென்று சந்தேகிப்பதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

தீயினால் கார் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஹுங்கம பொலிஸ் நிலையத்தில் காரின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தங்காலை பிரிவுக்குட்பட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் ஹுங்கம பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு ரயில் பாதையில்...

மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன, உத்தரவிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் (21) அமைச்சர், பொலன்னறுவைக்கும் மட்டக்களப்புக்கும் இடைப்பட்ட பகுதியில் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டிருந்த போது, மக்கள் மற்றும் அரச அதிகாரிகளிடமிருந்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்தன. அதனையடுத்து, இந்த உத்தரவை அவர் விடுத்துள்ளார்.

ரயில்வே திணைக்களத்தின் சில அதிகாரிகளின் தலையீட்டிலேயே இந்த முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்ட அரசாங்க அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகாரிகள் உட்பட சகல அதிகாரிகளையும் அழைத்து விசாரணை மேற்கொண்டு, உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு போக்குவரத்துஅமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

## இலங்கை-இந்தியாவுக்கிடையே...

அதேவேளை, நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காகவும் நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள இலங்கையின் அனைத்து சமூகங்களினதும் நலன்களுக்காக ஸ்திரமானதும் சமமானதும் வலுவானதுமான பொருளாதார வளர்ச்சிக்கான இந்தியாவின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் முதலீட்டின் முக்கியத்துவத்தை அவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர்.

3. இந்தியாவின் ஸ்திரமானதும் துரிதமானதுமான பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார மீட்சி, புனரமைப்பு பணிகள் ஆகியவற்றுடன் இணைந்து, இரு நாடுகளுக்குமிடையே நெருக்கமானதும் ஆழமானதுமான இருதரப்பு பொருளாதார பங்குடைமையை உருவாக்குவதற்கும் இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குவதாக இரு தலைவர்களும் ஏற்றுக்கொண்டனர். மேலும், இரு நாட்டு மக்களிடையே நாகரீக உறவுகள், புவியியல் ரீதியான நெருக்கம், கலாசார தொடர்பு மற்றும் புராதன நன்மதிப்பு ஆகியவற்றால் வழங்கப்பட்டுள்ள இணையற்ற நன்மைகளை சுட்டிக்காட்டியதுடன், பகிரப்பட்ட மற்றும் நிலையான பொருளாதார செழுமையை உருவாக்கும் வகையில் ஏற்கெனவே உள்ள இணக்கப்பாடுகள் மற்றும் ஏனைய மேலதிக வசதிகளை பயன்படுத்துவதற்கான முயற்சியையும் அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தினர்.

4. இந்த நோக்கங்களின் அடிப்படையில் இவற்றை செயல்படுத்தும் முக்கிய கருவியாக சகல பரிமாணங்களிலும் தொடர்புகளை வலுவாக்குவதற்கும் மேம்படுத்துவதற்குமான முக்கியத்துவம் தொடர்பாகவும் இரு தலைவர்களும் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைவாக, இரு தலைவர்களும் கீழ்வரும் தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

கடல் மார்க்கமான இணைப்பு;

a. பரஸ்பர புரிந்துணர்வின் அடிப்படையில் பிராந்திய கப்பல் மற்றும் போக்குவரத்து தொடர்புகளை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு கொழும்பு, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்கள் மற்றும் அவற்றின் உட்கட்டமைப்பு வள அபிவிருத்தியில் ஒத்துழைப்பு வழங்குதல்.

b. இந்தியாவிலுள்ள நாகபட்டினம் மற்றும் இலங்கையிலுள்ள காங்கேசன்துறைக்கிடையிலான கப்பல் போக்குவரத்தை மீள ஆரம்பித்தல், இராமேஸ்வரம் மற்றும் தலைமன்னார்க்கிடையிலும் பரஸ்பர இணக்கம் காணப்பட்ட ஏனைய இடங்களுக்கிடையிலுமான கப்பல் போக்குவரத்தை விரைவில் மீள ஆரம்பிப்பதற்கான பணிகளை முன்னெடுத்தல்.

வான் மார்க்கமான தொடர்பு;

a. யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்குமிடையிலான விமான சேவைகளை மீள ஆரம்பித்தமை இருநாட்டு மக்களுக்கிடையிலுமான உறவுகளை மேம்படுத்தியுள்ள அதேவேளை, இச்சேவையை கொழும்புவரை விஸ்தரிப்பதற்கும் அதேபோல, சென்னை மற்றும் திருகோணமலை, மட்டக்களப்பு உள்ளிட்ட இலங்கையின் ஏனைய இடங்களுக்கிடையிலான தொடர்புகளை விஸ்தரிப்பதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

b. மக்களுக்கு சிறந்த பொருளாதார பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதற்காக பலாலி விமான நிலையத்தின் உட்கட்டமைப்பை மேலும் அபிவிருத்தி செய்தல் உட்பட சிவில் விமானப் போக்குவரத்து துறையில் ஒத்துழைப்பையும் முதலீட்டையும் வலுவாக்குதல் மற்றும் ஊக்குவித்தல்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி இணைப்புகள்;

a. புதுப்பிக்கத்தக்க சக்தியை அபிவிருத்தி செய்வதில் ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டுள்ளமையானது, இலங்கையின் முக்கியத்துவமிக்க புதுப்பிக்கத்தக்க சக்தியை அபிவிருத்தி செய்வதற்காக கரையோர காற்றாலைகள் மற்றும் சூரியக்கலங்கள் மூலமான மின்சக்தி உட்பட இலங்கையின் குறிப்பிடத்தக்க புதுப்பிக்கத்தக்க சக்தி ஆற்றலை மேம்படுத்தும், இதன் காரணமாக 2030ஆம் ஆண்டில் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களூடாக 70 வீதமான மின் தேவையை பூர்த்தி செய்வதை இலக்காகக் கொண்டிருக்கும் இலங்கையின் நோக்கம் வெற்றியடைவதை உறுதி செய்தல்.

b. இலங்கையில் மின்சார உற்பத்தி செலவினத்தை குறைப்பது மட்டுமல்லாமல், இலங்கைக்கான அந்நியச் செலாவணிக்குரிய நம்பகமான மற்றும் வலுவான தளத்தினையும் உருவாக்கும் நோக்குடன் BBIN நாடுகள் உட்பட இலங்கைக்கும் ஏனைய பிராந்திய நாடுகளுக்குமிடையில் நேரடியான வர்த்தக மின் சேவைகளை செயல்படுத்துவதற்காக இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் உயர்வலு மின்சக்தி விநியோகக் கட்டமைப்பை ஸ்தாபித்தல்.

c. இலங்கையின் மின் உற்பத்தியில் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களை அதிகரிப்பதை இலக்காகக் கொண்டு புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதனூடாக பசுமை ஹைட்ரோஜன் மற்றும் பசுமை அமோனியா ஆகியவற்றில் ஒத்துழைப்பை விஸ்தரித்தல் மற்றும் சம்பூரில் சூரியமின்கல திட்டம் மற்றும் எல்.என்.ஜி திட்டம் ஆகியவை தொடர்பான புரிந்துணர்வை துரிதமாக அமுல்படுத்துதல்.

d. திருகோணமலை எண்ணெய்த் தாங்கி கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திக்கான தற்போதைய ஒத்துழைப்பு, திருகோணமலை பிராந்தியத்தில் பரஸ்பரம் நன்மை பயக்கும் ஒத்துழைப்பு திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான எமது பெருமுயற்சியை பிரதிபலிக்கின்றது, அத்துடன், கைத்தொழில் மின்சக்தி மற்றும் பொருளாதார செயற்பாடுகள் ஆகியவற்றுக்கான பிராந்திய மற்றும் தேசிய மையமாக திருகோணமலையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

e. இலங்கைக்கு மலிவானதும் நம்பகமானதுமான எரிசக்தி வளங்களின் உறுதியான விநியோகத்தை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு இந்தியாவின் தென்பகுதியிலிருந்து இலங்கைக்கு பல்பொருள் பெற்றோலிய குழாய் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கான ஒத்துழைப்பு.

f. இலங்கையின் மேல்நிலை (UPSTREAM) பெற்றோலிய வளத்துறையை அபிவிருத்தி செய்யும் இலக்குடன் இலங்கை கரைக்கு அப்பாலுள்ள பகுதிகளில் பரஸ்பர இணக்கப்பாட்டுக்கமைவாக கூட்டு அகழ்வு மற்றும் ஹைட்ரோகாபன் உற்பத்தியை மேற்கொள்ளல்.

வர்த்தகம், பொருளாதார மற்றும் நிதி ரீதியான தொடர்பு

a. இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் பெருந்தொற்று ஏற்பட்டிருந்த காலப்பகுதிகளில் இருதரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஈடுபாடுகள் மிகவும் ஆணித்தரமாக நிரூபிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, கொள்கை நிலைத்தன்மை, இலகுவாக வர்த்தகங்களை மேற்கொள்வதை ஊக்குவித்தல், இருதரப்பு முதலீட்டாளர்களுக்குமான வெளிப்படையான அணுகுமுறை ஆகியவற்றினூடாக பரஸ்பர முதலீட்டினை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

b. மேலும், இலங்கை அரசாங்கத்துக்கு சொந்தமான வர்த்தக நிறுவனங்களின் உரித்துமாற்றல் நடவடிக்கைகளிலும் இலங்கையின் பல்வேறு துறைகளிலும் உற்பத்தி மற்றும் பொருளாதார வலயங்களிலும் இந்தியாவிலிருந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை உருவாக்குதல்.

c. புதிய மற்றும் முன்னுரிமைக்குரிய துறைகளில் இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை பரந்தளவில் மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல்.

d. இந்திய ரூபாவை இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக கொடுக்கல், வாங்கல்களுக்கு பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் காரணமாக பரஸ்பரம் நன்மை பயக்கின்றதும் வலுவானதுமான வர்த்தக தொடர்புகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், வர்த்தக நிறுவனங்களுக்கும் சாதாரண மக்களுக்குமிடையிலான வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்கல், வாங்கல்களை மேலும் மேம்படுத்துவதற்காக UPI தளத்தை அடிப்படையாகக் கொண்ட டிஜிட்டல் கொடுப்பனவு முறையை செயல்படுத்துவதற்கு இணங்கப்பட்டுள்ளது.

e. பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஆட்சி முறையில் இந்தியாவின் துரிதமான டிஜிட்டல் மயமாதல் இந்தியாவில் தற்போது மேற்கொள்ளப்படும் நிலையியல் மாற்றங்களின் முக்கியமான வினையூக்கியாக அமைந்துள்ளது. அத்துடன், பிரஜைகளை மையமாகக் கொண்ட சேவைகளை ஆக்கபூர்வமான வகையிலும் வினைத்திறன் மிக்கதாகவும் இலங்கை மக்களுக்காக வழங்குவதற்கும் இலங்கைக்கான தேவை மற்றும் முன்னுரிமை ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பினை பயன்படுத்துவதற்கும் இணங்கப்பட்டுள்ளது.

மக்கள் இடையேயான தொடர்பு:

a. சுற்றுலா துறையை மேம்படுத்துவதற்காக இந்தியாவின் பௌத்த வளாகங்கள் மற்றும் இராமாயண யாத்திரை, அதேபோல இலங்கையிலுள்ள புராதனமான பௌத்த, இந்து மற்றும் ஏனைய மதங்களின் வழிபாட்டு இடங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் அவற்றை பிரபலமாக்குதல்.

b. இலங்கையின் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கையில் புதிய உயர் கல்வி மற்றும் தொழில்திறன் பல்கலைக்கழகங்களை ஸ்தாபிப்பதனூடாக இருதரப்பிலும் கல்வி சார்ந்த நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை கண்டறிவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

c. விவசாயம், நீர்வளம், தகவல் தொழில்நுட்பம், வர்த்தகம், நிதி மற்றும் முகாமைத்துவம், சுகாதாரம் மற்றும் மருத்துவம், பூமி மற்றும் சமுத்திர விஞ்ஞானம், சமுத்திரவியல், விண்வெளி ஆராய்ச்சி ஆகியவை தொடர்பாகவும் அதேபோல வரலாறு, கலாசாரம், மொழிகள், இலக்கியம், மத ரீதியான கற்கைகள் மற்றும் ஏனைய மானிடப் பண்பியல் உள்ளிட்ட பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை விஸ்தரித்தல்.

d. இலங்கை மற்றும் இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக திருகோணமலை மற்றும் கொழும்பு துறைமுகங்களுக்கான தரை மார்க்கமான பிரவேசத்தை விஸ்தரிக்கும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நிலத்தொடர்பை ஸ்தாபித்தல் மற்றும் இரு நாடுகளுக்குமிடையிலான பல்லாயிரம் ஆண்டுகால உறவை மேலும் அபிவிருத்தி செய்தல். இவ்வாறான தொடர்பை ஸ்தாபிப்பது தொடர்பான ஆய்வு மிகவும் கிட்டிய காலத்தில் ஆரம்பிக்கப்படும்.

5. இந்த அடிப்படையில், இப்பரந்த பிராந்தியத்திலும் இரு நாடுகளிலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் செழுமையை உறுதிப்படுத்துவதற்கான இருதரப்பு ஒத்துழைப்புக்கான முக்கியத்துவமிக்க தருணத்தையும் நீண்டகால மார்க்கத்தை வழங்குவது மட்டுமல்லாமல், மேம்படுத்தப்பட்ட பரஸ்பர நம்பிக்கை மற்றும் நம்பகத்தன்மை மீது கட்டி எழுப்பப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்திய இலங்கை உறவுக்கான எதிர்கால பாதையினையும் வடிவமைக்கின்ற இந்த பகிரப்பட்ட இலக்கை துரிதமாக எட்டுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இரு தலைவர்களும் தொடர்புடைய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எங்கள் கருத்து

# ஆற்றல் மிகுந்த இரு தலைவர்களின் ஆளுமையினால் வலுவடையும் நட்புறவு!

இந்தியா அதிமுக்கியத்துவம் மிக்கதாகவே கருதியதென்பதை உறுதிப்படுத்த ஆதாரங்கள் அவசியமில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கௌரவம் மிகுந்த வரவேற்பையும் முக்கியத்துவத்தையும் வழங்கியதுடன் மாத்திரமின்றி, இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளைப் பலப்படுத்துவதற்கான புதிய அத்திவாரங்களை இடுவதிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூடுதல் கரிசனையைக் காண்பித்திருக்கின்றாரென்பதே உண்மை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்கு புதுடில்லி வழங்கியிருந்த அதிகூடிய முக்கியத்துவத்துக்கு 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் பிரதான காரணமென்று அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அன்றைய இந்திய அரசின் அழுத்தங்கள் காரணமாக ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கையின் கடந்தகால அரசுகள் அக்கறை காண்பிக்காது வந்த போதிலும், புதுடில்லி அவ்விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. இந்தியாவில் ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்டு வந்த போதிலும் 13 ஐ அமுல்படுத்துவதில் ஆட்சிக்கு வந்த அனைத்துக் கட்சிகளும் உறுதியான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

தற்போது 13 ஐ அமுல்படுத்துவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதால், ஜனாதிபதியுடன் இசைந்து செல்வதில் புதுடில்லி வெளிப்படைத்தன்மையைக் காண்பிப்பதாகவே கருத முடிகின்றது. ஜனாதிபதியின் விஜயத்துக்கு இந்தியா அளித்திருந்த முக்கியத்துவமும் அவ்வாறான ஒரு வெளிப்பாடு ஆகும்.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் ஆசியாவின் மிகப்பெரும் ஆற்றல், அனுபவம் நிறைந்த தலைவர்களாகக் கருதப்படுவதனால் எதிர்காலத்தில் இலங்கை– இந்திய உறவுகள் பயன்தரு பாதையில் நகருமென்றே ஊகிக்க முடிகின்ற

## அபிவிருத்தி வாய்ப்புகளை...

நாடுகளும் பிராந்திய கூட்டாண்மை மூலம் அந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளன. இரு தரப்பினருக்கும் நன்மை பயக்கும் வகையில் இந்தியஇலங்கை உறவுகளை மேம்படுத்தி இலங்கையின் அபிவிருத்தி எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே ஜனாதிபதியின் வேலைத்திட்டமாகுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இரண்டு நாள் உத்தியோகபூர்வ இந்திய விஜயம் மற்றும் 'இந்தியஇலங்கை பொருளாதார கூட்டாண்மையின் தொலைநோக்கு பார்வை' தொடர்பாக நேற்று (22) ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையக்கூடிய எதையும் ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ ஒருபோதும் செய்ய மாட்டார்களென வலியுறுத்திய அமைச்சர், இந்த செயற்பாடுகளை பூரண புரிந்துணர்வுடனும் அனைத்துத் தரப்பினரின் இணக்கப்பாட்டுடனும் செயற்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகுமெனவும் தெரிவித்தார்.

மேலும் இங்கு கருத்து தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி,

"இலங்கையின் நெருங்கிய மற்றும் நீண்டகால நட்பு நாடான இந்தியாவுடன் புரிந்துணர்வு உறவைக் கட்டியெழுப்புவது இரு நாடுகளுக்கும் அதேபோன்று, பிராந்தியத்துக்கும் மிகவும் நல்லதொரு நிலையாகுமென்று நாங்கள் நம்புகிறோம். அடுத்த இரண்டு அல்லது மூன்று தசாப்தங்களில் உலகின் மொத்த வளர்ச்சியில் 2/3 ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படுமென்பது இன்று அனைவரும் ஏற்றுக்கொள்ளும் விடயம். மேலும் இந்தியாவும் சீனாவும் அதில் முன்னிலை வகிக்குமென்பது எவ்வித விவாதமுமின்றி சர்வதேசம் ஏற்றுக்கொண்டுள்ள உண்மையாகும். எனவே, இந்துசமுத்திர பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள இந்த பாரிய அபிவிருத்தி வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும். ஐரோப்பிய ஒன்றியத்தை உற்று நோக்கினால், அந்நாடுகள் இணைந்து செயற்பட்டதன் காரணமாக முழு ஐரோப்பிய பிராந்தியமும் வளர்ச்சியடைந்தது. மத்திய கிழக்கு நாடுகளை பொறுத்தவரையிலும் இதே நிலைதான். சீனாவை போலவே, அமெரிக்க பிராந்தியமும் அதே முறையில் அபிவிருத்தியடைந்தது. இந்த அபிவிருத்தி வாய்ப்புகளை பயன்படுத்தி முன்னேறுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

நமது இராஜதந்திர உறவுகளின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, நமது பொருளாதார, சமூக மற்றும் மக்களுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டது" எனத் தெரிவித்தார்.

## ஜனாதிபதி ரணில் முன்வைத்த...

ஒத்துழைப்புகளை வழங்க தயாராகவிருப்பதாக தெரிவித்துள்ளதாக, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு விடயத்தில் இந்தியப் பிரதமரால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகள் தொடர்பாக தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் சூழலை நன்கு புரிந்து வைத்துள்ள இந்தியப் பிரதமர், தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாத வகையில் அரசியலமைப்பின் 13ஆம் திருத்தச்சட்டமான மாகாணசபை முறைமையை அமுல்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வைத்திருக்கும் திட்டத்தில் காணப்படும் நியாயத்தை ஏற்றுக்கொண்டதாகவும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஆரம்பித்து முன்னோக்கி செல்வதன் மூலமே தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க முடியுமென்று வலியுறுத்தி வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்த, 3 கட்டங்களாக மாகாணசபை முறையை அமுல்படுத்துவது சாத்தியமான வழிமுறையெனவும் வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மக்களின் அபிலாஷைகளை...

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேலும் தெரிவித்த போது,

"எமது அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் முயற்சிகளில் இலங்கை எமக்கு முக்கியத்துவம் பெறுகின்றது. அதற்கேற்ப எமது இருதரப்பு உறவுகளை மேலும் வலுவாக்குவது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணிலுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தியா இலங்கைக்கிடையிலான பொருளாதார பங்குடமையை எவ்வாறு மேம்படுத்த முடியுமென்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நான் கலந்துரையாடியிருந்தேன். அத்துடன் சுற்றுலாத்துறை, எரிசக்தி, வர்த்தகம், கல்வி, நிதியியல் தொழில்நுட்பம் மற்றும் திறன் விருத்தி ஆகியவற்றில் தொடர்புகளையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுவாக்குவதற்காகவும் நாம் செயலாற்றியுள்ளோம்" எனத் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களின் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுகளில் கவனம் செலுத்தப்பட்டது. இந்த விவகாரம் மனிதாபிமான அடிப்படையிலும் கருணையுடனும் அணுகப்பட வேண்டுமென்பதை இருவரும் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் புனரமைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமென்ற நம்பிக்கையை இந்தியா கொண்டுள்ளது.

சமத்துவம், நீதி மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மறுசீரமைப்பு செயல்முறையை முன்னெடுத்துச் செல்லுமென்றும் இந்தியா எதிர்பார்க்கிறது. அத்துடன், 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கும் மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் இலங்கை தனது உறுதிமொழியை நிறைவேற்றுமென்று நம்புவதாகவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தனது உரையில் தெரிவித்துள்ளார். இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக 75 கோடி இந்திய ரூபா மதிப்பீட்டை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

இலங்கை இந்திய பாதுகாப்பும் வளர்ச்சியும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. எனவே, பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி தேவைகளை உணர்ந்து ஒன்றாகச் செயல்பட வேண்டுமெனவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தமிழ்நாட்டின் நாகபட்டினத்தையும் வட இலங்கையின் காங்கேசன்துறையையும் இணைக்கும் வகையில் பயணிகள் படகு சேவை விரைவில் ஆரம்பிக்கப்படுமெனவும், பிரதமர் நரேந்திர மோடி அறிவித்துள்ளார். கடற்றொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக இருதரப்பினரும் விவாதித்ததுடன், இந்த விவகாரத்தை மனிதாபிமான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டுமெனவும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

## அங்குருதொட்டையில்

# தாய், சேய் உயிரைப் பறித்த கோர கொலைச் சம்பவம்

## பின்னணி என்ன?

**கடந்த 18 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியிருக்கும். இளம் தாயொருவரை குழந்தையுடன் காணவில்லையென அங்குருவாத்தொட்ட பொலிஸாருக்கு முறைப்பாடொன்று கிடைக்கிறது.**



திமீர நிரோஷன் என்ற இளம் குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு தனது மனைவியையும் 11 மாத குழந்தையையும் காணவில்லையென அங்குருவாத்தொட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை பதிவுசெய்திருந்தார்.

அதில் அவர் தான் கடமை முடிந்து வீட்டுக்கு வந்தபோது மனைவியையும் மகளையும் காணவில்லை. எல்லா இடங்களிலும் அவர்களை தேடிக்களைத்து விட்டேன். எந்தத் தகவலும் கிடைக்காததால் தான் பொலிஸ் நிலையத்துக்கு வந்ததாக கூறியுள்ளார்.

24 வயதான வாசனா குமாரி, 11 மாதக் குழந்தையான தஷ்மி திலன்யா ஆகியோரே இவ்வாறு காணாமல் போயிருந்தனர்.

பெரும்பாலான பொலிஸ் அதிகாரிகள் இதுபோன்ற முறைப்பாடுகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துவதில்லை. கணவன், மனைவி தகராறுகளால் இதுபோன்ற சம்பவங்கள் நடக்கலாம் என நினைத்து, அதை சரியாகக் விசாரிப்பதில்லை.

எனினும் அங்குருவாத்தொட்ட பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் திமீரவின் முறைப்பாட்டு தொடர்பில் அலட்சியமாக இருந்துவிடவில்லை. திமீரவின் மனைவியும் குழந்தையும் காணாமல் போனதற்குப் பின்னால் ஏதோ மறைமுகக் குற்றச் செயலின் அறிகுறிகள் தென்பட்டன.

திமீரவின் மனைவி அழகானவர். திமீர தன் மனைவிக்கும் குழந்தைக்கும் எந்தக் குறையையும் வைக்கவில்லை. கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பணத்தை மனைவி மற்றும் மகளின் நலனுக்காக செலவழித்தார். அவர்களிடம் அளவற்ற அன்பு காட்டினார்.

அதேவேளை திமீரவின் சகோதரியொருவர் முன்னாள் இராணுவ வீரர் ஒருவரை திருமணம் செய்திருந்தார். திமீரவின் வீட்டிலிருந்து சகோதரியின் வீடு 10 கிலோமீற்றர் தொலைவிலிருந்தது. இராணுவத்திலிருந்து விலகிய திமீரவின் சகோதரியின் கணவர் தச்சுவேலை உள்ளிட்ட ஒப்பந்தப் பணிகளை செய்ததுடன் முச்சக்கர வண்டி சாரதியாகவும் பணிபுரிந்தார்.

திமீரவின் மனைவி அழகான இளம் பெண்ணாக இருந்தமையால் சகோதரியின் கணவருக்கு எப்போதும் அவள் மீது ஒரு கண் இருந்துகொண்டே இருந்தது. சில நேரங்களில் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். அதனால் தான், திமீர வீட்டில் இல்லாத சமயங்களில் வீட்டுக்கு வந்து அவளை தொந்தரவு செய்வதும் உண்டு. இதை திமீரவின் மனைவி பலமுறை திமீரவிடம் சொல்லியும் அவர் அதை நம்பவில்லை. அதைப்பற்றி அவர் பெரிதாக அலட்டிக்கொள்ளவுமில்லை. சகோதரியின் கணவன் தன் மனைவியை அப்படி பார்ப்பாரா? என்று அவர் எண்ணினார்.

அண்மையில் திமீரவின் சகோதரியின் கணவர், வாசனா குமாரியிடம் தகாத வார்த்தைகளை பேசி தொந்தரவு செய்திருந்தார். எனினும் திமீர இவை எதையும் பற்றிபெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. குறைந்தபட்சம் தான் வீட்டில் இல்லாத சமயங்களில் அங்கு வர வேண்டாம் என்று கூட எச்சரிக்கவில்லை.

இத்தகையதொரு பின்னணியில் தான் கடந்த 18ஆம் திகதி திமீரவின் மனைவியும் மகளும் காணாமல் போயிருந்தனர்.

தனது மைத்துனரின் தொல்லைகளை பொறுக்கமுடியாமல் குழந்தையை அழைத்துக் கொண்டு எங்கோ சென்றுவிட்டாரென திமீர நினைத்தார். எனினும் அங்குருவாத்தொட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட அதிகாரிகள் அவ்வாறானதொரு தீர்மானத்துக்கு வரவில்லை.

வீட்டில் சந்தேகத்துக்கிடமான முறையில் இருந்த இரத்தக் கறைகள் தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தினர். இரத்தக் கறைகள் குளிர்சாதனப்பெட்டியிலும், வீட்டின் பல இடங்களிலும் காணப்பட்டன. அதுமட்டுமின்றி வீட்டின் சில இடங்கள் கூட கழுவிச் சுத்தம் செய்யப்பட்டிருந்ததை திமீர பொலிஸாரிடம் கூறினார்.

இதன்போதே திமீர தனது மைத்துனர் தனது மனைவியை தொந்தரவு செய்ததாக பொலிஸாரிடம் கூறினார்.

அதுமட்டுமின்றி சம்பவத்தன்றும் மைத்துனர் தனது வீட்டுக்கு வருவதாக கூறியிருந்தமையும் ஞாபகத்துக்கு வர அதையும் பொலிஸ் விசாரணையில் திமீர தெரிவித்தார்.

இந்நிலையில் திமீரவின் மனைவி வாசனா மற்றும் குழந்தை ஆகியோர் காணாமல் போன சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆனந்த சில்வா தலைமையிலான குழுவினர் இரகசியமான முறையில் விசாரணைகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர்.

அதன்படி கடந்த 19ஆம் திகதி காலை வீட்டில் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அங்கு வீடு முழுவதும் சிதறிக் கிடந்த இரத்தக் கறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. பாணந்துறை பிரதேச குற்றவியல் பிரிவு அதிகாரிகள் அங்கு வரவழைக்கப்பட்டனர். இரத்தக் கறைகளின் மாதிரிகளைப் பெற்று முழுமையான விசாரணை நடத்தப்பட்டது. சந்தேகத்துக் கிடமான தடயங்கள், தகவல்களைப் பெற்றனர்.

இதற்கிடையில், பொலிஸ் உத்தியோகபூர்வ மோப்பநாய் பிரிவும் வரவழைக்கப்பட்டது. பொலிஸ் உத்தியோகபூர்வ மோப்பநாய் புருனோ மற்றொரு விசாரணையை மேற்கொள்ள அனுப்பப்பட்டது. திமீரவின் மனைவியின் ஒரு ஜோடிக் காலணிகள் புருனோவிடம் வழங்கப்பட்டது.

அதன் மூலம் சரியான தடயங்கள் கிடைக்கவில்லை. சுற்றியிருப்பவர்களிடம் தகவல் கேட்டு மைத்துனர் பற்றிய கூடுதல் தகவல்களைத் தேட ஆரம்பித்தார். அதன்மூலம் திமீரவின் மனைவியும் மகளும் காணாமல் போனதாக கூறப்படும் 18ஆம் திகதி மாலையில் திமீரவின் மைத்துனர் அங்கு வந்துசென்றதை பொலிஸ் அதிகாரிகள் மேலும் உறுதிப்படுத்தினர்.

இவ்விடயங்கள் அனைத்திலும் விசேட கவனம் செலுத்திய அங்குருவாத்தொட்ட பொலிஸார், திமீர வேலைக்குச் சென்ற மற்றும் அவர் வீடு திரும்பிய நேரங்கள் பற்றிய தகவல்களைக் கூட தேடினர். காலையில் வேலைக்காக வீட்டிலிருந்து கிளம்பிய திமீர, இரவு தாமதமாகவே வேலை செய்யும் இடத்திலிருந்து திரும்பியுள்ளதை பொலிஸார் உறுதி செய்தனர். அதன்படி, திமீரவின் மனைவியும் குழந்தையும் காணாமல் போனதற்கு திமீரவின் மைத்துனரே காரணமாக இருக்கலாம் என்பது தெளிவாகியது.

எனினும் கைதுசெய்வதற்கான வலுவான ஆதாரங்கள் இருக்கவில்லை. எனவே பொலிஸார் மைத்துனரை வரவழைத்து விசாரணைக்குட்படுத்தினர். ஆனால் அவர் வாயிலிருந்து உண்மையை வரவழைக்கமுடியவில்லை.

இதேவேளை கடந்த 21ஆம் திகதி காலை அங்குருவாத்தொட்ட பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் திமீரவின் மனைவி மற்றும் மகளை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இரவு அங்குருவாத்தொட்ட பொலிஸ் பிரிவில் ரத்மல்கொட வனப்பகுதியில் தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்த இடம் திமீரவின் வீட்டிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்திருந்தது. கிராம மக்களும் பொலிஸாருடன் இணைந்து அப்பகுதியில் தேடுதலில் ஈடுபட்டனர்.

எனினும் பொலிஸாருக்கு அங்கு அதிக நேரம் செலவழிக்க இடம் கிடைக்கவில்லை. திமீரவின் மனைவி சடலமாக வனப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டிருந்தார். சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது.

அதனைத்தொடர்ந்து திமீரவின் மகளின் சடலம் மனைவியின் சடலம் கண்டெடுக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 15 மீற்றர் தொலைவில் கண்டெடுக்கப்பட்டது. குழந்தையின் சடலமும் அடையாளம் காண முடியாத அளவுக்கு உருக்குலைந்திருந்தது. எனவே இந்தக் குற்றத்தைச் செய்தது யார்? என்பது தொடர்பில் அங்குருவாத்தொட்ட பொலிஸ் புலனாய்வு அதிகாரிகளுக்கு பல தகவல்கள் கிடைத்தன. பிரேதப் பரிசோதனைக்குப் பின்னரே மேலதிக தகவல்கள் வெளிச்சத்துக்கு வரும்.




இந்நிலையில் காணாமல் போன மனைவி மற்றும் மகளின் சடலங்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டபோது, திமீரவின் மைத்துனரும் காணாமல் போயுள்ளார். அவரிடம் விசாரணை நடத்தி கடந்த 19ஆம் திகதி விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர். சடலங்கள் மீட்கப்பட்ட பின்னரே அவர் காணாமல் போயுள்ளார். இறுதியில் சந்தேக நபர் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கை காரணமான கைது செய்யப்பட்டுள்ளார்.



**வசந்தா அருள்ரட்ணம்**

---

## மேலும் நான்கு வருடங்களுக்கு GSP + சலுகை!



# பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான மற்றொரு சந்தர்ப்பம்

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவு பேராசிரியர் பிரியங்க துனுசிங்க**



இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள GSP பிளஸ் வரிச்சலுகையை 2027 டிசம்பர் 31 வரை மேலும் நான்கு வருடங்களுக்கு நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது. இந்த வரிச்சலுகையானது இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தது. ஐரோப்பிய சங்கத்தினால் அபிவிருத்தி அடைந்து வரும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு வழங்கும் முக்கிய முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் அல்லது முக்கியமாக வர்த்தகத்திற்காக உருவாக்கப்பட்ட நடைமுறையாக GSP+ வரிச்சலுகையினைக் குறிப்பிடலாம். இதன் பிரகாரம், வளர்ந்து வரும் ஆபிரிக்க, ஆசிய மற்றும் இலத்தீன் அமெரிக்க பிராந்தியங்களில் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பொருட்களை ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளின் சந்தைக்கு அனுப்புவதற்கான விசேட சந்தர்ப்பத்தை இச்சலுகை வழங்குகிறது.

இலங்கைக்கு இம்முறை ஜிஎஸ்பி + வரிச் சலுகை கிடைக்காது என கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினரும், சில அரசியல் தலைவர்களும் எதிர்வு கூறியிருந்தார்கள். இவ்வாறான நிலைமையில் மேலும் நான்கு வருடத்திற்கு ஜிஎஸ்பி + வரிச்சலுகையை வழங்குவதற்கு ஐரோப்பிய சங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டிருப்பது மிகவும் பெறுமதியான சந்தர்ப்பமாகும். தற்பொழுது உலகத்தின் அநேக நாடுகள் பணவீக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. ரஷ்ய, உக்ரேன் யுத்தமும் இதற்கான தாக்கத்தைச் செலுத்துவதோடு, தொடர்ந்தும் இந்த யுத்தம் இடம்பெறும் நிலைமையில் ஐரோப்பிய பொருட்களின் விலைகள் மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருப்பதற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. பணவீக்கம் நிலவும்போது, நுகர்வோர் எப்போதும் குறைந்த விலையில் பொருட்களை கொள்வனவு செய்யத் தூண்டப்படுவதால், இலங்கைக்கு கிடைத்துள்ள GSP + வரிச் சலுகையின் கீழ் இலங்கை ஏற்றுமதியாளர்களுக்கு குறைந்த விலையில் சந்தைக்குள் நுழைவதற்கான வாய்ப்பு கிடைத்திருப்பது பெரும் அனுகூலமாகும். பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளில் மீண்டும் ஜிஎஸ்பி + வரிச்சலுகை கிடைத்திருப்பதை பெரும் பாக்கியமாக கருதலாம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் GSP மற்றும் GSP + ஆகிய இரண்டு திட்டங்களின் கீழ் இலங்கை பல வருடங்களாக வரிச்சலுகைகளை பெற்று வருகின்றது. வரி விலக்கு என்றால் என்ன என்பதை பின்வருமாறு விளக்கலாம். வெளிநாடு ஒன்றிலிருந்து ஏதாவது ஒரு பொருளை இறக்குமதி செய்யும் போது அந்தப் பொருளுக்கு உரியதாக 10, 15, 20 போன்ற வீதங்களில் வரி செலுத்த நேரிடுவதோடு அந்த வரி கண்டிப்பாக செலுத்தப்படவும் வேண்டும். நாட்டினுள் அந்தப் பொருளுக்கான சந்தை விலை தீர்மானிக்கப்படுவது குறித்த வரியையும் சேர்த்தேயாகும். ஜிஎஸ்பி + வரிச்சலுகையின் கீழ் கிடைக்கும் முக்கிய நன்மை என்னவென்றால், இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள ஒரு நாட்டிற்கு ஏதேனும் ஒரு தயாரிப்பை ஏற்றுமதி செய்யும் போது, அந்த உற்பத்தியை ஒப்பீட்டளவில் குறைந்த விலையில் சந்தைக்கு கொண்டு செல்வதற்கான வாய்ப்பு கிடைப்பதாகும். அ வ்வாறு குறைந்த விலையில் எமது பொருட்கள் ஐரோப்பிய சந்தைக்கு செல்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் போது இலங்கை போன்ற நாடுகளில் இருந்து அதிகமாக பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்குரிய நாடுகளின் இறக்குமதியாளர்கள் முன் வருவார்கள். இந்த நன்மையானது இலங்கை போன்ற ஒருசில நாடுகளுக்கே கிடைப்பது மிகவும் முக்கியமானதாகும். பல நாடுகளுக்கு ஜிஎஸ்பி நிவாரணம் கிடைக்கின்ற போதும் ஜிஎஸ்பி + வரிச்சலுகை மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான நாடுகளுக்கே கிடைக்கிறது, அதாவது 20க்கும் குறைவான நாடுகளுக்கே கிடைப்பது முக்கிய விடயமாகும்.

உலக வர்த்தக அமைப்பு உருவாவதற்கு முன்னர் இருந்தது, GATT எனப்படும் பொது வர்த்தகம் மற்றும் வரிகள் தொடர்பான பொதுவான இணக்கப்பாடே காணப்பட்டது. பின்னைய காலங்களில் அது உலக வர்த்தக அமைப்பாக மாறியதோடு, அதனூடாக நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் சில நிபந்தனைகளின் பிரகாரம் ஒரு முறையான ஒழுங்கமைப்பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கப்பால், முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்கள் நடைமுறையில் இருந்ததோடு, முக்கியமாக அனைவரையும் சமமாக நடத்துவது உலக வர்த்தக அமைப்பின் அடிப்படை நிபந்தனையாக இருந்தது. பின்னர் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு உதவும் வகையில் ஜிஎஸ்பி சிறப்பு வரிச் சலுகைகளை அறிமுகப்படுத்தின. அந்த வரிச் சலுகையின் கீழ், குறைந்த வருமானம் உள்ள நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு குறைந்த வரிச் சலுகை வழங்கப்பட்டு வளர்ந்த நாடுகளின் சந்தைகளுக்குத் திறக்கப்பட்டன. GSP என செயற்படுத்தப்பட்ட இந்த வரிச்சலுகை 2007ம் ஆண்டளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடுகளுக்குரியதாக மேலும் தளர்த்தப்பட்டது. அதன்படி, GSP வரிச் சலுகையை விட GSP + வரிச் சலுகையின் கீழ் மிகவும் தாராளமான, அதாவது மிகக் குறைந்த வரி அல்லது வரியே இல்லாத நிவாரணம் கிடைக்கிறது. இது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான விசேட சலுகையாகும். தாய்லாந்து, மலேசியா போன்ற நாடுகளோடு போட்டியிட்டு அந்த நாடுகளின் சந்தைகளுக்கு எமது பொருட்களை கொண்டு செல்வதற்கு முடியாதிருந்தாலும், GSP + வரி நிவாரணத்தின் கீழ் அந்த பாதகத்தை எம்மால் குறைக்க முடியும். அதனால் தான் கடந்த 10 வருடங்களில் பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும் இலங்கையின் ஆடைகள் மற்றும் கடற்றொழில் உற்பத்திகளை அந்த சந்தைகளுக்கு அனுப்ப கிடைத்தமை எமக்கு கிடைத்த விசேட பாக்கியமாகும்.




என் கருத்துப்படி, GSP வரிச்சலுகையானது இன்று உலகில் உள்ள மிகவும் தாராளமான முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களில் ஒன்றாகும். GSP பிளஸ் வர்த்தகச் சலுகையைப் பெறும் நாட்டுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்கும் 25 நாடுகள் பெரிய சந்தைகளில் வாய்ப்புக் கிடைக்கின்றது. தனியொரு நாட்டின் சந்தையை விட ஒரு குழுவின் சந்தைக்கான வாய்ப்பு இப்போது எமது நாட்டுக்கு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை நாம் எந்தளவுக்குப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே நம் நாடு எவ்வளவு விரைவாக வறுமையிலிருந்து மீள முடியும் என்பதைத் தீர்மானிக்கலாம். GSP + வரிச்சலுகையை கூடியளவில் பயன்படுத்திக் கொள்ள ஒரு நாடாக நாம் எவ்வாறு நம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை ஆராய வேண்டும்.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியை 2022 ஜனவரி_ நவம்பர் வரையிலான ஏற்றுமதியுடன் ஒப்பிடுகையில் 2023 ஜனவரி _ஜூன் காலப்பகுதியில் சுமார் 15 சதவீதத்தால் குறைந்துள்ளது. இவ்வாறான சரிவுக்கு முக்கிய காரணம் பணவீக்க சூழ்நிலையினுள் ஜவுளி மற்றும் ஆடை கொள்வனவு குறைவடைந்ததேயாகும். இதுகுறித்து, நாம் மேற்கொண்ட ஆய்வில், இலங்கை ஆடைகளில் பெண்களின் ஆடைகளுக்கான ஏற்றுமதி குறைந்துள்ளமை தெரிய வந்தது. இவ்வாறான நிலையினுள் ஜிஎஸ்பி + வரிச் சலுகை கிடைப்பதால் ஏற்றுமதிச் சந்தையை முந்தைய நிலைக்கு வெல்வதற்கான மிக முக்கியமான சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி அல்லது உலகப் பொருளாதார நெருக்கடியின் கண்ணோட்டத்தில் பார்த்தாலும் சரி, இம்முறை GSP + வரிச் சலுகையை இலங்கை பெறுவது ஒரு மிகச் சிறந்த வாய்ப்பாகும். குறிப்பாக இலங்கையில் ஆடைத் துறையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபடுபவர்களில் பெரும்பான்மையானவர்கள் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால், தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் அவர்களது தொழில்களை இழப்பதற்கிருந்த ஆபத்தை இந்த வரிச்சலுகையின் மூலம் அகற்றிக் கொள்ள முடியும்.

**சுரேகா நில்மினி இலங்கோன்**
**தமிழில் எம். எஸ். முஸப்பிர்**

**வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பில் சிறந்த யோசனையொன்று முன்வைக்கப்பட்டிருப்பதாகவும், அதனை முன்னெடுத்துச் செல்வதா இல்லையா என்பதை தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளே தீர்மானிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.**



# இனவாத எதிர்ப்பலைகளுக்கு மத்தியிலும் 13 ஐ அமுல்படுத்துவதில் ஜனாதிபதி உறுதி



## இன்றைய அரசியல் சூழலில் தமிழ் அரசியல் தரப்புகள் ஒத்துழைப்பு வழங்கினால், 13 ஐ நடைமுறைப்படுத்துவது சாத்தியமாகுமென நம்பிக்கை!

## வடக்கு, கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமாகிய நகர்வு





இந்தியாவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்வதற்கு முன்னர் வடக்கு, கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி இதனைத் தெரிவித்திருந்தார்.

13 ஆவது திருத்தச்சட்டத்தில் பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனையவற்றை நடைமுறைப்படுத்த முடியும் என்றும், முழுமையாக இதனை நடைமுறைப்படுத்துவதாயின் அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அச்சந்திப்பின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

நீண்ட காலமாகத் தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் கொண்டுவருவது நாட்டின் ஸ்திரத்தன்மைக்குப் பெரிதும் அவசியமானது என்ற விடயத்தைப் புரிந்து கொண்டுள்ள ஜனாதிபதி, இதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரையில் 13 ஆவது திருத்தம் குறித்த சாதகமான நிலைப்பாட்டில் அவர் இருப்பதைக் காண முடிகிறது. அவர் மாத்திரமன்றி, முன்னர் ஆட்சியிலிருந்த ஜனாதிபதிகளும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது குறித்த நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர். விசேடமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 13 பிளஸ் அல்லது 13 இற்கும் அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என ஒரு கட்டத்தில் கூறியிருந்தார்.

இருந்தபோதும் அதனை நடைமுறைப்படுத்தாமல் விட்டது துரதிர்ஷ்டமாக அமைந்தது. இவ்வாறான பின்னணியில் 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் விவகாரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

இது தொடர்பான வரலாற்றை நோக்குவோமாயின், 1988 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் இந்தியாவின் அழுத்தத்தின் காரணமாக உள்ளடக்கப்பட்ட மாகாண சபை முறையை வலியுறுத்துவதே அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தமாகும்.

1987ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும், இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கம் நோக்கில் அரசியலமைப்புக்கு 13 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இந்தியாவின் அழுத்தத்துக்கு அமைய மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதற்கு இலங்கையின் மத்திய அரசு உடன்பட்டிருந்தாலும் முழுமையான அதிகாரங்கள் எதுவும் இதுவரை பகிரப்படவில்லை. குறிப்பாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் மாகாணசபைகளுக்கு காணி, பொலிஸ் உள்ளிட்ட அதிகாரங்களை முழுமையாகப் பகிர்ந்தளிக்கவில்லை என்பது நாம் அனைவரும் நன்கு அறிந்த விடயம்.

அதேநேரம், 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஆரம்பம் தொட்டு தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவி வந்துள்ளன. ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றிருந்த காலப்பகுதியில் எல்.ரி.ரி.ஈ உள்ளிட்ட ஆயுதக் குழுக்கள் மாகாணசபை முறையில் பெரிதாக நாட்டம் கொண்டிருக்கவில்லை.

ஆயுதக் குழுக்கள் மாத்திரமன்றி அப்போது தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளும் அதில் பெரிதாக அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதே உண்மை.

இருந்தபோதும் பின்னைய நாட்களில் 13 ஆவது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கான தேர்தல்களில் போட்டியிடுவதில் தமிழ்க் கட்சிகள் ஆர்வம் காட்டியிருந்தன.

13 ஆவது திருத்தத்துக்கு அமைய உருவாக்கப்பட்ட மாகாணங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஆரம்பத்தில் இணைந்தே காணப்பட்டன. 1988 ஆம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதலமைச்சராக வரதராஜப் பெருமாள் பணியாற்றினார். 1990 ஆம் ஆண்டு இந்திய அமைதிகாக்கும் படையினர் நாட்டைவிட்டு வெளியேறும் நேரத்தில் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழீழப் பிரகடனத்தை அவர் மேற்கொண்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து மாகாண சபைகள் கலைக்கப்பட்டு ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன. இதனைத் தொடர்ந்து பல வருடங்களாக வடகிழக்கு மாகாணசபைக்கான தேர்தல் பல வருடங்களாக நடத்தப்படவில்லை.

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலிருந்தபோது விமல் வீரவன்ச உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கிற்கு அமைய இரு மாகாணங்களும் 2006 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டன. இதன் பின்னர் 2013 ஆம் ஆண்டிலேயே வடமாகாணத்துக்கான தேர்தல் நடத்தப்பட்டது. இதுவே பிரிக்கப்பட்ட வடமாகாணசபைக்கு நடத்தப்பட்ட ஒரேயொரு தேர்தலாகும். அதன் பின்னர் இதுவரை தேர்தல் நடைபெறவில்லை.

இது இவ்வாறிருக்க, 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விடயத்தில் இந்தியா தொடர்ந்தும் அக்கறை காண்பித்து வந்துள்ளது.

(17ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

---

**உலக நாடுகளுடன் நட்புறவை மென்மேலும் வலுப்படுத்தி, இந்தியாவின் பொருளாதார வல்லமையை அதிகரிக்கும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதன் ஒரு அங்கமாகவே பிரதமர் மோடி சமீப காலமாக உலகின் பல்வேறு நாடுகளுக்கும் விஜயங்களை மேற்கொண்டு வருகின்றார்.**



# மத்தியகிழக்கு நாடுகளுடன் நல்லுறவை வலுப்படுத்தும் முயற்சியில் பிரதமர் மோடி

## பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்து

## ஐக்கிய அரபு அமீரகம் சென்றிருந்த நரேந்திர மோடிக்கு மகத்தான வரவேற்பு



மத்திய கிழக்கு நாடுகளுடனான உறவுகளையும் பிரதமர் நரேந்திர மோடி வலுப்படுத்தி வருகின்றார். ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் சிலதினங்களுக்கு முன்னர் பிரதமர் மோடி விஜயம் செய்திருந்தார். ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைவர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அபுதாபியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு நரேந்திர மோடி மேற்கொண்டஐந்தாவதுபயணம்இதுவாகும்.பிரதமர் மோடி கடைசியாக கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஐக்கிய அரபு அமீரகத்திற்குச் சென்றிருந்த போது, அபுதாபியில் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானைச் சந்தித்து தமது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஜனாதிபதியாக அவர் பதவியேற்றார். 34 ஆண்டுகளில் ஐக்கிய அரபு அமீரகம் சென்ற முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை 2015ஆம் ஆண்டு பிரதமர் மோடி பெற்றார். இந்தப் பயணத்தைத் தொடர்ந்து 2016 ஆம் ஆண்டு ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் இந்தியாவிற்கு வருகை தந்தார். அதன் பின்னர் 2017 ஆம் ஆண்டில், இந்தியாவின் குடியரசு தின விழாவில் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் தலைமை விருந்தினராக இருந்தார். மேலும், 2017 இல் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யானின் இந்திய வருகையின் போது இந்தியா_ ஐக்கிய அரபு அமீரக உறவு உத்திபூர்வமாக நெருக்கமடைந்தது.

ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கிடையிலான உறவுகள் அனைத்துத் துறைகளிலும் மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்டுள்ளதாக தலைவர்கள் திருப்தி தெரிவித்திருந்தனர். இந்தியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் இடையிலான வர்த்தகம் 2022 இல் 85 பில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது.

2022_23 ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் மூன்றாவது பெரிய வர்த்தகப் பங்காளியாகவும், இந்தியாவின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி நாடாகவும் UAE மாறியுள்ளது. ஐக்கிய அரபு அமீரகத்தின் இரண்டாவது பெரிய வர்த்தக பங்காளியாக இந்தியா உள்ளது. 2022 பெப்ரவரியில் ஐக்கிய அரபு அமீரகத்தின் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முதல் நாடு இந்தியா ஆனது. மே 1, 2022 அன்று இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததில் இருந்து இருதரப்பு வர்த்தகம் சுமார் 15% அதிகரித்துள்ளது.

அபுதாபியில், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் தலைவர் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான், பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டதைப் பார்வையிட்டனர். இருநாடுகளும் ஒரு கட்டமைப்பை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. அந்தந்த மத்திய வங்கிகளின் ஆளுநர்களால் எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளுக்கு உள்ளூர் நாணயங்களின் (INRAED) பயன்பாட்டை ஊக்குவிக்க வகை செய்யும்.

அந்தந்த மத்திய வங்கிகளின் ஆளுநர்களால் பணம் செலுத்துதல் மற்றும் செய்தி அனுப்புதல் முறைகளை இணைக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அபுதாபியில் டில்லிஇந்திய தொழில்நுட்பக் கழகத்தை நிறுவும் திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இருதரப்பு வர்த்தகத்தில் இரு நாடுகளுக்கும் இடையே உள்ளூர் நாணயத் தீர்வு முறையை உருவாக்குவது பரஸ்பர நம்பிக்கையின் பிரதிபலிப்பாகும் என்று தலைவர்கள் விபரித்தனர். இது இரு நாடுகளிலும் உள்ள பொருளாதாரங்களின் வலுவான தன்மையைப் பிரதிபலிக்கும் என்பதுடன், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இந்தியா இடையேயான பொருளாதார ஈடுபாட்டை மேம்படுத்தும். இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை தாண்டிய பரிவர்த்தனைகளை மிகவும் திறம்பட செயல்படுத்த, உடனடி கட்டண முறைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றை செயல்படுத்த தலைவர்கள் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான முதலீட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான தங்கள் தீர்மானத்தை தலைவர்கள் மீண்டும் வலியுறுத்தினர். 2022_2023 இல் இந்தியாவில் நான்காவது பெரிய முதலீட்டாளராக ஐக்கிய அரபு அமீரகம் ஆகியுள்ளது என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

அபுதாபியில் ஐ.ஐ.டி டில்லியின் கிளையை நிறுவுவதற்காக இந்திய கல்வி அமைச்சகம், ஐ.ஐ.டி டில்லி, அபுதாபி கல்வி மற்றும் அறிவுத்துறை இடையேயான முத்தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர். கடந்த ஆண்டு பெப்ரவரியில், இரு தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற மெய்நிகர் உச்சிமாநாட்டின் போது, ஐக்கிய அரபு அமீரகத்தில் ஐ.ஐ.டியின் கிளையை அமைக்க ஒப்புக்கொண்டனர். இதனை நனவாக்க இரு தரப்பினரும் கடந்த இரண்டு ஆண்டுகளாக உழைத்துள்ளனர்.

இதற்கு தங்கள் ஒப்புதலைத் தெரிவித்த இரு நாட்டுத் தலைவர்கள், ஐ.ஐ.டி டில்லி_ அபுதாபி 2024 ஜனவரிக்குள் ஆற்றல் மாற்றம் மற்றும் நிலைத்தன்மையில் முதுகலை பாடத் திட்டத்துடன் செயல்படத் தொடங்கும் என்று அறிவித்தனர்.

(17ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

# இலங்கை–இந்திய நல்லுறவில் ஆரம்பமான புதிய அத்தியாயம்!

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலவிவருகின்ற பல தசாப்தகால நல்லுறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு, இரு நாடுகளும் பொருளாதார ரீதியிலான ஒத்துழைப்புடன் செயற்படுவதற்கு இணக்கம் கண்டுள்ளன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய உத்தியோகபூர்வ விஜயம் இதற்கான அடித்தளத்தை வலுவாக இட்டுள்ளது என்றுதான் கூற வேண்டும்.**



### இலங்கையில் இனங்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி கூடுதல் அக்கறை

இலங்கைக்கு எப்பொழுதும் உதவிக்கரம் நீட்டும் அயல்நாட்டு நண்பரான இந்தியாவுக்கு, ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட முதலாவது விஜயமாக இது அமைந்துள்ளது.

நாட்டை இக்கட்டான சூழ்நிலையில் பொறுப்பேற்றுக் கொண்ட ஜனாதிபதிக்கு இந்தியா தொடர்ந்தும் ஆதரவு வழங்கியிருந்த நிலையில், தமது நாட்டுக்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அமோக வரவேற்பை வழங்க அந்நாடு தவறவில்லை.

பொருளாதார ரீதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை வலுப்படுத்துவது குறித்து இந்த விஜயத்தின் போது பெரிதும் கலந்துரையாடப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

'தமிழ் சமூகம் கௌரவத்துடனும், கண்ணியத்துடனும் வாழ்வதை இலங்கை உறுதி செய்ய வேண்டும். அத்துடன், தமிழர் பகுதிகளில் சமத்துவம், நீதியை நிலைநாட்டுவதுடன் அமைதிக்கான மீள்கட்டுமான நடவடிக்கைகளை இலங்கை முன்னெடுக்க வேண்டும்' என்பதையும், 'அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துதல் ஆகியவை இலங்கையில் நல்லிணக்கச் செயன்முறைக்கு தீர்வு காண்பதற்கும், எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகள்' என்பதையும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.



கடந்த வியாழக்கிழமை இந்தியா சென்றடைந்த ஜனாதிபதி முதலில் அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஜெய் சங்கர், இந்திய பாதுகாப்புச் செயலாளர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய ஜனாதிபதி திரௌபதி முர்மு உள்ளிட்ட அந்நாட்டுத் தலைவர்களைச் சந்தித்திருந்தார்.

### பொருளாதார நட்புறவுக்கு இடப்பட்டுள்ள உறுதியான அடித்தளம்

அதுமாத்திரமன்றி இலங்கையின் சக்திவலுத்துறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஆர்வம்காட்டிவரும் இந்தியாவின் கோடீஸ்வர வர்த்தகர்களில் ஒருவரான அதானியையும் ஜனாதிபதி சந்தித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தார்.

இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரை வழங்கிய இந்திய உதவிகளுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்திருந்த ஜனாதிபதி, இரு தரப்புக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்புக்களை மேலும் விஸ்தரிப்பது குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

### சர்வதேசத்தின் கவனத்தை அதிகம் ஈர்த்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயம்!

இந்தியாவின் ஸ்திரமானதும் துரிதமானதுமான பொருளாதார வளர்ச்சி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை இலங்கையின் பொருளாதார வளர்ச்சி, பொருளாதார மீட்சி, புனரமைப்புப் பணிகள் ஆகியவற்றுடன் இணைந்து, இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமானதும் ஆழமானதுமான இருதரப்பு பொருளாதார பங்குடைமையை உருவாக்குவதற்கும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குவது தொடர்பில் இரு தலைவர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளது.



இரு நாட்டு மக்களிடையே நாகரிக உறவுகள், புவியியல் ரீதியான நெருக்கம், கலாசார தொடர்பு மற்றும் புராதன நன்மதிப்பு ஆகியவற்றால் வழங்கப்பட்டுள்ள இணையற்ற நன்மைகளை முன்னோக்கிக் கொண்டு செல்வதன் ஊடாக இரு தரப்பும் நன்மையைப் பெறமுடியும் என்பது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

இருதரப்புக் கலந்துரையாடல்களுக்கு அப்பால் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. கால்நடை வளர்ப்பு, எரிசக்தி, திருகோணமலை மாவட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி, வலையமைப்புக்களுக்கிடையிலான ஒத்துழைப்பு, சம்பூர் மின்சாரப்படலத் திட்டத்தை தொடங்குவதற்கான அனுமதி போன்ற ஒப்பந்தங்கள் இருநாட்டுக்கும் இடையில் பரிமாறப்பட்டன.

இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் இலங்கை – இந்தியாவின் அடுத்த 25 வருடங்களுக்கான அடித்தளத்தை இடும் என்றும், இலங்கை அனைத்து சமூகக் குழுக்களினதும் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய ஒருமைப்பாடு இலங்கையின் அனைத்து சமூகத்தினர் மத்தியிலுமான நல்லிணக்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு சுபீட்சமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான தமது நோக்கத்திற்கு இந்தியா உதவும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் கொவிட் பெருந்தொற்று ஏற்பட்டிருந்த காலப்பகுதிகளில் இரு தரப்பு வர்த்தக மற்றும் பொருளாதார ஈடுபாடுகள் மிகவும் ஆணித்தரமாக நிரூபிக்கப்பட்டிருக்கும் அதேவேளை, கொள்கை நிலைத்தன்மை, இலகுவாக வர்த்தகங்களை மேற்கொள்வதை ஊக்குவித்தல், இருதரப்பு முதலீட்டாளர்களுக்குமான வெளிப்படையான அணுகுமுறை ஆகியவற்றின் ஊடாக பரஸ்பர முதலீட்டினை மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இலங்கை அரசாங்கத்துக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனங்களின் உரித்துமாற்றல் நடவடிக்கைகளிலும் இலங்கையின் பல்வேறு துறைகளிலும் உற்பத்தி மற்றும் பொருளாதார வலயங்களிலும் இந்தியாவிலிருந்து முதலீடுகளை மேற்கொள்வதற்கான வழிவகைகளை உருவாக்குவது பற்றியும் இந்த விஜயத்தின் போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

புதிய மற்றும் முன்னுரிமைக்குரிய துறைகளில் இருதரப்பு வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை பரந்தளவில் மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கலந்துரையாடல்களை நடத்துவது பற்றியும் இரு நாட்டுத் தலைவர்களும் விரிவான பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விஜயம் இலங்கை தற்பொழுதுஎதிர்கொண்டுள்ளபொருளாதார நெருக்கடி மிக்க சூழ்நிலையில் மிகவும் முக்கியம் வாய்ந்த ஒன்றாகும்.

ஏரிசக்தித்துறை மற்றும் பொருளாதாரத்துறையிலான ஒத்துழைப்புக்கள் பற்றியே இவ்விஜயத்தின் போது அதிகமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்துறைகளில் இந்தியா ஏற்கனவே இலங்கையில் முதலீடுகளை மேற்கொண்டுள்ள நிலையில், இவை மென்மேலும் மேம்படுத்தப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் காணப்படும் நீண்டகால உறவுகளுக்கு இந்த விஜயம் புதியதொரு அத்தியாயமாகவே அமைகிறது. இதன் ஊடாக இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவு மேலும் வலுப்பெற்றுள்ளது. இது பிராந்தியத்தின் முன்னேற்றத்துக்கும் நிச்சயம் உறுதுணையாக அமையும் என்கிறார்கள் இந்திய மற்றும் இலங்கை அரசியல் நோக்கர்கள்.



**'அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துதல் ஆகியவை இலங்கையில் நல்லிணக்கச் செயன்முறைக்கு தீர்வு காண்பதற்கும், எளிதாக்குவதற்கும் இன்றியமையாத கூறுகள்' என்பதை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துக் கூறியுள்ளார்**



# இந்தியாவின் சமகால வன்முறைக் களமாக மணிப்பூர்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

- மெய்தீஸ் இனத்தவரின் இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கையாலேயே வன்முறை ஆரம்பமாகியுள்ளது.
- வன்முறைக் கலாசாரத்தின் அடிப்படை தென்னாசியா எங்கும் வளர்ச்சியடைந்துள்ளது.
- பகுதியளவில் வன்முறை அரசியலமைப்பையே தென்னாசியா கொண்டுள்ளது.





தென்னாசிய அரசியல் சூழல் அதிகம் இந்தியாவை மையப்படுத்தியே காணப்படுகிறது. சுதந்திர இந்தியா அடைந்த வன்முறைகள் அதிகம். சுதந்திரத்துக்கான போராட்டத்தை எதிர்கொள்ளும் விதத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் அதிகம் வன்முறை மேற்கொள்ளப்பட்டது மட்டுமன்றி இராச்சியங்களாக இருந்த இந்தியா தனக்குள்ளே அதிக வன்முறைகளை எதிர்கொண்டது. அவற்றை போர்கள் என வரையறுத்துக் கொண்டாலும் அதன் விளைவுகள் வன்முறையை தந்தவையாக அமைந்திருந்தன. இந்தியத் துணைக்கண்டம் மீது ஆரியப் படையெடுப்புக்கு பின்னர் இஸ்லாமியர்களது படைநகர்வு பாரிய அழிவுகளை ஏற்படுத்தியது. இதன் பின்னர் ஐரோப்பியரது படைநகர்வு ஜாலியன்வாலாபாக் படுகொலையில் அதன் உச்சத்தைக் காட்டியது. மகாத்மா காந்தி அகிம்சையை முதன்மைப்படுத்தினாலும் அவரது காலத்திலும் அதன் முன்பும் பின்னரும் வன்முறை இந்தியாவிலும் அதன் பிராந்தியத்திலும் ஓர் அரசியல் பரிமாணத்தை ஏற்படுத்தியது. இந்தியாவின் சமகால வன்முறைக்களமாக மணிப்பூர் மாறியுள்ளது. இக்கட்டுரை மணிப்பூர் வன்முறையையும் அதன் இயல்புகளையும் தேடுவதன் மூலம் தென்னாசியாவின் அரசியலில் வன்முறை கலாசாரத்தை புரிந்து கொள்ள முயலுகிறது.

முதலில் மணிப்பூர் வன்முறையின் பின்னணியைத் தேடுவது பொருத்தமானது. இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூர் பங்களாதேஷ் மற்றும் மியான்மாரை எல்லையாகக் கொண்டது. ஏறக்குறைய 3.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட மாநிலமான மணிப்பூர் மெய்தீஸ் இனப்பிரிவினர் ஏறக்குறைய மக்கள் தொகையில் அரைப்பங்கினர். ஏனைய 50 சதவீதத்தில் 43 சதவீதமானவர்களாக குக்கி மற்றும் நாகாஸ் காணப்பட 7சதவீதம் பழங்குடிகள் வாழும் மாநிலமாகவும் உள்ளது. இதில் மெய்தீஸ் இனத்தவரே மணிப்பூரின் மூத்த இனத்தவராக கொள்ளப்படுகின்றனர். மணிப்பூரில் இந்துக்களே பெரும்பான்மையினர். மெய்தீஸ் இனத்தவரே அதிகம் இந்துக்களாவார். குக்கி இனத்தவரில் பெரும்பான்மையினர் கிறிஸ்தவர்களே. மணிப்பூர் இனப்பரம்பல் மற்றும் மத அடையாளத்தில் அதிகம் மியான்மார் சார்ந்ததாகவே அமைந்துள்ளது. மெய்தீஸ் இனத்தவர் இம்கால் பள்ளத்தாக்கை அதிகம் மையப்படுத்தியே வாழ்கின்றனர். குக்கி அதனை அண்டிய மலைப்பகுதிகளில் வாழ்கின்றனர். இத்தகைய மெய்தீஸ் மற்றும் குக்கி இனப் பிரிவினருக்கிடையே மோதல் நிகழ்ந்துவருகிறது.

பிரித்தானியர் காலத்திலிருந்து இத்தகைய வன்முறை இரு தரப்பினருக்குமிடையே நிகழ்ந்துவருகின்றது. தற்போது மெய்தீஸ் இனத்தவரின் இட ஒதுக்கீட்டுக்கான கோரிக்கையாலேயே வன்முறை ஆரம்பமாகியுள்ளது. அதிலும் பாரதீய ஜனதா கட்சி ஆட்சியைப் பிடிப்பதற்காக இந்து மதத்தை அதிகம் பேணும் மெய்தீஸ் இனத்தவருக்கு இட ஒதுக்கீடு வழங்குவதாக உத்தரவாதம் கொடுத்திருந்தது. அது மட்டுமன்றி பெரும்பான்மையான சட்டசபையிலும் அரசாங்க அதிகார நிலைகளை தமதாக்கிக் கொண்டவர்களாக மெய்தீஸ் இனத்தவரே காணப்படுகின்றனர். அரச அதிகாரம் மட்டுமல்லாது நிலத்தை தமது கட்டுபாட்டில் கொண்டுவருவதற்கான நோக்கத்துடன் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மெய்தீஸ் இனத்தவரது நடவடிக்கைக்கு எதிர்ப்பாகவே மணிப்பூர் வன்முறை தொடங்கியது. இத்தகைய மோதல் பல காலமாக நிகழ்ந்து வருகின்றது. இதில் குக்கி இனத்தவருக்கு மியான்மார், பங்களாதேஷ் மற்றும் மிசோராம் மாநிலமும் ஆதரவு வழங்குவதாக மெய்தீஸ் பிரிவினர் குற்றம் சாட்டிவருகின்றனர். இதே நேரம் வன்முறைக்கு பாரதீய ஜனதாக் கட்சியின் அணுகுமுறையே அடிப்படைக் காரணம் என மணிப்பூர் மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். அதிலும் பழங்குடியினப் பெண்கள் இருவரை நிர்வாணமாக்கி வீதியில் இழுத்துச் சென்றதுடன் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி படுகொலை செய்யதமை பெரும் அதிர்ச்சியை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ளது. இச்செயலை மெய்தீஸ் தரப்பினர் மேற்கொள்ளும் போது பொலிஸாரும் அவர்களுடன் காணப்பட்டதாக இந்திய இராணுவப் படைப்பிரிவில் பணியாற்றும் இராணுவ வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்திய ஜனநாயகமும் காந்திய சிந்தனையும் அவமதிக்கப்பட்டதாக இந்திய அளவில் இயங்கும் பெண்கள் அமைப்புக்கள் தெரிவித்துவருகின்றன. இது பெண்களுக்கு எதிராக மிகக் கொடுமையான வன்முறையாக அமைந்துள்ளது. இத்தகைய வன்முறைக் கலாசாரத்தின் அடிப்படை தென்னாசியா எங்கும் வளர்ச்சியடைந்துள்ளது.

தென்னாசியாவில் உபதேசியங்களது எழுச்சிகளும், விடுதலைக்கான அணுகுமுறைகளும் வன்முறையாலேயே அடக்கப்பட்டுள்ளது. தென்னாசியாவிலேயே முதலில் ஆரம்பமான தெலுங்கானா விடுதலைப் போராட்டம், இந்திய பிரதமர் நேருவின் காலத்தில் அரச படைகளையும் இராணுவத்தையும் தூண்டிவிட்டு வன்முறையினாலேயே அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறே அகிம்சைப் போராட்டங்கள் பின்னர் ஆயுதப் போராட்டமாக மாறியதுடன் அவை ஆட்சியாளரினால் அழித்தொழிக்கப்பட்டன. இதே போன்றே காலிஸ்தான் விடுதலைப் போராட்டமும் காஷ்மீர் விடுதலைப் போராட்டமும் வன்முறையால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் மட்டுமல்ல பங்களாதேஷ், இலங்கை, பாகிஸ்தான், மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில் எழுச்சி பெற்ற விடுதலைப் போராட்டங்கள் அழிக்கப்பட்டன. அதில் பெண்களே அதிகம் கேடயமாகவும் வன்முறையின் முதல் பலியிடலாகவும் காணப்படுகின்றனர். இதன் அடிப்படையே வன்முறைக்கான மூலகாரணமாக அமைந்துள்ளது.

தென்னாசியாவில் காணப்படும் அரசியலமைப்புக்கள் அனைத்துமே ஏதோவொரு ஆதிக்கச் செய்முறைக்குள் அகப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பெரும்பான்மையினத்தவரது ஆதிக்கம் அல்லது பெரும்பான்மை மதத்தின் அல்லது மொழியின் ஆதிக்கத்துக்குள் அரசியலமைப்புக்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. அவை ஏற்படுத்தும் அரசியல் கலாசாரம் முழுமையாக பிற இன, மத, மொழிப் பிரிவுகளினை இல்லாதொழிக்க முயலும் போது வன்முறை பிரதான ஆயுதமாக மாறுகின்றது. அதனையே இந்தியா பல போர்களாகவும் வன்முறையாகவும் செயல்படுத்தியுள்ளது. ஆணாதிக்க அரசியலமைப்புகளாலும் பெரும்பான்மை இன, மத, மொழி அரசியலமைப்புகளாலும் ஆளப்படும் தென்னாசியா வன்முறையை அரசியலமைப்புக்குள் வைத்துள்ளது. தென்னாசிய நாடுகள் அனைத்தும் வன்முறைக்கான கட்டமைப்பாகவே பொலிஸ், இராணுவம் என்பனவற்றை அரசுடன் வைத்துள்ளன. இந்நாடுகளில் இராணுவ ஆட்சிக்கான நகர்வுகள் அடிக்கடி நிகழ்வதற்கும் இத்தகைய அரசியலமைப்பு வடிவமே காரணமாகத் தெரிகிறது. இந்நாடுகள் அரசியலமைப்புக்குட்பட்ட சர்வாதிகாரத்தை ஆட்சியாக கொண்டுள்ளன.

இராணுவமும், ஒரு கட்சியும், குடும்பங்களும், மற்றும் தனிக்கட்சிகளும் ஆட்சியை அமைப்பதற்கு அரசியலமைப்புக்களே அடிப்படைக் காரணமாகத் தெரிகிறது. இதில் உயர்வர்க்கங்கள் தமது நலனையும் தமக்கு உதவியான மத்திய தரவர்க்கத்தினையும் பாதுகாப்பதற்கான வடிவமாகவே அரசியலமைப்பினை அமைத்துள்ளன. பலவீனமான அரசியலமைப்புக்கள் மட்டுமல்ல அத்தகைய அரசியலமைப்புக்கள் எழுத்திலுள்ளவற்றை பின்பற்றாமையும் அவற்றை மீறுகின்றமையையும் மரபாகக் கொண்டு இயங்குவதைக் காணமுடிகிறது. இந்தியா மதச்சார்பற்ற நாடாக அரசியலமைப்பைக் கொண்டிருந்தாலும் நடைமுறையில் மத சக்திகளது ஆட்சியே நிகழ்ந்துவருகிறது. அத்தகைய மதசிந்தனையே மணிப்பூர் கலவரத்துக்குக் காரணமாகவுள்ளது.

ஆனால் இத்தகைய நடவடிக்கைகள் வடகிழக்கு மாநிலங்களில் கடந்த பல ஆண்டுகளாக அதிகரித்து வருகிறது. ஏற்கனவே அருணாசலப் பிரதேசத்தில் கணிசமான நிலப்பரப்பை இந்தியா இழந்துள்ளது. மீளவும் அந்த பிராந்தியத்தை நோக்கி வன்முறை அதிகரித்துவருவது அபாயகரமானதாகவே தெரிகிறது. இந்தியாவின் எல்லையோரங்களில் சீன இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்து வருகின்றமை மற்றும் எதிர்கால இந்தியாவின் இருப்புக்கான நெருக்கடி போன்ற விடயங்கள், மணிப்பூர் வன்முறைக்கு பின்னாலுள்ள அரசியலை தேடவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. வன்முறை பர்மாவுக்குள்ளால் தூண்டப்படுகிறதா என்ற கோள்வியும் இந்திய தரப்புக்களால் எழுப்பப்பட்டு வருகிறது. எதுவாயினும் வன்முறை இந்தியாவின் வட,கிழக்கு மாநிலங்களை பாதிப்புக்குள்ளாக்க வாய்ப்புள்ளது. நீண்ட அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தக் கூடியதாகவே தெரிகிறது. இந்தப் பிராந்தியம் சார்ந்து எதிர்க்கட்சியான காங்கிரஸ் கட்சியின் தகவல்கள் அதிகமுண்டு.

எனவே மணிப்பூர் வன்முறையானது தென்னாசியாவின் அரசியல் கலாசாரத்தின் ஒரு வடிவமாகவே தெரிகிறது. நாகரிகங்களின் வளர்ச்சியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் வன்முறை இயல்பாகவே தென்னாசியாவை ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பல்லினத் தேசியங்களது இருப்பினை நிராகரிக்கும் அரசியலமைப்புக்களும் ஆட்சி அதிகார அமைப்புக்களும் அத்தகைய வன்முறையை முதன்மைப்படுத்தி வருகின்றன. தென்னாசியா முழுமையாக இன, மத, மொழி ஆதிக்கம் உடைய பிராந்தியமே அன்றி ஜனநாயக மரபை கொண்ட பிராந்தியம் அல்ல. பல்லினத் தேசியங்களை அரவணைத்த ஆட்சி முறைமையும் கிடையாது. பகுதியளவில் வன்முறை அரசியலமைப்பையே தென்னாசியா கொண்டுள்ளது. இதன் எதிர்காலமும் சிறுபான்மைத் தேசியங்களுக்கும், பழங்குடிகளுக்கும், ஒடுக்குமுறைக்குட்பட்ட தேசியங்களுக்கும் ஆபத்தானதாகவே தெரிகிறது.



# தேயிலை கொழுந்தால் உலகையே வென்ற பெருமகன் மெரில் ஜே. பெர்னாண்டோ



இலங்கையின் தேயிலை உற்பத்தியை உலகிற்கு எடுத்துச் சென்ற மகத்தான மனிதர்,கடந்த 20ம் திகதி காலை உலகை விட்டு விடைபெற்றார்.

வயோதிபத்துக்கே உரிய நோய்களைத் தவிர, அவர் 91 வயது வரைக்கும் சுறுசுறுப்பானவராகவே இருந்தார். அவர் தனது அறக்கட்டளை நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் சமூகப் பணிகளைப் பார்வையிடுவதற்கு தனது இரண்டு மகன்களுடன் நாடு முழுவதும் பயணம் செய்து வந்தார். நடக்க முடியாத நிலையில், அவர் தனது மகன்களான மலிக் மற்றும் தில்ஹான் ஆகியோரிடம் அந்த சமூக நலப் பணிகள் தொடர்பில் அடிக்கடி விசாரித்துக் கொண்டேயிருந்தார்.

மகன் தில்ஹானின் மனைவியான ஷெரீனா அண்மையில் ஒரு நாள் சுகயீனமுற்றிருந்த தனது மாமனாரை மகிழ்விப்பதற்காக சிரித்துக் கொண்டே ஒரு விடயத்தைக் கூறினார்.

“தந்தையே! உங்கள் நிதியத்தின் மூலம் புற்றுநோய் வைத்தியசாலையில் இருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் தங்குவதற்காக “சுவ அரண” கட்டடத்திற்கு எட்டு அறைகளை நிர்மாணித்துக் கொடுத்துள்ளோம். இப்போது தூர இடங்களிலிருந்து வரும் தாய்மார்கள், பிள்ளைகளின் சிகிச்சை முடியும் வரைக்கும் அங்கு தங்கியிருக்க முடியும்....”

இதைக் கூறியதால் மாமனார் மகிழ்ச்சியடைவார் என அவர் எண்ணினார். மாறாக அவர் சோகமடைந்ததையே ஷெரீனா கண்டார். “எட்டு அறைகள் போதாது மகளே! ஆயிரம் அறைகளாவது நிர்மாணிக்க வேண்டும். இந்நாட்டு மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள்...”

“தந்தையின் தேவையாக இருந்தது கஷ்டப்படும் மக்களுக்கு எதையாவது செய்ய வேண்டும் என்பதே. முக்கியமாக சுகயீனமடையும் பிள்ளைகள், டவுண் சின்றோம் போன்ற நோய்களால் பாதிக்கப்படும் பிள்ளைகள் வாழ்நாள் முழுவதும் அவ்வாறே காலத்தைக் கழிப்பது அவருக்கு மிகுந்த கவலை தந்தது.

1930ம் ஆண்டில் பிறந்து 93 ஆண்டுகள் உலகில் வாழ்ந்த, Dilmah நிறுவனத்தின் ஸ்தாபகர் மெரில் ஜோசப் பெர்னாண்டோ எனும் எம். ஜே. பெர்னாண்டோ என்பவர் இலங்கையின் தேயிலைத் துறையினையின் முன்னோடியாகும்.

அவர் தன் தந்தையிடமிருந்து வாழ்க்கை ஒழுக்கத்தைக் கற்றுக்கொண்டார். அதனால், தன் வாழ்நாள் முழுவதும் எவருடைய மனதையும் புண்படுத்தாமல் இருப்பதில் தனக்கு அளவில்லாத மகிழ்ச்சி என்று அவரே ஒரு நாள் சொன்னார்.

"கஷ்டமான வாழ்க்கையாக இருந்தாலும், தோட்டங்களில் பெண்கள் சிரித்துக் கொண்டே தேயிலைக் கொழுந்து பறித்தனர். அங்கே மகிழ்ச்சி இருந்தது. அந்த குளிரான சூழலில் தேயிலை மரங்களுக்கு நடுவே நடந்து சென்றபோது, நம் நாட்டில் இவ்வளவு அழகான பயனுள்ள செடியை வளர்க்க முடிந்தது மகிழ்ச்சியாக இருந்தது. தொழிற்சாலையைக் கடந்து செல்லும் போது, தேயிலையின் வாசனையை ஆசையுடன் நுகர்ந்தேன். இவை அனைத்தும் சேர்ந்து, பதினான்கு வயதான எனக்கு தேயிலையுடன் பெரும் பிணைப்பு ஏற்படத் தொடங்கியது. தேயிலை என்பது எனக்கானது என்று... நான் சிந்திக்கத் தொடங்கினேன். என்றார் மெரில்

அந்த ச் சிந்தனைக்காக அவர் பல விடயங்களைச் செய்தார். பல கடின உழைப்பை மேற்கொண்டு 'டிடேஸ்டர்' ஆனார்.

Dilmah என்பது Dilhan மற்றும் Malik ஆகிய எனது இரு மகன்களினது பெயர்களின் கூட்டாகும். இன்று முழு உலகிலும் “டில்மா” என்றாலே அது சிலோன் தேயிலை என்பது தெரியும். இத்தொழிலுக்கு வந்த 35 வருடங்களுக்குப் பின்னரே நான் ஒரு வர்த்தக நாமத்தை உருவாக்கினேன்.

சிறுவயதிலிருந்தே, எனது இரண்டு மகன்களுக்கும் தேயிலை தொடர்பான உணர்வை ஏற்படுத்தினேன். அதனால் இருவரும் நல்ல அடித்தளத்துடனும், உணர்வுடனும் தொழிலில் இறங்கினார்கள். வியாபாரத்தை தாண்டிய நமது சமூக நலத் திட்டங்கள் அனைத்தும் இன்று அவர்கள் இருவரின் முழுப் பங்களிப்பையும் பெறுகின்றன. வணிகத்தினுள் நான் உருவாக்கிய மதிப்புகளை அவர்கள் இருவரும் மற்றும் அவர்களது பிள்ளைகளும் முன்னோக்கி கொண்டு செல்வார்கள். அது தொடர்பில் எனக்கு பயம் இல்லை..."

Dilmah உருவாக்கியது தேயிலையை மாத்திரமல்ல. ஏழைகளின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அனேகமான வேலைத்திட்டங்களையும்தான் அவர் தனது எம். ஜே. பெர்னாண்டோ நிதியத்தின் ஊடாக நடைமுறைப்படுத்தினார்.

எனவே, Dilmah வை உருவாக்கிய மெரில் ஜே. பெர்னாண்டோ வரலாற்றில் ஒரு அத்தியாயம். பல வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத்தரும் ஒரு முழுமையான புத்தகமாகும்.

குளிரான மலையில் வளரும் தேயிலைக் கொழுந்துக்கு சர்வதேச மதிப்பை ஏற்படுத்திய முன்னோடி, இப்போது நம்மிடையே இல்லாவிட்டாலும் அவரைப் படிப்பதற்காக தற்போதைய தலைமுறை தொழில்முனைவோருக்கு எந்தத் தடையும் இல்லை.

இந்த நாட்டின் வர்த்தகத் தலைவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்த மெரில் ஜோசப் பெர்னாண்டோ எனும் டில்மா தலைவர், தனது வாழ்க்கை மற்றும் வாழ்க்கையின் வெற்றி குறித்து ஒரு தேசிய பத்திரிகையோடு பேசிய முதல் சந்தர்ப்பம் அமைந்தது 2016ம் ஆண்டிலாகும். அது வணிகத் தலைவர்களைப் பற்றி சிலுமினவில் நான் எழுதிய கட்டுரைத் தொடருக்காகும். அன்று தொடக்கம் அவர் இறக்கும் வரை எங்களுக்குள் ஏற்பட்ட நட்பு நீடித்தது. ஆனால் அவரது வாழ்க்கையின் முடிவை இப்படிப் பதிவு செய்ய வேண்டும் என்று நான் நினைத்திருக்கவே இல்லை.

எனினும் நீர்கொழும்பு பல்லன்சேனை கிராமத்தில் நடுத்தர வர்க்க கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து, இந்நாட்டின் வர்த்தக துறையில் மாபெரும் சாதனை படைத்த எம். ஜே. பெர்னாண்டோ 93 வருட அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு விடை கொடுத்து, இன்று ஜூலை 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை, தனதூர் தேவாலயமான பல்லன்சேனை சென் மேரி தேவாலய மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படுவார்.

என்றாலும் அவர் இலங்கை தேயிலை தொழில்துறையின் ஜாம்பவானாக நீடித்து வாழ்வார்.

இனோகா பெரேரா பண்டார
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARY

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

செலவிடுதல் 17000/= ஒரு முறையில். வருமானம் மாதாந்தம் 12000/= இரவு 8 9 ஒரு மணி நேரம் வேலை. விபரங்கள் வட்ஸ்அப் 076 5740553. 044508

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

அறநாயக்க, ஹொரேவல நகரம் காணி விற்பனைக்கு. குடியிருப்பு, கடை அல்லது ஹோட்டல் திட்டம், அப்பாட்மென்ட் அல்லது வர்த்தகத்திற்கு பொருத்தமானது. மொத்தம் 22 1/2 பேர்ச் ஒரு பேர்ச் 5 லட்சம். பேசித் தீர்க்கலாம். அழையுங்கள் 0720575400. 045267

### 210 வியாபார ஸ்தலம் தேவை

கடை இடபரப்பு வீடொன்று/ வீதிக்கு முகப்பாகவுள்ள கடையொன்று தேவை காலி வீதி, டுப்ளிக்கேசன் வீதி, மெரின் ட்ரைவ், கொழும்பு 4, 5, 6, 7 நாவல இராஜகிரிய அழைக்கவும். 0779880500 SMS 777272038 மின்னஞ்சல் wme.admn@gmail.com, wme.corpt@gmail.com 045511

## வேலைவாய்ப்பு

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

பண்டாரவளை எல்ல நகரில் சுற்றுலா ஹோட்டலுக்கு ஊழியர்கள் தேவை. ஆங்கிலம், கணனி அறிவு இருத்தல் வேண்டும். 0771299210, 057 2228693 045064

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

தோட்டத்தை கவனித்துக் கொள்வதற்கு 60 வயதிற்கு குறைந்த தம்பதி தேவை. 077 7745963. 044976

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

இருவருக்கு போதுமான வசதிகளுடன் ஓய்வு அறையொன்று கணேமுல்ல ரயில் நிலையத்திற்கு 10 நிமிடத்தில் நடந்து செல்லக்கூடிய தூரத்தில் உடன் வாடகைக்கு உண்டு. 075 2216799 044959

* Trusted Marketplace of Classified Advertisers...
adz Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BOC Lake House Branch Acc. No. 000000377
Call :- 0777 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
0777 270 087 E-mail - classified@lakehouse.lk

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கடுவளை, பஹல போமிரிய 28 பேர்ச் இருமாடி வீடு 5 அறைகள், 3 குளியலறை விற்பனைக்கு. 350/ லட்சம் 10 அடி வீதி 0788290738/ 071 0862009. 044912

பொரலஸ்கமுவ வேரஹெர 120 பஸ் பாதை மற்றும் காலி வீதிக்கு சில விநாடிகளில் செல்லக்கூடிய கங்காராம வீதியில் பன்சல் மாவத்தையில் 200 மீற்றர் தூரத்தில் சுற்றுமதில் தூய உறுதி 09.40 பேர்ச் காணி விற்பனைக்கு. 01 பேர்ச் 15 லட்சம் 0758007270. 045193

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

வத்தளை/ ஹெந்தளை வெற்றுக் காணி 17.6 பேர்ச் 2 துண்டுகளாக (10 +7.6) சுற்றிவர மதில், கெரவலப்பிட்டி சந்திக்கு 300 மீற்றர்கள் அதி கூடிய குடியிருப்புப் பிரதேசம் ஹெந்தளை சந்தி, மட்டக்குளி, கெரவலப்பிட்டி அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகில். அதி கூடிய விலைக்கோரிக்கைக்கு. தரகர்கள் வேண்டாம். தொடர்பு 0 7 12738855. 044972

வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

### 622 வீடு சொத்து மாத்தளை மாவட்டம் விற்பனைக்கு

மாத்தளை ஆமினா தேசிய பாடசாலைக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. மாதாந்த கூலி 20, 000 இரு வருட முற்பணம். தொடர்பு 0778989664, 0714859214. 045190

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

அனைத்து வசதிகளையுடைய பாரிய இடப்பரப்பில் மூன்று படுக்கையறைகள், முழுமையாக ஓடு பதிக்கப்பட்டது. புதிய இருஇணைக்கப்பட்ட கழிவறைகள் மற்றும் 3 வாகனங்களை நிறுத்துவதற்கான இடமுள்ள வீடு தெஹிவளையிலுள்ளது. அதிக எண்ணிக்கையான குடிமனைகளுடன் கூடியது. வியாபாரத்திற்கும் உகந்த இடம். தொலைபேசி 0718388062, 0757859585. 044711

கொழும்பு 15 முகத்துவாரம் வோல்ஸ் ஒழுங்கையில் 03 அறைகளுடன் வாகன, மொன்றை நிறுத்தக்கூடிய வசதியுள்ள வீடு குத்தகைக்கு வியாபாரம்/ படித்த தொழில்புரியும் சிறிய தமிழ் குடும்பத்திற்கு 0332229266, 071 8051189. 045138

வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)
BOC ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget







































BUDGET
போட்டோ குறும் விளம்பரம்







பொருளாதார அரசியல்

### இலங்கைக்கு நிதியுதவி வழங்க IMF ஆல் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளில் ஒன்று

# மத்திய வங்கியின் சுயாதீனத்தைப் பேணும் மத்திய வங்கிச் சட்டமூலம்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

**ஒரு நாட்டின் நிதிக்கட்டமைப்பின் தலையாய நிறுவனமாகப் பார்க்கப்படுவது அந்நாட்டின் மத்திய வங்கியாகும். நாட்டின் புழக்கப்பணத்தை வெளியிடுவதும் நிதிநிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதும் வட்டிவீதத்தை நிர்ணயம் செய்து நாட்டின் பண நிரம்பலை சரியான மட்டத்தில் பேணுவதும் பணவீக்கம் எந்த மட்டத்தில் இருக்கவேண்டும் என்று இலக்கிடுவதும் நாட்டின் நாணய மாற்றுவீதத்தை உறுதியாகப் பேணுவதும் மத்தியவங்கியின் பணிகளில் உள்ளடங்கும். சுருங்கச் சொன்னால் நாட்டின் நிதியியில் உறுதிப்பாட்டைப் பேணுவது மத்தியவங்கியின் பொறுப்பாகும். இது தவிர அரசாங்கத்தின் வங்கியாகவும் அரசாங்கத்தின் முகவராகவும் அரசாங்கத்தின் மதியுரைஞராகவும் மத்தியவங்கி தொழிற்படவேண்டும்.**

அரசாங்கத்தின் இரு பிரதான பேரினப் பொருளாதாரக் கொள்கைகளாகிய பணக் கொள்கையைநடைமுறைப்படுத்தவேண்டிய பொறுப்பு மத்திய வங்கியிடமே உண்டு. இறைக்கொள்கை என்றழைக்கப்படும் வரவு செலவுத்திட்டக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நாட்டின் கருவூலத்துக்கு அதாவது திறைசேரிக்கு உரியதாகும். திறைசேரி அரசாங்கத்தின் நேரடிக்கட்டுப்பாட்டில் இருக்கிறதென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆனால் மத்திய வங்கியானது ஒரு சுயாதீனமான நிறுவனமாக இயங்கவேண்டுமென்பது பொதுவாக அபிவிருத்தியடைந்த மேற்குலக நாடுகளில் முக்கியமானதொரு விடயமாகப் பார்க்கப்படுகிறது.

அரசாங்கத்துக்கு நிதிசார்ஆலோசனை வழங்கும் பணியினை மத்தியவங்கி செய்ய வேண்டுமாயின் அந்நிறுவனம் சுயாதீனமாக இயங்கவேண்டும். அந்நிறுவனத்துக்கு சிறப்பியல்பு வாய்ந்த நிபுணர்கள் நியமிக்கப்பட்டு தொழில் சார் ரீதியில் சுயமாக முடிவெடுக்கும் இயலுமை வழங்கப்படுவதை மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை எனப்படும். மத்தியவங்கியின் நிபுணர்கள் நாட்டின் பொருளாதார நிலைமைகளை ஆய்வு செய்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அடுத்து எடுக்கப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து திறைசேரிக்கு அறிவிப்பர். பொதுவாக மத்தியவங்கி மற்றும் திறைசேரி ஆகிய இவ்விரு நிறுவனங்களும் நெருக்கமாகச் செயற்படவேண்டிய நிலை உண்டு. பதவியில் உள்ள அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு அமைவாக திறைசேரியின் வரவு செலவுத்திட்டக் கொள்கையை (இறைக்கொள்கையை) மாற்றிக் கொள்ளலாம். ஆனால் மத்திய வங்கிகள் சுயாதீனமாக இயங்கும் நாடுகளில் அரசாங்கம் அரசியல் ரீதியில் பிரபலம் வாய்ந்த கொள்கைகளை மத்தியவங்கியின் மீது திணிக்க முடியாது. அவற்றைச் செயற்படுத்துமாறு நிர்ப்பந்திக்கவும் முடியாது. உதாரணமாக மத்தியவங்கியின் சுயாதீனத்தன்மை தெளிவாகப் பேணப் படும் ஐக்கிய அமெரிக்காவில் 2016 காலப்பகுதியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவிவகித்த காலத்தில் அவரது அரசியல் பிரபலத்துக்கு ஏற்ற கொள்கைகளை செயற்படுத்துமாறு அந்நாட்டின் மத்திய வங்கியை நிர்ப்பந்திக்க முனைந்து மூக்குடைபட்ட சம்பவம் மத்தியவங்கி சுயாதீனத்தன்மைக்கு நல்ல உதாரணமாகும். இத்தனைக்கும் அமெரிக்க மத்தியவங்கியின் ஆளுநரையும் ஏனைய உறுப்பினர்களையும் அந்நாட்டின் ஜனாதிபதியே நியமித்தார். ஆனால் அவ்வாறு நியமித்த பின்னர் அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்தவோ கட்டளைகள் வழங்கவோ ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை.

பொதுவாக மத்திய வங்கியியலில் அனுபவமுள்ள தொழில் சார் வல்லுநர்களே மத்தியவங்கியின் ஆளுநர்களாக நியமிக்கப்படுவார்களேயன்றி ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் மத்தியவங்கியின் உயர்பதவிகளில் நியமிக்கப்படுவதில்லை. இலங்கை மத்தியவங்கியானது 73 வருடகால வரலாற்றைக் கொண்டது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் மத்தியில் மிகவும் முதிர்ச்சியடைந்த வரலாற்றைக் கொண்டது. தொழில் சார் நிபுணத்துவம் வாய்ந்த சிறந்த ஆளுநர்களின் கீழ் இயங்கி வந்தமையையும் காணலாம். ஆனால் இலங்கையின் மத்தியவங்கியின் சுயாதீனத்தன்மை குறித்து நாம் திருப்திப்பட முடியாது. மத்திய வங்கியின் உயர் பதவிக்கு அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் மத்தியவங்கியாளர்கள் அல்லாதவர்கள் ஆளுநர் ஆசனத்தில் அமர்த்தப்படவும் ஆட்சியில் உள்ள அரசாங்கம் விரும்பும் கொள்கைகளை அச்சொட்டாக அமுல்படுத்தவும் வசதியேற்பட்டது. இதனால் நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கேற்ப தொழில்சார் நிபுணத்துவ ரீதியில் அமுல்படுத்தப்படவேண்டிய கொள்கைகளுக்கு பதிலாக அரசாங்கத்தின் பிரபலத்தன்மை வாய்ந்த கொள்கைகளுக்கு அனுமதி வழங்க வேண்டிய நிலைமை மத்தியவங்கி அதிகாரிகளுக்கு ஏற்பட்டது. முன்னாள் ஜனாதிபதியொருவர் அந்நாள் மத்தியவங்கி ஆளுநரையும் அதிகாரிகளையும் அழைத்து வசைபாடிய சம்பவம் இலங்கையில் மத்தியவங்கியின் சுயாதீனத்தன்மை பற்றிய ஒரு சிறந்த சம்பவமாகக் கருதப்படலாம். இந்தப் பின்புலத்திலேயே இப்போது மத்திய வங்கி குறித்த புதிய சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. வங்குரோத்தடைந்த இலங்கைக்கு நிதியுதவி செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட நிபந்தைனைகளில் சுயாதீனமாக இயங்கும் மத்தியவங்கியின் தேவைப்பாடும் ஒன்று என்பதை புரிந்து கொள்வதில் சிரமில்லை. இந்தச் சட்டத்தின் ஒருவரிச் சுருக்கம் யாதெனில் மத்தியவங்கியை சுயாதீனமாக இயங்க அனுமதிப்பதாகும்.



**மத்திய வங்கி அரசியல் அழுத்தங்களின்றி சுயாதீனமாக இயங்குமாயின் நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப தொழில் நுட்ப ரீதியில் பணக்கொள்கையைக் கையாண்டு நிலைமைகளை சீர்செய்ய முடியும்**

**மத்திய வங்கியின் உயர் பதவிக்கு அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் மத்திய வங்கியாளர்கள் அல்லாதவர்கள் ஆளுநர் ஆசனத்தில் அமர்த்தப்படவும் ஆட்சியில் உள்ள அரசாங்கம் விரும்பும் கொள்கைகளை அச்சொட்டாக அமுல்படுத்தவும் வசதியேற்பட்டது.**

மத்தியவங்கி அரசியல் அழுத்தங்களின்றி சுயாதீனமாக இயங்குமாயின் நாட்டின் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப தொழில் நுட்ப ரீதியில் பணக்கொள்கையைக் கையாண்டு நிலைமைகளை சீர் செய்ய முடியும். இப்போது புத்தகத்தில் மட்டும் மத்தியவங்கி அரசாங்கத்தின் மதியுரைஞராகத் தொழிற்படுவதாகக் கூறப்பட்டாலும் நடைமுறையில் அரசாங்கக் கட்டளைகளை ஏற்றுச் செயற்படவேண்டிய நிலை காணப்பட்டது. அரசாங்கத்தின் நிதித்தேவைகளுக்கு ஏற்ப டிரில்லியன் கணக்கில் பணத்தை அச்சிட்டு வெளியிட்டமை அதன் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது. இந்த புதிய திருத்தங்களின் படி இவ்வாறு அரச நிதித் தேவைகளுக்கு ஏற்ப மத்தியவங்கியின் பண வெளியீட்டைப் பயன்படுத்த முடியாது. அத்தோடு மத்தியவங்கி சுயாதீனமாக தனது பணக்கொள்கையைக் கையாள முடியும். ஆயினும் மத்தியவங்கி ஆளுநர் பதவிக்கு மத்தியவங்கிக்கு வெளியிலிருந்து ஒருவரை நியமிக்கும் வல்லமை இருப்பின் இச்சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அதன் நடைமுறைச் செயற்பாடு கேள்விக்குரியதாகவே இருக்கும்.

மறுபுறம் நாட்டில் பதவில் உள்ள அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்டதெனவும் மக்கள் பிரதிநிதிகள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்காக நடைமுறைப்படுத்த விரும்பும் கொள்கைகளை மக்களால் தெரிவு செய்யப்படாத மத்தியவங்கி அதிகாரிகள் எவ்வாறு தடைசெய்யலாம் அதற்கு முட்டுக்கட்டை போடலாம் என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது. எது எவ்வாறாக அமைந்தாலும் ஐக்கிய அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளிலே மத்தியவங்கியின் சுயாதீனத்தன்மை ஒரு முக்கிய தேவைப்பாடாகப் பார்க்கப்படுகிறது. குழம்பிய குட்டையில் மீன்பிடிப்பது போல வங்குரோத்தடைந்த இலங்கையில் சாதாரண நிலைமைகளில் நிறைவேற்றப்படமுடியாத இது போன்ற சட்டங்களை சர்வதேச நாணய நிதியம் நிறைவேற்றி வருவதை காணமுடிகிறது. இவை சரியான திசையில் மேற்கொள்ளபடும் நகர்வுகளாகப் பார்க்கப் பட்டாலும் நடைமுறையில் அவற்றை அமுல்படுத்துவது இலகுவான காரியமல்ல. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வந்த பின்னர் இவற்றை நீக்கிக் கொள்வதும் முடியாத காரியமல்ல.



**பொதுவாக மத்திய வங்கியியலில் அனுபவமுள்ள தொழில்சார் வல்லுநர்களே மத்திய வங்கியின் ஆளுநர்களாக நியமிக்கப்படுவார்களேயன்றி ஆட்சியில் உள்ள அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் மத்திய வங்கியின் உயர்பதவிகளில் நியமிக்கப்படுவதில்லை**

**வங்குரோத்தடைந்த இலங்கைக்கு நிதியுதவி செய்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளில் சுயாதீனமாக இயங்கும் மத்திய வங்கியின் தேவைப்பாடும் ஒன்று என்பதை புரிந்து கொள்வதில் சிரமமில்லை**

**நாட்டில் பதவியில் உள்ள அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்டதெனவும் மக்கள் பிரதிநிதிகள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்களுக்காக நடைமுறைப்படுத்த விரும்பும் கொள்கைகளை மக்களால் தெரிவு செய்யப்படாத மத்திய வங்கி அதிகாரிகள் எவ்வாறு தடைசெய்யலாம் அதற்கு முட்டுக்கட்டை போடலாம் என்ற கேள்வியும் முன்வைக்கப்படுகிறது**

**மத்திய வங்கியின் சுயாதீனத்தன்மை தெளிவாகப் பேணப்படும் ஐக்கிய அமெரிக்காவில் 2016 காலப்பகுதியில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் பதவிவகித்த காலத்தில் அவரது அரசியல் பிரபலத்துக்கு ஏற்ற கொள்கைகளை செயற்படுத்துமாறு அந்நாட்டின் மத்திய வங்கியை நிர்ப்பந்திக்க முனைந்து மூக்குடைபட்ட சம்பவம் மத்திய வங்கி சுயாதீனத்தன்மைக்கு நல்ல உதாரணமாகும்.**

# அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்பனின் திருவிழா ஆரம்பம்

அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்பனின் திருவிழா, ஜுலை 25ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது, 26ஆம் திகதி மஞ்ச மாதா பூஜையும், 27ஆம் திகதி நாகராஜா பூஜையும், 28ஆம் திகதி கருப்புசாமி பூஜையும், 29ஆம் திகதி பள்ளிவேட்டைத் திருவிழாவும், 30ஆம் திகதி தீர்த்தவாரி உற்சவமும் தேர்த்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

30 ஆண்டுகளுக்கு முன்னர் 1993இல் ஏப்ரல் மாதம் 5ம் திகதி ஆலய நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

15.07.2002ல் முதலாவது மகா கும்பாபிஷேகமும் நடைபெற்றது. கும்பாபிஷேக கிரியா பூஜைகள் யாவும் சபரிமலை அதியுயர் தந்திரி பிரம்மஸ்ரீ கண்டரு மகேஸ்வரு தலைமையின் கீழ் கேரள செண்டை பஞ்சவாத்தியம் முழங்க பூஜைகள் நடைபெற்றன. 30.10.2015 அன்று மீண்டும் இரண்டாவது கும்பாபிஷேகமும் நடைபெற திருவருள் பாலித்தது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் ஆனிமாதம் வருடாபிஷேக கொடியேற்ற தீர்த்த ஆராட்டு திருவிழா நடைபெற்று வருகிறது.

2011ம் ஆண்டில் ஆலயத்தின் கொடித்தம்பம் புதிதாக புனரமைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இது முன்னர் இருந்ததை விட 39 அடி உயரமாகவும், அத்துடன் சத்தியமான பொன்னு 18ம் படியும் ஐயப்பனின் அருளால் புனர்நிர்மானம் பெற்றன.

ஆலயம் அமைவதற்கு அறங்காவலர் ராஜு சிவராமனுக்கு பக்கதுணையாக இருந்து பக்தியுடனும் அர்ப்பணிப்புடனும் இன்னும் செயற்பட்டுவரும் நிர்வாக சபை உறுப்பினர்களான க. கணேஷமூர்த்தி. எ.பால்ராஜ், வி. மனோரஞ்சன், சி.ஆனந்தீஷ்வரன், அ. ரமேஷ், சி. தியாகராஜ், பி. சுப்ரமணியம் ஆகியோர் உட்பட ஆலய குருசுவாமிமார்களும், ஆலய தொண்டர்களும் குறிப்பிடத்தக்கவர்கள்.



ஆலயத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை ஐயப்ப சுவாமியின் காவல் தெய்வங்களான கருப்ப சுவாமிக்கு விசேட திரவிய அபிஷேக அலங்கார பூஜை நடைபெறுகிறது. இது அவரை குலதெய்வமாக வழிபடுவோருக்கு மிக முக்கியமான பூஜையாக இருக்கிறது.

அதுபோல் நாகராஜ பிரபுவுக்கு அவருடைய ஜென்ம நட்சத்திரமாகிய ஆயிலிய நட்சத்திரத்தில் விசேட பூஜைவழிபாடுகள் ஒவ்வொரு மாதமும் நடைபெறுகின்றன. இது நாகதோஷம், திருமண தடங்கல், மாங்கல்ய தோஷம், தீராத நோய்கள் உள்ளவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைகிறது.

கார்த்திகை மாதம் 1ஆம் திகதி ஐயப்ப சுவாமிக்கு விரதம் இருக்கும் சாமிமார்களுக்கு மாலை அணிவிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து விசேட பூஜைகள், பஜனை, நடைபெற்று அன்னதானம் வழங்கப்படுகிறது. இரு முடி கட்டி, நெய் அபிஷேகம் செய்வதற்கும் ஐயப்ப விரத மாலை அணிந்த சுவாமிமார்களுக்கு சத்தியமான பொன்னு 18ம் படி ஏறுவதற்கு மண்டல பூஜை அன்றும், (கார்த்திகை முதலாம் திகதியிலிருந்து 41ம் நாள்) ஜனவரி முதலாம் திகதியும் ஜனவரி 14ம் திகதியும் (மகரஜோதி) வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இலங்கையிலிருந்து சபரிமலைக்கு போக முடியாத ஐயப்ப விரதமாலை அணிந்த சாமிமார்கள் இங்கு சத்தியமான பொன்னு 18ம் படி ஏறி நெய் அபிஷேகம் செய்து விரதத்தை பூர்த்தி செய்கிறார்கள். இது இலங்கை வாழ் ஐயப்ப சுவாமி பக்தர்களுக்கு கிடைத்திருக்கும் பெரிய வரப்பிரசாதமாகும்.



## இந்திய வம்சாவளி தமிழரின் 200 வருட கால வரலாற்றுப்பதிவில்

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 85 ஆண்டுகளை மலையக சமூகத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்துள்ளது

**எந்தவொரு இனத்தினதும் சமூக அடையாளங்களாக கலை, கலாசார, மொழி, வாழ்வியல் அம்சங்கள் அமைந்துள்ளன. இதன் குறியீடாக நிலம் சார்ந்த வதிவிடமும் இன்றியமையாததாக அமைகின்றன.**

இன்று 200 வருடகால வரலாற்றை கொண்டுள்ள இந்திய வம்சாவளி தமிழர்களான மலையக மக்கள் தனியொரு தேசிய இனமாக உள்வாங்கப்படக்கூடிய சகல தகுதிகளையும் பெற்றுள்ளார்கள். அதேவேளை அச்சமூகத்தின் 200 வருடகால வாழ்க்கை முறையிலிருந்து நவீனத்துவ, சமூகவியல் மாற்றங்களை நோக்கிய நகர்வுகள் மிகவும் மந்தமாக நடைபெறுவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த 200 வருடகால வரலாற்றுப் பதிவு 85 வருடங்களாக இ.தொ.கா சமூகத்திற்காக அர்ப்பணித்து செயற்பட்டு வந்துள்ளது. மலையக சமூகம் அனுபவிக்கும் சகல உரிமைகளும், சலுகைகளும் இ.தொ.காவின் சாணக்கியத்தால் பெறப்பட்டவையாகும்.

ஆயினும், இவர்களது வாழ்வு நிலை முழுமையான விடுதலை பெற்றுவிட்டது என்று கூறமுடியாது. இதற்கான வேலைத்திட்டங்களை இ.தொ.கா மேற்கொள்ள உறுதியோடு செயற்பட்டு வருகின்றது.

காந்தியின் ஆசீர்வாதமும், நேருவின் எண்ணக் கருக்களும் ஏற்றிவைத்த ஒரு அமைப்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இன்று 85 வருடங்களை எட்டிப் பிடிக்கின்றது என்றால் அது காத்திரமான தலைமைத்துவத்தின் அடையாளம். 1939ஆம் ஆண்டு நேரு இலங்கை வந்தார். இலங்கை இந்தியன் காங்கிரஸ் உதயமானது. 1954 களில் அது இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றம் பெறுகின்றது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் முன் அனுபவம் இ.தொ.காவை இமயத்தில் ஏற்றி வைத்தது.

அதன் உதயத்திலேயே இந்திய வம்சாவளி தமிழர்களின் எதிர்காலம் நிர்ணயமானது. காரணம் அந்த தலைவனின் அணுகுமுறை, சாணக்கியம், ஆளுமை, ஆளுகை சிறப்பு. இதுவே நல்ல தலைமைத்துவத்தின் உலக இலக்கணம். லெனினைப் போல, சேகுவராவை போல, மாசேதுங்கை போல தென்கிழக்கு ஆசியாவுக்கே உழைக்கும் மக்களின் உதய சூரியனாக திகழ்ந்தார். ஆனால் அந்தோ பரிதாபம் லெனினுக்கு வாரிசு இல்லை. சேகுவராவைப் போல போராளி வரவில்லை மாசேதுங்கை மரணத்தோடு அவரின் சித்தாந்தங்களும் செத்துப்போயின.

ஆனால் அதிர்ஷ்டவசமாக இந்த அவலம் இ.தொ.காவின் எழுச்சிமிகு வரலாற்றுக்கு வந்துவிடவில்லை. அன்று அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் சாதித்து காட்டினார். தனது சாத்வீக வழியை பேரன் அமரர் ஆறுமுகன் தொண்டமானுக்கு போதித்து ஊட்டினார். இமயம் சரிந்தது போன்ற ஐயாவின்

### இ.தொ.காவின் 85ஆவது அகவை நாட்டிற்கு தந்திருக்கும் நல்ல செய்தி

மறைவை உபயமாக தாங்கிப் பிடித்தார் அமரர் ஆறுமுகன் தொண்டமான்.

அத்துடன் வாரிசு அரசியலோ குடும்ப அரசியலோ குழப்பத்திற்கு வழிவகுப்பதே உலக சரித்திரம். இ.தொ.கா. ஒரு சமூக சொத்து அதை உருவாக்கிய தலைமுறை பாதுகாக்கவும் கடமைப்பட்டுள்ளது.

அந்த கடமையைத்தான் தொண்டமான் வம்சம் முக்கிய அம்சமாக கருதுகின்றது. அன்று ஐயா அமரத்துவம் அடைந்தார். அவருக்கு நிகரான ஒரு தலைமையை கொடுக்க தயாரானார் ஆறுமுகன் தொண்டமான். இன்று அவரும் அமரராகிவிட்டார். ஆனால் அஞ்சி நழுவி போகாமல் மக்கள் நலன் காக்கும் பாரிய சவாலை கைவிடாமல் முற்கிரீடமாக தனது தலைமையில் ஏற்றுக் கொண்டிருக்கின்றார் இளையவர் ஜீவன் தொண்டமான். அவர் ஒரு காவியத்தலைமையின் வழித்தோன்றல் ஆளுமை கொள்ள ஆரம்பித்துள்ளது. அதுவே ஜீவன் தொண்டமானின் புதிய பிரவேசம்.

இத் தருணத்தில் 85 வருட கால போராட்ட வரலாறு பற்றி சிறிது சீர்தூக்கி பார்ப்பது சிறப்பு. ஏனெனில் ஒரு தலைமையின் இறப்போடு சரித்திரம் முற்றுப் பெறும் சங்கதி எல்லாம் இங்கு சமாதியாகி போய்விட்டது. தலைமைத்துவப் பண்பின் புதிய பரிமாணத்தை தரிசிக்கும் இந்த தலைமுறையின் தடங்களே இ.தொ.காவின் இதுவரை கால பயணத்தில் பாதச் சுவடுகள்.

### இலட்சிய பயணம் இனிதாக தொடர வேண்டும்

இ.தொ.கா. வரலாற்றுச் சுருக்கம்

1939 இலங்கை இந்தியன் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை இந்தியன் காங்கிரஸ் தொழிற்சங்க செயற்பாட்டிற்கு 1939ஆம் ஆண்டு அப்புத்தளை ஸ்ரீ கதிரேசன் கோயிலில் தொழிற்சங்கத்திற்கான முதல் தலைவராக அமரர் பெரிசுந்தரம் தெரிவு செய்யப்பட்டார்.

1940 முதல் மாநாடு, கம்பளையில் வரவேற்புக் குழுத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமையில் மகளிர் பிரிவும், வாலிபர் பிரிவும் ஆரம்பமானது.

1942 ஆம் ஆண்டில் இலங்கை இந்திய காங்கிரஸ் இரண்டாவது மாநாடு இதே ஆண்டில் ஜூலையில் இலங்கை இந்திய காங்கிரஸிற்கு அங்கீகாரம் கிடைத்தது.

1945ல் நாவலப்பிட்டிய மாநாடு, 1946 ஆம் ஆண்டு முதலாவது தொழிற்சங்க போராட்டம்.

1948ல் இலங்கை பிரஜாவுரிமை சட்டம் நிறைவேறியது.1947 சுதந்திர இலங்கையின் முதல் பாராளுமன்றத்தில் இலங்கை சனநாயக காங்கிரஸ் மூலம் மலையகத்திலிருந்து 08 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

1948ல் இலங்கை பிரஜாவுரிமை சட்டத்தின்படி இந்திய வம்சாவளியினரது (தோட்டத் தொழிலாளர்கள்) பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது.1954 இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்று பெயர் மாற்றப்பட்டது. சர்வதேச சுதந்திரத் தொழிற் சம்மேளனம் (ICFTU) மற்றும் ஏ.ஆர்.ஓ. ஆகிய சர்வதேச தொழிற் சம்மேளனத்தின் அங்கத்துவம் பெற்றது.

1951 இலங்கை தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் 07 புள்ளி என்றழைக்கப்பட்ட முதல் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. இவ்வொப்பந்தம் பணிநீக்கம் சம்பந்தமான விடயங்களை மாத்திரம் உள்ளடக்கியது.

1964 ஸ்ரீமாசாஸ்திரி ஒப்பந்தம்,




1965 இ.தொ.கா. அரசியல் கட்சியாகப் பதிவு செய்யப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை இ.தொ.கா. தொழிற்சங்கமாகவும் விளங்குகின்றது.1967 தொழில் பிணக்கு சட்டத்தின் பிரகாரம் தொழில் ஆணையாளரிடம் முதலாம் கூட்டு ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது. இவ்வொப்பந்தம் சம்பளத்திலிருந்து தொழிற்சங்க சந்தாவை அறவிடுவது (செக் ஒப்) மற்றும் சேவை காலப்பணம் சம்பந்தமாக இருந்தது. 1973 தலைவர் தொண்டமான் நியமன பாராளுமன்ற உறுப்பினரானார்.1974 ஸ்ரீமா இந்திராகாந்தி ஒப்பந்தம்.

1974 வி. அண்ணாமலை பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெற்றார். 1977 பொதுத் தேர்தலில் அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் பாராளுமன்றத்திற்குத் தெரிவானார். 1978 இல் அமைச்சர் பதவியேற்று 1999ல் அவரது மறைவுவரை அமைச்சர் பதவி வகித்தார்.

2011 இ.தொ.கா 08 உறுப்பினர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்பியது.

பலத்திற்கு காரணம்

இ.தொ.கா வின் அங்கத்தவர்களில் பெரும்பான்மையானோர் தோட்டத் தொழிலாளர்களாக இருந்த போதிலும் பல ஆயிரக்கணக்கான வர்த்தகத்துறை ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளூராட்சி, மத்திய ஆட்சி தொழிலாளர்களும் அங்கம் வகிக்கிறார்கள். இலங்கை தொழிலாளர்களின் பலம் அதன் அங்கத்தவர்கள் தொகை, அவர்கள் தோட்டத் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மை, நிர்வாக அமைப்பு, கட்டுப்பாடு ஆகிய காரணிகளில் தங்கியுள்ளது. எட்டு தசாப்தங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கையில் மட்டுமல்ல தென் ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கமாக விளங்கி வருகின்றது. அதன் உறுப்பினர் தொகை காலத்துக்கு காலம் வேறுபடுகின்ற போதிலும் என்றுமே பல இலட்சத்துக்கும் அதிகமாக உள்ளது. இதில் ஆயிரக்கணக்கான சிங்களத் தொழிலாளரும் அடங்குவர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்கள் தோட்டத்துறையின் எல்லாப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கின்றனர். அத்துடன் வாலிப, மாதர் பகுதிகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றன. கல்வி, தொழிற் பயிற்சி கலை, கலாசாரம், இலக்கியம், விளையாட்டுத்துறை, சமூக சீர்திருத்தம் ஆகிய தொழிலாளரின் வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் பிணைந்து நிற்கின்றன.

சமீபகாலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிங்கள தோட்டத் தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதோடு தோட்டத்துறை சாராத தொழிலாளர்களையும் அரவணைத்துள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அமைப்பு மிகவும் இறுக்கமானது. தோட்ட மாவட்ட, மாநில, தேசிய மட்டங்களாகப் வகுக்கப்பட்டு இறுக்கமாக நிர்வாக, நிதி விடயங்களில் பிணைக்கப்பட்டுள்ளன.

மலையக அரசியலின் இன்றைய மலர்வு இ.தொ.கா பாசறை தந்திருக்கும் பயிற்சியின் புலர்வு. மலையக அரசியல் கட்சிகளின் பின்புலம் எல்லாமே இ.தொ.கா. சமூகத்திற்கு வழங்கிய கொடைகள். இ.தொ.காவின் இன்றைய உச்சநிலை யாராலும் எட்டிப்பிடிக்க முடியாத ஏற்றம் அன்று தனது தாத்தா விட்ட இடத்திலிருந்து பேரன் ஆறுமுகன் தொண்டமான் வீறுகொண்டு தொடர்ந்தார்.

இன்று இளையவர் ஜீவன் தொண்டமான் தந்தையின் இடத்தை தான் நிரப்பியுள்ளார்.

இன்று இ.தொ.கா. இளைய தலைமையை இன்முகத்துடன் வரவேற்கின்றது. ஒரு வரலாறு அப்படியே தொடரப்போகின்றது. அண்ணல் காந்தியும், ஆசியஜோதி நேருவும், அமரர் ஐயாவும், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஏந்தி நின்ற இலட்சிய கொள்கைகளை இளையவர் இனிதே தாங்கி புனித பயணத்திற்கு கட்டியம் கூறும் காலம் கனிந்திருக்கின்றது.

இ.தொ.காவின் 85வது அகவை நாட்டிற்கு நல்ல செய்தி. இலட்சிய பயணம் இனிதாக தொடர வேண்டும்.

# இலங்கையில் முதல் முறையாக Global Plantation Summit



முற்போக்கான தோட்ட முகாமைத்துவத்தில் இலங்கையின் முன்னோடிகளான ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ் தோட்டத் தொழில் துறைக்கான முதலாவது Global Plantation Summitஐ நேற்று முன்தினம் நடத்தியது.இக் கட்டுரையில் மாநாடு தொடர்பான கருத்துரைகள் உள்ளடக்கப்படவில்லை. நிகழ்வில் தலைமையுரையை டாக்டர் ஏ.நம்பி அப்பாதுரை இயக்குனர் & வியூகத் தலைவர் (சர்வதேச காலநிலை பின்னடைவு நடைமுறை) ரிசோர்ச் இன்ஸ்டிட்யூட் (WRI), இந்தியா. (RESOURCES INSTITUTE (WRI), INDIA) மற்றும் அதிதியுரையை டாக்டர் மிர்ஜாம் புல்லேமேன் மூத்த விஞ்ஞானி சுற்றுச்சூழல் துறை அறிவியல், வாகெனிங்கன் பல்கலைக்கழகம், நெதர்லாந்து மற்றும் வேளாண்சுற்றுச்சூழல் மற்றும் நிலையான இயற்கைக்காட்சிகள்



ஆராய்ச்சி பகுதி, சர்வதேச மையம் வெப்பமண்டல விவசாயத்திற்காக (சியாட்), கொலம்பியா ஆகியோர் உரைநிகழ்த்தினர். இந்த மாநாட்டின் முக்கிய நோக்கங்களாக புதிய வழிகளை உருவாக்குதல் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) நவீன தோட்ட முகாமைத்துவ உத்திகளில் இணைத்துக்கொள்வதாகும்.

எதிர்வரும் காலங்களில் இது உள்ளூர் மற்றும் உலகளாவிய நிபுணர்களை ஒன்றிணைத்து அவர்களின் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வதற்கும், தோட்டத் தொழிலை மறுவடிவமைக்கும் ஆற்றலுடன் கூடிய அதிநவீன புத்தாக்கங்களை வெளிப்படுத்துவதற்கும் ஆகும்.

மனித உரிமைகள், தொழிலாளர் தரநிலைகள், சுற்றுச்சூழல் மற்றும் ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றில் UNGC 10 கொள்கைகளில் கையெழுத்திட்ட தொழில்துறையில் ஹேய்லிஸ் பிளான்டேஷன்ஸ் முதன்மையானது மற்றும் ஐக்கிய நாடுகளின் CEO நீர் ஆணையத்திற்கு உறுதியளிக்கிறது.ஆனால் தொழிலாளர் நலனில் அக்கறை கொள்வதில் வெளிப்படைத்தன்மை மௌனிக்கப்பட்டுள்ளதாகவே தோன்றுகிறது. அண்மையில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் முதலாளிமார் சம்மேளனத்தின் கூற்றுப்படி செலவுகளின் அடிப்படையில் தான் சம்பளம் அதி




## தோட்டத் தொழிலாளர் நலனில் அக்கறை கொள்ளாத தோட்டத்துறையை மட்டும் மேம்படுத்தும் மாநாடுகளில் என்ன பயன்

கரிக்க முடியும் 2000 ரூபா சம்பளம் அதிகரிப்பு சாத்தியமில்லை என அறிவித்துள்ளது. தோட்ட தொழில் துறையை மேம்படுத்துவதினூடாக தொழிலாளர்களின் நலனிலும் ஒரு சிறு அக்கறை கொண்டாலே தோட்டங்களில் ஏற்படும் பௌதிக அபிவிருத்திக்கு வலுசேர்ப்பதாக அமையும்.பெருந்தோட்டங்களில் நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) நவீன தோட்ட முகாமைத்துவ உத்திகளை இணைத்துக்கொள்வதற்கான மாநாடுகளை நடத்தும் தோட்ட கம்பனிகள் அத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் விலகி செல்லும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் இவ்வாறான அபிவிருத்திகளில் முழுமையான பலனை அடைய முடியாமல் போகலாம்.

தோட்டங்களில் இன்றைய வாழ்க்கை செலவுகளுக்கு ஈடு கொடுக்கும் வகையில் வருமானம் கிடைக்காததால் தோட்ட தொழிலாளர்கள் விலகி செல்லும் வீதம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மலையகம் 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டாவது தோட்ட கம்பனிகள் தோட்டத் துறையை நவீனமயப்படுத்த எடுக்கும் முயற்சியில் தொழிலாளர்களின் நலனிலும் கவன் செலுத்த வேண்டும் என்பது எமது கோரிக்கையாகும். முதலாவது சர்வதேச பெருந்தோட்டத்துறை மாநாட்டை நடத்தும் ஹேலிஸ் பிளான்டேஷன்ஸ் தொழிலாளர்கள் நலன் தொடர்பிலும் சர்வதேச மாநாட்டை நடத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

நாம் எத்தனை சர்வதேச மாநாடுகளை நடத்தினாலும் தொழிலாளர்கள் இன்றும் 200 வருட லயன் அறைகளை மாற்றியமைக்க முடியாமல் இருப்பது வெட்கி தலைகுனியும் செயற்பாடாகும்.

பெருந்தோட்ட துறைகளில் உள்ள சவால்களுக்கு சாத்தியமான நீண்டகால தீர்வுகளை காணுவதை நோக்காக கொண்ட மாநாட்டில் இன்று தீர்க்கப்படாதுள்ள பிரச்சினையாக உருவெடுத்துள்ள தோட்டங்கள் கவனிக்கப்படாமல் காடாகிவருவது தொழிலாளர்கள் முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினையாகும்.

இவற்றால் ஏற்படும் விபரீதங்கள் தொழிலாளர்கள் மரணம் அடைந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அவற்றில் குளவி கொட்டுதலுக்கு இலக்காகும் தொழிலாளர்களின் எண்ணிகை அதிகரித்துள்ளது. அண்மையில் 80 வயது மூதாட்டி ஒருவர் கொழுந்து பறித்து கொண்டிருந்த போது குளவி கொட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார்.

இவற்றுக்கு தோட்டங்கள் கடாகி வருவதே காரணமாகும். இது போன்ற பாரதூரமான சிக்கல்கள் தீர்க்கப்பட வேண்டும். தோட்டத் துறை அபிவிருத்தியோடு தொழிலாளர் அபிவிருத்தியும் இன்றியமையாததொன்றாகும்.

# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## நிரந்தரமற்ற வாழ்க்கை

அருளானந்தம் ஞா.பிரகாஷ் கந்தப்பளை

இவர்கள் தான்
சொந்தம் என
நினைத்தால்
யாரும் உன்
சொந்தம் இல்லை
என்று சொன்னது...

எல்லோரையும்
நம்பலாம் என
நினைத்தால்
யாரையும் நம்பாதே?
என்று சொன்னது...

எல்லாம் எனக்கென
என்று நினைத்தால்
எதுவும் உனதில்லை
என்று சொன்னது...

இன்பம் துன்பம்
இரண்டும் வேண்டும்
என்று நினைத்தால்
உனக்கு துன்பம்
மட்டுமே என்று
சொன்னது...

எதையும் சகித்து
வாழ்க்கையை
வாழ நினைத்தால்
இறுதியில் இந்த
வாழ்க்கை உனக்கு
நிரந்தரம் இல்லை
என்று சொன்னது...

நிரந்தரமற்ற
வாழ்க்கையில்
எதுவுமே நிரந்தரம்
இல்லை...



## காதல்

வி.தீபன்ராஜ்
நானுஓயா கிளரண்டன்

மெல்லிய துண்டுகளையும்
சேகரிக்க ஆரம்பித்தேன்
என்நேரமும் உறங்குகின்றேன்
கனவிலாவது உன் முகம்
நான் காணவேண்டும் என்பதற்காக
வாழ்க்கையின் முடிவை தேடும்
கற்பனை ஓவியம் போல்
என் பயணம்
ஆனால் உன் வருகைக்காக
நான் காத்திருக்க
உன் வருகையோ
மழைத் துளி சாரலில்
மிதமாய் வானில் தோன்றும்
விண் ஒளி போல் உன் முகம்



## குறைகள்

இணுவில் வாகீசன்

குறைகளை கூறுபவர்கள்
மறந்து விடுகிறார்கள்
கேட்டவர்கள் தினமும்
நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்

குறைகள் வாழ்ந்து கொண்டிருக்கும்
நிறைவுகள் காணமுடியாதவர்களிடம்
குறைகளில் நிறைவு காண்பவர்
குறைவில்லா வாழ்வு வாழ்பவர்

குறைகளை பேசுபவர்களில் பலர்
நிறைவுகளை பேசவிரும்புவதில்லை
வாழ்வின் குறைகளை களைய முடியாதவர்
பிறர் வாழ்வில் குறைகாண்கின்றார்

## கலங்காதே கால்சட்டை

தாலிபீன், கற்பிட்டி

ஆறு ஆண்டு கடந்திருக்கிறது
இருந்தும் நழுவுகிறாய் முதல் நாள்
இறுகிய கால்சட்டையே!

வருடங்கள் நீள
அரையின்(இடுப்பின்) நீளத்தை
நீட்டுகிறாய் நீயும்
ஏன் நம் காதல் நீளவா?

மொழி இருந்தால் சொல்லியிருப்பாய்
கொஞ்சம் உண்ணு என்று!
உன்னை விட்டு வேறாரையும் உடுக்க
என்னால் முடியுமா?
அதனாலேயே நான்
உண்ணுவதில்லையடி!

மானிடரும் மாறிட வேண்டாம்
உன்னை போல்!
என் அந்தரங்கம் உன்னை போல்
அவரும் அறியவா?
உன்னை போலவா அவர்கள்,
பரப்பித் திரிவார்களே பார் எங்கும்!

உன் உதவி மறவேன் என்று என்னாதே
மானம் காத்த உன்னை
காலம் கடந்தும் காப்பேனடி
மானம் காத்தவளே கலங்காதே!

நீ என்னை நழுவாது இருக்க
சருகேனும் உண்ணுவேன் உனக்காக!
காலம் மாறும் கலங்காதே!

## கருங்குழி

ரதிதேவி, மானிப்பாய்

புதுத் திங்கள் பொழியும் மலையினிலே
கங்கை தவழும் கரையினிலே
தவம் இயற்றும் எங்கள் ஆசானே
தனையனைத் தனையறிய செய்வானே

மின்னும் ஒளி நடுகில்
நான் கண்டேன்
தன்னைத் தன்னுள் அடக்கிய கதிரவனை
மங்கும் விழியும் மறந்திடுமோ
எங்கும் தங்கும் அவன் முகத்தை

சொல்லும் சொல்லி முடித்த பொருளுமாக
தாயும் தாயீன்ற சிசுவுமாக
என்னில் ஊன்றி முளைத்த
சிவனை விட்டு
எங்கு செல்வேன் தனியாக...

## காற்றே உன் ஆட்சி

மூதூர், றிஸ்வின்

காற்று வந்தது
கடல் அலை
உயர்ந்து நெளிந்தது

மரங்கள் நடனத்தில்
இறுதி ஆண்டு
பரீட்சை எழுதுகிறது

வீட்டுக் கூரைகள்
இசை அமைப்பதில்
கடும் ஆர்வக் கோளாறுடன்...

பளிச்சிட்ட நிறங்கள் யாவும்
மங்களாகி விட்டது

ஏன்?
புழுதிப் படலம்
அடுக்கடுக்காய்

சூரியனும்
மங்களே!...

உலகுக்கு
புழுதிச் சுவாச வரவேற்பு
அறிமுகம்

பறவைகளாய்
சட்டைகளும்
தகரங்களும்
படகுகளும்
பறக்கின்றன...

அம்மியும்
அடுத்த நொடியில்
பம்பரமாகுமோ!..

ஆணவ மரங்களுக்கு
மரண தண்டனையும்
மாறு கால் கை
துண்டிப்பும்
நிறைவேற்றும்
நேரடிக் காட்சி
காற்று வந்தது



## அன்னை யெனும் அதிசயம்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி

உதிரத்தில் உதித்த
உயிர்கள் அத்தனையும்
உரிமை கொண்டாடும்
ஒரேயொரு உறவு

உதிரத்தை ஊணாய்
ஊட்டி வளர்த்த
உயிரில் கலந்த
உன்னதம்

மசக்கை கண்டு
மயங்கி விழுந்து
இரத்தமாய் வாந்தியெடுத்து
உணவு துறந்து
உறக்கம் மறந்து
முந்நூறு நாட்கள்
உன்னைக் காக்கத்
தன்னை மறந்தவள்

நோ கண்டு நொந்து
தாய் எனும் பேறு காண
மரணப் படுக்கை சென்று
மீண்டு வந்தவள்

தொப்புள் கொடியுடன்
உனைப் பிரித்தெடுக்க
உன்னைப் பிரசவித்து
பரவசித்துப் போனவள்

அம்மா... என்ற
அழுகுரல் கேட்ட
அந்த வினாடியில்
தளிர் முகத்தை
அவள் விழிகள் தடவிய
அடுத்த கணத்தில்
மொத்த வேதனையும்
சுத்தமாய் மறந்தவள்

பார்த்துப் பார்த்து
பசியாற்றிப் பணியாற்றி
ஆடை அணிவித்து
ஆசையுடன் அழகுபார்த்து
ஈயெறும்பு மொய்க்காமல்
இமைக்குள் காத்தவள்

நோய் கண்ட போது
பாய் படுக்கை மறந்து
தாதியாய்த் தவம்கிடந்து
ஆதரவாய் நின்றவள்

கல்விக் கலைகளை
கற்று நீ யுயர்ந்திட
அல்லும் பகலும்
ஆவலாய்த் துடித்தவள்

பட்டம் பதவிகள் நீ
எட்டிய வேளை
எட்டியே நின்று
ஆசிகள் தந்தவள்

வாழ்க்கை துணைதந்து உன்
வாழ்க்கை செழித்திட
தன் சுகங்கள் அனைத்தையும்
சுருக்கிக் கொண்டவள்

தாய் எனும் அற்புதம்
வாய்ப்பதே பெருவரம்
அவளுக்கு
சமானமாய் மதிப்பிட
தக்கவர் யாருமே
தரணியில் இல்லையே...

## ஹைக்கூக்கள்!

அய்ஷத்அப்சத் பாலமுனை

கோடை வெயில்
வயல் நிலத்தில்
வலைப் பின்னல்
★★★
இங்கும் சிலநாள்தான்
மனசு வலிக்கிறது
வாடகை வீடு
★★★
அழுக்குச் சட்டை
தெளிவாகத் தெரிகிறது
வறுமையின் கிழிசல்
★★★
தெருமுனை
ஒன்று சேரும்
உதிர்ந்த இலைகள்
★★★
பழத் தோட்டம்
மூக்கைத் துளைக்கும்
உரத்தின் வாசம்
★★★
தூறல் மழை
கரையத் தொடங்கியது
மாமரத்துக் காகம்
★★★
கோடை காலம்
இல்லாமல் போகும்
கிராமத்துப் பச்சை
★★★
குப்பைத்தொட்டி
நிறைந்து கிடக்கும்
வீண்விரயம்
★★★
அழுதிடும் குழந்தை
தூக்கி அணைக்கும்
தாய்ப் பாசம்
★★★
இலையுதிர்ந்த மரம்
முற்றமெங்கும் பரவிக் கிடக்கும்
காலை வெயில்
★★★
பரம்பரைச் சொத்து
அப்பாவின் கைக்கு
தாத்தாவின் ஊன்றுகோல்
★★★
இனிமையான பாடல்
நிறைந்து விடுகிறது
யாசகர் தட்டு
★★★
சேரிப்புறச் சண்டை
முகம் சுழிக்க வைக்கும்
வார்த்தைகள்
★★★
குறைந்த வேதனம்
அதிகரித்துச் செல்லும்
கடன் சுமை
★★★
பகல் உணவு
போதுமானதாய் இல்லை
உண்டியல் பணம்
★★★
இரவுப் பயணம்
பின் தொடரும்
வளர்ப்பு நாய்
★★★
பட்ட மரம்
பச்சையாய் தெரியும்
சோடிக் கிளிகள்
★★★
ஆற்றோர வேம்பில்
தலைகீழாய் தொங்கும்
முறிந்த கிளை
★★★
வெட்டிய மரம்
நிழல் தருகிறது
முற்றத்து பந்தல்

## பரதம்

டக்ஸனா
கிருஸ்ணானந்தன் (குகதா)
கிளிநொச்சி



பாவ தாள இராகங்களைப்
பக்குவமாய் இணைத்து
பாதங்களிற் சதுர் வேதங்களும்
குடி கொள்ளத் தவமிருக்க
தெய்வங்களும் மனம் மகிழ்ந்து
மெய்மறந்து இரசித்திருக்கும்
பார் வந்த கலையாய்
பரதக்கலை

தில்லையிற் சிவனும்
அல்லல் மறந்திட
சீற்றங் கொண்டு
சிறப்பாய் ஆடிட
ஆண்டாண்டு காலமாய்
அரங்கேற்றங்கள் கண்ட
போற்றிடத் தூண்டும்
பொன்னான நடனமாய்
கலையின் கவினுக்கு
மெருகூட்ட உதித்து
தமிழர் மரபுக்கும்
மதிப்பூட்ட உதித்து
உணர்வுகளை உன்னதமாய்
உருவகித்து நின்று
உயிரிற் கலந்து
உறவாய் மலர்ந்து
வரையறையின்றி
வானுயர்ந்து வாழ்க
பரதக் கலையெனும்
பாரிய சொத்து



## ஆசை

வன்னிக்கவி லக்சன்...

வானில் சிறடிக்க
ஆசை

பூவில் தேன் நுகர
ஆசை

நீரில் மீனாய் தினம்
குளிக்க ஆசை

பார் முழுதும் தென்றலாகி
பயணத்திட ஆசை

வெண்ணிலவில்
வீடுகட்டி குடியிருக்க
ஆசை

ஆதவன் அருகினில்
குளிர்காய ஆசை

மேகத்திரளினில் மிதந்திட ஆசை

நட்சத்திரங்களை
நகையாக்கி அணிந்திட
ஆசை

மண்ணில் மழலையாய் தவழ்ந்திட
ஆசை

மனம் கணமும்
மகிழ்ந்திட ஆசை

காலம் கடந்தும் என்
கவிதைகள் வாழ ஆசை

## நல்வார்த்தையொன்று சொல்வாயா?

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்



இருவிழிகளில் கைதாகி
வெறும் மனதினில் சிறையாகி
வருகின்ற கனவுகளில்
தருகின்ற சுகமே தனி

மூடிய கண்களுக்குள்
முழுக்காட்சியும் நீதானே
பாடிய என் நாவினில்
பைங்கிளியாய் தொனிப்பவளும் நீதானே

வறண்ட பயிர்களுக்கு
திரண்ட மழை இன்பம் போல்
இருண்ட என் வாழ்வுக்கு
நிறைந்த வசந்தம் நீதானே

அலைபாய்ந்த என் மனதும்
அடங்கிப் போனது உன்னால்தானே
நிலையான என் மையலுக்கு
நிதர்சனமாயிருப்பவளும் நீதானே
உனை நினைக்கையிலே...

இதயத்திலோர் மலர்ச்சி
இனம்புரியாததோர் மகிழ்ச்சி
உதயத்தின் வாசலிலே
உண்மையாய் மொய்த்தது போல் உணர்ச்சி

வாழ்க்கையில் பிடிமானத்தை
வடிவாக்கித் தந்தவளே
வாகை என்னில் பற்றிட நல்
வார்த்தையொன்றை உதிர்ப்பாயா?

# Star Rewards Loyalty அங்கத்தவர்களுக்கான அற்புத வெகுமதிகளை வழங்கும் டயலொக்

இலங்கையின் முதன்மை தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி வழங்கும் Dialog Star Rewards நிகழ்ச்சித் திட்டமானது, smartphones, Dialog TV, Dialog Home Broadband இணைப்புகள், பங்குதார வணிகர்களிடம் கிடைக்கும் பிரத்தியேக சலுகைகள் மற்றும் பலவற்றில் சிறப்பு தள்ளுபடிகள் உட்பட பல அனுகூலங்களை அதிகரித்துள்ளது.

Dialog Star Rewards Loyalty திட்டம் டயலொக் வாடிக்கையாளர்களுக்கே பிரத்யேகமானது, அதன்படி, ரீலோட்கள் மற்றும் செலுத்தப்பட்ட மாதாந்த பில் கொடுப்பனவுகள் மற்றும் வாடிக்கையாளர் Dialog இல் இருந்த கால அளவு ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட Tier புள்ளிகளின் அடிப்படையிலேயே மேற்படி வெகுமதிகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன.




Star Rewards என்பது டயலொக்கின் விரிவான வலையமைப்பின் ஒரு அங்கமாக இருக்கும் அதே வேளையில், அதன் நாடளாவிய ரீதியிலான கூட்டு வணிகர்களுடன் இணைந்து Star Rewards உறுப்பினர்களுக்கு சிறந்த Loyalty சலுகைகளை வழங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

இந்த வருடம், வாடிக்கையாளர்கள் Dialog Lesi Pay மூலம் மலிவு விலையிலான மாதாந்த தவணை முறை திட்டங்களுக்கான அணுகலுடன் smartphones, Dialog Home Broadband மற்றும் Dialog Television இணைப்புகளில் 15% வரை விலைக்கழிவையும் அனுபவிக்க முடியும். மேலும், வாடிக்கையாளர்கள் Nawaloka Medicare, Heritance Kandalama, Heritance Ahungalla, Thuryaa Kalutara, Amethyst Resort, Earls Regency, Imtiyaz Designers, Greenmart supermarkets மற்றும் பல வணிக கூட்டாளர்களிடம் 50% வரை தள்ளுபடியை பெற்றுக்கொள்ள முடியும்.

# 12வது தடவையாகவும் மிகச் சிறந்த வங்கியாக மகுடம் சூடியுள்ள கொமர்ஷல் வங்கி

இலங்கையின் உள்நாட்டு வங்கிகளில் மிகச் சிறந்த வங்கியாக கொமர்ஷல் வங்கியை ஆசியப் பிராந்திய நிதிச் சந்தைகள் தொடர்பாக உலகளாவிய மட்டத்தில் மிகச் சிறந்த தகவல் மூலமாகக் கருதப்படும் பினான்ஸ் ஏஸியா தெரிவு செய்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 28ம் திகதி ஹொங்கொங்கின் றிட்ஸ் கார்ள்டன் ஹோட்டலில் மிகவும் பிரம்மாண்டமான முறையில் இடம்பெற்ற பினான்ஸ் ஏஸியாவின் 28வது விருது வழங்கும் விழாவில் இதற்கான கீர்த்திமிக்க விருது வழங்கப்பட்டது.

இத்தகைய விருதுகள் வழங்கும் விழாவில் கௌரவிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த முதலாவது வங்கி கொமர்ஷல் வங்கியாகும்.

மேலும் இதுவரை 12 தடவைகள் இந்த விருதை வங்கி வென்றுள்ளது.

கொமர்ஷல் வங்கியோடு இணைந்து இந்த விழாவில் CICC (சீனா), HSBC (ஹொங்கொங் மற்றும் தென் கொரியா), CTBC (தாய்வான்) எலயிட் வங்கி (பாகிஸ்தான்) என்பனவும் அந்தந்த நாடுகளின் சிறந்த வங்கிகளுக்கான விருதுகளை பெற்றுக் கொண்டன.

பினான்ஸ் ஏஸியா விருது வழங்கும் விழாவில் பெற்றுக் கொண்ட இந்த தொடர்ச்சியான வெற்றி குறித்து கருத்து வெளியிட்ட கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க "துறைசார் தலைமை தாங்கும் நிதிச் செயற்பாடு, உண்மையிலேயே சிறந்த வங்கிக்கான விருதுக்குரிய அடிப்படையாக அமைகின்றது" என்றார்.




# நிறைவுற்றது நெஸ்லே லங்காவின் சுவரொட்டி ஓவியப் போட்டி

'எனது பூமிக்கு நல்லதை செய்கிறேன் ஒரு ஓவிய வெளிப்பாடு' என்ற தலைப்பில் நெஸ்லே லங்காவின் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கான சுவரொட்டி ஓவியப் போட்டியின் உச்சக் கட்டமாக கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளின் வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. பாடசாலைக் கழிவு முகாமைத்துவத் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, கல்வி அமைச்சு மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை ஆகியவற்றுடன் இணைந்து உலக சுற்றுச்சூழல் தினத்தை கொண்டாடும் வகையில் இரண்டு மாதங்கள் கொண்டதாக ஏற்பாடு செய்யப்பட்டது.



வலயம், மாகாணம் மற்றும் அகில இலங்கை என மூன்று சுற்றுகளாக நடத்தப்பட்ட இந்தப் போட்டி, நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மாணவர்களிடமிருந்து 60,000 நுழைவுகளை ஈர்த்தது.

7 ஜூலை 2023 அன்று கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரியில் சிறந்த பத்து ஓவியர்களை அங்கீகரித்து கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவுகளின் வெற்றியாளர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சரின் அந்தரங்க செயலாளரான ஹேமாந்த பிரேமதிலக, மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையின் தலைவர். சுபுன் எஸ். பத்திரகே மற்றும் இதில் கைகோர்த்துள்ள நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள், தேர்ஸ்டன் கல்லூரியின் அதிபரான பிரமுதித விக்கிரமசிங்க உள்ளிட்ட அதிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

"இந்தப் போட்டியானது சந்தேகத்திற்கு இடமின்றி எமது இளம் ஓவியர்களுக்கு சுற்றுச்சூழலைப் பேணுதல் மற்றும் நிலைபேற்றியல் ஆகியவற்றுக்கான அவர்களின் அர்ப்பணிப்பை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தும் ஒரு மிகச் சிறந்த தளத்தை வழங்கியுள்ளது" என்று கல்வி அமைச்சரின் அந்தரங்க செயலாளரான ஹேமாந்த பிரேமதிலக கருத்து வெளியிட்டார்.

# Kedella Art of Living 2023; உத்தியோகபூர்வ வங்கியாளராக தொடர்ந்தும் செலான் வங்கி

Asia Exhibi t i ons & Conventions (Pvt) Ltd இனால் ஒழுங்கு செய்யப்படும் இலங்கையின் பா ரிய கட்டுமான மற்றும் வீட்டு அலங்காரக் க ண்காட்சியான Kedella Art of Living 2023 கண்காட்சியின் உத்தியோகபூர்வ வங்கியாளராக தொடர்ச்சியாக 11 ஆவது வருடமும் செலான் வங்கி தன்னை பதிவு செய்கிறது.

Kedella Art of Living 2023 கண்காட்சி ஜூலை 28 முதல் 30 வரை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த கண்காட்சி நிலையத்தில் நடைபெறவிருப்பதோடு, இங்கு செலான் வங்கியானது வீடமைப்பு மற்றும் தனிப்பட்ட கடன்கள், லீசிங் வசதிகள், கிரடிட் கார்ட்கள், டிஜிட்டல் வங்கிச் சேவைகள் மற்றும் மொபைல் ATM உட்பட பல தரப்பட்ட வங்கிச் சேவைகளைப் பெற்றுத் தரவுள்ளது.




# புலம்பெயர் தொழிலாளர்களுக்கான செயற்றிட்டம் வெற்றிகரமாக நிறைவு



கொவிட்19 இனால் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதோடு, வேலையின்மை மற்றும் சம்பளம் வழங்கப்படாத பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம் கொடுத்திருந்தனர். நாடு திரும்பிய இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் சமூகபொருளாதார பாதிப்பிலிருந்து மீள்வதற்கு உடனடி, நடுத்தர மற்றும் நீண்ட கால தலையீடுகள் அவசியமாக இருந்தது. இந்த சவால்களை எதிர்கொள்ள, ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு (Organization for Migration IOM) மற்றும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) ஆகியன, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுடனான ஒத்துழைப்புடன், திருப்பி அனுப்பப்பட்ட இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களை மீண்டும் கட்டமைக்கும் சமூக பொருளாதாரத்தை ஆதரிக்கும் திட்டத்தை செயற்படுத்தியது. இது தொடர்பில், புலம்பெயர்ந்து நாடு திரும்பியவர்கள், ஆதரவளிக்கும் சமூகங்கள் மற்றும் உள்ளூர் அரசாங்க அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, பங்கேற்பு கிராமப்புற தேவைகள் மதிப்பீடு (PRNA) நடத்தப்பட்டது. இதில் 20 சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMEs) மேம்படுத்துவதற்காக அடையாளம் காணப்பட்டன. 2021 ஏப்ரல் இல் திட்டத்தைத் IOM தொடங்கியதோடு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, அநுராதபுரம், புத்தளம், இரத்தினபுரி, குருநாகல், களுத்துறை, காலி ஆகிய 9 மாவட்டங்களில் இத்திட்ட நடவடிக்கைகளை செயல்படுத்தியது. கொவிட்19 பரவல் காரணமாக நாடு திரும்பிய இலங்கை புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் சமூக, பொருளாதார மீள் கட்டமைப்புக்கு ஆதரவளிக்கும் திட்டமானது, இலங்கையில் மிகவும் சவாலான காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

நவலோக கொலேஜ் ஓஃவ் ஹையர் ஸ்டடிஸ் நிலையத்துக்கு

# நவீன வசதிகள் கொண்ட மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள்

ஐடியல் குழுமத்தின் துணை நிறுவனமான ஐடியல் மோட்டர்ஸ், நவலோக குழுமத்தின், கொழும்பு மற்றும் கண்டியில் அமைந்துள்ள நவலோக கொலேஜ் ஓஃவ் ஹையர் ஸ்டடிஸ் நிலையங்களுக்கு அவற்றின் மின்வலு தேவைகளை நிர்வகித்துக் கொள்வதற்காக இரு மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்களை வழங்கியுள்ளது.



தற்போது மஹிந்திரா பவரோல் ஜெனரேற்றர்கள் 28 மாதிரிகளில் கிடைக்கின்றன. அவை 5 KVA முதல் 625 KVAவரையில் அமைந்திருப்பதுடன், அவற்றை கவர்ச்சிகரமான விலையில், நாடு முழுவதிலும் காணப்படும் ஐடியல் மோட்டர்ஸ் கிளை வலையமைப்பிலிருந்து கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

பவரோல் ஜெனரேற்றர்களில், மஹிந்திரா என்ஜின் காணப்படுவதுடன், LeroySomer எனும் புகழ்பெற்ற ஐரோப்பிய தொழில்நுட்பத்தினூடாக வலுப் பிறப்பாக்கல் அலகு மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், மஹிந்திரா பவரோலில் உலகத் தரம் வாய்ந்த DPC (Digital Power Control) பயன்படுத்தப்படுவதால், சிறந்த எரிபொருள் சிக்கனம், குறைந்த கசிவுகள் மற்றும் தங்கியிருக்கக்கூடிய வலு வெளியீட்டை வழங்குகின்றன.

சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள பவரோல் ஜெனரேற்றர்கள் பல்வேறு வகைகளில் அமைந்துள்ளன. சௌகரியமானதும், அளவில் சிறியதாக அமைந்துள்ள 5 KVA ஒற்றை கட்டமைப்பு ஜெனரேற்றர், 10 KVA முதல் 30 KVAஒற்றை கட்டமைப்பு ஜெனரேற்றர் கட்டமைப்பு மற்றும் 10 KVA முதல் 625 KVA மூன்று கட்டமைப்பு ஜெனரேற்றர் போன்றன அடங்குகின்றன.

# 5 நாள் பயிற்சி நிகழ்ச்சியை நிறைவு செய்கிறது SEDR

பயனுறுதிமிக்கவகையில் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டம், ஆசியா நிலையத்தின் (TAF) தொழில்நுட்பத் தலைமை மற்றும் ஒருங்கிணைப்புடன், மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் ஊடாக நீதி அமைச்சுடன் இணைந்த 20 மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்களுக்கான ஐந்து நாள் மேம்பட்ட மத்தியஸ்த திறன்கள் மற்றும் நுட்பங்கள் பயிற்சி நிகழ்ச்சியை சமீபத்தில் நிறைவுசெய்தது. இந்த நிகழ்ச்சியானது, மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்களை மேம்பட்ட மத்தியஸ்த திறன்களுடன் ஆயத்தபடுத்தி, அது மூலம் இலங்கையில் உள்ள மத்தியஸ்த சபைகளுக்கு கொண்டுவரப்படும் பிணக்குகளை திறம்பட தீர்க்க தன்னார்வ மத்தியஸ்தர்களுக்கு பயிற்சி அளிக்க அவர்களுக்கு உதவுவதை இலக்காகக் கொண்டது.



ப ய னு று தி மி க் க வ கை யி ல் பிணக்கை தீர்ப்பதற்கு ஆதரவளித்தல் (SEDR) திட்டம் என்பது ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் ஆசியா நிலையத்துடன் இணைந்து பிரிட்டிஷ் கவுன்சிலால் செயல்படுத்தப்படும் நான்கு வருட நீதிக்கான அணுகல் திட்டமாகும். இத்திட்டம் இலங்கையில் நீதிக்கான அணுகலை மேம்படுத்துவதையும் மத்தியஸ்த சேவைகள் உட்பட மாற்றுவழி பிணக்குத் தீர்வு பொறிமுறைகளின் பயன்பாட்டை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த ஐந்து நாள் பயிற்சி அமர்வு, இலங்கையில் மத்தியஸ்த முயற்சிகளை வெற்றிகரமாக அமுல்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் மத்தியஸ்த பயிற்சி உத்தியோகத்தர்களின் ஆற்றல்கள் மற்றும் கொள்திறனை மேம்படுத்துவதற்கான ஆசியா நிலையத்தின் பணியின், முக்கிய அம்சமாக அமைந்துள்ளது.

# 5G பரீட்சார்த்த விரிவாக்கங்களை தொடர்கின்றது SLTMOBITEL

இலங்கையில் 5G பரீட்சார்த்த வலையமைப்பு சேவைக் கட்டமைப்பை மேம்படுத்தும் தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், SLTMOBITEL, அண்மையில் முன்னணி தகவல் தொழில்நுட்ப மற்றும் ERP தீர்வுகள் வழங்குநரான Pristine Innovations (Pvt) லிமிடெட் உடன் கைகோர்த்து இலங்கையில் 5G அடிப்படையிலான பரீட்சார்த்த அப்ளிகேஷன்களை உருவாக்குவதற்கு முன்வந்துள்ளது. இந்தக் கைகோர்ப்பினூடாக, 5G தொழில்நுட்பம் மற்றும் அதன் ஆற்றல்கள், டிஜிட்டல் மயமாக்கல் வாய்ப்புகள் மற்றும் 5G தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புத்தாக்கங்களை ஊக்குவிப்பது தொடர்பில் பங்காளர்களுக்கு உள்ளார்ந்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

5G வலிமைப்படுத்தலுக்கு மேலதிகமாக, NBIOT மற்றும் AI போன்ற நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி முன்னணித் திட்டத்தை SLTMOBITEL மற்றும் Pristine அணியினர் பின்பற்றி, 5G அடிப்படையிலான Remote Control Racing Car மற்றும் 5G அடிப்படையிலான FPV Racing Drone ஆகியவற்றை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளன.




இவை இரண்டும் உள்ளகத் தயாரிப்புகளாகும். இந்த இரு அலகுகளின் கட்டுப்பாடு மற்றும் வீடியோ ஸ்ட்ரீமிங் போன்றவற்றுடன் தொடர்புடைய தொடர்பாடல்கள் SLTMOBITEL இன் நவீன 5G பரீட்சார்த்த வலையமைப்பினூடாக ஊக்குவிக்கப்பட்டிருந்தது.

அடுத்த தலைமுறை தொழில்நுட்பங்களை வேகமாக பின்பற்றுவதற்கு பங்காளர்கள் மற்றும் ஆரம்ப நிலை நிறுவனங்களுக்கு ஊக்குவிப்புகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தன் முக்கியத்துவத்தை SLTMOBITEL உணர்ந்துள்ளது. அதனூடாக டிஜிட்டல் மயமாக்கல் வாய்ப்புகளின் விரிவாக்கம் மற்றும் டிஜிட்டல் வாழ்க்கை முறைகளுக்கு வலுவூட்டல் போன்றன ஊக்குவிக்கப்படுகின்றன.

காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்த

# Cordelia Cruises கப்பலுக்கு வரவேற்பளித்த Advantis

வட மாகாணத்திற்கான கடல்சார் பயணம் மற்றும் சுற்றுலாவின் புதிய சகாப்தத்தை முன்வைத்து, Cordelia Cruises ஸிலிருந்து இலங்கைக்கான முதல் சொகுசுக் கப்பலான MS Empressக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை துறைமுகத்தில் (KKS) வரவேற்பு அளிக்கப்பட்டது.

சொகுசுக் கப்பல் யாழ்ப்பாணத்துக்கு தனது முதல் பயணத்தை மேற்கொண்டபோது, துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் கீத் பெர்னாட் மற்றும் Advantis குழுமத்தின் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் KKS துறைமுகத்தில் நடைபெற்ற சம்பிரதாய வரவேற்பு நிகழ்வுகளுடன் Cordelia Cruises இன் குழுவினருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.



MS Empress இன் வருகையானது, Hayleys PLC இன் போக்குவரத்து மற்றும் ஏற்றி இறக்கல் பிரிவான Advantis குழுமம் மற்றும் இந்தியாவின் தலைசிறந்த கப்பல் வரிசைகளில் ஒன்றான Cordelia Cruises ஆகியவற்றுக்கு இடையேயான ஒரு முக்கிய கூட்டாண்மை மூலம் இலங்கைக்கான உல்லாசப் பயணிகளின் புதிய சகாப்தத்தின் தொடக்கத்தை ஆரம்பித்துள்ளது. Advantis குழுமத்தின் பயண மற்றும் விமானப் பிரிவு பொது விற்பனை முகவராக பணியாற்றும் அதேவேளை Advantis குழுமத்தின் துணை நிறுவனமான Clarion Shipping இலங்கையில் Cordelia Cruises க்கான துறைமுக முகவராக செயற்படும்.

# பழஞ்சோறு!



நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மனைவி பிள்ளைகளுடன் உம்மாவைப் பார்ப்பதற்காக ஊருக்கு வந்தேன். தொண்ணூறு வயதைக் கடந்த உம்மாவுக்கு என்னைக் கண்டதும் ஒருபுறம் மட்டில்லா மகிழ்ச்சி மறுபுறம் கண்கள் குளமாகிப்போன நிலையில் கட்டியணைத்து உச்சிமோந்தார். கட்டிலில் படுத்திருந்த உம்மா எழும்ப முயன்றார். நீங்கள் எழும்ப வேண்டாமெனக் கூறி நான் அவரருகில் அமர்ந்துகொண்டேன். என்னை அருகில் இருத்திக்கொண்டே தனது பேரப் பிள்ளைகளிருவரையும் அரவணைத்துக் கொஞ்சினார். வாப்பும்மாவின் அணைப்பில் பிள்ளைகள் திக்குமுக்காடிப் பொயினர்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் வீட்டைவிட்டு வெளியேறிய அந்த நாளை நான் மீள நினைத்துப் பார்த்தேன். வாப்பா ஆத்திரத்துடன் கடிந்து பேசியதால் கோபத்துடன் யாருக்கும் சொல்லாமல் வீட்டை விட்டு, ஊரைவிட்டு வெளியேறி கண்காணாத திசையில் நடைபோட்டேன். எங்கு போவது என்பது எனக்கே தெரியாமல் கால்போன திசையில் நடந்தேன். வழியால் வந்த பஸ்ஸில் ஏறிக்கொண்டேன். அது திருகோணமலை செல்லும் பஸ். அது போய் முடியும் எல்லையான திருகோணமலைக்கே டிக்கட் எடுத்து ஒரு ஆசனத்தின் மூலையில் அமர்ந்து கொண்டேன். இடையில் தேநீர் அருந்துவதற்காக பஸ் நிறுத்திய போதும் நான் இறங்கவே இல்லை. சற்று நேரத்தில் தூக்கம் வந்தது. அப்படியே தூங்கிவிட்டேன். பஸ் அதிகாலையில் திருகோணமலையை அடையும்போது தான் விழித்துக்கொண்டேன்.

விடியும் வரை பஸ் நிலையத்தில் காத்திருந்தேன். காலையிலேயே வயிற்றை பசி கிள்ளியது. விடிந்தும் விடியாததுமாக திருகோணமலை மரத்தடிக்குச் சென்று அங்கிருந்த பெட்டிக்கடையில் தேங்காய் ரொட்டியும் பிளேன்டீயும் அருந்திவிட்டு பக்கத்திலிருக்கும் கடை வீதிக்குச் சென்று நோட்டம் விட்டேன். அங்கு ஒரு சில்லறைக்கடை என் கண்களில் பட்டது. அந்தக் கடையின் ஓரமாக நின்றுகொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் உள்ளே இருந்து வந்தவர் "தம்பி என்ன பார்க்கிறீர். என்ன வேண்டும்" எனக் கேட்டார். "ஒன்றுமில்லை ஐயா தூரத்திலிருந்து வருகிறேன் திருகோணமலை எனக்கு புதிது" என்று சுருக்கமாகச் சொன்னேன். அவர் அடுத்த கேள்வியை கேட்பதற்கு முன்னரே எனது நிலைமையைச் சொல்லி இங்கு ஏதாவது வேலை கிடைக்குமா? எனக் கேட்டேன்.

"தம்பி நானும் எனது இருபது வயதில் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறி கடையொன்றில் வேலைசெய்துவிட்டு இப்போது சொந்தமாக இக்கடையை நடத்திக்கொண்டிருக்கிறேன். எனக்கு மனைவியும் மூன்று பிள்ளைகளும் இருக்கின்றனர். என்னிடம் ஐந்து பரப்புக் காணி இருக்கின்றது. அதில் காய்கறித் தோட்டம் செய்ய எண்ணியுள்ளேன். அதற்கொரு ஆளைத்தேடிக் கொண்டிருக்கின்றேன்" எனக் கூறினார்.

எனக்கு பழம் நழுவி பாலில் விழுந்த உணர்வு ஏற்பட்டது. "ஐயா நீங்கள் ஒரு தமிழர் நானோ முஸ்லிம் எனது பெயர் நஜீம். விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். என்னால் மரக்கறித்தோட்டம் செய்யமுடியும் ஆனால் உங்கள் எண்ணத்தை நிறைவேற்ற என்னை நம்புவீர்களா" எனக் கேட்டேன். "தம்பி நான் தமிழன்தான். எனது மனைவியும் ஒரு முஸ்லிம்தான். உங்கள் சமூகத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கின்றது நீங்கள் விரும்பினால் தாராளமாக காய்கறித் தோட்டத்தைச் செய்ய நான் உதவுகிறேன்" என்றார்.

மறுநாளே அவருடன் அந்தத் தோட்டத்துக்குச் சென்று பொறுப்பெடுத்தேன். தேவையான பொருட்களை வாங்க அவரே நிதி உதவியும் தந்தார். உடனடியாகவே பணியைத் தொடங்கினேன். முதலாளி வீட்டிலிருந்து காலை, பகல், இரவு சாப்பாடும், தேநீரும் தந்தார். ஒரு வாரத்தின் பின்னர் ஒரு நாள் தோட்டத்தைப் பார்க்க வந்த முதலாளி பெரும் சந்தோஷமடைந்தார். தோட்டம் செப்பனிடப்பட்டு மரக்கறி விதைகள் தூவப்பட்டிருந்தன.

தம்பி நஜீம், எங்கள் வீட்டுச் சாப்பாடு பிடித்ததா? இல்லையென்றால் சாப்பாட்டுக்கு வேறு வழி செய்து தருகிறேன்" என்று கூறினார் முதலாளி. ஐயா, அப்படியொன்றுமில்லை. நான் எனது வீட்டில் சாதாரண சாப்பாடுதான் சாப்பிடுவேன். காலையில் தவறாமல் பழையசோறு சாப்பிட்டுப் பழக்கப்பட்டவன். அது ஒன்றுதான் குறையாக இருக்கின்றது என்றேன்.

தம்பி எங்கள் வீட்டிலும் காலையில் பழைய சோறுதான். உமக்காகத்தான் ரொட்டி, இடியப்பம் செய்து அனுப்புகிறேன் என்ற முதலாளி நீர் விரும்பினால் நாளையிலிருந்து உமக்கும் பழைய சோறு அனுப்புகிறேன் என்றார். முதலாளி தனது பிள்ளையைப் போன்றே நஜீம் மீது பாசம் காட்டினார். முதலாளியின் மனைவியும் நஜீம் மீது பாசத்துடனேயே நடந்துகொண்டார். நஜீம்கூட அவர்களது நம்பிக்கைக்கு பாத்திரமாகவே அந்த வீட்டில் எல்லோருடனும் அன்பாகவே இருந்தான்.

காலம் கரைந்தோடியது. காய் கறித்தோட்டம் பூத்துக் குலுங்கியது. அறுவடைக் காலம் வந்தபோது முதலாளியையும், குடும்பத்தினரையும் வரவழைத்து அறுவடை செய்யுமாறு கேட்டுக்கொண்டேன்.

மனம் பூரித்து மகிழும் விதத்தில் நல்ல அறுவடை. வியாபாரிகள் வந்து கொள்வனவு செய்தனர். நல்ல வருமானம் கிட்டியது. முதலாளி நஜீமை அழைத்து மொத்தப் பணத்தையும் வைத்து அவனுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுமாறு சொன்னார். நஜீம் அதில் ஒரு சதத்தைக்கூட எடுக்கவில்லை. என்னை உங்கள் பிள்ளை மாதிரி பார்த்துக் கொண்டீர்கள் நான் இன்று சந்தோஷமாக இருப்பதற்கு நீங்களே காரணம். அடுத்த போகத்தில் பார்த்துக் கொள்வோம் என்று கூறினான்.

நஜீமின் பாசத்துக்கு முதலாளி குடும்பம் கட்டுப்பட்டது. உழைப்பின் மீது உறுதி பூண்ட நஜீமை குடும்பத்தோடு இணைத்துக்கொள்ள முதலாளியின் மனம் விரும்பியது. சில நாட்களின் பின்னர் தனது மனைவியிடம் தன் விருப்பத்தைக் கூறிய போது பாத்திமாவும் முழு விருப்பத்தையும் வெளிப்படுத்தினாள். என்றாலும் முதலாளி மகள் ரமீஸாவிடம் விருப்பம் கேட்டார். வாப்பாவும், உம்மாவும் விரும்பியவரை ஏற்றுக்கொள்ளத் தயார் என்று அவளும் பதிலளித்தாள்.

தங்கள் குடும்பத்தின் முடிவை முதலாளி நஜீமிடம் கூறியபோது "என் குடும்ப நிலை பற்றித் தெரிந்துகொள்ளாமல் முடிவு எடுப்பது நல்லதா?"எனக் கேட்டான். "ஏழ்மையில் வாழ்ந்த உனது உள்ளம் பெருஞ்செல்வம் உன்னைவிட சிறந்த மருமகன் எனக்குக் கிடைக்கப் போவதில்லை" எனச் சொன்ன முதலாளி" எனது மகளை மணமுடிக்க என்னிடமிருந்து எதை எதிர்பார்க்கின்றாய்?"எனக் கேட்டார்.

"முதலாளி உங்கள் குடும்பத்தின் அன்பு மட்டும் எனக்குப் போதும். ஆனால் உங்களிடமிருந்து நான் ஒரு உதவியை எதிர்பார்க்கின்றேன். உங்கள் மனைவியும், மகளும் இஸ்லாத்தில் இருக்கிறார்கள். ஆனால் நீங்கள் இன்னமும் இஸ்லாத்தில் இணையவில்லை. நீங்கள் இஸ்லாத்தில் இணைந்தால் மட்டுமே இஸ்லாமிய சட்டப்படி உங்கள் மகளை என்னால் மணமுடிக்க முடியும். இதில் நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும். நான் வற்புறுத்தப் போவதில்லை" என்று நஜீம் கூறினான்.

நஜீமின் இந்த வேண்டுகோளை முதலாளியால் நிராகரிக்க முடியவில்லை. தன் மனைவி, மகளின் எதிர்காலம் குறித்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டதை அவர் உணர்ந்தார். அவருக்கு தாயோ தந்தையோ இல்லை. சகோதரன் மட்டுமே இருந்தான். அவனும் யாழ்ப்பாணத்தில். உறவுக்குள் விரிசல் கண்டிருந்தது. தனக்கு வயது அறுபதை தாண்டியிருந்தது. சிந்திக்க நேரமில்லை என்பதை உணர்ந்த முதலாளி இனியும் தாமதப்படுத்தாது அவர்கள் முன்னிலையில் இஸ்லாத்தில் இணையும் முடிவை அறிவித்தார்.

மறுநாள் பள்ளிவாசலுக்குச் சென்று ஆலிம் சாஹிபை சந்தித்து பள்ளி நிருவாகிகளின் ஒத்துழைப்புடன் கலிமாச் சொல்லி இஸ்லாத்தில் இணைந்தார். நஜீமுக்கு இரட்டிப்புச் சந்தோஷம் அல்லாஹ் தனது அருளை தன் மீது சொரிகின்றான் என புரிந்துகொண்டவன் பள்ளிவாசலில் தனது புது மாமனாருடன் சேர்ந்து இரண்டு ரக்ஆத் தொழுது படைத்தவனுக்கு 'சுகுர்' செய்தான். பின்னர் வீட்டுக்குவந்து எல்லோருடனுமிருந்து சாப்பிட்டுவிட்டு அடுத்த பணியை ஆரம்பிக்கத் திட்டமிட்டனர். காலம் கடத்தாமல் ஹஜ்ஜுப் பெருநாளோடு சேர்த்து மறு நாள் நிகாஹ் நடத்த முடிவுசெய்தனர்.

நஜீம் ரமீஸா திருமணம் முடிந்த கையோடு தனது வியாபாரம் மற்றும் சொத்துக்களை பரிபாலிக்கும் பொறுப்பை முழுமையாக நஜீமிடம் முதலாளி ஒப்படைத்தார். அங்கு ஒரு சந்தோஷமான குடும்பத்தைக் காணமுடிந்தது. காலம் கரைந்தோடியது இன்று நஜீம் ரமீஸாவுக்கு மூன்று பிள்ளைகள். முதலாளி பேரப்பிள்ளைகளுடன் பூரித்துக் காணப்பட்டார். திடீரென ஒரு நாள் முதலாளி நோயுற்றார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர் இரண்டே தினங்களில் மரணமானார். தனது உயிர் பிரியும் போது அவரது வாய் கலிமாவை மொழிந்தவண்ணமிருந்ததாக அவரது மனைவி, நஜீமின் மாமி பாத்திமா சொன்ன போது ஒருபுறம் மகிழ்ச்சி மறுபுறம் மாமாவின் பிரிவுத்துயரம் இரண்டும் கலந்த நிலையில் இறைவனை புகழ்ந்துவிட்டு நஜீம் பள்ளிவாசலுக்கு விரைந்து ஜனாஸாவை அடக்கம் செய்யும் பணிகளை முன்னெடுத்தான்.

ஜனாஸா அடக்கத்தின் போது ஊரே திரண்டு வந்து அவருக்காக துஆச் செய்தது. ஒரு நல்ல ஈமானிய மனிதனாக முலாளி தனது இறுதிப் பயணத்தை மேற்கொண்டதை அந்த பள்ளிவாசலில் காணக்கூடியதாகவிருந்தது.

நாட்கள் நகர்ந்தன. குடும்ப நிலைமை வழமைக்குத் திரும்பியது. நஜீம் கடையை விரிவுபடுத்தியதோடு, மரக்கறித் தோட்டத்தையும் கவனிக்க தொடங்கினான். தோட்ட வேலைக்காக இரண்டு இளைஞர்களைச் சேர்த்துக்கொண்டான். கடையில் மூன்று பணியாளர்கள். இப்படியே காலம் கடந்தது. பிள்ளைகளும் வளரத் தொடங்கிவிட்டார்கள். அவர்களுக்கு கல்வியூட்டுவதில் நஜீம் அதிக அக்கறைகாட்டினான்.

ஒரு நாள் தனது மனைவி ரமீஸாவிடம் நாங்கள் எல்லோரும் எனது ஊருக்குப் போய் உம்மாவை பார்த்துவிடுவோமா எனக் கேட்டபோது அவளும் எனக்கும் மாமியை பார்க்க ஆசைதான் என்றாள். வெள்ளிக்கிழமை கடையை மூடிவிட்டுப் புறப்படத் தீர்மானித்தனர்.

40 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் ஊர் மண்ணில் கால் பதித்தபோது ஊரே மாறிவிட்டிருப்பதை உணர்ந்தான். அவர்களது வாகனம் உம்மா வீட்டுக்கு முன்பாக நின்றபோது நஜீமின் மூத்த சகோதரி முஜீபா அவனை அடையாளம் கண்டுகொண்டாள். "உம்மா. தம்பி நஜீம் வந்திருக்கார். எனச் சந்தோஷக்குரல்எழுப்பினாள். வீட்டில்எல்லோருக்கும் குதூகலம்தான். தனது மதினியைக் கண்ட முஜீபா கட்டியணைத்து முத்தமிட்டாள்.

உம்மா பேரானந்தம் கொண்டார். "நான் மௌத்தாக முன்னர் நீ வருவாயா என ஏங்கிக் கொண்டிருந்தேன். இன்றைக்கு எனது மருமகளையும் பேரப்பிள்ளைகளையும் காணக் கிடைத்து அல்லாஹ்வின் அருள்" என்றாள். வாப்பா மரணித்த செய்தியை அறிவிக்க விபரம் தெரியாமல் தவித்த வேதனையையும் அவர்கள் தெரிவித்தபோது நஜீமின் கண்கள் குளமாகின.

தனது கடந்தகாலப் பயணம் பற்றி அவன் சொன்னபோது தனது மகனை இந்த நிலைக்கு உயர்த்தியதற்காக அவரது கணவருக்கும் அவருக்கும் நன்றி தெரிவித்து அவருக்காகவும், நஜீமின் வாப்பாவுக்காகவும் பிரார்த்திப்பதாகவும் பள்ளிவாசலில் துஆ மஜ்லிஸை நடத்துமாறும் மகனிடம் அந்தத் தாய் வேண்டுகோள் விடுத்தாள்.

அதனை உடன் நிறைவேற்றுவதாக நஜீம் அன்னையிடம் உறுதியளித்துவிட்டு இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு நித்திரைக்குப் போவதற்கு முன்னர் உம்மாவிடம் வந்த நஜீம் "உம்மா உங்கள் கைகளால் பிசைந்த பழையநோறு சாப்பிட்டு நீண்ட காலமாகிவிட்டது. நாளைக்காலையில் எனக்கு உங்கள் கைகளால் பிசைந்த பழஞ்சோறு வேண்டும். அதனை உங்கள் கைகளால் ஊட்டிவிடவேண்டும் எனக் கெஞ்சினான். அந்தத் தள்ளாதவயதிலும் கூட கட்டிலை விட்டு எழுந்து தனது மகனை அணைத்து முத்தமிட்டாள் அந்தத் தாய்.

அறைக்குள் வந்த ரமீஸாவும் மாமி உங்கள் மகனுக்கு மட்டுமல்ல எனக்கும் பழஞ்சோறு வேணும். நானும் பழைய சோறு சாப்பிடுபவள் தான் எனச் சொன்னபோது அங்கு எல்லோரும் சந்தோஷ மழையில் நனைந்தனர்.

**ஈழத்து நூன்**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி

இல: 79



திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.................. ..................

திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி

போட்டி இல. 79

த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 79

### இடமிருந்து வலம்

1. குற்றமற்றவர்
4. ஒரு தமிழ் மாதம்
6. தண்ணிரை எடுத்துவைக்கக் கூடிய ஒரு பாத்திரம்
7. ஒன்றையடுத்து ஒன்றாக அமையும் ஒழுங்கு (திரும்பியுள்ளது)
9. கூலி அல்லது ஊதியம்
11. முக்கனிகளுள் ஒன்று
14. வெறுமை (குழம்பியுள்ளது)
17 . உறுதியானது
19. இசைக்கு இதுவும் தேவை
20. உள்ளுறுப்பு
21. குழந்தை
23. பணி
24. தொடக்கம் (திரும்பியுள்ளது)
25. யானைக்கு இப்படியொரு பெயர் (திரும்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. நிறைவேறாத விருப்பம்
2. தகவல்களை வகைப்படுத்தி பெற்றுக்கொள்ளும் தாள்
3. அரசன்
5. தலை
8. மழைக்காலம்
9. யானை
10. ஒரு வாத்தியக் கருவி
12. இது வந்தால் பத்தும் பறந்துபோகும் என்பார்கள்
13. அதிகார உரிமைக்குரியவர்
15. அரங்கில் நடைபெறும் இசை நிகழ்ச்சியை இப்படியும் சொல்வர் (குழம்பியுள்ளது)
16. உலகம் (குழம்பியுள்ளது)
18. நடன, நாட்டிய நிகழ்வுகளை இப்படியும் குறிப்பிடலாம் (குழம்பியுள்ளது)
22. ருசி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 78

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. உபகாரம்
5. காலி
7. சிரிப்பு
8. முதலை
9. பீதி
10. காசு
11. நடுத்தரம்
14. பேன்
15. பசு
17. நாக்கு
19. கலாட்டா
21. சகதி
22. சட்டி
23. ஆரம்பம்
24. பனி

**மேலிருந்து கீழ்**

1. உசிதம்
2. பரி
3. காப்பீடு
4. புத்திரன்
5. காதலி
6. காலை
8. முரசு
12. நடுக்கம்
13. தபேலா
15. பட்டினி
16. பட்டாசு
17. நாசம்
18. பகுதி
20. சக

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 78

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **எச். எம். எம். லெப்பை**<br>இல 11/28 _ ஏ<br>ரத்வத்தை மாவத்தை,<br>பதுளை | **எஸ்.விகாஷினி**<br>கொட்டாஞ்சேனை வீதி<br>கொட்டாஞ்சேனை | **எம்.எச்.சீ.என்.ஹாபியா**<br>411, புதிய வீதி,<br>வெலிகம |

### பாராட்டு பெறுவோர்

1. **டீ.எம்.எப். மித்தாஹ்** – கிண்ணியா 04
2. **ஹன்விக்கா ஷியாம் ரக்கேஷ்** – மட்டக்களப்பு
3. **எஸ். கனகரட்ணம்** – திருகோணமலை
4. **அஸ்ரா முஜிப்** – பண்டாரகம
5. **சாஹிராபானு லியாவுத்தீன்** – புத்தளம்
6. **கே.எம்.எம் பாரூக்** – மாத்தளை
7. **ஏ.சீ. சிறிதரன்** – கொழும்பு 06
8. **ஏ. சந்தியாகோ** – கண்டி
9. **வேல்நாயகம் ராஜேந்திரன்** – காரைதீவு
10. **ஆர். கீர்த்தனா** – வரகாப்பொல

## பொதுஜன பெரமுனவுக்கு... (05ஆம் பக்கத் தொடர்)

**கே: 2024 ஆம் ஆண்டு முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், ஜனாதிபதிக்கான ஆதரவில் பிளவு ஏற்பட்டிருப்பதாகவும் ஊகங்கள் வெளியிடப்படுகின்றன. இது பற்றி உங்கள் பார்வை என்ன?**

பதில்: நாம் தேர்தலுக்குச் செல்வதா இல்லையா என்பது நாட்டின் பொருளாதார நிலை மற்றும் இதர சட்ட அம்சங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்பட வேண்டும். அரசாங்கமோ அல்லது பாராளுமன்றத்தின் பெரும்பான்மையோ தேர்தலுக்குச் செல்லத் தீர்மானித்தால், அது தேசியமட்டத் தேர்தலாக இருக்க வேண்டுமே தவிர, மாகாண மட்டத் தேர்தல்களை நடத்துவதற்கான நேரம் இதுவல்ல.

கண்டிப்பாக அது ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தலாகத்தான் இருக்க வேண்டும். அதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

முன்கூட்டியே தேர்தலை நடத்துவது அரசியலமைப்புக்கு முரணானால், அது பாராளுமன்றத்தின் பெரும்பான்மையின் ஒப்புதலுடன் செய்யப்பட வேண்டும்.

இத்தருணத்தில் தேர்தலை நடத்துவதை விட பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வேலைத்திட்டத்தை மக்கள் நடைமுறைப்படுத்த விரும்புகிறார்கள் என நான் நினைக்கிறேன். தேர்தலுக்காக கூக்குரலிடுபவர்கள் இந்த இக்கட்டான தருணத்தில் அரசாங்கத்துடன் கைகோர்த்து தற்போதைய நெருக்கடியை சமாளிக்க தங்கள் ஆதரவை வழங்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல் இதுவரை அறிவிக்கப்படவில்லை அல்லது அது தொடர்பில் எவரும் கருத்து வெளியிடவில்லை.

சஜித் பிரேமதாசவை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்துமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்திக்குள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஐக்கிய மக்கள் சக்தி பிளவுபட்டு, அதன் சில உறுப்பினர்கள் ஐ.தே.கவுடன் கைகோர்த்து விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாகவே அவர் அவ்வாறு செய்தார். எங்களுக்கு அப்படிப்பட்ட பயமோ அவசரமோ இல்லை. ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற வகையில் தீர்மானம் எடுக்கும். எமக்குப் பொருத்தமான வேட்பாளர் இல்லை என்றால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என பெரும்பான்மையான மக்கள் கருதினால், அதனை எமது கட்சி கவனத்தில் கொள்ளும் என நினைக்கின்றேன். எனது தனிப்பட்ட கருத்து என்னவெனில், எமது கட்சித் தலைவர்கள் தமது பதவிகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாமல் இறுதியாக அவர்கள் விலகிக் கொண்டார்கள். அதேபோன்று அவர்களை தலைவர்கள் என்று அழைப்பவர்களும் சவால்களை ஏற்கத் தயங்கினார்கள். எவ்வாறாயினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து மக்களுக்கு ஒருவித நிவாரணத்தை வழங்க முடியும். எனவே, அவருக்கு மீண்டும் வாய்ப்பு வழங்குவதில் எனக்கு எந்த எதிர்ப்பும் இல்லை.

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எந்த வகையான தேர்தலையும் சந்திக்க பயப்படுவதாகவும், அதனால் தேர்தலை ஒத்திவைக்க முனைவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. உங்கள் கருத்து என்ன?**

பதில்: எதிர்க்கட்சிகளுக்கு பேசுவதற்கு தலைப்பு இல்லை. எனவே, அவர்கள் இதுபோன்ற கருத்துக்களைக் கூறுகின்றனர். எந்தத் தேர்தலையும் சந்திக்க நாங்கள் பயப்படவில்லை. பொதுஜன பெரமுன சரியான நேரத்தில் தேர்தலை நடத்தி வெற்றி பெற்றது. ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் நல்லாட்சி அரசாங்கத்தில் இருந்தவர்கள். அவர்கள் பல வருடங்களாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தவில்லை, மாகாண சபைத் தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டன. உண்மையில், அவர்கள் தேர்தலுக்கு பயந்தார்கள், எங்களுக்கு அந்தப் பயம் இல்லை. எமது கட்சி சரியான நேரத்தில் தேர்தலை நடத்தும் கட்சியாகும்.

**தேசிய லொத்தர் சபை சீட்டிழுப்பு**

தேசிய லொத்தர் சபையின் மெகா பவர் லொத்தர் 2023 யூலை 23 இல் இருந்து ஆகஸ்ட் 08 வரை சீட்டிழுப்புக்கள் 1532, 1533, 1534, 1535, 1536, 1537, 1538, 1539, 1540, 1541, 1542, 1543, 1544, 1545, 1546, 1547, 1548 இல் அச்சடிக்கப்பட்ட பரிசுக்கட்டமைப்பில் புதிதாக அறிமுகப்படுத்திய "லக்ஷபதி Double Chance இலக்கச் சீட்டிழுப்பில் 05 இலக்கங்களையுடைய Double Chance இலக்கம் ஒழுங்காகப் பொருந்தினால் ரூ.100,000/- வீதம் மேலதிக பரிசுகளை வெல்லுங்கள்." என்றவாறு திருத்தப்பட்டுள்ளதாக தயவுடன் கவனத்தில் கொள்ளவும்.

மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி இலக்கம் 011-4607080 இற்கு அழைக்கவும்.

## இனவாத எதிர்ப்பலைகளுக்கு மத்தியிலும்... (08ஆம் பக்கத் தொடர்)

இலங்கையின் இனப்பிரச்சினை விடயம் தொடர்பில் ஒவ்வொரு தடவை பேச்சுக்கள் எழுகின்றபோதும், 13 ஆவது திருத்தத்துக்கு அமைய அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்பதை இந்தியா வலியுறுத்தி வருகிறது. இந்தியாவின் மத்தியில் எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இலங்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விடயத்தில் மாற்றுக் கருத்து இருக்கவில்லை.

ஏற்கனவே குறிப்பிட்டது போல முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது 13 இற்கு அப்பால் சென்று தீர்வு வழங்கப்படும் என்ற உறுதிமொழியை இந்தியாவுக்கு அவர் வழங்கியிருந்தார். அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேனவிடமும் இந்தியா இதேவிடயத்தை வலியுறுத்தியிருந்தது.

இருந்தபோதும், 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அமைய அதிகாரப்பகிர்வு எனப் பேசப்படும் அனைத்துச் சந்தர்ப்பத்திலும் நாட்டைப் பிளவுபடுத்தப் போகின்றனர் என்றதொரு கோஷத்துடன் அரசியல் செய்யும் தென்னிலங்கைத் தரப்பொன்று எப்பொழுதும் செயற்பட்டு வருகிறது.

இதனால் அதிகாரப் பகிர்வு என்பது வெறும் வாய்வார்த்தையில் மாத்திரமே இருந்து வந்தது. தமிழ் அரசியல் தரப்பினருக்கும், இலங்கையின் மத்திய அரசாங்கத்துக்கும் இடையில் இதற்கு முன்னர் நடைபெற்ற பல்வேறு மட்ட பேச்சுவார்த்தைகளில் அதிகாரப்பகிர்வு பற்றி நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இருந்தபோதும் தென்னிலங்கை அரசியல் தரப்பிலிருந்து வெளிப்பட்ட எதிர்ப்புக்களால் அவை பேச்சளவிலேயே கைவிடப்பட்ட நிலை காணப்பட்டது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்விடயத்தில் உறுதியாக இருப்பதாகவே தெரிகிறது. கடந்த டிசம்பர் மாதம் அவர் கூட்டியிருந்த முதலாவது சர்வகட்சி மாநாட்டில் அரசியலமைப்பின்படி தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு உட்பட்டு 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் போகின்றேன் எனக் கூறியிருந்தார்.

இதற்கு தென்னிலங்கையில் உள்ள சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து எதிர்ப்புக்கள் கிளம்பியபோதும் அவற்றைப் பொருட்படுத்தாது பல தடவை இவ்விடயத்தை வலியுறுத்தியிருந்தார். இதன் தொடர்ச்சியாக தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளிலும் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் பேச்சுவார்த்தைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளன.

இவ்வாறான பின்னணியில் இந்திய விஜயத்துக்கு முன்னர் ஜனாதிபதி வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்கள் பிரதிநிதிகளை அழைத்து மீண்டும் ஒரு தடவை 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களை நடைமுறைப்படுத்தத் தயார் என்பதைக் கூறியிருந்தார்.

இருந்தபோதும் "இனிமேலும் ஏமாறத் தயார் இல்லை" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இதன்போது தெரிவித்ததாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. கடந்தகாலப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட தோல்விகளின் வெளிப்பாடாக இந்தக் கருத்து அமைந்திருந்தாலும், நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள சூழ்நிலையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சாதகமான வழிகளைப் பின்பற்ற வேண்டியது தமிழ் அரசியல் கட்சிகளின் கடமையாகும்.

இதற்கு முன்னர் ஆட்சியில் இருந்தவர்கள் அதிகாரப்பகிர்வு குறித்துப் பேசுவதற்கே தயக்கம் காட்டியிருந்த நிலையில், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தத் தயார் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பை சாதகமாகப் பரிசீலிக்க வேண்டும்.

நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடி மற்றும் இதுவரை காலமும் இனவாதத்தைக் கையில் எடுத்து அனைத்து செயற்பாடுகளையும் குழப்பிக் கொண்டிருந்த தரப்பினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுத்துவரும் அரசியல் பின்னணியில், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை தமிழ் பிரதிநிதிகள் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதே காலத்துக்கு ஏற்றதாக அமையும்.

எனவே, இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி, அரசாங்கத்துக்கு உரிய அழுத்தத்தைக் கொடுத்து மக்களுக்கு ஏதாவது தீர்வைப் பெற்றுக்கொடுக்க அவர்கள் முன்வர வேண்டும். இதனைவிடுத்து தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளும் உள்நோக்கத்துடன் செயற்படுவது நாட்டுக்கோ அல்லது அவர்கள் சார்ந்த மக்களுக்கோ எந்தவித பலனையும் ஏற்படுத்திக் கொடுக்கப் போவதில்லை.

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**

**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

**கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்கல் - AIIB**

**வலுவூட்டல் உருக்கை அகற்றல்**

வலுவூட்டல் உருக்கை அகற்றுவதற்காக புகழ் வாய்ந்த நிறுவனங்கள்/தனிநபர்களிடமிருந்து கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்கும் செயற்றிட்டமானது முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்களை அழைக்கின்றது.

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் / நிறுவனங்கள் 2023 ஜூலை 24 ஆம் திகதியிலிருந்து 2023 ஜூலை 31 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கீழேயுள்ள முகவரிக்கு விஜயம் செய்து அம்சங்களின் பட்டியலையும் படிவங்களையும் கையேற்றுக் கொள்ளலாம்.

| அம்ச இல. | அடுக்கி வைக்கப்பட்டுள்ள அமைவிடம் | இருப்பு நிலை | அளவு (மெ.தொ.) |
|---|---|---|---|
| 01 | செத்சிரிபாய, பத்தரமுல்ல | பாவிக்கப்படாதது | 71.25 |
| 02. | அருணோதய மாவத்தை, ஒபேசேகரபுர (300 வீட்டு தொகுதிகளை நிர்மாணிக்கும் வேலைத்தளத்தில்) | இணைக்கப்பட்டுள்ளது ஆனால் பாவிக்கப்பட வில்லை | 7.76 |

**நியதிகள் மற்றும் நிபந்தனைகள்:**

அ) 2023 ஓகஸ்ட் 2 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு முன்னராக மேலேயுள்ள இரு அம்சங்களும் தனித்தனியான விலைமனுக்கோரல்களில் தயாரிக்கப்பட்டு செயற்றிட்டப் பணிப்பாளர், கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்கும் செயற்றிட்டம், 5 ஆம் மாடி, ''செத்சிரிபாய'', I ஆம் கட்டம், பத்தரமுல்ல என விலைமனுக்கோரல்கள் முகவரியிடப்பட்டு கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

ஆ) மூடும் நேரத்தின் பின்னர் விலைமனுக்கோரல்கள் மூடப்படும். விலைமனுக்கோரல்களை திறக்கும் நேரத்தில் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

இ) ஏற்றுக் கொள்ளல் கடிதத்தைப் பெற்ற பின்னர் 07 நாட்களுள் தகுதியுள்ள விலைமனுதாரர் பணத்தொகையை முழுவதுமாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளருக்கு செலுத்தப்படல் வேண்டும்.

ஈ) பணக்கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுள் வலுவூட்டல் உருக்கானது இடப்பரப்பிலிருந்து வெளியேற்றப்படல் வேண்டும்.

உ) ஆர்வமுள்ள விலைமனுதாரர் உரித்தான அம்சங்களை குறிப்பிட்டுள்ள அமைவிடங்களில் 2023 ஜூலை 24 ஆம் திகதிக்கும் 2023 ஜூலை 31 ஆம் திகதிக்குமிடையில் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.

ஊ) தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

எ) மேலதிக தகவலுக்காக தயவு செய்து 011 2073883 என்ற இலக்கத்தினூடாக அல்லது **pmuurpcc@gmail.com** என்பதினூடாக தொடர்பு கொள்ளவும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**கொழும்பு நகர புத்துயிராக்கல் செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்கல் (AIIB),**
**5 ஆம் மாடி, செத்சிரிபாய, I ஆம் கட்டம்,**
**பத்தரமுல்ல.**

## ஓராண்டுகால சாதனைப் பயணம்... (04ஆம் பக்கத் தொடர்)

இந்த மறுசீரமைப்புக்களின் ஊடாக இலங்கையின் நவீனமயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டு அர்த்தமுள்ளதாக இருக்கும், சந்தை வாய்ப்புக்கள் விரிவடையும், அபிவிருத்தி முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் அதிக பங்களிப்பை வழங்கும். எனவே, மழையில்லாத தெளிவான வானத்தில் மின்னலைத் தேடி காலம் கடத்துவது வீண் முயற்சியாகும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### சமூக நலன்புரித் திட்டங்கள்:

பொருளாதார மீட்சி தேவைப்படும் மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் 'அஸ்வெசும' சமூகநலத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி, மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக் கூடியவர்கள், வறியவர்கள் மற்றும் மிக வறியவர்கள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ் 'அஸ்வெசும' நலன்புரிப் பலன்கள் வழங்கப்படுகிறது. ஊனமுற்றோர், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

எவருக்கும் அநீதி இழைக்கப்படாமலும், எவரும் கைவிடப்படாமலும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கு அரசியல் சாயம் பூச சிலர் முயற்சித்தாலும், இது உண்மையில் சமூக நலனை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டமாகும்.

கடந்த வருடம் அரசாங்கம் 144 பில்லியன் ரூபாவை நலன்புரி நலன்களுக்காக செலவிட்ட போதிலும், இந்த வருடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட 'அஸ்வெசும' வேலைத்திட்டத்திற்காக 206 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான பேச்சுவார்த்தையில் 187 பில்லியன் ரூபாவை இந்நாட்டின் வறிய மக்களின் மேம்பாட்டிற்காக பயன்படுத்துமாறு முன்மொழிந்துள்ள போதிலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அரசாங்கம் குறித்த தொகைக்கு மேலதிகமாக 62 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

### உலகிற்கு திறக்கப்படும் இலங்கையின் கதவுகள்:

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த இலங்கையின் கதவுகள் உலகுக்காக திறக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். சர்வதேச வர்த்தக நிறுவனங்களால் எடுக்கப்படும் தனித்தனியான தீர்மானங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தித்து, அந்தச் செயற்பாடுகளை மேலும் வினைத்திறன் மிக்கதாகவும் ஒழுங்காகவும் மேற்கொள்ளும் வகையில், இலங்கையில் சர்வதேச வர்த்தக அலுவலகத்தை (ITO) நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்திற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை சர்வதேச துறையிடமிருந்து பெற்றுக்கொடுக்க முடியும்.

முதலாவதாக தெற்காசியாவின் பரந்துபட்ட கூட்டமைப்பான (*Regional Comprehensive Economic Partnership RCEP*) அமைப்பில் இணைந்துகொள்ளும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சாதகமான சூழல் மற்றும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு முயற்சிகளும் சாதகமான முறையில் முன்னெடுக்கப்படு வருகின்றன.

இலங்கையின் அரசாங்கத்துறையின் செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக மாற்றமால் பலப்படுத்துவது கடினம் என்பதால் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகள் கட்டாய தேவையாகியுள்ளன. அதனால் அரசாங்க துறையை டிஜிட்டல் மயமாக்கி நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் பணிகளை துரிதப்படுத்துவதே ஜனாதிபதியின் இலக்காகும்.

அடுத்த ஐந்து வருடங்களில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் நாடாக மாற்றுவதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். அத்தோடு 2048 அபிவிருத்தி அடைந்த இலங்கையின் பங்குதாரர் ஆவதற்கு இளைஞர்களுக்கு உள்ள வாய்ப்புக்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோல் நாட்டின் இனப்பிரச்சினையை அடுத்த தலைமுறை மீது சுமத்தாமல் நல்லிணக்கம் குறித்த செயற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளார்.

**பொது அறிவிப்பு**

பாலரமேஷ் சக்திவேலு (சக்திவேல் பாலரமேஷ் என்றும் அழைக்கப்படுவார்) COMA எனும் வர்த்தக சின்னத்தின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் என்பதற்கான அறிவிப்பு

COMA® Real Quality Real Taste

COMA எனும் வர்த்தக சின்னம்/ வர்த்தக பெயரின் கீழ் கோதுமை மா, கடலை, கடலைப்பருப்பு, மற்றும் பட்டானா பருப்பு உள்ளிட்ட பொருட்களை பாவனை மற்றும்/ அல்லது விநியோகிப்பதனை நாங்கள் தடை செய்துள்ளோம். மேற்குறிப்பிட்ட வர்த்தக சின்னத்தின் கீழ் உரிமையாளரின் விருப்பம் அல்லது அனுமதியின்றி பல தரமற்ற பொருட்களை விற்றல் மற்றும் அல்லது சட்டத்திற்கு புறம்பான பரிமாற்றங்களை கையாண்டிருப்பதாக எங்களுக்கு தெரியவந்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் COMA என்ற வர்த்தக சின்னம் அல்லது வர்த்தகப் பெயரின் கீழ் இவ்வாறான அங்கீகாரமற்ற செயல்களை புரியும் நபர்கள் மற்றும்/ அல்லது நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்படும் அனைத்து பரிமாற்றங்கள் அல்லது பரிவர்த்தனைகள் சட்டத்திற்கு புறம்பானது என்பதுடன் உரிமையாளரின் அறிவுசார் சொத்துரிமை சட்டத்தினை மீறல் என்பதனை நூகர்வோர், வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் கவனத்திற் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். மேலும் அவ்வாறான அங்கீகாரமற்ற நபர்கள் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் எவ்வித இறக்குமதி மற்றும்/ அல்லது விநியோகிப்படும் பொருட்களின் தரம் அல்லது குணம் சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட உரிமையாளரினால் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

ஏதேனும் தகவல் மற்றும் கேள்விகள் இருக்குமாயின் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**சக்திவேல் பாலரமேஷ்**
**இயக்குனர்**
**குளோபலெக்ஸ் (பிரைவட்) லிமிடட்**
**குளோபல் பல்ஸஸ் (பிரைவட்) லிமிடட்**
**கோமா பிரான்ட் (பிரைவட்) லிமிடட்**

**இல. 180/2/125, பீப்பல்ஸ் பார்க் கொம்பலக்ஸ்**
**கேஸ் வர்கஸ் வீதி, கொழும்பு- 11**
**இலங்கை தொலைபேசி: +94112433936**
**மின்னஞ்சல் முகவரி: info@globalax.net**

## மத்தியகிழக்கு நாடுகளுடன்... (08ஆம் பக்கத் தொடர்)

கற்கைநெறிகள் செப்டம்பர் 2024 முதல் தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நிலையான ஆற்றல், காலநிலை ஆய்வுகள் மற்றும் தரவு அறிவியல் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மையங்களும் நிறுவப்படவுள்ளன.

ஆற்றல் துறையில் எண்ணெய் & எரிவாயு மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய இரண்டிலும் இருதரப்பு கூட்டுறவை மேம்படுத்த இரு தலைவர்களும் முடிவு செய்தனர். இந்தியாவின் பெட்ரோலிய இருப்புத் திட்டம் உட்பட ஆற்றல் துறையில் முதலீட்டை அதிகரிக்க இரு தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

காலநிலை மாற்றம் தொடர்பான பிரச்சினைகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்பட இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

உணவுப் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து, உணவு விநியோகச் சங்கிலியை வலுவாக்கும் வகையில், உணவு மற்றும் விவசாய வர்த்தகத்தை விரிவுபடுத்துவதில் இரு தலைவர்களும் தங்களது உறுதியை வெளிப்படுத்தினர்.

தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளின் மூலம் சர்வதேச சுகாதார விநியோகச் சங்கிலியின் இரு நாடுகளும் முன்னிலை பெறுவதற்கு உள்ள சாத்தியங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் இந்தியாவில் வளர்ந்து வரும் சுகாதார உள்கட்டமைப்பில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இரு நாடுகளின் செழிப்பையும் மேம்படுத்தும் வகையில் கடல்சார் பாதுகாப்பையும், இணைப்பையும் வலுப்படுத்த இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர். பாதுகாப்பு பரிமாற்றங்கள், அனுபவங்களைப் பகிர்தல், பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்தவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

பிராந்திய மற்றும் சர்வதேச அளவில், எல்லை தாண்டிய பயங்கரவாதம் உட்பட அனைத்து வடிவங்களிலும் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் தங்களது உறுதியை தலைவர்கள் மீண்டும் வெளிப்படுத்தினர். பயங்கரவாதம், பயங்கரவாதிகளுக்கு நிதியுதவி அளிப்பது மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த ஒப்புக்கொண்டனர். இந்தச் சூழலில், மக்களிடையே அமைதி, சகிப்புத்தன்மை உள்ளிட்டவற்றை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை அவர்கள் வலியுறுத்தினர். அனைத்து வகையான தீவிரவாதம், வெறுப்புப் பேச்சு, பாகுபாடு ஆகியவற்றை கைவிட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இரு தலைவர்களும் பன்முகத்தன்மையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியதோடு, நியாயமான விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்கை மேம்படுத்த ஒன்றுபட்ட நடவடிக்கைக்கு அழைப்பு விடுத்தனர். சீர்திருத்தப்பட்ட ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராவதற்கு இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிக்கு ஐக்கிய அரபு அமீரகம் ஆதரவளித்தது.

2023 செப்டம்பர் 9, 10 ஆகிய தினங்களில் புதுதில்லியில் நடைபெறும் ஜி20 தலைவர்கள் உச்சிமாநாட்டில் ஷேக் முகமது பின் சயீத் அல் நஹ்யான் பங்கேற்பதை பிரதமர் மோடி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

இதுஇவ்விதமிருக்க, பிரதமர் மோடியின் ஐக்கிய அரபு அமீரக விஜயத்தை முன்னிட்டு அவரை வரவேற்கும் வகையில் அவரது உருவம் மற்றும் மூவண்ணக்கொடி ஆகியவை துபாயின் புர்ஜ் கலிஃபாவில் ஒளிர்ந்தன. புர்ஜ் கலிஃபா கட்டடத்தில் ஒளிர்ந்த மோடி மற்றும் இந்திய தேசியக்கொடியின் படம் சமூகவலைத்தளங்களில் வைரலாகியது.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.07.20
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5181 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 24,466,256.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 2 9 8 3 3 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3423 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,664,564.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 05 35 51 77

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1211 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,860,685.60
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 15 20 21 71 — விசேட எழுத்து K

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1529 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 401,698,996.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 02 — வெற்றி இலக்கங்கள் 14 28 47 57
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

Lucky 7 லக்கி — சீட்டிழுப்பு இலக்கம் 0007
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 1 3 8 2 2 1
L7 இலக்கம் 0 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 490 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,607,505.40
வெற்றி இலக்கினம் ரிஷபம் — வெற்றி இலக்கங்கள் 12 23 46 50 — விசேட இலக்கினம் ரிஷபம்

# ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## வெற்றிடங்கள்

**பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### 01. கணக்காளர் பதவி (POST OF ACCOUNTANT)

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்** : ACA, ACCA அல்லது ACMA சகிதம் தகைமைக்குப் பின்னரான 03 வருட அனுபவம்

அல்லது

10 வருட அனுபவம் சகிதம் இலங்கை கணக்காளர் சேவையின் 1ஆம் தர அங்கத்தவர். வைத்தியசாலை அல்லது இதற்கு நிகரான சூழலில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**வயது** : 45 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : SL1 தரம் 1
ரூபா 102,810 – 16 x 2,930 – 149,690/- மாதாந்தம்

**வேலை விபரங்கள்** : இந்தப் பதவிக்கு முடிவு சார்ந்த, தன்னம்பிக்கை ஆளுமை தேவை. அவர் வைத்தியசாலையின் நிதிச் செயற்பாடுகள், கணக்கியல், வரவு செலவுத் திட்டம், நிதி திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் மற்றும் களஞ்சியசாலை முகாமைத்துவத்திற்குப் பொறுப்பாக இருப்பார்.

### 02. உதவிக் கணக்காளர் பதவி (POST OF ASSISTANT ACCOUNTANT)

**கல்வித் தகைமை மற்றும் அனுபவம்** : 05 வருட அனுபவம் சகிதம் CIMA Operational நிலை / ACCA அடிப்படை நிலை/ CA வின் Cab 11

அல்லது

இலங்கை கணக்காளர் சேவையின் IIஆம் தரம்

**வயது** : 30 வயதிற்குக் குறைவானவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : SL1 தரம் II
ரூபா 84,480 – 7 x 2200 – Rs.99,880/-

### 03. நிர்வாக அதிகாரி பதவி (POST OF ADMINISTRATIVE OFFICER)

சுகாதார சேவையில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் செயற்பாடு மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தரம் I அல்லது II முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அனுபவத்தைக் கொண்ட அதிகாரிகளிடமிருந்து நிர்வாக அதிகாரி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் மற்றும் அனுபவம்** :

அ) i. தரம் 1 முகாமைத்துவ உதவியாளர் சேவையில் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (சுகாதார சேவை விரும்பத்தக்கது)

அல்லது

ii. 08 வருடத்திற்குக் குறையாத செயற்பாடு மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள தரம் II அதிகாரியாகவிருத்தல் வேண்டும். (சுகாதார சேவை விரும்பத்தக்கது)

அல்லது

iii. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றைப் பெற்றுள்ள தரம் II அதிகாரியாகவிருத்தல் வேண்டும். (சுகாதார சேவை விரும்பத்தக்கது). (மனிதவள முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வியாபார நிர்வாகத்தில் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்)

ஆ) பதவியுயர்வு திகதிக்கு முன்னராக ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (சுகாதார சேவை விரும்பத்தக்கது)

இ) உள்வாரி விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் சிறப்புத் தர (Supra Grade) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் மற்றும் மேற்கூறப்பட்ட மூலப் பிரமாணங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**வயது** : 35 வயதிற்குக் குறைவானவர்களாகவும் மற்றும் 50 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**சம்பள அளவு** : சம்பளக் குறியீடு MN 7 – (2016)
சம்பள அளவு ரூபா 56,135 – 11 x 1,020 – 18 x 1,390 – 92,375/=

**வேலை விபரங்கள்** : சிறந்த அலுவலக நடைமுறை மற்றும் முறைமையில் சம்பந்தப்பட்ட பணியாளரின் அறிவு, நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான ஸ்தாபன அரசின் கொள்கையின் தற்போதைய சுற்றுநிருப அறிவுறுத்தல்கள் மற்றும் விதிகள் பற்றிய அறிவு.

### 04. உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவி (POST OF BIO MEDICAL ENGINEER)

**தகைமைகள் மற்றும் அனுபவம்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் / பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட (மின்னணு / மின்சாரம்/ இயந்திரவியல் / உயிரியல் மருத்துவ பொறியியல்) பொறியியல் இளநிலைப் பட்டம். (B.Sc. Engineering) மற்றும் 10 வருடகால அனுபவம்.

அல்லது

12 வருடகால அனுபவம் சகிதம் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இதற்கு நிகரான வேறு ஏதாவது தொழில்சார் தகைமைகள்.

விண்ணப்பதாரர் பின்வரும் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- வைத்தியசாலையில் மருத்துவ உபகரணங்களைப் பராமரித்தல்
- அளவுப் பத்திரங்களைத் தயாரித்தல்
- அத்தியாவசிய உதிரிப் பாகங்களை முறையாகப் பராமரித்தல்
- ஏனைய துணை தொழில்நுட்ப நிபுணர்களின் பயிற்சி.

**வயது** : 25 வயதிற்குக் குறையாதவர்களாகவும் மற்றும் 40 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : **SL 1 Grade 11**
ரூபா **84,480 – 7 x 2200 – Rs.99,880/-**

### 05. கண் தொழில்நுட்பவியலாளர் பதவி (POST OF OPTHALMIC TECHNOLOGIST)

**தகைமைகள்** : இலங்கை கண் தொழில்நுட்பவியல் பாடசாலையில் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் மூன்று (03) வருட அனுபவம் சகிதம் இலங்கை மருத்துவப் பேரவையில் கண் தொழில்நுட்பவியலாளராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 43310 - 10x600 – 49,310/- மாதாந்தம்.

### 06. மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் (POST OF MEDICAL LABORATORY TECHNOLOGIST)

**தகைமைகள்** : ஒரு வருடகால அனுபவம் சகிதம் வெளிநாட்டில் அல்லது இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியல் பட்டம் மற்றும் இலங்கை மருத்துவப் பேரவையில் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

சுகாதாரத் திணைக்களத்தின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பாடசாலையினால் வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழ் அல்லது 03 வருட அனுபவம் சகிதம் இதற்குச் சமமான சான்றிதழ் மற்றும் இலங்கை மருத்துவ பேரவையில் பதிவு செய்திருதிருத்தல்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 43310 - 10x600 – 49,310/- மாதாந்தம்.

### 07. இருதயதுடிப்பு வரைபடவியலாளர் பதவி (POST OF CARDIOGRAPHER)

**தகைமைகள்** : இலங்கை சுகதார அமைச்சினால் நடாத்தப்படும் பாடசாலையினால் வழங்கப்பட்ட Cardiography டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது அதற்குச் சமமான Cardiography சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருடகால அனுபவம் சகிதம் இலங்கை மருத்துவப் பேரவையில் Cardiographer ஆக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 42105/- 10 x600 – 48,105/- மாதாந்தம்.

### 08. மருந்தாளர் பதவி (POST OF PHARMACIST)

**தகைமைகள்** : செயற்றிறன் மருந்தாளராக / நிபுணத்துவ சான்றிதழ் / மருந்தியல் பாடசாலையில் பெற்றுக்கொண்ட டிப்ளோமா சான்றிதழ் மற்றும் மூன்று (03) வருடகால அனுபவம் சகிதம் இலங்கை மருத்துவப் பேரவையில் மருந்தாளராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

ஒரு (01) வருட கால அனுபவம் சகிதம் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட மருந்தியலாளர் பட்டம் மற்றும் அரசாங்க மருத்துவ பேரவையில் மருந்தாளராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 43310 - 10x600 – 49,310/- மாதாந்தம்.

### 09. பேர்பியூனிஸ்ட் பதவி (POST OF PERFUSIONIST)

**தகைமைகள்** : ஒரு (01) வருட கால அனுபவம் சகிதம் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட உயிரியல் மருத்துவப் பட்டம் மற்றும் அரசாங்க மருத்துவ பேரவையில் Perfusionist ஆக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 30 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 45 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 45 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 46715 - 10x890 - 55615/= மாதாந்தம்.

### 10. கதிரியக்கவியலாளர் (POST OF RADIOGRAPHER)

**தகைமைகள்** : இலங்கை கதிரியக்கவியல் பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மற்றும் மற்றும் மூன்று (03) வருடகால அனுபவம் சகிதம் இலங்கை மருத்துவப் பேரவையில் கதிரியக்கவியலாளராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கதிரியக்கவியல் பட்டம் மற்றும் ஒரு (01) வருட கால அனுபவம் சகிதம் அரசாங்க மருத்துவ பேரவையில் கதிரியக்கவியலாளராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 43,310 - 10 x 600 - 49,310/= மாதாந்தம்.

### 11. உடற்கூறு பயிற்சி சிகிச்சையாளர் (POST OF PHYSIOTHERAPIST)

**தகைமைகள்** : இலங்கை உடற்கூறு பயிற்சிப் பாடசாலையிலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் மற்றும் மற்றும் மூன்று (03) வருடகால அனுபவம் சகிதம் இலங்கை மருத்துவப் பேரவையில் உடற்கூறு பயிற்சி சிகிச்சையாளராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

இலங்கையில் அல்லது வெளிநாட்டில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட உடற்கூறு பயிற்சியாளர் பட்டம் மற்றும் ஒரு (01) வருட கால அனுபவம் சகிதம் அரசாங்க மருத்துவ பேரவையில் உடற்கூறு பயிற்சி சிகிச்சையாளராகப் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**வயது** : 50 வயதிற்குக் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். 50 வயதிற்குக் குறைவான விண்ணப்பதாரிகள் இல்லாதபட்சத்தில் 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்வதற்கு கவனத்திற் கொள்ளப்படுவர்.

**சம்பளம்** : ரூபா 43,310 - 10 x 600 - 49,310/= மாதாந்தம்.

### 12. நூலக உதவியாளர் பதவி (POST OF LIBRARY ASSISTANT)

**கல்வித் தகைமைகள் அனுபவம்** : நூலக விஞ்ஞான பாடம் சகிதம் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம்

அல்லது

நூலக வேலைகளில் 03 வருட கால அனுபவம் சகிதம் இலங்கை நூலகர் சங்கத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது** : 35 வயதிற்கு மேற்படாதவர்களாகவிருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : சம்பளக் குறியீடு **MN 4 – (2016)** தரம் **III**
ரூபா 42,510-10X600- Rs.48,510/-

### 13. கட்டிட முதன்மைவேலையாளர் பதவி (POST OF BUILDING FOREMAN)

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த. சா/த பரீட்சையில் எண்கணிதத்தில் "C" சித்தி க.பொ.த. உ/த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழில்சார் தகைமைகள்** : இயைபுடைய துறை தொடர்பில் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா / Foreman பயிற்சி நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் / சிவில் பொறியியல் டிப்ளோமா/ நிலச்சீராக்க டிப்ளோமா/ அல்லது அதற்குச் சமமான சிவில் பொறியியல்.

**அனுபவம்** : பின்வரும் துறைகளில் கட்டிடப் நிர்மாணம், பராமரிப்பு மற்றும் மேற்பார்வையில் 05 வருட கால அனுபவம்

- கூரைக் கட்டமைப்பு பராமரிப்பு
- நீர்க்குழாய் வேலை பராமரிப்பு
- தரைவிரிப்பு மற்றும் மேசன் வேலைகள்
- அலுமினிய கட்டுருவாக்கம் மற்றும் வேல்டிங் வேலைகள்
- அளவுப் பத்திரம் மற்றும் திட்டங்களை வரைவதில் அனுபவம்
- 'Auto Cad' அல்லது அதற்கு நிகரான கணனி அடிப்படை மென்பொருளில் நிரூபிக்கப்பட்ட அறிவு

நூலக வேலைகளில் 03 வருட கால அனுபவம் சகிதம் இலங்கை நூலகர் சங்கத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது** : 25 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவர்களா கவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : சம்பளக் குறியீடு **MN 7 – (2016)**
ரூபா 56,135/- 11 x 1020 – 18 x 1390 – Rs.92,375/-

### 14. சமையலாளர் பதவி (POST OF CHEF)

**கல்வித் தகைமைகள்**: (அ) க.பொ.த. சா/த பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
i. சிங்களம் / தமிழ்
ii. ஆங்கில மொழி
iii. எண்கணிதம்

மற்றும்

(ஆ) க.பொ.த. உ/த பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது வினாத்தாள் தவிர்த்து) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(இ) ஹோட்டல் முகாமைத்துவம், ஹோட்டல் செயற்பாடுகள், விருந்தோம்பல் முகாமைத்துவம் அல்லது அதற்கு இணையான ஏனைய கற்கைநெறிகளில் ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான முழு நேரப் படிப்பை முறையாக சான்றிதழ்களால் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல் பாடசாலையில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ஈ) அரசாங்கத் திணைக்களம் அல்லது பொதுக் கூட்டுத்தாபனத்தில் இயைபுடைய துறையில் 05 வருடங்கள் அனுபவம்.

**வயது** : 35 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : சம்பளக் குறியீடு **MN 1 – (2016)** தரம் **III**
ரூபா 36,640 – 10 x 405 – Rs.40,690/-

### 15. உணவு பரிசாரகர் பதவி (POST OF DIET STEWARDESS)

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த. சா/த பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் எண்கணித பாடங்கள் உட்பட நான்கு திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**வயது** : 25 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : உணவுப் பரிசாரகராக 03 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் கீர்த்தி வாய்ந்த நிறுவனத்தில் இதற்கு நிகரான பதவி

**சம்பளம்** : சம்பளக் குறியீடு **MN 1 – (2016)** தரம் **III**
ரூபா 36640 – 10 x 405 – 40,690/-

### 16. தொலைபேசி இயக்குநர் பதவி (POST OF TELEPHONE OPERATOR)

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த. சா/த பரீட்சையில் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழில்சார் தகைமைகள்** : மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட N.V.Q 2ஆம் நிலை அல்லது 3ஆம் நிலையில் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : கீர்த்தி வாய்ந்த நிறுவனத்தில் தொலைபேசி இயக்குநராக மூன்று (03) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**வயது** : 22 வயதிற்கு குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : சம்பளக் குறியீடு **PL 2 – (2016)** தரம் **III**
ரூபா 34,090 - 10x365- 37,740/-

### 17. கொதிகலன் இயக்குநர் பதவி (POST OF BOILERMEN)

**கல்வித் தகைமைகள்** : க.பொ.த. சா/த பரீட்சையில் இரண்டு (02) பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஆறு பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**தொழில்சார் தகைமைகள்** : மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இயைபுடைய பதவி தொடர்பில் தேசிய வாழ்தொழில் தகைமைத்திறனில் 4ஆம் நிலையில் (NVQ 4) தொழில்நுட்பம் / தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க நிறுவனமொன்றில் தொடர்புடைய கடமையில் 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

**வயது** : 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பளம்** : ரூபா 34,815-10x365-38,465/-

### பொதுவான நிபந்தனைகள்

**வேலைவாய்ப்பின் நியதிகள்** :

1. நிரந்தரம் / ஒப்பந்தம் மற்றும் சேமநல நிதி அடிப்படையில்.
2. சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனக் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2023 ஆகஸ்ட் 07ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுயதரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

**2023-07-17.**

## சுகாதார அமைச்சு

### இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

SPMC

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### சர்வதேச போட்டி ரீதியான விலை கோரல் - (ICB)

### அட்டைப்பெட்டி பொதியிடும் இயந்திரம் சகிதம் புத்தம் புதிய குமிழ் பொதியிடல் (Blister Packing Machine with Carton Packing Machine) இயந்திரமொன்றை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பயிற்சி வழங்குதல்

**கேள்வி இல: SPMC/PD/05/2023 - 2023-08-15ஆம் திகதி முடிவுறுத்தப்படும்**

1. இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழுவின் தலைவரினால் 2023-08-15ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை அட்டைப்பெட்டி பொதியிடும் இயந்திரம் சகிதம் புத்தம் புதிய குமிழ் பொதியிடல் இயந்திரமொன்றை அது சார்ந்த பயிற்சியுடன் வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | பொருள் | மீள் செலுத்தப்படாத கேள்விக் கட்டணம் |
|---|---|---|
| 1 | அட்டைப்பெட்டி பொதியிடும் இயந்திரம் சகிதம் புத்தம் புதிய குமிழ் பொதியிடல் (Blister Packing Machine with Carton Packing Machine) இயந்திரமொன்றை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பயிற்சி வழங்குதல் | ரூபா 10,000.00 |

2. முழுத் தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளிலான விலைமனுக்களை வெவ்வேறாக ''தலைவர், பெறுகைக் குழு, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம், இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவல எஸ்டேட், இரத்மலானை இலங்கை'' எனும் முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11, இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் தரை தளத்தில் வைக்கப்பட்டுள் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
3. கீழ் காணும் ஆவணங்களை ஒப்படைப்பதன் மூலம் 2023 ஜுலை 24ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 14ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
   - இலங்கை இரத்மலானை, கந்தவல எஸ்டேட், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இல. 11இல் அமைந்த அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் கொள்வனவு அவர்களுக்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.
   - மீளளிக்கப்படத மேற்கூறப்பட்ட கேள்விக் கட்டணத்தை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் கணக்குப் பிரிவிற்கு செலுத்தல்
4. விலைமனுக்கள் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் உடன்பாடுகளினால் நிர்வாகிக்கப்படுவதுடன் கேள்விதாரர் சார்பில் விலைமனுதாரர் ஒரு முகவரை, உப முகவரை, பிரதிநிதியை, நியமிக்கப்பட்டவரை அமர்த்துவதாயின் பொது ஒப்பந்தச் சட்டத்தின் (PCA) 10ஆம் பிரிவின் பிரகாரம் அவ்வாறான பொது ஒப்பந்தத்துக்காக தன்னைப் பதிவு செய்துகொள்ள வேண்டியதுடன் கேள்வியின் எத்தருணத்திலும் கொடுக்கல் வாங்கல்களின் போது செல்லுபடியாகும் அவ்வாறான பதிவுத் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
5. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023 ஆகஸ்ட் 02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் விலைமனுதாரர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் அட்டைப்பெட்டி பொதியிடும் இயந்திரம் சகிதம் குமிழ் பொதியிடல் இயந்திரம் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அன்றைய தினமே அமைவிடத்திற்கான விஜயம் மற்றும் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்.
6. விலைமனுக்கள் ஏற்கப்படும் நேரம் முடிவடைந்தவுடன் இரத்மலானை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன் அத்தருணத்தில் சமுகந்தர விலைமனுதாரர் அல்லது அவரது அங்கீகாரம் வழங்கப்பட்ட முகவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
7. விலைமனு ஆவணங்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
8. மேலதிக தகவல்களை அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் பிரதிப் பொது முகாமையாளர் - உற்பத்திகள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல.: 0112-637574)
   ''விலைக்கோரல் தகவல்கள்'' தொடர்பான விபரங்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம். (www.spmclanka.lk)

**தலைவர் - பெறுகைக் குழு,**
**அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவல எஸ்டேட், இரத்மலானை, இலங்கை.**

**தொலைபேசி இல.** : **(00)94-11-2635353/(00)94-11-2637574/(00)94-11-2623298**
**மின்னஞ்சல்** : **spmclanka@sltnet.lk**
**இணையதளம்** : **www.spmclanka.lk**

## பஸ் பகிரங்க ஏலத்தில் விற்பனை

### மட்டுப்படுத்தப்பட்ட காத்தான்குடி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்

மேற்படி சங்கத்திற்கு சொந்தமான Lanka Ashok Leyland EP-JN 7456ம் இலக்க 59 ஆசனங்களை கொண்ட பஸ் பகிரங்க ஏலத்தில் எதிர்வரும் 19.08.2023ம் திகதி சனிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்பட உள்ளது. மேலதிக தகவலுக்கு கீழ் காட்டப்படும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**காரியாலயம்: 065-2245629**
**தலைவர்: 0776681914**
**பொது முகாமையாளர்: 0771177748**

## சிறுநீரகமொன்று தேவை

A+ அல்லது O+ இரத்த வகுதியுடைய சிறுநீரகமொன்றை வழங்குவதற்கு ஒருவர் தேவை. அனைத்து செலவுகள் மற்றும் பணமும் வழங்கப்படும்.

**0766630530**
**0112866371**

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

SLNA

## புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

### தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்

## கொள்கை வரைவு மீதான சமர்ப்பணங்களுக்கான அழைப்பு

காப்பகங்கள் மற்றும் பதிவுகள் முகாமைத்துவத்துக்கான தேசியக் கொள்கை வரைவு மீதான பொது சமர்ப்பணங்களுக்கான அழைப்பை வெளியிடுவதில் தேசிய சுவடிக்கூடத் திணைக்களம் மகிழ்ச்சியடைகிறது. எங்கள் காப்பகங்கள் மற்றும் பதிவுகளின் முகாமைத்துவம், பேணுகை மற்றும் அணுகல் ஆகியவற்றை வழிநடத்தும் கொள்கையைத் தயாரித்தல் தொடர்பில் உங்கள் நோக்குநிலையை நாங்கள் மதிக்கிறோம்.

ஆய்வாளர்கள், காப்பக வல்லுநர்கள், பதிவு முகாமையாளர்கள் மற்றும் பொது மற்றும் தனியார் துறைகளில் பதிவுசெய்தல் நடைமுறைகளில் ஆர்வமுள்ள மற்றும்/ அல்லது பாதிக்கப்பட்ட அனைத்து குடிமக்களும் நமது நாட்டில் காப்பகங்கள் மற்றும் பதிவுகள் சார் நிர்வாகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் இந்த தனித்துவமான வாய்ப்பில் பங்கேற்க ஊக்குவிக்கிறோம்.

www.archives.gov.lk எனும் இணையதளத்துக்கு சென்று, வரைவு கொள்கை மற்றும் சமர்ப்பிப்பு வடிவத்தைப் பதிவிறக்கம் செய்து கொள்ளமுடியும். அல்லது, கொழும்பில் உள்ள எங்கள் தலைமை அலுவலகம் அல்லது கண்டியில் உள்ள கிளை அலுவலகத்திற்கு வருகையளித்து, அதன் அச்சிடப்பட்ட பிரதியை பெற்றுக்கொள்ளலாம்.

சமர்ப்பிப்புக்கான இறுதித்திகதி: 07.08.2023

**தேசிய சுவடிகள் காப்பக பணிப்பாளர் நாயகம்**

**தலைமை அலுவலகம் -**
இல. 7, பிலிப் குணவர்தன மாவத்தை,
கொழும்பு 7. (011 2671042)

**கிளை அலுவலகம் -**
இல. 4/6, ஹேமமாலி மாவத்தை,
கண்டி (081 2223729)

NITF

## நிதி அமைச்சு

### தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்

## விலைக்கோரலுக்கான அழைப்பு

**(சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல்)**

### 01/10/2023 முதல் 31/12/2024 வரையான காலத்திற்கு செயற்பாட்டு சேவைகளுக்கான பொறுப்பு மதிப்பீடு மற்றும் ஏனைய சேவைகளுக்கான பெறுகை

**NITF/ADMIN/COM/AV/2023/0001**

NITF 2006ஆம் ஆண்டு 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி சட்டத்தால் நிறுவப்பட்டது, அதனைத் தொடர்ந்து 2007ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதி (திருத்தம்) சட்டத்தால் திருத்தப்பட்டது. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்பட்டவராகவும் மற்றும் பதிவு செய்யப்பட்ட / உரிமம்பெற்ற பொதுக் காப்புறுதி சேவை வழங்குநராக NITF கருதப்படுகின்றது. NITF நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் பங்களிப்பு காப்புறுதித் திட்டங்கள் மூலம் எதிர்பாராத உடல்நல இடர்கள், தனிப்பட்ட விபத்துகள் மற்றும் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களுக்கு எதிராக நன்மைகள் மற்றும் பாதுகாப்பை NITF வழங்குகின்றது. NITF அக்ரஹார மருத்துவ காப்புறுதித் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம், பொதுவான காப்புறுதித் திட்டங்கள், இலங்கையில் பொது காப்புறுதியாளர்களுக்கு 30% கட்டாய மீள் காப்புறுதி மற்றும் வேலை நிறுத்தங்கள், கலவரங்கள், சிவில் கலவரங்கள், மற்றும் பயங்கரவாத நிதியத்தின் சட்ட பாதுகாப்பு என்பவற்றை செயற்படுத்தியுள்ளது.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி நடைமுறையின் கீழ் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் ஆலோசகர் நிறுவனங்களிலிருந்து விலைக்கோரல்கள் அழைக்கப்படுகின்றன. ஒரு கணக்கியல் நிறுவனத்தின் கூட்டமைப்பு மற்றும் ஒரு சட்ட நிறுவனத்துடன் அனுமதிக்கப்படுகின்றது.

2023 செப்டெம்பர் 01ஆம் திகதி வரை, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவு மூலம் மீளளிக்கப்படாத விலைக்கோரல் கட்டணமான 15,000.00 இலங்கை ரூபா அல்லது 50 US டொலரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருத்தமான வங்கிக் கணக்குகளுக்குச் செலுத்தியதன் பின் தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், 4வது மாடி, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2 எனும் முகவரியிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணங்களை 09:00 மணித்தியாலம் முதல் 15:00 மணித்தியாலம் வரை வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை NITF (www.nitf.lk), நிதி அமைச்சு (www.treasury.gov.lk), அல்லது வெளிநாட்டு விவகார அமைச்சு (www.mfa.gov.lk) என்பவற்றின் இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். விலைமனுக்களுடன் மீளளிக்கப்படாத கட்டணம் செலுத்திய வங்கி வரைவைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

- ❖ விலைமனுதாரர்கள் விலைமனுக்களுடன் மீளளிக்கப்படாத கட்டணத்திற்கான வைப்புச் சீட்டை இணைத்தல் வேண்டும். இது இணைக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| | இல. ரூபாவுக்கான வங்கிக் கணக்கு | USD க்கான வங்கிக் கணக்கு |
|---|---|---|
| வங்கியின் பெயர் | மக்கள் வங்கி | மக்கள் வங்கி |
| கிளை | தலைமையலுவலகம் | தலைமையலுவலகம் |
| கணக்கின் பெயர் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் | தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம் |
| கணக்கிலக்கம் | 033-1001-0-0000061 | 033-4-022-3-2467951 |
| **Swift Code** | PSBKLKLX | PSBKLKLX |

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடித உறையில் உள்ளிட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''01/10/2023 முதல் 31/12/2024 வரையான காலத்திற்கு செயற்பாட்டு சேவைகளுக்கான பொறுப்பு மதிப்பீடு மற்றும் ஏனைய சேவைகளுக்கான பெறுகை" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு 2023 செப்டெம்பர் 04ஆம் திகதி பி.ப. 2.00 மணி இலங்கையின் நிலையான நேரத்திற்கு முன் கிடைக்கும் வகையில் ஒன்றில் நேரில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது கூரியர் சேவை மூலம் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 04ஆம் மாடி, தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம், திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

செயற்பாட்டு நிறுவனங்கள் அல்லது உத்தியோகபூர்வ அங்கீகாரக் கடிதத்துடனான அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் சமுகத்துடன் கொழும்பு 02, இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, 4ஆம் தளத்திலுள்ள தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் சபை அறையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். கூட்டத்தில் விலைமனுதாரர்களின் பெயர்கள் மற்றும் விலைகளை NITF அறிவிக்கும்.

கடித மொழிமூலம் ஆங்கிலமாகும். எவ்வாறாயினும் மேற்படி ஆவணங்கள் ஆங்கிலம் தவிர்ந்த வேறு ஏதேனும் மொழியில் இருந்தால் அத்தகைய ஆவணங்களுடன் சான்றளிக்கப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பும் இருத்தல் வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு இறுதியாகக் கருதப்படும் என்பதுடன் வழங்கப்பட்ட தகவல்களை விளக்குவதற்குப் பயன்படுத்தப்படும்.

சகல விலைமனுதாரர்களும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாளிலிருந்து ITB படிவத்தில் தரப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் 105 நாட்களுக்கான விலைக்கோரல் பிணை முறியை வழங்குதல் வேண்டும்.

ஆர்வமுள்ள தரப்பினர் பின்வரும் நபர்களைத் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்கொள்ள வேண்டிய நபர்** : **முகாமையாளர் - நிர்வாகம் மற்றும் மனிதவளம்**
**நேரடி தொலைபேசி** : **+94 112026699**
**செல்லிடப் பேசி** : **+94 777328460**
**தொலைநகல்** : **+94 112338778**
**மின்னஞ்சல்** : **lasantha@nitf.lk**

NITF

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியம்,**
**இல. 95, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02.**
**இலங்கை.**

**கைத்தொழில் அமைச்சு - ஆரம்பக் கைத்தொழில் பிரிவு**

Lanka Phosphate Limited

## இலங்கை பொஸ்பேற் லிமிடெட்

**விலைக்கோரல் குறியீட்டிலக்கம்: LPL/SUP-HO/FI-BID/2023/02**

## முன்மொழிவுகளுக்கான வேண்டுகோள் (RFP)

### எப்பாவல - இலங்கை பொஸ்பேற் லிமிடெட் கூரையில் பொருத்தும் GRID TIED NET - PULS சூரிய சக்தி முறைமைக்கு கூரையை வாடகைக்கமர்த்துதல் மற்றும் முதலீட்டு பங்குதாரர்களுக்கான உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முன்மொழிவுகள்

2023 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை எப்பாவல இலங்கை பொஸ்பேற் லிமிடெட் தொழிற்சாலைக்குச் சொந்தமான கட்டிடங்களில் கூரையின் மேல் Solar PV முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு, வாடகைக்கமர்த்துவதற்காக புகழ்பெற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார்களிடமிருந்து முன்மொழிவுகள் (RFP) அழைக்கப்படுகின்றன.

முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான ஆவணங்களை 2023 ஜுலை 24ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2023 ஆகஸ்ட் 14ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையான அலுவலக வேலை நேரங்களில் கொழும்பு-14, இல. 73/1/1, புதிய களனி பால வீதி, இலங்கை பொஸ்பேற் லிமிடெட், நிதி முகாமையாளர் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். மீளளிக்கப்படாத கட்டணமாக 3000.00 இல. ரூபாவை ரொக்கப் பணமாக இலங்கை பொஸ்பேற் லிமிடெட் நிதி / கணக்குப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

வளமுள்ள முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பவர்களுக்கான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023 ஆகஸ்ட் 14ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு எப்பாவல தொழிற்சாலையில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதுடன் அதே நாளில் மு.ப. 10.00 மணி முதல் 2.00 மணி வரையில் வளமுள்ள முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பவர்களுடனான தள விஜயமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வளமுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் தங்கள் முன்மொழிவுகளை 2023 ஆகஸ்ட் 21ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை), இலங்கை பொஸ்பேற் லிமிடெட், எப்பாவல எனும் முகவரிக்கு சமர்ப்பிக்கலாம். சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகள் முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைமனுக்களை ஒப்படைத்தல் அல்லது விலைமனுக்களைத் தயாரிப்பது தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்பட்ட எவ்வித செலவுகள் அல்லது கிரயத்திற்கு இலங்கை பொஸ்பேற் லிமிடெட் பொறுப்பு கூற மாட்டாது.

விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பின்வரும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக தொடர்புகொண்டு இலங்கை பொஸ்பேற் லிமிடெட், வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112-459906/7, 025-2249647) அல்லது supply@lpl.lk எனும் மின்னஞ்சல் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (மேல்நிலை),**
**இலங்கை பொஸ்பேற் லிமிடெட்,**
**இல. 73/1/1, புதிய களனி பால வீதி,**
**கொழும்பு 14.**

**2023 ஜுலை 23ஆம் திகதி**

www.adz.lk
it's what you want

# கட்டுமான கைவினைஞர்களுக்கான தேசிய கைவினை அடையாள அட்டை வழங்குதல் மற்றும் திறமையான கைவினைஞராக கட்டுமானத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்தல்.

2014 இலக்கம் 33 கீழ் கட்டுமானத் தொழில் அபிவிருத்தி சட்டத்தின் படி திறமையான கட்டுமானத் தொழிலாளர்களின் அறிவு, திறன்கள் மற்றும் தொழில்முறை அணுகுமுறைகளைப் பரிசீலனைசெய்து கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல் மற்றும் அவர்களின் தகவல்களை பராமரிக்கும் நோக்கத்துடன், திறமையான கட்டுமானத் தொழிலாளர்கள் என்ற அடிப்படையில் 27 துறைகளின் வகைப்படுத்தப்படுகிறார்கள் "பிரதான கட்டுமான கைவினைஞர்கள்" மற்றும் "கட்டுமானத் கைவினைஞர்கள்" என 2 முக்கிய பிரிவுகளின் கீழ் தனித்தனியாக பின்வரும் திறன் தரத்திற்காக தொழில்நுட்ப அடையாள அட்டை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**கட்டுமானத் கைவினைஞர்கள்**

- MSN கட்டுமானத் கைவினைஞர் (கொத்தனார்) (Construction Craftsman (Masonry))
- WCB தச்சுவேலை (கட்டிடம்) (Wood Craftsman (Buildings))
- WCF தச்சுவேலை (தளபாடம்) (Wood Craftsman (Furniture))
- TIL டைல் நிறுவுனர் (Tile Layer)
- PNT வர்ண பூசுபவர் (கட்டிடம்) (Painter (Buildings))
- ELC மின் வல்லுநர் (Electrician)
- PLB குழாய் பணியாளர் (Plumber)
- BBD கம்பி வளைக்கும் வல்லுநர் (Bar Bender)
- WLD ஒட்டுனர் (Welder)
- ALF அலுமினியம் கட்டமைத்தல் (Aluminum Fabricator)
- OTH வேறு (Other)

**கட்டுமான இயந்திர தொழில்நுட்ப வல்லுநர்கள்**

- CEM கட்டுமான இயந்திர வல்லுநர் (Construction Equipment Mechanic)

**கட்டுமான இயந்திரங்களை இயக்குபவர்**

- LE இலகு கட்டுமான இயந்திரம் இயக்குபவர் (Light Equipment Operator)
- T ட்ரக்டர் இயக்குபவர (Tractor Operator)
- SPVR தன்னியக்க அதிர்வு உருளை இயந்திரம் இயக்குபவர் (Self-propelled Vibrator Roller Operator)
- BL பெக்கோலோடர் இயந்திரம் இயக்குபவர் (Backhoe Loader Operator)
- WL வீல்லோடர் இயந்திரம் இயக்குபவர் (Wheel Loader Operator)
- HE ஹைரோலிக் இயந்திரம் இயக்குபவர் (Hydraulic Excavator Operator)
- MG மோட்டர் கிரைன்டர் இயக்குபவர் (Motor Grader Operator)
- CT கிரவல் ட்ரக் இயக்குபவர் (Crawler Tractor Operator)
- MC நடமாடும் கிரேன் இயக்குபவர் (Mobile Crane Operator)
- DT ட்ரம்ப் ட்ரக் இயக்குபவர் (Dump Truck Operator)
- FLT போர்க்லிப்ட் ட்ரக் இயக்குபவர் (Forklift Truck Operator)
- PT இயந்திரகளை இடமாற்றும் இயக்குனர் (Plant Transporter Operator)
- SSL ஸ்கிட் ஸ்டையர் லோடர் (Skid Steer Loader Operator)
- TMC ட்ரக் இணைப்பு கிரேன் இயக்குபவர் (Truck Mounted Crane Operator)
- OTH වෙනත් (Other)

**திறமையான கட்டுமான கைவினைஞர்களாகப் பதிவு செய்யும் உங்களுக்காக**

- ❖ உலகளாவிய தேவைகளுக்கு ஏற்ப வலுவூட்டல் மூலம் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை அணுகுதல்.
- ❖ திறமையான கைவினைஞராக சமூக அங்கீகாரம் பெறுதல்.
- ❖ தொழில்முறை தரத்தை மேம்படுத்துதல்.
- ❖ அதிக உற்பத்தி மற்றும் தரம் வாய்ந்த திறமையான பணியாளர்களின் ஒரு அங்கம் வகிப்பதற்கான வாய்ப்பு.

**பதிவுக்காக விண்ணப்பிக்க தேவையான தகைமைகள்**

- ❖ 18 வயதுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும்.
- ❖ ஆண்/பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.
- ❖ தேசிய தொழில் திறன் தகுதி (NVQ) சான்றிதழ் மற்றும் அனுபவம். (NVQ இல்லாத கைவினைஞர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.)
- ❖ அரச/தனியார் நிறுவனங்களில் அல்லது சுயமாக கட்டுமானத் துறையில் பணிபுரிபவர்கள்.

**தேர்வு செய்யப்படும் முறை**

விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு அடிப்படைத் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உங்கள் துறைத் திறன்களை மதிப்பிடுவதற்கான திறன் பரீட்சைக்கு (Skills Test) உட்படுத்தப்படுவீர்கள்.

**அனுகூலங்கள்**

- ❖ உங்கள் அனுபவம் மற்றும் அனைத்து தகவல்களுடன் QR குறியீட்டுடன் தேசிய கட்டுமான கைவினைஞர் அடையாள அட்டையை வழங்குதல்.
- ❖ கட்டுமானத் துறையில் உங்களைப் பற்றிய தொழில்முறைத் திறனை அங்கீகாரத்தை அபிவிருத்தி செய்தல்.
- ❖ உங்கள் பதிவு தொடர்பான தகவலை CIDA இணையதளத்தில் உள்ளிடுவதன் மூலம், உங்கள் சேவையைப் பெற விரும்பும் தரப்பினர் உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள உதவுகிறது.
- ❖ பதிவு செய்யப்பட்ட கட்டுமானத் கைவினைஞர்களை அடையாளம் கண்டு கட்டுமானப் பணிகளில் ஈடுபடுவதை உறுதி செய்தல்.

**NVQ சான்றிதழ் பெற்றுக்கொடுத்தல்**

NVQ சான்றிதழ்கள் இல்லாத கைவினைஞர்களுக்காக முன் அறிவுடன் சான்றளிக்கப்பட்ட RPL (Recognition of prior learning) முறையின் கீழ் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**விசாரணைகள்** ஏ.ஏ. லத்தீப் அவர்கள் : 011-3119002 / 070-2731990

**நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA)**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

"செவ்சிரிபாய" இல-123, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைபேசி : 011-2699801, 011-2695965, 011-2686092 பெக்ஸ் : 011-2699737
மின்னஞ்சல் : cidatraining@gmail.com இணையம் : www.cida.gov.lk

---

## மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்
## கொழும்பு பல்கலைக்கழகம்
# பதவி வெற்றிடங்கள்

2023 ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று வரையும் பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனமானது வரவேற்கின்றது.

**நிரந்தரமான பதவிகள்:**

1. மருத்துவ கல்வியில் விரிவுரையாளார் (தகுதிகாண்நிலை), விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத நிலை), சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/I.

**சம்பள அளவுத்திட்டங்கள்:**

அ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I – 2020.01.01 ஆம் திகதியன்றின் பிரகாரம் - மாதாந்தம் 91310-7x2170-106,500 ரூபா – U-AC 3(I)

ஆ) சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II – 2020.01.01 ஆம் திகதியன்றின் பிரகாரம் - மாதாந்தம் 79360-11x1630-97290 ரூபா – U-AC 3(II)

இ) விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாத நிலை) – 2020.01.01 ஆம் திகதியன்றின் பிரகாரம் - மாதாந்தம் 69580-5x1630-77730 ரூபா – U-AC 3(III)

ஈ) விரிவுரையாளர் (தகுதிகாண் நிலை – 2020.01.01 ஆம் திகதியன்றின் பிரகாரம் - மாதாந்தம் 54600-10x1335-67950 ரூபா – U-AC 3(IV)

மேற்குறிப்பிட்டுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக, வாழ்க்கை செலவுப் படி மற்றும் ஏனைய அங்கீகரிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்.

**விஷேட குறிப்புக்கள்:**

MD மற்றும் Board Certification ஆகியவற்றைக் கொண்டிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுகாதார அமைச்சின் ஓய்வுபெற்ற ஆலோசகர்கள் மற்றும் பணியிடை விடுமுறையிலுள்ள பல்கலைக்கழக கல்வியாளர்கள் ஒப்பந்த நியமனங்களுக்கு பரிசீலனை செய்யப்படுவார்கள்.

**பணியிடை விடுமுறைக்கான உரிமை:**

மேலேயுள்ள பதவிகளை கொண்டிருப்பவர்கள் ஏழு வருட சேவையை பூர்த்தி செய்த பின்னர் முழுச் சம்பளத்துடனான ஒரு வருட பணியிடை விடுமுறைக்கும் அல்லது சம்பளமில்லாத இரு வருட விடுமுறைக்கும் உரித்தாவார். பணியிடை விடுமுறையில் வெளிநாடு செல்பவர்கள் அவருக்கும் (ஆண்/பெண்) மற்றும் அவரது துணைக்கும் (ஆண்/பெண்) முழுமையான விமான செலவிற்கு உரித்தாவார்.

**முக்கியம்:**

உங்களின் தொழில்சார், கல்விசார் மற்றும் ஏனைய தகைமைகளை சான்று பகருவதற்காக சான்றிதழ்களின் நிழற்படப்பிரதிகளை விண்ணப்பத்துடன் தயவு செய்து இணைக்கவும்.

உயர் கல்விசார் நிறுவனங்கள் அரசாங்க திணைக்களங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் அவ்வாறான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே விண்ணப்பித்தல் வேண்டும். இந்த தேவைப்பாட்டிற்கு ஒத்திசையாத விண்ணப்பங்கள் நிராரிக்கப்படும்.

வேலை விளக்கம் மற்றும் விண்ணப்பம் ஆகியன அடங்கலான மேலதிக விபரங்களை பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் pgim.cmb.ac.lk என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023 ஓகஸ்ட 14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உரித்தான சான்றிதழ்களுடன் dr@pgim.cmb.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பிரதிப் பணிப்பாளர், மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, கொழும்பு-07 என்ற முகவரியில் நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவிப் பெயரானது மின்னஞ்சலின் தலைப்பாகவிருத்தல் வேண்டும் அல்லது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்துரைக்கப்படல் வேண்டும்.

மூடும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

**பணிப்பாளர்,**
**மருத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**

23.07.2023

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)
## சுகததாச தேசிய விளையாட்டரங்கு அதிகார சபை
## கொழும்பு 13, சுகததாச தேசிய விளையாட்டரங்கு அதிகார சபையில் நீச்சல் தடாக நீர் சுத்திகரிப்பு வசதிகளுக்கான உத்தேச உயர் தரப்படுத்தல்

1. கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டரங்கு அதிகார சபையில் நீச்சல் தடாக நீர் சுத்திகரிப்பு வசதிகளுக்கான உத்தேச உயர் தரப்படுத்தலுக்காக தகைமையான விலைமனுதாரர்களிடமிருந்து வடிவமைப்பு மற்றும் கட்டிட ஒப்பந்தங்களுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி முன்மொழிவுகளுக்கான பொறியிடப்பட்ட விலைமனுக்களை சுகததாச தேசிய விளையாட்டரங்கு அதிகார சபை அழைக்கின்றது.
2. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனு முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
3. ஒப்பந்தங்களை வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர், பட்டியலில் இடம்பெறாது இருப்பதுடன், கீழ்க்காணும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் மற்றும் நிர்மாண கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அதிகார சபை (CIDA) இல் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

| உருப்படி இல. | ஒப்பந்த இல. | திட்டத்தின் பெயர் | நிர்மாண காலம் (நாட்கள்) | விலை மனுதாரர்களின் தகைமை | மீளளிக்கப்படாத கட்டணம் (ரு) | விலைமனுப் பிணை (ரு) | மதிப்பிடப்பட்ட செலவு (ரு) கிட்டத்தட்ட |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | SLSCA/PRO/371/2023 | கொழும்பு-13 சுகாதார தேசிய விளையாட்டரங்கு அதிகார சபையில் நீச்சல் தடாக நீர் சுத்திகரிப்பு வசதிகளுக்கான உத்தேச உயர் தரப்படுத்தல் | 180 நாட்கள் | **CIDA பதிவு** கட்டிட நிர்மாணத்தில் C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணத்தில் மின்னியல் மற்றும் இயந்திரவியல் சேவைகளுக்கான EM1 விரும்பத்தக்கது நீச்சல் தடாகத்திற்கான விசேட நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கான SP1 விரும்பத்தக்கது. **கம்பனி பதிவு** இலங்கை கம்பனி பதிவு (குறைந்த பட்சம் 6 வருடங்கள் பூர்த்தி செய்திருத்தல்) | 7,500 (VAT உள்ளடங்கலாக) | 760,000 | 76.0M (VAT இன்றி) |

4. ஒப்பந்தம் வழங்குவதற்கு தகைமைபெற தேவைப்படும் தகைமைகள் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்த த.பெ. 22111, சுகததாச தேசிய விளையாட்டு அரங்கு அதிகார சபை நிர்வாகக் கட்டிடம், பெறுகைப் பிரிவிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் விலைமனு ஆவணங்களைப் பரிசோதித்தல். 2023 ஜூலை 24 முதல் 2023 ஓகஸ்ட் 21 வரை 09.00 மணி முதல் 15.00 மணி வரையாகும்.
6. ஓர் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு) செலுத்துவதன் பேரில் 2023 ஜூலை 24 முதல் 2023 ஓகஸ்ட் 21 வரை 09.00 மணி முதல் 14.30 மணி வரை மேற்படி முகவரியிலுள்ள சுகததாச தேசிய விளையாட்டு அரங்கு அதிகார சபை, நிர்வாகக் கட்டிடம், பெறுகைப் பிரிவிற்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களைக் கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.
7. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கொழும்பு 13, ஆர்தர் டி சில்வா மாவத்த, த.பெ. 2211, சுகதாச தேசிய விளையாட்டு அரங்கு அதிகார சபையின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் நகல்களுடன் வைப்பிலிடப்படல் வேண்டும் அல்லது 2023 ஓகஸ்ட் 22ம் திகதி 14.00 மணிக்கு அல்லது அதற்குமுன் அடையுமாறு மேற்படி கொழும்பு-13. ஆர்தர் டி சில்வா மாவத்த, த.பெ. 2211, சுகததாச தேசிய விளையாட்டு அரங்கு அதிகார சபை, தலைவருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிரகரிக்கப்படும்.
8. விலைமனுக்கள், விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் மூடப்பட்ட பின்பு உடனடியாகத் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் மூடப்பட்ட தினத்தில் இருந்து விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். (2023.11.20)
10. விலைமனுக்கள் மூடப்படும் தினத்தில் இருந்து (2023.12.18 வரை) 119 நாட்கள் செல்லுபடியாகும், ஏழு இலட்சத்து அறுபதினாயிரம் ரூபா (ரூ. 760,000.00) இலங்கை ரூபாவிலான தொகைக்கு ஆர்தர் டி சில்வா மாவத்த, த.பெ. 2211, சுகததாச தேசிய விளையாட்டுக்கள் அரங்கு அதிகார சபைத் தலைவரின் பெயரில் வழங்கப்படும். விலைமனு ஆவணத்தின் பதிவு V இல் உள்ளடக்கப்பட்டுள்ள படிவத்தில், ஓர் விலைமனுப்பிணையின் மூலம் எல்லா விலைமனுக்களும் இணைக்கப்படல் வேண்டும்.

விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்த, தொ.பே. 2211, சகததாச தேசிய விளையாட்டரங்கு அதிகார சபை, சுகததாச உள்ளக அரங்கம், Pool Lobby இல் 2023 ஓகஸ்ட் 08ம் திகதி 10.00 மணிக்கு நடைபெறும்.

விலைமனுவுக்கு முன்னரான கூட்டத்தின் பின் தள விஜயத்திற்காக அனுமதியளிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டரங்கு அதிகார சபை,**
**த.பெ. இல. 2211, ஆர்தர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-13.**
**தொ.பே. :- 011-2445677**
**பெக்ஸ் :- 0112-445675**

---




இலங்கையின் முன்னணி அரச அபிவிருத்தி வங்கியான பிரதேச அபிவிருத்தி வங்கியானது நாடு முழுவதும் 272 கிளைகள் மற்றும் 3000 இற்கும் மேற்பட்ட திறமைமிக்க ஊழியர்களை கொண்டு செயற்படுகின்றது என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடத்திற்கு தேவையான தகைமைகளுடன், சிறந்த தலைமைத்துவ பண்புகளுடைய, முன்னனுபவமுள்ள தொழில் வல்லுனர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பிரதான தகவல் அதிகாரி (Chief Information Officer -CIO)
### விண்ணப்பதாரி பின்வரும் தகைமைகளை கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்

- இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து (UGC) பெற்ற கணனி அறிவியலில் பட்டப்படிப்பு, பொறியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் (ICT) மற்றும் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து (UGC) பெற்ற முதுமாணி பட்டம் அல்லது குறித்த துறைசார் முதுமாணி டிப்ளோமா.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தகவல் தொழில்நுட்ப துறையில் முதுமாணி பட்டம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம் ஒன்றில், தகவல் தொழில்நுட்ப துறையில் ஒட்டுமொத்தமாக 12 வருட அனுபவம் இருக்க வேண்டும். அதில் ஆகக்குறைந்தது 08 வருட சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம். (உதவி பொது முகாமையாளர் தரத்திற்கு அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு சமமான தரம்)
- தகவல் தொழில்நுட்பம் பற்றிய முழுமையான வெளிப்பாடு மற்றும் நவீன வங்கியியல் தொழில்நுட்ப முறைகள் பற்றிய சிறந்த புரிந்துணர்வு கொண்டிருக்க வேண்டும்.
- புதிய கருத்தாக்கம் மற்றும் வங்கி வர்த்தக நடவடிக்கைகளை தன்னியக்கமாக்கல் மற்றும் விருத்தி செய்யும் இயலுமை இருக்க வேண்டும்.
- வயது 57 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

### சம்பளம்/ கொடுப்பனவுகள்

தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வங்கித் தொழிற் துறையில் நிலவும் தரநிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் அளிக்கப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை

பூர்த்தி செய்யப்பட்ட உங்களது சுயவிபரக் கோவையை, சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் தொடர்பு கொள்ளக்கூடிய விபரங்களுடன் 2023 ஆகஸ்ட் 03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய விடயத்தலைப்பில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, careers@rdb.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்தவொரு விண்ணப்பப்படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறைகளில் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும் குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

ප්‍රාදේශීය සංවර්ධන බැංකුව
பிரதேச அபிவிருத்தி வங்கி
RDB Regional Development Bank

**பிரதான மனிதவள அதிகாரி**
**பிரதேச அபிவிருத்தி வங்கி,**
**இல. 933, கண்டி வீதி, வெதமுல்ல, களனி.**
0112 42 52 62 | www.rdb.lk

---

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| රු. 800/- | රු. 1,000/- | රු. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361




## மேஷம்

(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

4ஆம் இடத்தில் சூரியனும் புதனும் இருக்கிறார்கள். குருவுக்கு கேந்திரம், பஞ்சமஸ்தானத்தில் செவ்வாயும் சுக்கிரனும் இருக்கிறார்கள். சூரியனும் புதனும் சேர்ந்து புத ஆதித்ய யோகத்தை ஏற்படுத்துகிறார்கள். தாய் வழி உறவுகள் கை கொடுக்கும். குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். செவ்வாய் வலுவாக இருப்பதால், இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. சுக்கிரனும் பலமாக இருப்பதாலும் குரு பார்ப்பதாலும் கலைஞர்களுக்கு உற்சாகமான காலம் இது. புதிய வாய்ப்புகள் கிடைக்கும். சனிபகவான் லாபஸ்தானத்தில் இருப்பதால் தொழில் போட்டிகள் குறையும். 5 இல் செவ்வாய் இருக்கிறார். சகோதர உறவுகள் சற்று பின்னடைவைத் தரலாம். தேவையற்ற முன்கோபம் ஏற்படும். இராசியில் குருவோடு ராகு இருக்கிறார். எதிர் பார்ப்புகளை தவிர்த்துக் கொள்ளவும். ஆடம்பரச் செலவுகளைக் குறைக்கவும்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)

இராசிநாதன் சுக்கிரன் கேந்திரத்தில் செவ்வாயோடு சேர்ந்து குருவால் பார்க்கப்படுகிறார். சுக்ரமங்கள யோகம் உண்டு. கொடுக்கல் வாங்கல்கள் சீராக இருக்கும். பிள்ளைகளின் கல்வி நல்ல முறையில் இருக்கும். குறிப்பாக மேல்நாட்டு படிப்பு சாத்தியமாகும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புக்கள் கிடைக்கும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். சுக்கிர பலத்தால் கலைத்துறை முன்னேற்றமாக இருக்கும். செவ்வாயை குரு பார்ப்பதால் வீடு, காணி வாங்கும் யோகம் உண்டு. பத்திரப்பதிவில் இருக்கும் குழப்பம் அகலும்.

தொழில் ஸ்தானத்தில் சனி வக்கிரமடைந்து இருப்பதால் வேலை செய்பவர்களைக் கண்காணிக்கவும். செலவில் சிக்கனம் முக்கியம். கடகத்தில் உள்ள புதன் சில நேரங்களில் சோம்பேறித்தனத்தை தரும்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

இராசிநாதன் புதன் 2 இல் இருக்கிறார். 2 ஆம் இடத்தில் புத ஆதித்ய யோகம் இருப்பதால் மிக நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைத்து பற்றாக்குறை அகலும். வசதி வாய்ப்புகள் பெருகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரித்தாலும் வருமானமும் அதிகரிக்கும். புதிய வீடு கட்டிக்கொண்டு போகும் வாய்ப்புண்டு. குருவின் பார்வை செவ்வாய் மீது விழுவதால் பெண்களுக்கு திருமண யோகம் கைகூடிவரும். அவரோடு சுக்கிரனும் இணைந்து இருப்பதால் ஆண்களுக்கும் அந்த யோகம் உண்டு.கூடப் பிறந்தவர்களால் சில எதிர்பாராத மனக்கசப்புகள் வர வாய்ப்புண்டு. புதிய செலவுகளும் ஏற்படலாம். தொழில் கூட்டாளிகளிடம் எச்சரிக்கை தேவை. உடல் உபாதைகள் ஏற்படும். சனி செவ்வாய் பார்வையால் சிறிய விபத்துக்கள் போன்றவை நடைபெற வாய்ப்பு உள்ளதால், எதிலும் எச்சரிக்கையாக இருக்கவும்.

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

தனஸ்தானத்தில் ஐந்துக்குரிய செவ்வாயும் சுக இலாபாதிபதியான சுக்கிரனும் இணைந்து அவர்களை குரு பார்ப்பது என்பது அற்புதமான அமைப்பு. அஷ்டமச் சனி தோஷத்தை எல்லாம் ஓரளவு கட்டுப்படுத்தி முன்னேற்றத்தைத் தரும். சகோதர உறவுகள் பலப்படும். வழக்குகள் சாதகமாக முடியும். முயற்சிகள் வெற்றி பெறும். பயணங்கள் நன்றாக அமையும். புனிதப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும். நீங்கள் எதிர் பார்த்த அதிர்ஷ்டமும், பெண்களுக்கு மனம் மகிழும்படியான காரியங்களும் நடைபெறும்.

உடல் ஆரோக்கியத்தில் கொஞ்சம் கவனம் தேவை. உஷ்ண வியாதிகள் ஏற்படலாம். அலைச்சலால் கண் எரிச்சல் முதலிய நோய்கள் ஏற்படும். அடிக்கடி சோம்பேறித்தனமும் ஞாபக மறதியும் உண்டாகும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

இராசியில் செவ்வாயும் சுக்கிரனும் இருக்கின்றார்கள். தொழில்காரகன் சுக்கிரன் இராசியில் இருப்பதும் குரு அவரைப் பார்ப்பதும் பாக்கிய அதிபதி செவ்வாய் இணைவதும் நல்ல அமைப்பு. காரியங்கள் முடியும். சிலருக்கு வாகன யோகம், வீடு கட்டும் யோகம் உண்டு. குரு பகவான் ஒன்பதிலிருந்து ராசியைப் பார்ப்பதால் சுபகாரியத் தடைகள் விலகும். குழந்தைப் பாக்கியம் அமையும். பணம், சேமிப்பு அதிகரிக்கும். 3 இல் உள்ள கேது பல்வேறு செலவுகளைக் கட்டுப்படுத்தி வாழ்க்கையை வளப்படுத்துவார்.

எந்த அவசர முடிவுகளையும் உடனடியாக எடுக்க வேண்டாம் 9 ல் ராகு இருக்கிறார். பூர்வீகச் சொத்துக்களில் தடைகளும், தந்தை மகன் உறவுகளில் கருத்து வேறுபாடுகளும் ஏற்படும்.

## கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

இராசிநாதன் புதன் சூரியனோடு இணைகிறார். இலாபஸ்தானத்தில் இருக்கிறார். விரய ஸ்தானத்தில் செவ்வாய், சுக்கிரன் இருக்கிறார்கள். அஷ்டமத்தில் குருவும் ராகுவும் இணைந்திருக்கிறார்கள். ஆத்ம காரகனாகிய சூரியன், 11ஆம் இடத்தில் வலம் வருவதால், அரசாங்கக் காரியங்கள் அனுகூலம் உண்டாகும். தொழில் உத்தியோகத்தில் வளர்ச்சி கிடைக்கும். அரசாங்கத் தேர்வுகளில் வெற்றி பெற வாய்ப்புண்டு. புதன் இருப்பதால் எதையும் புத்திக்கூர்மையுடன் செய்வீர்கள். 12 இல் சுக்கிரன் இருப்பது தவறல்ல. அவர் சந்தோஷத்தை அதிகரிப்பார். உங்களுக்கு வரும் தகவல்கள் நல்ல விதமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் இருக்கும். தேவையான உதவிகள் கிடைக்கும். வாக்கு ஸ்தானத்தில் கேது. அஷ்டமத்தில் ராகு. குடும்பஸ்தான கேது என்பதால், என்னதான் அந்நியோன்னியம் ஆனாலும், குடும்பப் பிரச்சினை அவ்வப்பொழுது ஏற்படும்.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

இராசிநாதன் சுக்கிரன் தன குடும்ப அதிபதி செவ்வாயோடு சேர்ந்து லாப ஸ்தானத்தில் இருக்க, அவரை குரு பார்ப்பது நல்ல அமைப்பு. புதன் கடக ராசியில் இருக்கிறார். 9, 12க்கு உரியவர். அவர் 10ஆம் இடத்துக்கு வருவது நல்ல அமைப்பு. அவரோடு சூரியனும் இணைகிறார். தொழில் வளர்ச்சி அற்புதமாக இருக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு சாதகமான நேரம். புதிய கூட்டணிகள் சேருவார்கள். பொது வாழ்வில் பொறுப்புமிக்க பதவி கிடைக்கும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். சலுகைகள், பதவி உயர்வு, வருமான உயர்வு ஏற்பட வாய்ப்பு உண்டு. இதற்கு உறுதுணையாக சிம்மத்தில் இருக்கும் செவ்வாய் உதவுவார். 5 ஆம் இடத்தில் சனி வக்கிரகதியோடு இருக்கிறார். குழந்தைகள் சம்பந்தமான சிறிய மனத்தடைகள், கருத்து வேறுபாடுகள் அல்லது வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

இராசிநாதன் செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் இருக்க, அவரை குரு பார்க்கிறார். ராசிநாதன் பலம் பெற்று இருப்பதால், எல்லாச் செயல்களிலும் வெற்றி உண்டாகும். போட்டித் தேர்வுகள் வெற்றியைத் தரும். ராகுபகவான் ஆறாம் இடத்தில் இருப்பது வளர்ச்சிக்கு சாதகமான அமைப்பு. 6க்குரிய செவ்வாய் சுக்கிரனோடு இணைவதால் விபரீத ராஜயோகம் ஏற்படும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். பணப்புழக்கமும் நன்றாக இருக்கும். 8 க்குரிய புதன் 9 இல் இருப்பதால் எதிலும் கவனம் தேவை. சில தகவல்கள் தாமதமாக கிடைக்கும். ஏமாற்றமும் இருக்கும். 4 ஆம் குரு 6 ஆம் இடத்தில் இருப்பதால் தேவையற்ற முதலீடுகளை தவிர்க்கவும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

இராசிநாதன் குரு 5 ஆம் இடத்தில் இருக்கிறார். தொழில் ஸ்தானத்தைப் பார்வையிடுகின்றார். தொழில் ஸ்தானத்தில் செவ்வாயும் சுக்கிரனும் இருக்கின்றார்கள். சூரியனும் புதனும் இணைகிறார்கள். புதன் 8 இல் இருப்பதால், சில குறைகள் தீரும். தொழிலில் நல்ல லாபம் ஏற்படும். அதே நேரத்தில் அங்கு உள்ள சுக்கிரனால் யோகம் ஏற்படும். சுபயோகப் பேச்சுக்கள் கைகூடும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். சூரியன் அஷ்டமத்தில் வரப்போகிறார். பலவீனமாக இருக்கிறார். எனவே தந்தை வழியில் கருத்து வேறுபாடுகள் மன வருத்தங்கள் ஏற்படும். ராகு 5 ஆம் இடத்தில் இருப்பதால் குழந்தைகள் சம்பந்தமான பிரச்சினைகள் மனத்தாங்கல்கள் ஏற்படலாம்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

இராசிநாதன் சனி 2 இல் இருக்க இலாபாதிபதி செவ்வாய் அவரைப் பார்க்கிறார். சுக்கிரனும் அவரைப் பார்க்கிறார். புதனும் சப்தம இராசியில் இருந்து உங்கள் இராசியைப் பார்க்கிறார்கள். கல்வி சம்பந்தமான முயற்சிகள் கைகூடும். சுபகாரியங்கள் தடையின்றி நடைபெறும். வெளிநாட்டு உத்தியோகம் அழைப்புகள் வருவதற்கு வாய்ப்புண்டு. இடம், வீடு வாங்கும் முயற்சிகள் கைகூடும். வேலையில் இருப்பவர்களுக்கு உயர் அதிகாரிகள் ஆதரவு உண்டு. உறவினர்கள் உதவிக்கரம் நீட்டுவார்கள். 4ஆம் இடத்தில் ராகு இருக்கிறார். அவரோடு குரு இணைந்திருக்கிறார். எனவே எந்தச் செயலைச் செய்தாலும் கவனத்துடன் செயல்பட வேண்டும். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் வருவதற்கு வாய்ப்பு உண்டு.

## கும்பம்

(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்) இராசிநாதன் சனி இராசியிலேயே வக்கிரமாகி இருக்கிறார். 7 ஆம் இடத்தில் செவ்வாய் சுக்கிரன் இருக்க, தன குடும்ப அதிபதி குரு அவர்களைப் பார்க்க, அவர்கள் இராசியைப் பார்ப்பது சிறப்பு. 5 க்குரிய புதன் 6 இல் இருப்பது சிறப்பு. கடன் சுமை குறையும். புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. படிப்பில் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். நிரந்தர வருமானத்திற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும். பயணங்கள் பலன் தரும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பதவி கிடைக்கும். வியாபாரம் தொழில் வாடிக்கையாளர்கள் அதிகரிப்பார்கள். சொத்து தகராறுகள் அகலும். சிலருக்கு பணி நிரந்தரமாகும். சுறுசுறுப்பாக காரியங்கள் நடைபெறும் அதற்கு துணையாக 3 இல் ராகுவும் இருக்கிறார். சுக்கிரன் அமைப்பாலும், அவரைச் சனி பார்ப்பதாலும் கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் தோன்றலாம்.

## மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

இராசிநாதன் குரு 2ஆம் இடத்தில் இருக்கின்றார். தன குடும்ப அதிபதி 6ஆம் இடத்தில் இருக்க, சூரியனும் புதனும் 5ஆம் இடத்தில் இருக்கின்றார்கள். 6 இல் செவ்வாய் இருப்பதால், எதிலும் வெற்றி கிடைக்கும். நினைத்த காரியத்தை நிறைவேற்ற முடிவு செய்வீர்கள். குரு 2 ஆம் இடத்தில் இருப்பதால், காரியத் தடைகள் அகலும். போட்டித் தேர்வுகளில் வெற்றி கிடைக்கும். தடைப்பட்ட சுபகாரியங்கள் நடைபெறுவதோடு, சிலருக்கு குழந்தைப் பாக்கியமும் கிடைக்கும். சரியான தகவல்கள் சரியான நேரத்தில் கிடைக்கும். பங்கு வர்த்தகம் போன்ற துறைகளிலும் ஓரளவு லாபத்தை காணலாம். பிரச்சினைகள் சுமுகமாக முடியும். புதன் 5ஆம் இடத்தில் இருப்பதால் சில விஷயங்களில் தாமதத்தையும் சோம்பலையும் தருவார். மனக் குழப்பத்தை உண்டாக்குவார். எனவே தெளிவு வேண்டும். சுக்கிரன் 6ஆம் இடத்தில் இருக்கிறார்.

# விதிவசத்தால் வயோதிபர்களுக்கு வாழ்க்கைப்படும் வனிதையர் யார்?

ஒரு ரயில் பயணத்தில் அவர்களைச் சந்தித்தேன். அப்பாவும் மகளும் என்றுதான் எண்ணினேன். அவள் கரண்டியால் உணவை அவருக்கு ஊட்டும்போது முதலில் அப்படித்தான் தோன்றியது. பின்னர் அவர் அவளது இடுப்பைத் தழுவிக்கொண்டு உச்சிமோந்த பாவனையில் ஆசனத்தில் சாய்ந்தபோதுதான் அவளது கணவன் என்று உணர்ந்தேன். அவருக்கு 50 வயதுக்கு மேலிருக்கும் தடித்துப் பருத்திருந்தார். தலை கண்ணாடிபோல் பளபளத்தது. அப்படியொரு வழுக்கை! செல்வத்தின் பூரிப்பு உடம்பில் இருந்ததால் அவ்வளவாக முதுமை தெரியவில்லை.

ஆனால் அவள் பருவத்தின் தலைவாசலில் தளதளவென்று அழகாய் இருந்தாள். பட்டும் பொன்னுமாய் மின்னினாள். கலகலப்பாய்த் தெரிந்தாள். சற்றைக்கொருதரம் அவர் காதில் எதையெதையோ கிசுகிசுத்து கிளுகிளு வென்று சிரித்தாள். அவரையும் சிரிக்க வைத்தாள்!

இரவுப் பயணம். மங்கிய வெளிச்சம், அக்கம் பக்கத்துப் பயணிகள் அனைவரும் அரைத்தூக்கத்தில் ஆடிக் கொண்டிருந்ததால் இவர்களது சரசங்களை யாரும் கவனித்ததாய் தெரியவில்லை. எனக்குத் தூக்கம் வரவில்லை. பிரயாணத்தில் தூங்கிப் பழக்கமில்லை அத்தம்பதிகளுக்கு எதிர்த்தாப்போல் என் பக்கத்தில் அமர்ந்திருந்து அந்தப் பெண்ணை தூங்கச் சொல்லி அடிக்கடி அதட்டிக் கொண்ருந்த அந்த நடுத்தரவயதுப் பெண்மணியிடம் பேச்சுக்கொடுத்தேன். அவள் அந்தப் பெண்ணின் அம்மாவாம். மகளோடும் மருமகனோடும் கொழும்புக்குப் போவதாகச் சொன்னாள். அவர்கள் வந்த கார் வழியில் பழுதாகிவிட்டதாம். அதுதான் இந்த அலுத்த பயணம்! என்றாள். மருமகன் பெரிய கம்பனி முதலாளியாம். அவரது கம்பனிக்கு வேலைக்குப் போய் மகள் இப்படியொரு அதிர்ஷ்டத்தைத் தேடிக்கொண்டதாக பெருமைப்பட்டுக் கொண்டாள்!

இவ்வளவு தகவல்களும் போதாதா எனக்கு? தூக்கக் கலக்கத்தையும் துறந்து, மனம் சோதிட ஆய்வில் இறங்கியது. பெரும்பாலும் வயது போன கணவனைத் தருவதும், மறுதாரமாக வயதான ஒருவருக்கு வாழ்க்கைப்பட வைப்பதும் சனியின் வேலை! ஒரு பெண்ணின் சாதகத்தில் முதலாம் வீடாகிய இலக்கினம், இரண்டாம் வீடாகிய குடும்பத்தானம், ஏழாம் வீடாகிய களத்திர ஸ்தானம் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் சனி வீற்றிருந்தால் வயதான ஒருவரே புருஷனாக வந்து வாய்ப்பார் என்பது சோதிட விதியாகும். குறைந்தது எட்டுப், பத்து வயதாவது வித்தியாசமிருக்கும். கிரக சக்கரத்தில் மேற் சொன்னவீடுகளில்கிரகங்கள்சுபமாய்அமைந்து நவாம்ச சக்கரத்தில் மாத்திரம் இலக்கினத்துக்கு ஏழாம் வீட்டில் சனி இருக்கக் காணப்பட்டாலும் இப்படித்தான் புருஷன் வந்தமைவான்.

இதில் ஒரு விதிவிலக்குமுண்டு. அதாவது இலக்கினம், இரண்டாம் வீடு, ஏழாம் வீடு என்பன சனிக்குச் சொந்தமான வீடுகளாக (மகரம், கும்பம்) இருந்து, அவற்றில் சனி இருந்தால், வாய்க்கும் கணவன் வயது கூடினவனாக இருந்தாலும் ஒரு வாலிபனுக்கு நிகராக வீரியம் காட்டுவானாம். இந்த வீடுகள் தவிர இதர வீடுகளில் சனி இருப்பதற்கு பலன்கள் சிறப்பாகச் சொல்லப் படவில்லை. வயதில் மூத்தவர் வந்து வாய்ப்பார் என்பதோடு, மனைவியின் துள்ளும் இளமைக்கு ஈடுகொடுப்பராகவும் இருக்க மாட்டார். அதிலும் மேடம் ஏழாமிடமாக அமைந்து அதில் சனியிருந்தால் கெட்டது காரியம்! மனைவி பார்த்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க. கணவன் பக்கத்தில் சோர்ந்து படுத்துக் கொண்டிருந்து யாக்கையின் நிலையாமை பற்றி வேதாந்தம் பேசுகிறவராயிருப்பராம்! (யாக்கை என்றால் உடம்பு)



ஏழில் சனி வயதில் முதிர்ந்த ஒரு கணவனை தருவார் என்றால் எட்டில் சனி அதைவிட ஒருபடிமேலே போய் சதா வியாதியுடன் முக்கி முனகி மருந்தும் கையுமாய்த் திரிகிற கணவனைத் தருவார், அதேபோல, களத்திரத்தானத்தில் சனியும், ரோகத்தானாதிபதியும் (ஆறாம் வீட்டுக்குரிய கிரகம்) கூடியிருக்கப் பிறந்த பெண்கள் சதாநோயும் நொடியுமாக, கணவனுக்குச் சுமையாக வாழ்நாளைக் கழிப்பார்கள்.

ஏழில், சனி, பகை, நீசம், பாவர் சேர்க்கை போன்ற பலமற்ற நிலையில் இருந்து. மற்றொரு பாவக்கிரகத்தினால் நேரடியாக நோக்கப்பட்டால், அவ்விதம் சாதகத்திலமைந்த பெண்ணுக்கு கல்யாணமே நடக்காதாம்! அப்படி நடந்தாலும் கொஞ்ச நாளில் கணவனால் கைவிடப்பட்டு விடுவாளாம். இவ்விதம் கணவனால் கைவிடப்படும் பெண்களுக்குரிய இன்னொரு கிரக அமைப்பையும் மகாதேவர் என்ற சோதிடமேதை தமது ஜாதக தத்துவம் என்ற நூலில் குறிப்பிடுகிறார், அதாவது, களத்திர வீட்டில் ஆட்சி, அல்லது உச்சம் பெற்ற நிலையில் களத்திரத்தானாபதியையும் இலக்கினாதிபதியையும் விடப்பலம் பெற்ற செவ்வாய் அமர்ந்திருந்து, பகை, நீசம், பாவர் சேர்க்கை போன்ற பலவீனமான நிலையில் அமர்ந்த களத்திரத்தானாதிபதியை நோக்கினால், அத்தகைய கிரக அமைப்பைக் கொண்ட பெண்ணானவள், கணவனால் ஒதுக்கப்பட்டு ஊருக்கு ஊர், நாட்டுக்கு நாடென்று அலைந்து திரிவாளாம் இத்தகைய பெண்களில் அந்தஸ்து கூடிய பெரிய இடத்துப் பெண்கள் விடயத்தில் இந்தப் பிரச்சினைகள் வெளியே தெரிவதில்லை. தேசசஞ்சாரம், நிறுவன மாநாடுகள், அரச உயர்மட்டப் பணிகள், கட்சிப்பணிகள் என்று ஒரு பகட்டான கௌரவப் போர்வையோடு திரிவதால் விரிசல்கள் சாமானியருக்கு தெரிவதில்லை.

சில பெண்களைப் பார்த்தீர்களானால் வெளியே நளினமாக நாகரீகமாக தென்படுவார்கள். சிரிப்பும் கதையும் கும்மாளமுமாக இருப்பார்கள், ஆனால் வீட்டுக்கு வந்துவிட்டாலோ அவர்கள் சுபாவம் மாறி விடும். சண்டைக் கோழிகளாக மாறி கணவனுடன் சமர்புரிவார்கள். வேண்டாப் பெண்டாட்டிக்கு கைபட்டாலும் குற்றம், கால்பட்டாலும் குற்றம் என்பது போல இவர்களது நடவடிக்கைகள் இருக்கும். இந்த யுத்த முனைப்புக்கெல்லாம் பெரிதான காரணங்கள் எதுவுமிராது.

மானம் மரியாதைக்குப் பயந்து கணவன் அடங்கிப்போவதை ஏதோ தனக்குப் பயந்து அடங்கிப் போவதாக பெருமிதம் கொள்வார்கள். கணவன் வீட்டையே நரகமாக நினைப்பான், கூறாமல் சன்னியாசம் கொள்ளவும் திட்டம் போடுவான்.

இப்படிப்பட்ட பெண்களுக்குரிய கிரக அமைப்பை மகாதேவர் பின்வருமாறு கூறுகிறார், "களத்திரத்தானாதிபதி 3, 6, 8, 12 ஆகிய ஏதாவதொரு வீட்டில் பலவீனமாக இருக்க. இலக்கினாதிபதி மீதமுள்ள 1, 4, 5, 7, 9, 10, 11 ஆகிய ஏதாவதொரு வீட்டில் பலம் பெற்று அமர்ந்திருந்தாலும், மாங்கல்யத்தானத்தில் (எட்டாம் வீடு) செவ்வாய் இருந்தாலும் இத்தகைய கிரக அமைப்புடன் பிறந்த பெண்களுக்கு கணவனுடன் சதா சண்டைப்பிடித்து தமது வீரத்தை வெளிப்படுத்துவது பிடித்தமான பொழுது போக்காக அமையுமாம். காலம் இவர்களுக்கு தகுந்த பாடத்தைப் படிப்பிக்கும்போது, இவர்கள் குடும்ப வாழ்க்கையை தொலைத்து விட்டு உறவுகளாலும் தனிமைப்படுத்தப்பட்டு பட்டமரமாக நிற்பார்களாம்!

விவாகம் செய்த சில மாதங்களிலோ, சில ஆண்டுகளிலோ ஒரு பெண் புருஷனைத் தொலைத்துவிட்டு நிற்பதற்கு சோதிட நூல்கள் செவ்வாய் தோஷத்தையே முதன்மையாகக் குறிப்பிடுகின்றன. களத்திரத் தானாதிபதி நீசம், அல்லது அஸ்தமன நிலையில் 6அல்லது 8 அல்லது 12 ஆகிய மறைவுத்தானங்களில் ஏதாவதொன்றில் இருந்தாலும், குடும்ப வீட்டுக்குரியவன், சுக்கிரன் ஆகியோர் கூடி செவ்வாய், சூரியன், ராகு போன்ற குரூரக்கிரகங்கள் மத்தியில் இருந்தாலும், அல்லது களத்திர வீட்டில் பாவக்கிரகங்களும் சுபக்கிரகங்களும் மண்டியிருந்தாலும், அத்தகைய கிரக அமைப்பைக் கொண்ட பெண்கள் மணம் முடித்துச் சில காலத்திலேயே விதவைக் கோலம் பூண்டு விடுவார்களாம்!

இன்னும் எட்டாம் வீட்டுக்குரிய கிரகம், ஏழாம் வீட்டிலும் ஏழாம் வீட்டிற்குரிய கிரகம் எட்டாம் வீட்டிலுமாக மாறியமர்ந்து பரிவர்த்தனம் பெறுவது, செவ்வாயின் வீடு 7 அல்லது 8 அல்லது 12 ஆம் பாவமாகி, அதில் ராகு இருப்பது, இலக்கினத்தில் அல்லது அதிலிருந்து எழாம் வீட்டில் அல்லது எட்டாம் வீட்டில் பாவக்கிரகங்கள் இருந்து சுபர் சேர்க்கை அல்லது பார்வை பெறாதிருப்பது, போன்றவைகளெல்லாம் கல்யாணமாகிச் சொற்பகாலத்தில் பெண்ணை விதவை அல்லது வாழாவெட்டிக் கோலம் பூணவைக்கும் கிரக அமைப்புகளாகும்.

ஒருத்தியின் சாதகத்தில் ஏழில் ஒரு கிரகமும் இல்லாதிருந்து, அந்த வீட்டை ஒரு கிரகமும் பாராதிருந்தால், அவளுக்கு வாய்க்கும் கணவன் உத்தியோகமெதுவும் இல்லாதவனாயும், அவளுக்குக் கணவன் என்ற உத்தியோகத்தை மட்டும் ஒழுங்காய்ப் பார்ப்பவனாகவும் இருப்பான்.

நமது பெண்மணிகளிடம் கேட்டால், எப்போதும் கட்டிய கணவனுக்கு முன்பதாக சுமங்கலிகளாக மரணமடைவதே பாக்கியம் என்பர். இந்த பாக்கியத்திற்கும் ஒரு கிரக அமைப்பு இருக்கிறது அதாவது மாங்கல்ய ஸ்தானமான 8ஆம் இடத்தில் இலக்கினாதிபதியும் சுக்கிரனும் கூடியிருக்கின்ற பெண்களே இவ்விதம் பூவோடும் பொட்டோடும் கணவனுக்கு முன்னால் போய் சேர்வார்களாம். என்னதான் அந்தஸ்தும் பணமிருந்துமென்ன, ஒரு கணவனுக்கு முதுமையில் மனைவி மாண்டு போனால் தனிமையும் விரக்தியும் சூழ்ந்து அவனை தனிமரமாக, நடைப்பிணமாக ஆக்கிவிடும் என்பதை இவ்விதம் சுமங்கலிகளாக மரணிக்க விரும்பும் பெண்கள் உணருவதில்லை.

இப்பொழுதெல்லாம் ஐந்து நட்சத்திர, மூன்று நட்சத்திரவிடுதிகளில் உல்லாசப் பயணிகளைக் கவர அழகழகான யுவதிகள் வேலைக் கமர்த்தப்படுகிறார்கள் விளம்பரங்களுக்கு மொடல்களாக. கட்டான உடலில் கவர்ச்சியான வளைவு நெளிவுகளும், காந்த விழிப்பார்வையும் கொண்ட காரிகைகள் தொழில் செய்து பெரும் தொகைப்பணம் சம்பாதிக்கின்றனர். இவர்களில் பலர் கலையென்ற பெயரில் சினிமாவிலும் நுழைந்து அரைகுறை ஆடைகளில் கவர்ச்சியாக ஆடியும் நடித்தும் பெரும் பொருள் சம்பாதிப்பதோடு, ரசிகர்களின் கனவுக் கன்னிகளாக மாறி அவர்களது தூக்கத்தையும் கெடுக்கின்றனர். இவர்கள் யாவரும் எமது சமூக, மத கலாசாரத்தையும் ஒழுக்கம், பண்பாடுகளையும் அழித்து நாசம் செய்வதாக கூப்பாடுபோடும் எமது பெரியோர்களும் சனாதனிகளும், இவர்களெல்லாம் என்ன விதத்தில் அனாசாரக் கிரகநிலைகள் கொண்டவர்களாக இருப்பார்கள் என்பதையும் கணித்துக் கூறியுள்ளனர்.

அதாவது தொழில் ஸ்தானாதிபதி (10 ஆம் வீட்டுக்குரிய கிரகம்) நீசனாக அல்லது பகை பெற்றவனாக இலக்கினத்திலேனும் அல்லது களத்திரத்தானத்திலேனும் இருக்க, களத்திரத் தானாதிபதி இலக்கினத்தில் பலம் பெற்றுக் திகழ, களத்திர வீட்டில் செவ்வாயும் சுக்கிரனும் அமர, இலக்கினாதிபதி தொழில் ஸ்தானத்தில் இருக்க, இவ்விதம் அமைந்த பெண்கள், நடிப்பு, நாட்டியமென்று கலையின் பெயரால் பணத்திற்காக தம்மையே விலைபேசி விற்பர் என்று சோதிட மேதையான மகாதேவர் தமது ஜாதக தத்துவம் என்ற நூலில் கூறுகிறார்.

மேற்சொன்னவை யாவும் பொதுவான பலன்கள். இவற்றுக்கு விதிவிலக்குகளுமுண்டு. தோஷ பரிகாரங்களால் நிவர்த்தி செய்யக்கூடியவைகளுமிருக்கும். அவை அச்சாதகங்களை ஆராய்ந்து பார்க்கையில் விளங்கும். சரி, இதுவரை முதுமை, வியாதி, தோஷம் என்று களத்திரத்தில் குறைபாடுகளுடைய சாதகங்கள் சிலவற்றை வரிசைப்படுத்தி விளக்கம் தந்தீர்கள். இவற்றையெல்லாம் தாண்டி, உத்தமனான ஓர் இளைஞன் நாயகனாக வந்தமைய ஒரு பெண்ணுக்கு எத்தகைய கிரக அமைப்புக்கள் இருக்கவேண்டுமென்று சொல்லுமாறு கேட்கிறீர்களா?

அதைச் சொல்லுவது சுலபம். அதாவது களத்திர வீட்டுக்குரிய கிரகம் தசம கேந்திரத்தில் (10 ஆம் வீட்டில்) சுபர் பார்வை, அல்லது சுபர் சேர்க்கையுடன் பலம் பெற்றிருக்க, களத்திரவீட்டில் வியாழனும் புதனும் இணைந்து நீசமோ பகையோ பெறாத நிலையில் விளங்க, அப்படிப்பட்ட கிரக அமைப்பைத் தன் சாதகத்தில் கொண்டு பிறந்த பெண்ணுக்கு, அன்பும் பாசமும், காதலும் புரிந்துணர்வும், இளமையும் மிகுந்த கணவனொருவன் துரிதகதியில் தானாகவே வந்தமைவான். அப்பெண் மீது கொண்ட பிரேமையானது மாப்பிள்ளையை அவளின் வாசல் தேடி வரவழைத்துவிடும்!

திருவோணம்






சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### சிறுமிகள் துஷ்பிரயோகம்

சிறுமிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதும் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகுவதும் அண்மை காலத்தில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்திருப்பதை செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன. கடந்த மாதத்தில் ஒரே ஒரு நாளில் மட்டும் ஏழு சிறுமிகள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக பொலிஸ் தகவல்கள் தெரிவித்துள்ளன.



பொலிஸில் முறைப்பாடு செய்யப்படுகின்ற அல்லது பொலிஸார் கண்டுபிடிக்கின்ற சிறுமிகளின் துஷ்பிரயோகங்களே இவ்வாறு கணக்கில் வருகின்றன. முறைப்பாடுகள் செய்யப்படாத, அதனால் கணக்கில் உள்ளடங்காத துஷ்பிரயோகங்கள் பெருமளவில் இருக்கும் என்பதை எல்லோராலும் ஊகித்து அறிய முடியும்.

பலவந்தமாக செய்யப்படுகின்ற இத்தகைய துஷ்பிரயோகங்கள் மட்டுமல்லாது, வயதுக் கோளாறு காரணமாக தவறானவர்களின் பிடிகளில் சிக்கி துஷ்பிரயோகத்துக்கு ஆளாகும் 'டீன் ஏஜ்' சிறுமிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தே காணப்படுகிறது. பாடசாலைக்கு சென்ற மூன்று சிறுமிகள் தமது காதலர்கள் என கூறப்படும் இளைஞர்களோடு உல்லாசப்பயணம் சென்று துஷ்பிரயோகத்துக்கு உள்ளானமை கடந்த வாரம் பரபரப்பாக பேசப்பட்ட சிறுமிகளின் துஷ்பிரயோக சம்பவமாகும். இதில் சம்பந்தப்பட்டிருந்த மூன்று மாணவர்களும் 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் என்பதாக அடையாளம் காணப்பட்டனர். எனவே இவர்களும் "சிறுவர்கள்" என்ற பிரிவிலேயே சேர்க்கப்பட வேண்டியவர்களாக உள்ளமை அதிர்ச்சி அளிக்கும் விடயமாக இருக்கிறது.

இன்றைய சினிமாக்களின் காட்சிப்படுகின்ற கவர்ச்சியான, பாலியல் காட்சிகள், கைபேசிகளில் கூட இலகுவாக பெறக்கூடிய சமூக ஊடகங்களில் இடம்பெறும் பாலியல் காட்சிகள், சம்பவங்கள் போன்றவை இத்தகைய மோசமான நிலைமைக்கு தூண்டுகோல்களாக உள்ள காரணிகளாக இருக்கின்றன. மேலும் தொழில் நடவடிக்கைகளுக்காக பெற்றோர்கள் அல்லது அவர்களில் ஒருவர் வெளிநாடு சென்றிருக்கின்ற சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் பாதுகாப்பு போதிய அளவில் இல்லாத சந்தர்ப்பங்களும் இந்நிலைமையை மோசமாக்கும் காரணிகளாக உள்ளன.

சிறுமிகளின் துஷ்பிரயோகங்களில் குடும்ப உறவினர்கள், அயலில் உள்ளவர்கள், தொடர்பில் இருக்கும் இளைஞர்கள், சேர்ந்து கற்கும் மாணவர்கள், அவர்கள் பயணம் செல்லும் வாகனங்களின் சாரதிகள் போன்றோரே அதிகமாக இருக்கின்றனர். பல சந்தர்ப்பங்களில் 'வேலியே பயிரை மேயும்' நிலைமையும் காணப்படுவது வேதனைக்குரியது.

இவற்றை நோக்கும் போது சிறுமிகள் மீதான கவனிப்பும், கண்காணிப்பும் முன்னர் எப்போதையும் விட கூடுதலாக இருக்க வேண்டும் என்பதும், அவர்களின் பாதுகாப்பில் அதிக கரிசனை காட்டப்பட வேண்டும். என்பதும், பெற்றோர், பாதுகாவலர், உற்றார், உறவினர், பெரியோர் மீதுள்ள பாரிய பொறுப்பாக உள்ளது. இவ்விடயத்தில் ஆசிரியர், அதிபர் போன்றோரது கடமைகளும் முக்கியத்துவம் பெறுகிறது.

ஒவ்வொரு பெற்றோரும் தமது சிறுமிகளான பிள்ளைகளை உரிய, பொருத்தமான, பாதுகாப்பான துணையின்றி வெளியே அனுப்பாதிருக்க உறுதிகொள்ள வேண்டும். அத்துடன் அவர்களின் நடத்தை, தொடர்பு கொண்டுள்ள நண்பர்களின் விபரம், கைபேசிகளின் பாவனை, இணையத்தள பாவனை என்பவற்றை மிகச் சரியாக, சீராக கண்காணிக்க [illegible] பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறக் கூடாது. மேலும் இத்தகைய துஷ்பிரயோகங்கள் சம்பந்தமாக பொலிஸ் உட்பட பொருத்தமான நிறுவனங்களுக்கு தெரியப்படுத்துவதிலும் பின்னிற்கக் கூடாது. இவ்விடயங்களை ஒவ்வொருவரும் கூடிய அக்கறையோடு கவனத்தில் எடுத்து, காலத்துக்கும், நேரத்துக்கும் ஏற்ற வகையில் பொருத்தமான, சரியான, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகுவதிலிருந்து சிறுமிகளைப் பாதுகாத்துக்கொள்ள வழி செய்ய வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

**சிறுமிகள்தாம் நாட்டின் நாளைய அன்னையர்கள்**
**சிறப்பாய் அவர்களைப் பேணுதலெம் கடமைகள்**
**வெறுப்பான துஷ்பிரயோகங்களை தடுத்திடுங்கள்**
**பொறுப்பாக சிறுமியர் நலன்தனை காத்திடுங்கள்**

## நெஞ்சோடு நெஞ்சம்

### நன்றிகள் கோடி!

எமது நூற்றி ஐம்பதாவது 'படித்ததும் பகர்வதும்' பகுதியை வாசித்துவிட்டு ஆர்வத்தோடு நேரிலும், தொலைபேசி மூலமும், 'வாட்ஸ்ஏப்' மூலமும், சமூக ஊடகங்கள் ஊடாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்த சகல தரப்பையும் சேர்ந்த 'படித்ததும் பகர்வதும்' வாசகர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்! உங்களது நல்லாதரவே எங்கள் பலம்!!

### வருந்துகிறோம்!

கடந்த வாரம் 'படித்ததும் பகர்வதும்' பகுதியின் "நல்லதை சொல்கிறோம்" பிரிவில் கலைஞர் கருணாநிதியின் படம் எந்த வித பொருத்தமுமின்றி பிரசுரமாகியிருந்தது. பக்க வடிவமைப்பின் போது ஏற்பட்டிருந்த இந்த தவறுக்கு வருந்துகிறோம்.

## பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்!

### "இஸ்லாமிய அறிவாளர்" பேராசிரியர் சே.மு.மு. முகமதலி

சர்வதேச புகழ் பெற்ற எழுத்தாளர், பேச்சாளர், கல்வியாளர், பன்னூலாசிரியர், ஊடகவியலாளர், கவிஞர், சிறுகதையாசிரியர், நூலாசிரியர், இதழாசிரியர், நாடக எழுத்தாளர், சமூகச் சேவையாளர் எனப் பல்துறைகளிலும் சாதனைகள் படைத்த, பன்முக ஆளுமை பேராசிரியர் டாக்டர் சே.மு.மு. முகமதலி. தமிழ்நாடு, திருச்சிராப்பள்ளி, ஜமால் முகமது கல்லூரி தனது இவ்வருட நிறுவனர் நாள் விழாவில் இவருக்கு "இஸ்லாமிய அறிவாளர் விருது" வழங்கி கௌரவித்துள்ளது.



கல்விப் பணி, சமயப் பணி, இலக்கியப் பணியோடு சமுதாயப் பணியிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு தனது நாட்டுக்கு மட்டுமன்றி, கடல் கடந்தும் சேவையாற்றி வருபவர் இவர். உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகளை வெற்றிகரமாக நடத்திய, இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் செயலாளராக செயலாற்றி, 'கவிக்கோ' அப்துல் ரஹுமானின் மறைவுக்குப் பிறகு 2017ஆம் ஆண்டிலிருந்து அதன் தலைவராக சிறப்பாகச் சேவையாற்றி வருபவர்.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் இணைய தளம் வழியாக 60க்கும் மேற்பட்ட இலக்கிய நிகழ்வுகளை இக்கழகம் மூலம் நடத்தியமை இவரது பெருஞ் சாதனையாகும். நான் உட்பட இலங்கை அறிஞர்களும் ஆய்வுரைகள், சிறப்புரைகள் நிகழ்த்தியமையும் இங்கு நினைவூட்டத்தக்கது. இத்தொடரில் இலங்கையில் கொரோனா காலத்தில் இறந்த பதினைந்துக்கும் மேற்பட்ட இஸ்லாமிய ஆளுமைகளான கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகளை கௌரவித்து, 2021. 06. 12ல் நடாத்திய இணைய வழி நினைவேந்தல் நிகழ்வு இலங்கையர்களால் என்றும் மறக்க முடியாதது என்றால் மிகையல்ல.

2000ல் இவர் ஆரம்பித்து, இன்றுவரை இயங்கி வரும் 'தமிழ்நாடு முஸ்லிம் தொண்டு இயக்கம்' மூலம் ஆற்றி வரும் தொண்டுகள் அளப்பரியன. ஆண்டு தோறும் வசதியற்ற 30 ஜோடிகளுக்கு இலவச திருமணங்களை நடத்தும் இவ்வியக்கம், இதுவரை 500க்கும் மேற்பட்ட ஜோடிகளின் வாழ்வை வசந்தமாக்கியுள்ளது. ஆயிரக்கணக்கான மாணவ, மாணவியருக்கு கல்வி நிதி உதவிகளையும் வழங்கி வருகிறது. முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க அரும்பாடுபடுகிறது.

பேராசிரியர் டாக்டர் சே.மு.மு.முகமதலி, ஆசிரியராக இருந்து 2002 முதல் 'இனிய திசைகள்' சஞ்சிகையை தமிழ் மாத இதழாக வெளியிட்டு வருகிறார். சமூகம், சமயம், அரசியல், இலக்கியம் என பல்துறை சார்ந்த விடயங்களைத் தாங்கி இன்றுவரை சிறப்பாக வெளிவரும் இவ் இதழில் இலங்கை உட்பட பல நாடுகளின் எழுத்தாளர்களின் ஆக்கங்களையும் இடம்பெறச் செய்வது குறிப்பிடத்தக்கது.

அகில இந்திய வானொலி, சென்னைத் தொலைக்காட்சி, சன் டி.வி., மக்கள் டி.வி., தமிழன் டி.வி., விஜய் டி.வி.. வின் டி.வி., மூன் டி.வி, ராஜ் டி.வி உட்பட பிரபல தொலைக்காட்சிகளில் நூற்றுக்கணக்கான நிகழ்ச்சிகளில் பங்களித்துள்ளார். இவரது 'யூடியூப்' சேனலில் இவர் நடத்தும் `உலகம் உங்கள் கையில்' எனும் தொடர் மூலம் இளைஞர்களின் தலைமைத்துவ, ஆளுமைத் திறன்களை வளர்த்து வருகிறார். சிறந்த பேச்சாளரான இவர், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, புருணை, தாய்லாந்து, ஹாங்காங், ஐக்கிய அரபு அமீரகம், சவுதி அரேபியா, ஓமான், குவைத், கத்தார், இங்கிலாந்து, அமெரிக்கா உட்பட பல நாடுகளில் பிரதான நிகழ்வுகளில் பங்கேற்று உரையாற்றியுள்ளார்.

மூத்த தமிழறிஞர் விருது, உமறுப் புலவர் விருது, சீறாப் புராண விருது, நாவலர், இலக்கியத் தென்றல், இலக்கியச் சுடர், பட்டி மண்டப வீரன், இலக்கியச் செம்மல், முத்தமிழ்மாமணி, 'அமீனுல் மில்லத்' என இவரது கிரீடத்தில் நிறைந்துள்ள 30க்கும் மேற்பட்ட விருதுகளோடு சேர்க்கப்பட்டுள்ள புதிய வைரக்கல் இவ் "இஸ்லாமிய அறிவாளர் விருது" எனலாம்.

இவ்வாறு இவரைப் பற்றி எழுதவேண்டியவை இன்னும் ஏராளம்! ஏராளம்!! 'இஸ்லாமிய அறிவாளர் விருது' மூலம் மேலும் கௌரவம் பெற்றுள்ள பேராசிரியர் டாக்டர் சே. மு. மு. முகமதலியைப் பாராட்டுகிறோம்! நீண்ட ஆயுளுடன் அவர் நலமே நற்பணிகளைத் தொடர்ந்திட வாழ்த்துகிறோம்!!

## சிந்தனை செய் மனமே

### யார் அவர் ?

பிரபலமான கம்பனியொன்றில் நிர்வாக உத்தியோகத்தராக வேலை செய்த ஒரு இளைஞனுக்கு நல்ல வசதியான குடும்பத்தில் திருமணம் நடந்தது. மணமகளின் தந்தை செல்வாக்கு மிக்க பணக்காரர். அவர்களின் திருமணம் தடல்புடலாக நடந்தது. பெண்ணின் தந்தை அழகான வீடொன்றையும் அவர்களுக்கெனக் கட்டிக் கொடுத்திருந்தார்.

திருமண வைபவத்தின் போது இருபக்க உறவினர்கள் நண்பர்களிடமுமிருந்து நிறைய அன்பளிப்புப் பொருட்கள் சேர்ந்தன. தேனிலவு முடிந்து வந்த பின்னர் புது மணத் தம்பதியினர் புது வீட்டில் தனிக்குடித்தனம் நடத்தப் போனார்கள். புதிய வீட்டில் தமக்கு வந்திருந்த பரிசுப் பொதிகளை ஒவ்வொரு பொதியாகத் திறந்து, அவற்றைத் தந்துள்ளவர்களினதும் விபரங்களைப் பதிவதில் கணவனும் மனைவியும் தமது நேரத்தில் பெரும்பகுதியைக் கழித்தனர்.

வகைவகையான தங்க நகைகள், ஆடையணிகள், வீட்டுப் பாவனைக்கான மின் உபகரணங்கள், அலங்கார ஆடம்பரப் பொருட்கள் என பெறுமதியான பரிசுகளைக் கண்ட போது இருவருக்கும் ஏற்பட்ட பெருமிதத்துக்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. அவற்றின் பெறுமதி ஐந்தாறு லட்சமாவது இருக்கும் என்று மதிப்பிட்டுக் கொண்டார்கள்.

வந்திருந்த பரிசுப் பொதிகளுக்கிடையில் நீண்ட கடிதவுறையொன்று இருந்தது. திறந்து வாசித்தார்கள். அடுத்து வருகின்ற ஞாயிற்றுக் கிழமை, கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெறவிருக்கும் பிரபல தென்னிந்திய இசைக்கலைஞரின் இசைக் கச்சேரிக்கான முன் வரிசை ஆசனங்கள் இரண்டுக்குரிய டிக்கட்டுக்கள் அவ்வுறையினுள் வைக்கப்பட்டிருந்தன. அந்தக் கச்சேரிக்குரிய டிக்கட்டுக்கள் எப்போதோ விற்றுத் தீர்ந்திருந்தன. கடைசி வரிசையிலாவது ஓர் ஆசனம் பெற்றுக்கொள்வதற்கு ஆயிரக்கணக்கில் பணம் கொடுக்க இரசிகர்கள் தயாராக இருந்தனர். இந்த நிலையில் முதல் வரிசை ஆசனங்களுக்கு டிக்கட் கிடைத்திருப்பது எவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் என இருவரும் பெருமைப்பட்டனர்.

இந்த அரிய வாய்ப்பைத் தமக்கு வழங்கியிருப்பவர் யாரென்று அறிந்து கொள்ளும் ஆவலோடு அவ்வுறையினுள் மடித்து வைக்கப்பட்டிருந்த காகிதத் துண்டை விரித்துப் பார்த்தனர். "இதை அனுப்பியது யாரென்று ஊகிக்க முடியுமா?" என்ற கேள்வி மட்டுமே அதில் எழுதப்பட்டிருந்தது. அவர்கள் எப்படியெல்லாமோ ஊகித்துப் பார்த்தார்கள். அனுப்பியது யாரென்று அவர்களால் சரியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. சந்தேகத்துக்குரியவர்களுக்கு போன் பண்ணி மறைமுகமாகக் கிண்டிப் பார்த்தார்கள். ஊஹும். ஒரு தகவலும் கிடைக்கவில்லை.



'கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடக் கூடாதே' என குறித்த ஞாயிற்றுக்கிழமை மாலையில் இருவரும் வீட்டை மூடிக்கொண்டு கொழும்புக்குப் போனார்கள். பிரச்சினையின்றி மண்டபத்தில் நுழைந்து சொகுசான ஆசனத்தில் அமர்ந்தவாறு இசைக் கச்சேரியை இரசித்தார்கள். பின்னர் ஆடம்பர உணவகமொன்றில் இருவருமாக இரவுணவு அருந்திவிட்டு தம் வாகனத்தில் வீடு திரும்பினார்கள்.

வீட்டை அடைந்தபோது நள்ளிரவு பிந்தியிருந்தது. தாம் மூடிவிட்டுச் சென்ற வீட்டின் கதவு திறந்திருப்பதைக் கண்டதும் இருவருக்கும் திக்கென்றது. உள்ளே சென்று பார்த்த போது வீடெங்கும் பரப்பி வைத்திருந்த பரிசுப் பொருட்கள் எதனையும் காணவில்லை. அலுமாரியில் வைத்திருந்த நகைகளும் மாயமாய் மறைந்திருந்தன. யாரோ முழு வீட்டையும் சுத்தப்படுத்திக் கொண்டு போயிருந்தார்கள். பதற்றத்துடன் சுற்றுமுற்றும் பார்த்த போது மேசையின் மேல் கடதாசித் தாளொன்று மடித்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதனை எடுத்து விரித்துப் பார்த்தார்கள்.

"இசைக் கச்சேரிக்கு டிக்கட் அனுப்பியது யாரென்று இப்போது தெரிகிறதா?" என அதில் எழுதப்பட்டிருந்தது.

## தகவல் களஞ்சியம்

### விக்டோரியா அணை அருகே விக்டோரியா மகாராணி சிலை!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்மொழிவின்படி, விக்டோரியா அணைக்கட்டுக்கு அருகாமையில் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் அருங்காட்சியகம் ஒன்றை உருவாக்குவதற்கும், சுற்றுலாப் பயணிகள் உயரிய சுற்றுச் சூழல் அழகை அனுபவிக்கவும், உணவுப் பொருட்களைப் பெறுவதற்குமான உணவு விடுதியொன்றை நிர்மாணிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கண்டியில் நீண்ட காலம் தங்க வைக்க முடியுமென யோசனை முன்வைக்கப் பட்டுள்ளது. துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 1980ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட விக்டோரியா அணையின் பணிகள் 1984ஆம் ஆண்டு நிறைவடைந்து, அணை நீர்த்தேக்கத்துடன் இணைக்கப்பட்டு 1985 ஏப்ரல் 12ம் திகதியன்று அப்போதைய பிரித்தானியப் பிரதமர் திருமதி மார்கரெட் தாட்சர் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இந்த அணை மக்களின் நீர் நுகர்வு, வெள்ளத்தை கட்டுப்படுத்துதல், விவசாயத்துக்கான நீர் வசதி, நீர் மின்சாரம், நன்னீர் மீன்பிடி தொழிலை மேம்படுத்துதல் உட்பட பல நோக்கங்களுக்காக கட்டப்பட்டது.



விக்டோரியா அணையைச் சுற்றியுள்ள பகுதியை மிகவும் திறமையான முறையில் பயன்படுத்தவும், பொருத்தமான இடத்தில் விக்டோரியா மகாராணியின் சிலையை நிர்மாணிக்கவும் நடவடிக்கை எடுப்பதனால், நீண்ட காலமாக ஏகாந்தமாக இருந்த விக்டோரியா அணை புதிய சுற்றுலா சூழலைப் பெறும், இதனால் உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடமாக இந்த இடத்தை மேம்படுத்தவும், அதன் மூலம் உள்ளூர் பொருளாதாரத்தை வலுப்படுத்தவும் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.






கே. பத்மானந்தன் 48

# திருவள்ளுவத்தில் நிதிமுகாமைத்துவம்

நிறுவனம் ஒன்றில் *Cash management* அதாவது பண முகாமைத்துவம் என்பது மிகவும் முக்கியமான ஒன்று. உண்மையில் ஒரு நிறுவனத்தில் ஒரு செயலினைச் செயல்படுத்துவதற்கு முன் அதாவது புதிய வணிகம் அல்லது தொழில் ஒன்றினை ஆரம்பிப்பதற்கு முன் அந்நிறுவனத்தில் இருக்கும் பணத்தினை மதிப்பிட வேண்டும் அல்லது அளவிட வேண்டும். அத்தோடு நிறுவனத்தில் நடைபெறும் தொழில் செயற்பாடுகள், நிறுவனத்தின் நிதி ஆதாரம் அதன் அளவு, ஏனைய நிறுவனங்களுடன் கொண்டிருக்கும் நிதி தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் தொழில் நடவடிக்கைகள் உதாரணமாக கடன் வழங்குபவர்கள், வங்கிகள், அரசாங்கம் போன்றவை என்பவற்றுடன் நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள், வாடிக்கையாளர்கள் போன்றவர்கள் பற்றிய தெளிவான விபரங்கள் முகாமையாளரிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் சிறப்பான நிதி முகாமைத்துவத்தை முகாமையாளர் ஒருவரினால் செய்ய முடியும்.

இக்கருத்துக்களை கீழ் வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

**"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்" (குறள் 471)**

அதாவது செயலின் வலிமையும், தன் வலிமையும், பகைவனுடைய வலிமையும், இருவர்க்கும் துணையானவரின் வலிமையும் ஆராய்ந்து செய்யவேண்டும் என்பது இக்குறளின் பொருளாகும். செயல், அதைச் செய்பவன், அவனுக்குப் போட்டியாளன், அவனுக்குத் துணைவன் என்ற எல்லா வலிமைகளையும் சீர்தூக்கி ஆய்ந்து கருதிய செயலில் தொடங்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் எண்ணமாகும். உண்மையில் இவற்றுள் செயல்வலி, தன்வலி, துணைவலி என்னும் மூவகை வலியும் மாற்றானை விட தனக்கு மிகக் கூடுதலாக இருந்தால் அவன் தான் எண்ணிய செயலினை எந்த விதமான தடங்கலும் இன்றி மேற்கொள்ளலாம். ஆனால் இந்த மூன்றும் குறைந்து தோன்றுமாயின் தோல்வி ஏற்பட வாய்ப்பு அதிகம் என்று எண்ணி அந்தச் செயலினைக் கைவிட வேண்டும். உண்மையில் வெற்றி வாய்ப்பு குறைவு என்றால் அந்தச் செயலினைச் செய்யாது மறு சீராய்வு செய்ய வேண்டும். இதனையே திருவள்ளுவர் "இதுவே தூக்கிச் செய்வது" என்றார்.

நிதிமுகாமைத்துவத்தைப் பொறுத்த வரையில் இங்கு வினைவலி என்று நிறுவனத்தில் நடைபெறும் வணிகச் செயற்பாடுகளையும் தன்வலி என்று நிறுவனத்தின் நிதி நிலைமைகளையும் மாற்றான் வலி என்று நிறுவனத்துடன் நிதித் தொடர்பற்ற மூன்றாம் தரப்பினரையும் துணை வலி என்று நிறுவனத்திற்கு நிதி உதவி செய்யும் மூன்றாம் தரப்பினரையும் திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். எனவே நிதி முகாமையாளர் இந்த அத்தனை வலிமைகளையும் நன்கு ஆராய்ந்தே தனது நிறுவனத்தின் நிதி முகாமைத்துவ திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உண்மையில் இங்கு திருவள்ளுவர் கூற வருகின்ற இன்னுமொரு முக்கிய கருத்து என்னவென்றால் செயல் ஒன்றில் இறங்குவதற்கு முன் நிறுவனத்தில் உள்ள நிதி வலிமையை அதாவது நிறுவனத்தில் உள்ள பணத்தின் மதிப்பை அதன் அளவை அளவிடுவதுடன் நிதி தொடர்பான செயற்பாடுகளை கவனத்தில் கொள்ளுங்கள் என்பதாகும். நிறுவனத்தில் உள்ள பணத்தின் அளவினை அதன் மதிப்பினை அளவிட வேண்டும் என்று கூறுவதன் மூலம் அந்த நிறுவனத்தில் போதுமான பணப் புழக்கத்தினை முகாமையாளர் பராமரிக்க வேண்டும் (*Maintain adequate liquidity*) என்பதனை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். அதேவேளை நிறுவனத்தின் வருமானங்கள் மற்றும் செலவுகளின் ஆதாரங்களை (வினைவலி), நிறுவனத்திற்கு உள்வரும் கொடுப்பனவுகள் மற்றும் அது தொடர்பான



சிட்டைகளை (தன்வலி), திருப்பிச் செலுத்த வேண்டிய வங்கிக் கடன்கள், மானியம், வட்டி வரி போன்றவற்றை (மாற்றான் வலி), நிறுவனத்திற்கு வரவேண்டிய நிலுவைகளை (துணைவலி) எல்லாம் நிதி முகாமையாளர் கருத்தில் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையினைத் திருவள்ளுவர் இந்த ஈரடியில் கூறுகின்றார். முகாமையாளர் கருத்தில் கொள்ள வேண்டிய இன்னுமொரு முக்கியமான விடயம் என்னவென்றால் அவர் நிறுவனத்தில் நிதியினது சீரான இயக்க சுழற்சியினை ஊறுதி செய்ய வேண்டும் ( *Smooth working capital operating cycle*). அதாவது மூலப்பொருளைப் பெறுவதில் தொடங்கி பணமாக மாற்றுவது வரையிலான சுழற்சி சீராக இருக்க வேண்டும். இது எளிதானது அல்ல, ஐந்து பந்துகளை இரண்டு கைகளால் ஒரு கையை விடாமல் மேல் கீழாகச் சுற்றுவது போல் சிக்கலானது. முகாமையாளர் ஒருவர் பல ஆண்டுகளாக இயங்கும் நிறுவனத்தில் சுழற்சியைக் கண்காணிப்பது என்பது அந்த நிறுவனத்தில் வணிகம் எவ்வாறு நிதி ரீதியாகச் செயல்படுகிறது என்பதைக் கணக்கிடுவதற்கான சிறந்த வழியாகும். அதன் செயல்திறன் மற்றும் செயல்பாடுகள் எவ்வளவு சீராக இயங்குகின்றன என்பதை தீர்மானிக்கவும் இது உதவும்.

ஒரு நிறுவனத்தின் இயக்கச் சுழற்சி என்பது தொழில்துறையைச் சார்ந்தது என்றாலும், போட்டியாளர்களுடன் நிறுவனத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு அதன் இயக்கச் சுழற்சியை அறிவது பயனுள்ளதாக இருக்கும். இயக்கச் சுழற்சி தொடர்பான கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடிகளில் சிறப்பாக விளக்குகின்றார் .

**"ஒல்வ தறிவது அறிந்ததன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்". (குறள்.472)**

ஒருவர் தனக்குப் பொருந்தும் அல்லது தன்னால் செய்யக்கூடிய செயலை அறிந்து அதற்காக அறிய வேண்டியவற்றையும் அறிந்து பின்பு அதனிடம் நிலைத்து நின்று முயன்றால் அவரால் முடியாதது ஒன்றும் இல்லை என்பது குறளின் பொருள்.

உண்மையில் ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் தமக்குள்ள வலிமையைத் தெரிந்து கொண்டு, தாம் செய்ய விரும்பும் செயல் பற்றிய செய்திகளை முழுதும் அறிந்து கொள்ளவேண்டும். இதனையே திருவள்ளுவர் "ஒல்வதற்கு அறிவது அறிந்து" என்கிறார்.

அவ்வாறு அறிந்தபின் அந்தச் செயலின் மேல் கண்ணும் கருத்துமாக இருந்தால் அவரினால் தான் நினைத்த செயலினைச் சிறப்பாகச் செய்ய முடியும். அதனையே திருவள்ளுவர் "அதன் கண்தங்கிச் செல்வார்க்கு" என்கிறார். எனவே முகாமையாளர் செய்ய இயலுமான தொழிலைத்தான் மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று அத்தொழிலைச் செய்வதற்கான அறிவு, திறன்கள், வளங்கள் என்பவற்றை ஆராய்ந்து அதன் பின்பு அச்செயலிலே முழுச் சிந்தனையையும் நிறுத்தி முனைப்புடன் ஈடுபட்டால் அவரால் இயலாத செயல் என்பது ஒன்று இல்லை என்பதனையே திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்.

மேலும் அதன்கண் தங்கிச் செல்வது என்று குறிப்பிடுவதன் மூலம் முகமையாளரைப் பொறுத்த வரையில் குறிப்பாக நிதி முகாமையாளரைப் பொறுத்த வரையில் நிறுவனம் நிதி ரீதியாக எவ்வாறு இயங்குகின்றது என்பதனை அறிவதற்கு முறையான ஆய்வு ஒன்றைச் செய்து நிறுவனத்தில் இருந்து பணம் வெளியேறுவதற்கும் நிறுவனத்திற்குப் பணம் உள்வருவதற்கும் இடையில் ஒரு சமநிலையைப் பேணவேண்டும் என்பதனை திருவள்ளுவர் கூறுகின்றார்.

அதேபோன்று நிதி முகாமையாளர் ஒரு நிறுவனத்தில் சமநிலையான பண நிலையை பராமரிக்க வேண்டும் (*Maintain balanced cash position*). நிதிமுகாமையாளர் நிறுவனத்தில் இருக்கின்ற நிதி நிலமைக்கு ஏற்பவே கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டும் ஒரு போதும் நிறுவனத்தின் நிதி நிலைமையினை நன்கு ஆராயாமல் கொடுப்பனவுகளின் வேகத்தினை அதிகரிக்கக்கூடாது. இவ்வாறு நிறுவனத்தின் நிதி நிலைமைகளை ஆராயாமல் கொடுப்பனவுகளை மேற்கொண்ட பல நிறுவனங்கள் இடை நடுவில் நட்டமடைந்து அல்லது திவாலாகி மூடப்பட்டிருக்கின்றன. இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார் .

**"உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி**
**இடைக்கண் முரிந்தார் பலர்". (குறள். 473)**

அதாவது தம்முடைய வலிமை இவ்வளவு என்று அறியாமல் வெறும் ஊக்கத்தால் முனைந்து ஒரு செயலினைத் தொடங்கி இடையில் அதை முடிக்க வகையில்லாமல் அழிந்தவர் பலர் என்கிறார் திருவள்ளுவர். உணர்ச்சி வேகத்தில் எந்த ஒரு செயலையும் தொடங்குபவர்கள் அச் செயலின் இன்றியமையாக் கூறுகளைக் கருத்தில் கொள்வதில்லை. எனவே இத்தகைய நிலமை சூதாடுவது போலாகி தொழில்கள் முடங்கிப் போவதற்கான வாய்ப்புக்களையே ஏற்படுத்தும் என்பது அனுபவம். எனவே நிதி முகாமையாளர் தனது நிறுவனத்தின் தொழில் முயற்சி வெற்றி பெற வேண்டும் என்று எண்ணினால் தனது நிறுவனத்தின் நிதி நிலைமையினை நன்கு அறிந்து திட்டமிட்டுப் பதட்டமின்றிச் செயல்படவேண்டும். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செயற்படாது நிறுவனத்தில் சமநிலையான பண நிலையை பராமரிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

(தொடரும்)



அன்புடைமை: அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்
ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும்....

**தெளிவுரை :**
உள்ளத்தில் இருக்கும் அன்பைத் தாழ்ப்பாள் போட்டு அடைத்து வைக்க முடியாது. அன்புக்குரியவரின் துன்பங்காணுமிடத்து, கண்ணீர்த்துளி வாயிலாக அது வெளிப்பட்டுவிடும்.

# இவ்வார மழலை




Thayani / taeeb

# வருவது வரட்டும்



ஒரு சமயம் சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்குச் சென்றிருந்தார். அங்கு அவரது நண்பர் ஒருவரின் பண்ணை வீட்டில் தங்கியிருந்தார். அந்தப் பண்ணை வீடு மிகப் பெரிய நிலப்பரப்பில், இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் இருந்தது. அங்கே நிறைய மாடுகள் வளர்க்கப்பட்டன.

ஒரு நாள் மாலை, பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருந்தார். அவருடன் நண்பரும். நண்பரின் மனைவியும் நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது, சற்றும் எதிர்பாராதவிதமாக ஒரு மாடு அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்தது. அதன் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்து பயந்து போன நண்பரின் மனைவி, அப்படியே மயங்கி விழுந்துவிட்டார். நண்பர் மனைவியைத் தூக்க முயன்றார். அப்போது மாடு அவர்களை நெருங்கிவிட்டது. நண்பருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இன்னும் சில நொடிகள் அங்கே இருந்தால் மாட்டின் கொம்புகளுக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்த நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள எழுந்து வேறு திசையில் ஓடினார்.

ஆனால், விவேகானந்தர் அங்கும் இங்கும் அசையாமல் அப்படியே அந்த இடத்தில் நின்று விட்டார். பாய்ந்து வந்த மாடு கீழே விழுந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் விட்டு விட்டு ஓடிக் கொண்டிருந்த நண்பரைத் துரத்தியது. அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டத்திற்குள் புகுந்து தப்பினார் நண்பர். அதன் பிறகே பண்ணை ஊழியர்கள் ஓடி வந்து மாட்டைப் பிடித்துக் கட்டிப் போட்டனர். அப்போது தான் விவேகானந்தர் அந்த இடத்தை விட்டு அசைந்தார். அங்கு வந்த நண்பருக்கோ ஒரே வியப்பு. அப்போது நண்பரின் மனைவியும் மயக்கம் தெளிந்து எழுந்தார்.

'சிறிது கூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்தில் உறுதியாக உங்களால் எப்படி நிற்க முடிந்தது?" என்று கேட்டார் நண்பர். அதைக் கேட்டு மெல்லப் புன்னைகைத்த விவேகானந்தர், நான் வித்தியாசமாக எதையும் செய்து விடவில்லை. வருவது வரட்டும்! சமாளிப்போம் என்ற ஒருவித மன உறுதியுடன் நின்று விட்டேன். ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது மிருகங்களுக்கு உரிய குணம். அதனால் தான் மாடு என்னை விட்டு விட்டு, ஓடிக் கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது என்றார்.

உயிருக்கு ஆபத்தான நேரத்தில் கூட, அதைக் கண்டு பயந்து ஓடாமல் வருவது வரட்டும் என்ற மன உறுதி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரைப் பார்த்து பெரிதும் வியந்தார் நண்பர்.



மெலோ மெலோ முத்து என்பது உலகின் மிக அரிதான முத்து ஆகும். இது கடல் நத்தை மூலம் உருவாகிறது. இதன் மதிப்பு 25,000 டொலராகும்.



சிகாகோவில் 1936ஆம் ஆண்டு பயன்படுத்தப்பட்ட "மெர்குரி" ரயில்



இது மெக்சிகோவின் மரியெட்டா தீவுகளில் மறைக்கப்பட்ட ஒரு சிறிய கடற்கரை. இது உலகப் போரின்போது வெடிகுண்டு வெடிப்பால் உருவானதாக சொல்லப்படுகிறது.



ஜப்பானில் உலகின் மிகக் குறுகிய எஸ்கலேட்டர் உள்ளது. இதில் 5 படிகள் மட்டுமே உள்ளன.

# வான்கோழி



★வான்கோழிகள் கோழியை விட பெரிதாகவும் பெரிய இறக்கைகளும், குட்டையான வாலும் உடையது.

★காட்டு வான்கோழிகள் மணிக்கு 55 மைல்கள் (மணிக்கு 89 கி.மீ) வேகத்தில் பறக்க கூடியது. வான்கோழியின் இறக்கைகள் மிகவும் சிறியதாகவும் அவற்றின் பறக்கும் தசைகள் மிகவும் பெரியதாகவும் கடினமாகவும் இருப்பதால், அவை காற்றில் ஏவுவதை கடினமாக்குகின்றன. ஆகையால் குறுகிய தூரத்திற்கு மட்டுமே பறக்க முடியும்.

★வான்கோழிக்கு சிறந்த பார்வை உள்ளது. அதன் கண்கள் அதன் தலையின் பக்கத்தில் இருப்பதால், வான்கோழிக்கு பெரிஸ்கோப் பார்வை உள்ளது. தனது தலையைச் சுழற்றுவதன் மூலம், 360 டிகிரி பார்வைப் புலத்தைக் கொண்டுள்ளது.

★ஆண் வான்கோழிகள் மட்டுமே கும்மாளமிடும் வான்கோழிகள் பலவிதமான ஒலிகளை உருவாக்குகின்றன.

★ஆண்களால் மட்டுமே இனச்சேர்க்கை காலத்தில் ஒலியை எழுப்ப முடிகிறது. இதன் விளைவாக, ஆண் வான்கோழிகள் "Gobble" என்றும், பெண்கள் "கோழிகள் (hens)" என்றும் அழைக்கப்படுகின்றன.

★காட்டு வான்கோழிகள் மரங்களில் தூங்குகின்றன. வான்கோழிகள் தங்கள் பெரும்பாலான நேரத்தை தரையில் செலவிடுகின்றன. ஆனால் தூங்கும் நேரம் வரும்போது, அவை மரங்களுக்கு பறக்கின்றன.

★வான்கோழிகள் தரையில் உள்ள புல், விதைகள், கொட்டைகள், பெர்ரி மற்றும் வெட்டுக்கிளிகள் போன்ற சிறிய பூச்சிகளை உணவாக எடுத்துக் கொள்கின்றன.

★ஒரு வான்கோழியின் மூக்கின் மேல் நீண்டிருக்கும் சதைப்பற்றுள்ள இணைப்பு, பொருத்தமான துணையை கண்டுபிடிப்பதற்கானது.

★வான்கோழியின் உணர்ச்சிகளை அதன் தலையின் நிறத்தைக் கொண்டு சொல்லலாம்.

★வான்கோழிகளுக்கு இரண்டு வயிறுகள் உள்ளன. அவற்றில் முதலாவது சுரப்பி வயிறு என்று அழைக்கப்படுகிறது. அங்கு உணவு மென்மையாக்கப்பட்டு இரைப்பை சாறுகளால் உடைக்கப்படுகிறது. பின்னர் வான்கோழியின் குடற்பையில் நுழைகிறது. இது மிகவும் தசைநார் மற்றும் மேலும் முழுமையான செரிமானத்திற்காக குடலுக்குள் சுரப்பி வயிற்றில் நகர்த்துவதற்கு முன் இரைப்பைக்கு எதிராக அரைப்பதன் மூலம் உணவை மேலும் கரைக்கிறது.

★காடுகளில், வான்கோழிகளின் சராசரியாக சுமார் 3 முதல் 5 ஆண்டுகள் வாழும். வான்கோழியின் இனத்தைப் பொறுத்து, சரியாகப் பராமரித்தால், 10 ஆண்டுகள் வரை வாழும்.

★ஒரு முட்டையே போடும். அவை குஞ்சு பொரிக்க சுமார் 28 நாட்கள் ஆகும். ஒரு வான்கோழி பொதுவாக 7 முதல் 14 முட்டைகள் வரை இடும்.

★கோடை காலத்தில் வான்கோழிகள் பெரிய குழுக்களாக கூடிவர ஆரம்பிக்கும்.

# இயற்கை அழகை நேசிப்போம்

பேராதனைப் பூங்கா செல்லுவோம்
இயற்கை அழகினை நேசிப்போம்
காணாத பூக்கள் எல்லாமே
கண்டு களித்து மகிழ்ந்திடுவோம்

உலக நாட்டு பூக்களெல்லாம்
வண்ண வண்ண நிறங்களில்
பூத்துக் குலுங்கி காட்சிதரும்
மனங் குளிரப் பார்க்கலாம்

மனங் கவரும் சோலைகள்
கண்களை கொள்ளை கொண்டிடும்
மனதில் இனிமை பொங்கிட
பூக்களின் வாசம் வீசிடும்.

ஓங்கி உயர்ந்த மரங்களும்,
இலங்கை வடிவில் தடாகமும்
உருண்டு பிரண்டு விளையாட
தொட்டில் போல மைதானமும்

கையிலு ள்ள தொலைபேசியால்
ஓடி ஆடிப் படம் பிடிப்போம்
கண்ணில் தோன்றும் காட்சியெல்லாம்
தேடித் தேடி படம் பிடிப்போம்.

இயற்கை எழிலின் பசுமையினை
இன்பத்தோடு ரசிக்கலாம்
பரி சுத்தமான காற்றினை
தினந் தோறும் சுவாசிப்போம்.

சுற்றுலா செல்லும் பிள்ளைகாள்
பேராதனைப் பூங்காவைத் தவறாமல்
அங்கே சென்று நாமெல்லாம்
இயற்கை அழகை நேசிப்போம்.

இக்பால் அலி...✍

# இக்லூ கஃபே



இந்தியாவின் முதல் மற்றும் ஆசியாவின் மிகப்பெரிய இக்லூ கஃபே, காஷ்மீரின் குல்மார்க்கில் அமைந்துள்ளது. காஷ்மீர் பள்ளத்தாக்கில் இது ஒரு புது வகையான உணவகமாக அமைந்துள்ளது..

காஷ்மீரின் குல்மார்க் ஒரு பிரபலமான பனிச்சறுக்கு இடமாகும். இது பிர் பஞ்சால் பகுதியில் (Pir Panjal) அமைந்துள்ளது. உள்ளூர்வாசிகளுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஒரு புதிய அனுபவத்தைத் தருவதற்காக இந்த இக்லூ கஃபேயை கட்டியதாக கூறப்படுகிறது.

இக்லூஸ் பொதுவாக பின்லாந்து, சுவிட்சர்லாந்து மற்றும் கனடா போன்ற குளிர்ந்த இடங்களில் காணப்படுகிறது. ஆனால் இந்தியாவுக்கு இது புதியது.

இக்லூ, 22 அடி அகலமும் 12.5 அடி உயரமும் கொண்ட அளவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 16 நபர்கள் அமர்ந்து உண்பதற்கு ஏற்ற வகையில் இது அமைந்துள்ளது.

இக்லூ கஃபே, டேபிள்கள் மற்றும் இருக்கைகள் பனியால் செய்யப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்களுக்கு அரவணைப்பையும் வெதுவெதுப்பான தன்மையையும் அளிக்க, ஒவ்வொரு பனி இருக்கைகளிலும், ஒரு செம்மறி தோல் போர்த்தப்பட்டுள்ளது.

விளக்குகள் வைத்திருப்பதற்காக சிறிய அளவிலான டேபிள்களும் உள்ளன. இதுவும் பனியால் செய்யப்பட்டுள்ளது.



துவாரகன்...✍

# விண்வெளியில் பால்வெளிக்கு வெளியே கோள் கண்டுபிடிப்பு

விண்வெளியில் பால்வெளிக்கு வெளியே கோள் இருப்பதற்கான அறிகுறிகளை வானியல் வல்லுனர்கள் கண்டுபிடித்துள்ளனர். அமெரிக்காவின் விண்வெளி கழகமான நாசாவின் சந்திரா எக்ஸ்ரே தொலைநோக்கி மூலம் இந்த கோள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இது பால்வெளியில் இருந்து 2.8 கோடி ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.

இந்த புதிய கோளின் கண்டுபிடிப்புக்கு எம் 511 என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த புதிய கோள் கிட்டத்தட்ட சனி கிரகத்தின் அளவை கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாம் பால்வெளிக்கு வெளியே ஒரு கிரகத்தை பார்க்கிறோம் என்பது உறுதிப்படுத்த சில ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருக்கும். சுற்றுப்பாதைக்கு எவ்வளவு நேரம் எடுக்கும் என்பது பற்றி நிச்சயமற்ற தன்மை நிலவுவதால் அதை எப்போது பார்க்க முடியும் என்பது எங்களுக்கு தெரியாது என்று கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் இணை ஆசிரியர் நியா இமாரா கருத்து ஒன்றை தெரிவித்துள்ளார்.

தற்போது விண்வெளியில் ஏராளமான கோள்கள் சுற்றி வருகின்றன. சூரிய மண்டலத்தில் இல்லாத 5 ஆயிரம் புறகோள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. பூமி சூரியனை சுற்றுவதை போல இந்த புறகோள்கள் மற்ற நட்சத்திரங்களை சுற்றி வருகின்றன. அவைகள் நாம் வாழும் பால்வெளி கெலக்சிக்கு உள்ளே தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 72

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 07 | | 08 | | 09 | |
| 10 | 11 | | 12 | | 13 |
| 14 | 15 | 16 | 17 | | 18 |
| | | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | | | 26 |

பெயர் ........................................
வகுப்பு ........................................
தொலைபேசி இல ........................................
பாடசாலை பெயர் ........................................
வதிவிட முகவரி ........................................
........................................
............................ ............................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) இலங்கையில் பௌத்த மதத்தவரின் பிரதான வணக்கத்தலமாகக் கருதப்படுவது. நாட்டின் மத்தியமாகாணத்தில் அமைந்துள்ள புனிதத்தலம்.
(10) விவசாயச் செய்கையில் பாதிப்பைத் தருகின்ற, தேவையற்ற தாவரங்கள் இப்பெயர் பெறும். பயிர்களுக்குள் தானாகவே வளர்கின்ற இவ்வாறான செடி, கொடி, புல், பூண்டுகளை விவசாயிகள் பிடுங்கி அகற்றுவது வழக்கம்.
(14) அகங்காரம் என்பதன் மற்றொரு சொல் இது. மமதை, செருக்கு, ஆணவம் என்றெல்லாம் கூறலாம். (தலைகீழான சொல்)
(19) தாமரையை இவ்வாறும் குறிப்பிடலாம்.
(23) வார்த்தைகளை சரியாக உச்சரித்துப் பேசுவதற்கும், உணவை நன்கு மென்று உண்பதற்கும், உணவின் சுவையை உணர்ந்து கொள்வதற்கும் அவசியமான உடலங்கம்.(தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) மிகவும் பெறுமதி வாய்ந்த உலோகம். மற்றைய பதார்த்தங்களுடன் தாக்கம் புரியும் இயல்பு குறைவென்பதால், மினுமினுப்புக் குன்றாத உலோகம். ஆபரணத் தயாரிப்பில் முக்கியத்துவம் பெறுகின்றது.
(3) உலகில் நம் ஒவ்வொருவருக்கும் முதல் தெய்வம் இப்பெண்தான். (தலைகீழான சொல்)
(5) கல், மரம் போன்றவற்றை செதுக்கி சிற்பங்களை ஆக்கும்போது இந்த உபகரணம் கட்டாயம் தேவை. (தலைகீழான சொல்)
(11) எலியின் வசிப்பிடம் இதுதான். (தலைகீழான சொல்)
(12) தாய் தந்தையரின் அன்புக்கும், பாசத்துக்கும் உரியவன் இவன். (தலைகீழான சொல்)
(13) சீனி தயாரிப்பில் மூலப்பொருள் இத்தாவரம். இது ஒருவித்திலைத் தாவரம், தண்டுப்பகுதியில் இனிப்புச்சுவை கொண்ட தாவரம்.
(16) இலங்கையில் வாழ்ந்த சுதேச இனத்தவராக இரு இனங்கள் கருதப்படுகின்றன. இயக்கர் என்பவர் ஒரு இனத்தவர். மற்றைய இனத்தவர் இவர்கள். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 71

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கணினி 04. வாளி 06. தோடு 11. கர்ணன்
17. பார் 19. தேனீ 22 கதிரை

**மேலிருந்து கீழ்**

01. கடுகு 02. தோணி 05. கள்ளி , 08. உணவு
15. வேர் 17. பார் 19. தேரை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 70

### பாராட்டு பெறுவோர்

**1. அலீனா**
தரம் 08, க/ பதிஉதீன் பெண்கள் பாடசாலை,
இல. 98/A, சுஜாதா லேன், றம்புக்கன வீதி, கலகெதர

**2. நாதிர் நூரி**
தரம் 10, அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய

**3. வண. எம். ஆர்யசாந்த**
தரம் 05, தர்மபால பிரிவென, பெல்லன, அகலவத்தை.

**4. அனீஸ் பாத்திமா அப்லா**
தரம் 07, அல் அமான் மு.ம.வித்தியாலயம்,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**5. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37, கண்டி வீதி, மாத்தளை,

**6. ஸீனத் தஹானி சாட்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி

**7. ஆலயா பயாஸ்**
தரம் 05, வீதியவெல ம.வித்தியாலயம்,
வீதியவெல, நாகொலகொடை.

**8. அஸ்மா மரியம்**
தரம் 05, ஜென்னத் (ச.பா)
இல. 125/12B, எச்.கே. எட்மன் மாவத்தை, காலி.

**9. ஹிமா மர்யம் முஜாஹித்,**
தரம் 07E, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 72
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

# விளையாட்டு




# இலங்கை தடகளத்தின் திருப்பம்

தடகளத்தில் இலங்கை உலக வட்டாரத்தில் எப்படி இருந்தபோதும் ஆசிய பிராந்தியத்தில் ஒரு முக்கியமான நாடு. ஆனால் கடந்த 2019 இல் கட்டாரில் நடந்த ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் இலங்கையால் வெல்ல முடிந்தது இரண்டே இரண்டு வெண்கலப் பதக்கம் தான். இது அண்மைய வரலாற்றில் இலங்கையின் மிகப் பெரிய பின்னடைவாக இருந்தது.

என்றாலும் நான்கு ஆண்டுகளின் பின் தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்ற 25 ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி என்பது இலங்கை தனது மீள் வருகையை கூறும் போட்டியாக மாறியிருக்கிறது.

கடந்த ஜுலை 16 ஆம் திகதி நிறைவடைந்த இந்தப் போட்டியில் இலங்கை மொத்தமாக 08 பதக்கங்களை வென்றது. அதில் 03 தங்கப் பதக்கங்கள் அடங்கும். இதன்மூலம் பதக்கப் பட்டியலில் இலங்கையால் நான்காவது இடத்தை பிடிக்க முடிந்தது சிறப்பு.

சீனாவின் ஆதிக்கத்தை முறியடித்து ஜப்பான் 16 தங்கங்களுடன் முதலிடத்தை பிடித்ததோடு சீனா 08 தங்கங்களுடன் 02 ஆவது இடத்தையும் இந்தியா 06 தங்கங்களுடன் மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

இம்முறை ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் இலங்கை சார்பில் மொத்தம் 13 வீர வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் பெரும்பாலானவர்கள் குறைந்தது வெண்கலப் பதக்கத்தையேனும் வென்றிருக்கிறார்கள்.

## தருஷி கருணாரத்ன



18 வயதே ஆன தருஷி கருணாரத்ன இலங்கையின் பெருத்த எதிர்பார்ப்பாக மாறியிருக்கிறார். இந்த ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி அவரின் திறமையை மேலும் உறுதி செய்வதாக இருந்தது. இந்தப் போட்டியில் இலங்கை வென்ற எட்டு பதக்கங்களில் மூன்று தருஷியின் பங்களிப்பில் கிடைத்தன.

குறிப்பாக பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் அவர் தங்கம் வென்றதோடு அந்த ஓட்டத்தில் அவரது திறமையோடு முதிர்ச்சியும் இருந்தது.

போட்டித் தூரத்தை அவர் 2.00.66 நிமிடங்களில் நிறைவு செய்தே முதல் இடத்தை பெற்றார். இதன்மூலம் இந்தப் போட்டியில் அவர் தேசிய சாதனை படைத்ததோடு 25 ஆண்டுகள் பழமையான ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் சாதனையையும் முறியடித்தார்.

அதேபோன்று பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை வெள்ளிப் பதக்கம் வென்றபோது அதில் தருஷியின் பங்கு உண்டு. அந்தப் போட்டியில் இலங்கை மகளிர் அணி எதிர்பாராத வகையில் முன்னேற்றம் கண்டதில் தருஷியின் ஓட்டவேகம் முக்கியமாக இருந்தது. கடைசி வீராங்கனையாக வேகமாக ஓடிய அவர் இந்திய அணியை பின் தள்ளி முன்னேறுவதற்கு முடிந்தது. இந்தப் போட்டியில் இலங்கை தேசிய சாதனையையும் முறியடித்தது.

அதேபோன்று 400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியிலும் இலங்கை வெள்ளிப் பதக்கத்தை வென்றது. அந்தப் போட்டியிலும் தருஷி இடம்பெற்றார்.

இலங்கை பாடசாலை மட்டத்தில் தொடர்ந்து திறமையை காட்டி வந்த தருஷி அண்மையில் நடந்த ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

அதாவது 1993 ஆம் ஆண்டு மனிலாவில் நடந்த போட்டியில் தமயந்தி தர்ஷா பதக்கம் வென்ற பின் பாடசாலை மாணவியாக இலங்கைக்கு பதக்கம் வென்று கொடுத்த முதல் விராங்கனை தருஷி தான். அதேபோன்று தமயந்தி, சுசன்திகா ஜயசிங்க மற்றும் விதுஷா லக்ஷானிக்கு பின்னர் ஆசிய கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட சம்பியன்சிப் போட்டியில் பதக்கம் வென்றவராகவும் அவர் பதிவானார்.

## நதீஷா ராமநாயக்க



இம்முறை போட்டியில் இலங்கைக்காக முதல் தங்கப் பதக்கத்தை வென்று கொடுத்தவர் நதீஷா ராமநாயக்க. அதாவது 2017 ஆம் ஆண்டுக்கு பின் ஆசிய மெய்வல்லுனர் போட்டியில் இலங்கைக்கு தங்க வேட்டையை ஆரம்பித்து வைத்தவராக இவரை குறிப்பிடலாம்.

பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியை 52.61 விநாடிகளில் பூர்த்தி செய்து அவர் முதல் இடத்தை பெற்றார். இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 28 வயதான நதீஷா, தமயந்தி தர்ஷாவுக்கு பின்னர் 400 மீற்றர் ஓட்டத்தில் இலங்கைக்கு நம்பிக்கை தந்திருக்கிறார்.

2000 ஆம் ஆண்டு நடந்த ஆசிய சம்பியன்சிப் போட்டியில் தமயந்தி தர்ஷா போட்டி சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்ற பின்னர் இலங்கைக்காக 400 மீற்றரில் தங்கம் வென்ற முதல் வீராங்கனையாக அவர் பதிவானார்.

இதில் போட்டியை நிறைவு செய்ய நதீஷா எடுத்துக் கொண்ட காலம் அவரது தனிப்பட்ட சிறந்த காலம் என்பதோடு பெண்களுக்கான 400 மீற்றரில் இலங்கை வீராங்கனை ஒருவரின் மூன்றாவது சிறந்த காலமாகவும் இருந்தது.

தவிர பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டம் மற்றும் 400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டிகளில் இலங்கை வெள்ளிப் பதக்கம் வெல்லவும் நதீஷா உதவினார்.

## தில்ஹானி லேகம்கே



பெண்களுக்கான ஈட்டி எறிதலில் தில்ஹானி லேகம்கே வீசிய 60.93 மீற்றர் தூரம் அவர் வெண்லம் வெல்வதற்கு போதுமாக இருந்தது. ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியின் முதல் நாளில் இலங்கை வென்ற பதக்கமாக இது இருந்தது.

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த தில்ஹானி வீசிய தூரம் அவரது தனிப்பட்ட சாதனையாக இருந்ததோடு தேசிய சாதனையாகவும் அமைந்தது. 2013 ஆம் ஆண்டு நதீகா லக்மாலி 60.64 மீற்றர் தூரம் வீசிய சாதனையையே அவர் முறியடித்தார்.

என்றாலும் 2017 ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியின் பெண்களுக்கான ஈட்டி எறிதலில் அவர் 58.11 மீற்றர் தூரம் வீசி வெள்ளிப் பதக்கத்தை வென்றிருந்தார்.

## கயந்திகா அபேரத்ன



தருஷி கருணாரத்ன பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்றபோது அந்தப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றவர் கயந்திகா அபேரத்ன. தருஷி அவரை விஞ்சியபோதும் இலங்கையின் முக்கிய தடகள வீராங்கனைகளில் ஒருவராக கயந்திகா உள்ளார். தருஷி முறியடித்த தேசிய சாதனையும் கயந்திகா வசமே இருந்தது.

அதேபோன்று இம்முறை ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் அவர் மற்றொரு வெண்கலப் பதக்கத்தையும் வென்றார். அது பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப் போட்டியை 4:14.39 நிமிடங்களில் பூர்த்தி செய்தாகும்.

இம்முறை ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் பங்கேற்ற இலங்கை குழாம் கயந்திகாவின் தலைமையிலேயே செயற்பட்டது. 36 வயதான கயந்திகா 2016 ஆம் ஆண்டு நடந்த தெற்காசிய விளையாட்டு போட்டி தொடக்கம் இலங்கைக்காக பதக்கங்களை வென்று கொடுத்திருப்பதோடு 2018 ஆம் ஆண்டு ஈரானில் நடந்த ஆசிய உள்ளக சம்பியன்சிப் போட்டியின் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கம் வென்றது அவரது திறமையின் உச்சமாகும்.

## அஞ்சலோட்டம்



ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் கடைசி போட்டியாக நடைபெற்ற ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்ட போட்டியில் இலங்கையால் தங்கப் பதக்கம் வெல்ல முடிந்தது. அருண தர்ஷன, ராஜித்த ராஜகருணா, காலிங்க குமாரகே மற்றும் பபசர நிகு ஆகியோர் கொண்ட இலங்கை அணி போட்டித் தூரத்தை 3:01.56 நிமிடங்களில் பூர்த்தி செய்து தங்கத்தை வென்றது. இது இலங்கை சாதனையாகவும் போட்டி சாதனையாகவும் இருந்தது.

இதன்போது 2015 ஆம் ஆண்டு கட்டாரில் இடம்பெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் படைக்கப்பட்ட போட்டி சாதனை மற்றும் 2000 ஆம் ஆண்டு ரொஹான் பிரதீப் குமார முதற்கொண்டு இலங்கை அணி படைத்த சாதனைகளே முறியடிக்கப்பட்டன.

எல்லாவற்றுக்கும் மேலே இவர்களின் காலம் 400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இந்த ஆண்டில் உலகில் பதிவான பத்தாவது சிறந்த காலமாகவும் இருந்தது. மறுபக்கம் வெள்ளிப் பதக்கம் வென்ற 400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்ட அணி அந்த பதக்கத்தை பெற எடுத்துக் கொண்ட காலம் 3:15.41 நிமிடம். இது கூட இந்த கலப்புப் போட்டியில் இந்த ஆண்டு பதிவான உலகில் 18 ஆவது சிறந்த காலமாக இருந்தது.

இவ்வாறான கலப்பு அஞ்லோட்டம் என்பது தடகள விளையாட்டில் புதிது என்பதோடு அதில் இலங்கை பதக்கம் வெல்வதும் புதிது. என்றாலும் எதிர்காலத்தில் இது பிரபலமான போட்டி அங்கமாக மாறவிருக்கிறது என்பது மாத்திரம் தெரிகிறது. இதற்கு தயாரானால் இலங்கையால் பதக்கங்களை அள்ள முடியுமாக இருக்கும்.

## முக்கிய திருப்பம்

ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டிகளுக்கு இப்போது சரியாக 50 ஆண்டுகள் பூர்த்தியாகி இருக்கிறது. இந்த ஐம்பது ஆண்டுகளில் இலங்கை மொத்தமாக வென்ற தங்கப் பதக்கங்களின் எண்ணிக்கை 22. என்றாலும் இலங்கை முதல் தங்கப் பதக்கத்தை வென்றது 1995 ஆம் ஆண்டில் தான். அது தொடக்கம் அடுத்த 12 ஆண்டுகளில், அதாவது 2007 ஆம் ஆண்டு வரை இலங்கை 17 தங்கங்களை வென்றது. இந்த தசாப்தத்தை இலங்கை தடகள விளையாட்டின் பொற்காலம் என்று கூட குறிப்பிடலாம்.

தமயந்தி தர்ஷா, சுசந்திகா ஜயசிங்க, சுகத் திலகரத்ன போன்ற வீர வீராங்கனைகள் இந்தக் காலப் பகுதியில் இலங்கைக்கு பதக்கங்களை அள்ளினர்.

என்றாலும் 2007 தொடக்கம் 2019 வரையான அடுத்த 12 ஆண்டுகளை பார்த்தால் மேலும் இரண்டு தங்கப் பதக்கங்களையே வெல்ல முடிந்தது. இது இலங்கை தடகளத்தில் ஏற்பட்ட தொய்வை தெளிவாகக் காட்டுகிறது.

எனவே இம்முறை ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் இலங்கை வீர, வீராங்கனைகளின் திறமையை ஒரு திருப்பமாக பார்க்க முடியும்.

எனினும் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி ஒன்றில் இலங்கை பெற்ற அதிக பதக்கங்கள் என்ற சாதனை இம்முறை முறியடிக்கப்படவில்லை. 2000 ஆம் ஆண்டு இலங்கை 4 தங்கப் பதக்கங்களை வென்றதே சாதனையாகும். என்றாலும் அந்த சாதனையை தற்போது நெருங்கி இருப்பது நல்ல சமிக்ஞை.

என்றாலும் இம்முறை ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் மொத்தம் 19 நாடுகள் பங்கேற்ற நிலையில் இலங்கை நான்காவது இடத்தை பெற்றது சாதனையாகும். முன்னதாக 2002 ஆம் ஆண்டு போட்டியில் இலங்கை 6ஆவது இடத்தை பிடித்ததே சாதனையாக இருந்தது.

இம்முறை ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப்பில் பங்கேற்ற 13 வீர, வீராங்கனைகளில் 11 பேர் ஏதோ ஒரு பதக்கத்தை வென்றிருக்கிறார். இதில் இரண்டு போட்டிச் சாதனைகள் மற்றும் ஐந்து தேசிய சாதனைகள் அடங்கும்.

அடுத்து எதிர்வரும் செப்டெம்பர், ஒக்டோபர் மாதங்களில் சீனாவின் ஹங்சு நகரில் ஆசிய விளையாட்டுப் போட்டி இடம்பெறப் போகிறது. ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டிகளுடன் ஒப்பிடுகையில் பிரமாண்டமான விளையாட்டுப் போட்டி.

என்றாலும் தடகளப் போட்டிகளில் சாதிக்க முடியும் என்பதை இலங்கை அணி நிரூபித்திருக்கிறது. தாய்லாந்தில் செய்ததை சீனாவிலும் காட்டினால் இலங்கையால் பதக்கம் வெல்வது அத்தனை கடினமாக இருக்காது.

**எஸ்.பிர்தெளஸ்...**

# என்.டி.பி கிண்ணம் நாளை ஆரம்பம்




மேர்கன்டைல் கிரிக்கெட் சங்கத்தின் மூன்றாவது என்.டி.பி கிண்ண சி பிரிவு ஒருநாள் கிரிக்கெட் லீக் தொடர் நாளை (24) ஆரம்பமாகவுள்ளது.

இதில் டேவிட் பீரிஸ் குரூப் ஒப் கம்பனிஸ், நவலோக்க ஹொஸ்பிட்டல்ஸ், ஹேமாஸ் ஹோல்டிங்ஸ், கொமர்சல் வங்கி, எயார்போட் எவியேசன், டி.எப்.சி.சி வங்கி, எல்.ஓ.எல்.சி ஹோல்டிங்ஸ் ஆகிய ஏழு முன்னணி நிறுவனங்கள் பங்கேற்றுள்ளன.

ரவுன்ட் ரொபின் அடிப்படையில் நடைபெறவிருக்கும் லீக் சுற்று போட்டிகளில் மொத்தம் 21 ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஓகஸ்ட் 12ஆம் திகதி மர்கன்டைல் கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், தொடர் நாயகன் பரிசில்களையும் வழங்க தேசிய அபிவிருத்தி வங்கி (என்.டி.பி) முன்வந்துள்ளது.

# மேர்கன்டைல் கால்பந்து லீக்கில் முன்னணி நிறுவனங்கள் பங்கேற்பு

மேர்கன்டைல் கால்பந்து சங்க லீக் தொடரில் இலங்கையின் பிரபல நிறுவனங்கள் பலதும் பங்கேற்று ஆடி வருகின்றன.

மேர்கன்டைல் கால்பந்து சங்கத்தினால் நடத்தப்படும் இந்தத் தொடர் கொழும்பு 2, சிட்டி கால்பந்து லீக் வளாகத்தில் கடந்த ஜூலை 17 ஆம் திகதி ஆரம்பமானது. இந்த தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதில் பிரிவு ஒன்றில் நான்கு அணிகள் பங்கேற்றுள்ளன. அக்பர் பிரதர்ஸ், அமானா தகாபுல், எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் மற்றும் தி ட்ரவலர்ஸ் கிளோபல் நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.

பிரிவு இரண்டில் அமானா வங்கி, செலிங்கோ ஜெனரல் இன்சூரன்ஸ், டயலொக் எக்சியாட்டா, எச்.என்.பி அசூரன்ஸ், ஹட்டன் நஷனல் வங்கி, எல்.ஓ.எல்.சி பினான்ஸ், நோலிமிட், சம்பத் வங்கி, வின்ஸ் கிளோபல் சேர்விசஸ் ஆகிய ஒன்பது அணிகள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை பிரிவு மூன்றில் கொமர்சியல் வங்கி, சி.டபிள்யு. மக்கி, எச்.எஸ்.பி.சி, லங்கா அசோக் லீலாண்ட், லண்டன் ஸ்டொக் எக்ஸ்சேன்ச், நசனல் டிரஸ்ட் வங்கி, சொப்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ், ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸ், ஸ்டான்டர்ட் சாட்டர்ட் வங்கி, டீஜே லங்கா மற்றும் யூனியன் வங்கி ஆகிய நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன.

# நியூ ஸ்டார் அணி சாம்பியன்




வாழைச்சேனை நியூ ஸ்டார் கழகத்தின் ஏற்பட்டில் நடைபெற்ற கல்குடா பிரீமியர் லீக் தொடரில் வாழைச்சேனை நியூ ஸ்டார் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

ஓட்டமாவடி அமீர் அணி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இந்த தொடரின் இறுதிப் போட்டியில் அல் அக்ஸா கழகத்தை நியூ ஸ்டார் அணி தோற்கடித்தது. தொடரில் மூன்றாம் இடத்தை வேர்ல்ட் ஸ்டார் அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் இராஜாங்க அமைச்சர் அமீர் அலி இறுதி நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுலை மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram

# செந்தூரம்

2023 ஜூலை 23 ஞாயிற்றுக்கிழமை





கலைஞன் கதிரேசன் முத்துக்குமரன் 06



பல்துறைப் படைப்பாளி கலைஞர் கரீம் 13



"இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" நூல் வெளியீட்டு விழா 15

# கிப்சோஜ் கீனோவின் கதை




1968 மெக்சிகோ ஒலிம்பிக் போட்டியில் கென்ய தடகள வீரர் கிப்சோஜ் கீனோவின் போதாத காலம் அவருக்கு பித்தப்பை தொற்று ஏற்பட்டது. தாங்க முடியாத வயிற்று வலி, ஓடுவது ஒரு பக்கம் இருக்க நடப்பது கூட கஷ்டமானது.

ஆனால் கீனோவோ 10,000 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்று முன்னிலை கூட பெற்றார். ஆனால் வெற்றி தெரியத் தெரிய அதிக வலியால் அப்படியே விழுந்துவிட்டார். அங்கிருந்த உதவியாளர்கள் ஸ்ட்ரச்சரில் போட்டுக் கொண்டு அழைத்துச் செல்ல முயன்ற போது அந்த ஸ்ட்ரச்சரில் இருந்து பாய்ந்து சென்று ஓட்டத்தை பூர்த்தி செய்தார். ஆனால் பந்தயப் பாதையை விட்டு வெளியேறியதால் தகுதி இழப்புச் செய்யப்பட்டார்.

நான்கு நாட்களின் பின் 5000 மீற்றர் இறுதிப் போட்டியில் ஓட வந்தார். வலியுடனே ஓடி வெள்ளிப் பதக்கமும் வென்றார்.

மூன்று நாட்களின் பின் 1500 மீற்றர் இறுதிப் போட்டி இருந்தது. கீனோ இன்னும் குணமடையவில்லை. பந்தயம் இருக்கும் தினம் காலை மருத்துவமனையில் இருந்த அவருக்கு ஓட வேண்டாம் என்று மருத்துவர் கண்டிப்பாக கூறினார். குறுகிய தூர ஓட்டம்தான், தம்மை விட்டுவிடும்படி மருத்துவரிடம் மன்றாடினார். மருத்துவர் மறுத்துவிட்டார்.

ஆனால் மருத்துவர் அங்கிருந்து சென்ற பின் உடையை மாற்றிக்கொண்டு மைதானத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார். பஸ்ஸில் ஏறி மைதானத்திற்கு செல்வோம் என்று பார்த்தால், வாகன நெரிசலால் பஸ் நகரவே இல்லை. போட்டிக்கு வேறு நேரமாகிறது.

அந்த சந்தர்ப்பம் பற்றி பின்னொருபோது கூறிய கீனோ, "நான் தாமதித்திருந்தேன் என்பது எனக்குப் புரிந்தது. மைதானத்திற்கு சுமார் இரண்டு கிலோமீற்றர் இருந்தது. பஸ்ஸை விட்டு இறங்கி நேராக மைதானத்தை நோக்கி ஓட்டம் பிடிக்க ஆரம்பித்தேன்" என்கிறார்.

மைதானத்திற்குள் சென்றபோது 1500 மீற்றர் இறுதிப் போட்டிக்காக பெயர் அழைக்கப்பட்டுக் கொண்டிருந்தது. வலி ஒரு பக்கம், ஏற்கனவே ஓடி வந்த களைப்பு மறுபக்கம் இருக்க பந்தய பாதைக்கு சென்றார். அவருடன் 1500 மீற்றர் உலக சாதனை படைத்த அமெரிக்காவின் ஜிம் ரியுனும் இருந்தார்.

என்றாலும் அவர் அந்தப் போட்டியை உலக சாதனையுடன் நிறைவு செய்து தங்கப்பதக்கம் வென்றார். இரண்டாவது வந்த ரியுனை விட 20 மீற்றர் இடைவெளியில் போட்டியை பூர்த்தி செய்தார். 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் இத்தனை இடைவெளியில் வெற்றியீட்டிய வீரராக அவர் வரலாறு கூட படைத்தார்.

இன்று கென்யா நீண்ட தூர ஓட்டப் போட்டிகளில் சாதிப்பதற்கு கீனோதான் ஆரம்பப் புள்ளி.

# பிரிட்டனின் பயங்கர தொடர் கொலையாளி

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



பிரிட்டனைச் சேர்ந்தவர் மேரி ஆன் கொட்டன். 1852 ஆம் ஆண்டு ஒரு சாதாரண தொழிலாளியை திருமணம் முடித்தார். என்ன பரிதாபம், அவரது எட்டு குழந்தைகளில் ஏழு பேர் வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு உயிரிழந்தனர். கணவரும் உயிரிழந்தார். காரணம் அதே வயிற்றுக் கோளாறு.

மேரி இரண்டாவது திருமணம் முடித்தார். அவரும் உயிரிழக்க விரையிலேயே அவரது தாயும் மரணித்தார். பின்னர் மேரியின் எஞ்சிய குழந்தை மற்றும் இரண்டாவது கணவரின் குழந்தையும் உயிரிழந்துவிட்டார்கள். அவர் மூன்றாவது திருமணம் முடிக்க, அந்தக் கணவர் அவரை துரத்திவிட்டார்.

பின்னர் நான்காவது திருமணம் புரிந்தார். அந்தக் கணவர் மாத்திரமல்ல அவரது சகோதரி, அவரின் குழந்தை அவருக்கும் மேரிக்கும் பிறந்த குழந்தை எல்லோரும் உயிரிழந்தனர். இத்தனை நடந்தும் யாருக்கும் பெரிதாக சந்தேகம் வரவில்லை என்பதுதான் ஆச்சரியமான செய்தி.

கடைசியில் தனது கணவரின் ஏழு வயது மகன் சார்ள்ஸ் கொட்டனின் மரணம் தான் மேரியை சிக்க வைத்தது. பிரேத பரிசோதனை செய்தபோது சிறுவனின் வயிற்றில் விசம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேரி கைது செய்யப்பட்டார். பின்னரே மரணித்தவர்கள் பற்றி வெளிச்சத்திற்கு வந்தது.

அதாவது 20 ஆண்டுகளில் அவர் மொத்தம் 21 பேரை கொலை செய்திருக்கிறார். காப்புறுதி பணத்தை பெறுவதற்கே பெரும்பாலான கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. என்றாலும் அவர் சார்ள்ஸ் கொட்டனில் மரணத்திற்காகவே குற்றங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார்.

1873 மார்ச் 24 ஆம் திகதி மேரி தூக்கிலிடப்பட்டார். என்றாலும் அது சாதாரண தூக்குத் தண்டனையாக இருக்கவில்லை. பொதுவாக தூக்கு தண்டனையில் தூக்குப் போட்ட வேகத்தில் கழுத்து உடைந்தே மரணிப்பார்கள். ஆனால் மேரி தூக்கில் போடப்பட்டபோது கயிறு சிறிதாக இருந்தது. அது வேண்டுமென்று செய்யப்பட்டதாகக் கூட இருக்கலாம். அவர் தூக்கு மேடையில் மூச்சுத் திணறி வேதனையுடனேயே மரணித்தார்.

பிரிட்டனின் பயங்கர தொடர் கொலையாளியாக இன்றும் மேரியின் புகழ் நீடிக்கிறது.

# இன்றும் இயங்கும் வானியல் கடிகாரம்



செக் குடியரசு தலைநகர் ப்ராக்கில் உள்ள பழைய நகர மண்டபத்தில் அமைக்கப்பட்ட வானியல் கடிகாரம் உலகின் மூன்றாவது பழைமையான வானியல் கடிகாரமாகும். ஆனால் இன்றும் இயங்கும் உலகின் பழைமையான வானியல் கடிகாரம் என்று சாதனை படைத்திருக்கிறது.

இந்த வானியல் கடிகாரங்களின் சிறப்பே நேரம் மட்டுமின்றி வேறு பல தகவல்களையும் நமக்கு ஒருசேரத் தருவதுதான். வானியல் கடிகாரங்கள் காண்போரைக் கவர்வதோடு நேரம், நாள், சூரிய சந்திரனின் இருப்பிடம், குறிப்பிட்ட நிமித்தின் ராசி, நட்சத்திரங்கள் அமாவாசை, பௌர்ணமி நேரங்களையும் காட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும்.

இந்தக் கடிகாரத்தின் அழகை ரசிக்கவே மக்கள் கூட்டம் ப்ராக் நகருக்கு படையெடுக்கின்றனர்.

டாக்டர் : இந்த பிரச்சின சரியாக டெய்லி 15 டம்ளர் தண்ணீர் குடிக்கணும்!
நோயாளி : அது மட்டும் முடியாது டாக்டர்!
டாக்டர் : ஏன்?
நோயாளி : என் வீட்டுல 3 டம்ளர் தான் இருக்கு டாக்டர்.





கணவர் : டாக்டர்... என் மனைவி தெரியாம கூல்ரிங்ஸ் னு நினைச்சிட்டு பாட்டில்ல இருந்த பெட்ரோல குடிச்சிட்டாங்க.. என்ன பண்ணுறது தெரியல டாக்டர் ?
டாக்டர் :68 கிலோ மீட்டர் தூரத்த 1 மணி நேரத்துக்குள்ள ஓட சொல்லுங்க, பெட்ரோல் காலியா போயிடும்..



மனைவி : டிபன் வேணுமாங்க?
கணவன் : சாய்ஸ் இருக்கா?
மனைவி : ரெண்டு சாய்ஸ் இருக்குங்க!
கணவன் : என்னன்ன அது ?
மனைவி : தேவையா? தேவை இல்லையா?



சர்தார் 1: டேய் எதுக்குடா மெழுகுவத்தி ஏத்தி இருக்க?
சர்தார் 2: கரண்ட் இல்லடா..
சர்தார் 1: சரி! சரி, பேனையாவது போடு..
சர்தார் 2: லூசாடா நீ? மெழுகுவத்தி அணைஞ்சிடாது ?

நெப்போலியன் : என்னுடைய அகராதியில் முடியாது என்கின்ற வார்த்தையே கிடையாது!!
சர்தார்ஜி : இப்போ சொல்றதுல என்ன புன்னியம், அகராதிய வாங்குறப்பவே பார்த்து வாங்கணும்..





கணவன்:
உன்ன கல்யாணம் பண்ணதுக்கு பதிலா ஒரு எரும மாட்டைக் கல்யாணம் பண்ணியிருக்கலாம்.
மனைவி:
அதுக்கு அந்த எருமை மாடு ஒத்துக்கனுமே ?

நண்பன் 1 : சோப்பு டப்பாவுல எதுக்கு சின்னச் சின்ன ஓட்டை இருக்கு தெரியுமா ?
நண்பன் 2 : தெரியலயே......
நண்பன் 1 : பெரிய ஓட்டை இருந்தா, சோப்பு கீழே விழுந்திடும் !





அப்பா: உன் வகுப்புல மொத்தம் 53 பேர் தானே..?
மகன்: அட.. எப்படிப்பா சரியா சொல்றீங்க?
அப்பா: உன் ரேங்க் பார்த்தாலே தெரியுதே..!

கனவன் : அநாவசியமா! எனக்குள்ள தூங்கிகிட்டு இருக்கிற மிருகத்தை எழுப்பாத! தாங்க மாட்ட!.
மனைவி : பூனைக்குட்டிக்கு எல்லாம் நான் பயப்பட மாட்டேன்!.



# Lake house ஊடகர்களுக்கு 'நாதம் விருது' வழங்கல் விழாவில் கௌரவம்!!



**(கல்லடி குறூப்நிருபர்)**

பல்துறை ஆளுமையாளர்களை கௌர விக்கும் "நாதம் விருது" வழங்கல் விழா நேற்று மாலை மட்டக்களப்பில் மிகப்பிர மாண்டமாக இடம்பெற்றது.

*BATTINAATHAM* பிரதம ஆசிரியர் தர்மலிங்கம் தயாபரன் தலைமையில் மட்டக் களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நேற்று (16) திகதி மாலை மிகப்பிரமாண்டமாக இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதி யாக மட்டக்களப்பு மாவட்ட

அரசாங்க அதிபர் திருமதி.கலாமதி பத்மராஜா கலந்துகொண்டதுடன் நிகழ்விற்கு கௌரவ அதிதிகளாக

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் சுவாமி நீலமாத வானந்தா ஜீ, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் அதி வணக்கத்திற் குரிய கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை, மட்டக்களப்பு பெரிய பள்ளி வாசல்

மௌலவி நியாஸ், கிழக்கு பல்கலைக்க ழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை கள் நிறுவகத்தின் பணிப்பாளர் கலாநிதி. பாரதி கென்னடி உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

அதிதிகள் வரவேற்பு, இறைவணக்கம் மங்கள விளக்கேற்றல், வரவேற்புரை,

வரவேற்பு நடனம், தலைமை உரை, கௌரவ அதிதி உரை, நடனம்,

பிரதம அதிதி உரை என்பவற்றினை தொடர்ந்து பல்துறை ஆளுமையாளர் களுக்கான விருதுகள் அதிதிகளினால் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், உள்ளூர் பாடல்களுக்கான பரிசில் வழங்கி கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், இளம் கலைஞர்களின் நடனம் அரங் கேற்றப்பட்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபரினால் *BATTINAATHAM* செயலி அங்குரார்பணம் *(App Launch)* செய்து வைக்கப்பட்டது.

இதன்போது சமூக மேம்பாட்டை கருத்திற் கொண்ட கல்வி செயற்பாடுகள், பாரம்பரிய கலை மற்றும் கலாசாரம், பாரம்பரிய வைத்தியம், மகளிர் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறைக்கு எதிரான சமூகம் சார் செயற்பாடுகள், நல்லிணக் கம் சார் சமூக செயற்பாடுகள், சூழல் விழிப்புணர்வு சார் சமூக செயற்பாடுகள், விளையாட்டு துறைசார் சமூக செயற்பா டுகள், சமூகப் பொறுப்புடன் கூடிய சமூக வலைத்தள பாவனை, சமூக அக்கறை கொண்ட ஆன்மீக செயற்பாடுகள், பதவி தாண்டிய சமூக அக்கறை, தன்னலமற்ற தொண்டர் சேவை ஆகிய துறை சார்ந்து சமூகத்திற்காக சேவையாற்றிய பல்துறை ஆளுமையாளர்களாக அடையாளப்ப டுத்தப்பட்ட பல்துறைசார் ஆளுமையா ளர்கள் இதன்போது கௌரவிக்கப்பட் டதுடன், விசேடமாக சமூக அக்கறை கொண்டு ஊடக செயற்பாடுள் ஊடாக சமூகத்திற்காக சேவையாற்றி வரும் ஊட கவியலாளர்கள் பலரும் இதன்போது கௌரவிக்கப்பட்டதுடன், கௌரவிக்கப் பட்டதில் *Lake house* ஊடகவியளாளர் கள் 10 போர் அடங்குவதும் குறிப்பிடத் தக்கது.



உலகத் தமிழ் கலை பண்பாட்டு அகாடமியின் சர்வதேச தலைவரும் மறைந்த மாபெரும் பாடகர் காயல் ஷேக் முஹம்மதுவின் புதல்வருமான டாக்டர் ரஷ்மி ரூமி அண்மையில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டபோது எடுக்கப்பட்ட படங்களில் தமிழக அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொஹிதீன், அமைச்சர் மெய்ய நாதன் மற்றும் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

(தகவல் கலைஞர் கலைக்கமல்)










கனேடிய கூட்டமைப்பின் 156 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கனடாவுக்கான இலங்கை தூதரகத்தில் வரவேற்பு நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வு கொழும்பில் உள்ள தூதரகத்தில் கனடாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஷ் தலைமையில் இடம் பெற்றது. வரவேற்பு நிகழ்வில் அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவருமான அதிவணக்கத்துக்குரிய பிதா/ அருட்கலாநிதி எஸ் சந்துரூ பெர்ணாடோவும் பௌத்த மத பிக்குவான வணக்கத்திற்குரிய பேமரத்ன தேரரும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். மேலும் இராஜாங்க கல்வி அமைச்சர் அரவிந்த குமார், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல நாடுகளின் இராஜதந்திரிகள், இலங்கையில் உள்ள அனைத்து நாடுகளினதும் தூதரக தூதுவர்கள் என பலரும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

**தீ.லக்ஸ்மிதன்,**
**தீ.அனன்யா**
தம்பலகாமம் திருகோணமலை
31.07.2023





சினிமா படப்பிடிப்பாளர் தனா



ஜெயரட்ணம்



ஐயப்பன் படக்குழுத் தலைவர் விஜயராஜ்

# பல்துறைக் கலைஞன் கதிரேசன் முத்துக்குமரன்



உடப்பு தமிழ் கிராமத்தில் உடப்பு 1ம் வட்டாரத்தில் பிறந்து ஆண்டிமுனை பகுதியில் வசிக்கும் கதிரேசன் முத்துக்குமரன் ஒரு கலைஞராகவும் சித்திர ஆசிரியராகவும் நல்ல பாடகராகவும் சிற்பக் கலைஞராகவும், நாடக கதாசிரியராகவும் , நடிகராகவும் விளங்குகிறார். இவ்வாறு இவரைப் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். நாடக மேடை திரைச் சீலைகளில் ஓவியம் வரைவது, அலங்காரம் வரைவது, காட்சிகள் வரைவது இவரின் கைவந்த கலை எனலாம். இரண்டு பிள்ளைகளின் தந்தையான இவரின் குடும்பம் ஒரு கலைக் குடும்பமாகும். இவரின் மனைவி மதிவதனி. இவர், தமது கணவன் பிள்ளைகளை அன்பாக பார்த்துக் கொள்பவர்.

ஆசிரியராகவும், ஓவியத்துறையிலும், பாடல் பாடுவதிலும், நாடகத்துறையிலும் சிறந்து விளங்கும் K.முத்துக்குமரன் (K.M.குமார்) தங்களைப்பற்றி ஒரு விளக்கம் தாருங்கள். உடப்பூரைப் பிறப்பிடமாக கொண்ட கதிரேசன் முத்துக்குமரன் ஆகிய நான் தற்பொழுது பு/உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் சித்திரப்பாட ஆசிரியராக கடமை புரிந்து கொண்டு வருகிறேன். மேலும் நான் ஓவியத்துறையில் மட்டுமன்றி, இசைத் துறையிலும், நாடகத்துறையிலும் எனது பங்களிப்பை ஆற்றி வருகிறேன்.

**ஆரம்ப காலத்தில் தங்களின் கல்வி நிலை, கற்ற பாடசாலைகள் எவை?**

ஆரம்ப வகுப்பு முதல் G.C.E(A/L) வரையும் பு/உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றேன், அதன் பிறகு சித்திரப்பாடத்தில் விசேட பயிற்சியினை (Art Special Trained) அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரியிலும் கற்ற பின், மேலும் Diploma In Fine Art சான்றிதழை 'Piccaso Academy Of Arts' கல்வி நிறுவனத்தின் மூலமும் கற்று பெற்றுக் கொண்டேன்.

**உங்களுக்கு ஆசிரியர் நியமனம் எங்கு எப்பொழுது கிடத்தது.**

எனது முதல் நியமனம் பு/சாஹிரா கல்லூரியில் கிடைத்தது (2000/09/06). அதன் பிறகு பு/உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் கிடைத்தது. (2012/03/08)4.

**உங்களுக்கு கிடைத்த நியமன வகை எது?**

சித்திர ஆசிரியர்.

**நீங்கள் தற்பொழுது சித்திர ஆசிரியராக கடமையாற்றும் பாடசாலையில், மாணவர்கள் உங்களது சித்திர பாடத்தில் காட்டும் ஆர்வம் எப்படி.**

எமது பாடசாலை மாணவர்கள் சித்திரப்பாடத்தினை ரொம்ப ரொம்ப ஆர்வத்துடனும், விருப்பத்துடனும் கற்கின்றனர். ஆம் நான் கடமை புரிந்த நாளிலிருந்து இன்று வரை சித்திரப்பாடத்தில் G.C.E (O/L), G.C.E (A/L) இலங்கை பரீட்சைத்திணைக்களப் பரீட்சையில் 100% பெற்றுத்தருகின்றமை குறிப்பிடத்தக்கது.


















**கல்வித்துறையில் தற்பொழுது உங்களது பங்களிப்பு, நிலை எந்தளவு என கூற முடியுமா?**

கல்வித்துறையில் ஏனைய பாடசாலைகளில் சித்திரப்பாட வகுப்புக்களையும், கருத்தரங்குகளையும் நடாத்தி வருகிறேன். மேலும் பரீட்சைத்திணைக்களத்தின் மதிப்பீட்டுப்பணியில் பிரதம பரீட்சகராகவும் பணிபுரிந்து வருகிறேன்.

**ஓவியத்துறையில் வல்லமை படைத்த நீங்கள் இலங்கையில் எங்கெல்லாம் ஓவியம் வரைந்துள்ளீர்கள்.** பதில்: அட்டாளைச்சேனை ஆசிரியர் கல்லூரி, சாஹிரா கல்லூரி, எருக்ககலம் பிட்டி youth club, புத்தள வலய சில பாடசாலைகள், அயலிலுள்ள ஆலயங்கள், அவுஸ்திரேலியாவின் Serco நிறுவனம்.

**உடப்பில் ஓவியங்களை வரைந்த இடங்களை குறிப்படவும்.**பதில்: திரௌபதை அம்மன் ஆலயம், காளியம்மன் ஆலயம், ஐயப்பன் ஆலயம், இராக்குரிசி அம்மன் ஆலயம், கண்ணகி அம்மன் ஆலயம், மீனவர் சங்கங்கள், பாடசாலைகள்.

**சிறிய வயதில் நீங்கள் ஓவியம் வரைய முன் மாதிரியாக இருந்தவர்கள் யார்?**

எனது தந்தை, தாய், சகோதரர்கள் ஊக்கத்தோடு, பாடசாலையில் கற்பித்த ஆசியர்கள், மற்றும் எனது வகுப்பு நண்பர்களின் துணையோடும், உடன்பிறவா சகோதரன் V.முத்துக்கிருஷ்ணன் அவர்கள் குருவாக இருந்து எனது ஓவிய வளர்ச்சிக்கு தூண்டு கோலாக இருந்தனர்.

**மேலும் நீங்கள் ஒரு பாடகர். எப்போது (காலம்) இத்துறைக்குள் உள்வாங்கப்பட்டீர்கள்.**பதில்: ஆரம்பத்தில் பாடசாலை மட்டத்தில் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகளில் குழு இசைப்போட்டியில் பாடி நாங்கள் அகில இலங்கை ரீதியில் இறுதிப் போட்டிக்கு (1990) தெரிவானோம். தொடர்ந்து எனது சகோதரன் K.சிவகுமார் இசையில் ஸ்ரீ கந்தசுவாமி இசைக்குழுவில் (1997) பிரதான பாடகனாக பாடினேன், இதைத் தொடர்ந்து V.வேல்முருகன் இசையில் கதிராவின் 'ஹரிராம்ஸ்' இசைக்குழுவிலும் (2002) முன்னணிப்பாடகனாக பாடினேன்.

**நாடகத்துறையில் கதை, வசனம் எழுதி, இயக்கி நடிப்பதாக அறிந்தேன். அது பற்றி சொல்லுங்கள்.**

எனது தந்தை மேடை நாடக கலைஞராக இருந்ததனால் அந்த ஆர்வமும், ஊக்கமும் எனக்குள் உருவானது. ஆரம்பத்தில் பாடசாலை நாட்களில் மாணவர் மன்றங்களில் நாடகங்களை எழுதி நண்பர்களுடன் நடித்தேன். அதற்குப்பிறகு எமது ஊரில் திரௌபதை அம்மன்ஆலய வருடாந்த திருவிழாவின் போது விசேட தினங்களில் வட உடப்பு ஸ்ரீ கந்தசுவாமி நாடக மன்றத்தில் எனது கதை, வசனத்தில் பல நாடகங்களை மேடை ஏற்றி, அன்றும் இன்றும் நடித்தும், இயக்கியும் சிறப்பித்துக் கொண்டிருக்கிறேன். எனது கதை, வசனத்தில் அரங்கேற்றிய நாடகங்கள் இவை. நீயின்றி நானில்லை(1998), வசந்த நிலா(1999), எனெக்கெனப் பிறந்தவளே(2000), ஞாபகம் வருதே(2005), அன்பே ஆருயிரே(2006), தீண்டாதே(2008), அழகே கொள்ளுதே(2011), தொடுவானம்(2016), ஏதோ வானிலை மாறுதே(2022).

**நீங்கள் இதுவரை பெற்ற விருதுகள் எவை?**பதில்: 'ஓவியக்கலைஞர்' (1997 இந்து கலாச்சார அமைச்சு), 'கலாரத்ன விபூசன்' (2022 அகில இலங்கை கிராமியக் கலை ஒன்றியம்), 'கலாவிபூசணம்' (2023 Shangkavi Film Pvd Ltd)13.

**இலங்கையின் அரச விருதான 'கலாபூசணம்' 60 வது வயதில் கிடைக்கும். அதற்குரிய தகவல்கள் சேகரித்துள்ளீர்களா?**

ஆம் அதற்குரிய ஆவணங்களை சேகரித்துள்ளேன்.

**பொது சேவைகள் ஏதும் செய்வதுண்டா?**பதில்: ஆலய திருப்பணி வேலைகளில் ஈடுபடுகின்றேன்.15.

**உடப்பில் ஏதும் 'சித்திரக்கண்காட்சி' நடாத்தும் எண்ணம் உண்டா?**பதில்: 1989 ல் உடப்பு ஶ்ரீ கிருஷ்ணா இளைஞர் அமைப்பினால் நடாத்தப்பட்ட கண்காட்சியில் எனது ஓவியங்களும் காட்சிப்படுத்தப் பட்டன. மேலும் 2001 ல் புத்தளம் சாஹிரா கல்லூரியில் நடாத்திய கண்காட்சியிலும் எனது ஓவியங்கள் கண்காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் உடப்பு மண்ணில் எமது கலைஞர்களின் ஆக்கங்களையும், மாணவச் செல்வங்களின் ஆக்கங்களையும் வைத்து கண்காட்சி ஒன்றை நடாத்த திட்டமிட்டுள்ளேன். அது கூடிய கெதியில் நடைபெறும்.

**தற்பொழுது பொது இடங்களில் சித்திரங்கள் வரைவதுண்டா?**

ஆம், விளம்பரச்சித்திரங்கள், மற்றும் சமூக சீர்திருத்த ஓவியங்கள் வரைந்ததுண்டு.

**'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பார்கள், அதன்படி எதிர்கால இளம் சமுதாய மாணவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரை என்ன?**பதில்: 'கலையை கலைக்காக கற்க வேண்டும் பொழுது போக்காக வேண்டாம்'. விருப்பத்தோடு கற்க வேண்டும். ஓவியக்கலையானது கல்வியோடு மட்டுமன்றி கலைத்தொழிலாகவும் எமது வாழ்வுக்கு கரம் கொடுக்கும்.

நேர்காணல்
**க.மகாதேவன்**
(உடப்பு குறூப் நிருபர்)



# உளவியல் துறையில் சாதித்து வரும் இளம் எழுத்தாளர் முஹம்மது நஜீம் பாத்திமா நலீபா

(கடந்த வாரத் தொடர்)

மனவெழுச்சி சமநிலையின்மைகளும் உளவியல் பலவீனங்களுமே குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு பின்னணியாக இருக்கிறதா..?

ஆம் நிச்சயமாக. ஒவ்வொருவருக்கும் புரிந்துணர்வு மற்றும் பொறுமை அவசியம். அந்த புரிந்துணர்வு மற்றும் பொறுமை இன்மையால் அதிக குடும்ப வாழ்க்கையில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

எந்த சமூகமும் விதிவிலக்கல்ல என்று எண்ணுமளவுக்கு சில தம்பதிகளிடையே உளரீதியான விவாகரத்து Psychological Divorce நிகழ்ந்து விடுகிறதே இதற்கு என்ன காரணம்?

திருமண வாழ்வானது பலரது வாழ்வில் முரண்பாடுகள் காரணமாக பாதியிலே கலைந்து போகிறது. உள்ளங்கள் முரண்படும்போது சந்தோசமாக இணைந்து வாழ்வது என்பது சாத்தியமற்றது. அவ்வாறுதான் திருமண வாழ்விலும் கணவன் மனைவி இருவரிடத்திலும் உள முரண்பாடு தோன்றும் சமயத்தில் குடும்ப வாழ்வில் சந்தோசம் இழக்கப்பட்டு திருமண வாழ்வானது விவாகரத்திற்கு இட்டுச் செல்கிறது. பொதுவாக இவர்கள் உளரீதியாக விவாகரத்து பெற்றதன் பின்னரே நீதிமன்றங்களை நாடி முறையாக விவாகரத்தை பெற்றுக் கொள்கின்றனர். இவ் விவாகரத்துக்கள் பல்வேறு காரணங்களினால் இடம் பெறுகிறது.

அதுமாத்திரமன்றி விவாகரத்து என்பது தற்கால சமூகத்தில் ஓர் சாதாரண விடயமாக காணப்படுவது வருந்தத்தக்க ஒன்றாகும்.

கணவன்,மனைவி உறவில் பிரிவை தடுக்க உதவும் சில முன்மாதிரிகள்...

கணவன்மனைவி

ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசாதது, நேரம் செலவழிக்காதது போன்ற காரணங்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். அதனால், இருவர் மட்டும் எங்காவது வெளியே சென்றுவரலாம். அது ஒரு நாள் இன்பச் சுற்றுலாவாக இருப்பது சிறப்பு.

கணவன்மனைவி உறவு, காதல், நட்பு என்று நீண்ட கால உறவு எதுவாக இருந்தாலும், அதில் சில விலகல் இருவருக்குள்ளும் ஏற்படுவது இயற்கையானது. உறவுக்குள் சலிப்பு தன்மை தோன்றும். விவாகரத்து அதிகரிக்க இதுவும் ஒரு காரணமாகச் சொல்லப்படுகிறது. இவ்வாறு கணவன்மனைவி உறவுக்குள் பிரிவு நேராமல் காப்பதற்கு ஏழு வழிகள் உண்டு.

1. ஆலோசனை அவசியம்

பிரச்சினையை உங்கள் மனதுக்குள் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்காமல், உங்கள் நம்பிக்கைக்கு உரிய ஒருவரிடம் கருத்து கேட்கலாம். உங்கள் மனதை அரித்துக்கொண்டிருக்கும் சிக்கலு க்கு அவர் எளிதாகத் தீர்வு சொல்லக்கூடும்.

2. எழுதிப் பாருங்கள்

உங்கள் கணவரிடம் உங்களுக்குப் பிடித்தது எது, உங்கள் இருவருக்குள் பிரச்சினை எதனால் ஏற்படுகிறது என்பதை எந்தவிதமான சமரசமும் இல்லாமல் எழுதுங்கள். அதைப் படிக்கும்போது, நீங்கள் செய்யும் தவறு என்ன? என்பது புரிந்து மனம் தெளிவாகும்.

3. தயக்கம் தவிருங்கள்

கணவன்மனைவி உறவுக்குள் இருக்கக் கூடாதது தயக்கம். இருவரும் தங்கள் தேவை என்ன, எதிர்பார்ப்பு என்ன என்பதை, எவ்வித தயக்கமோ, கூச்சமோ இல்லாமல் தங்கள் துணையிடம் சொல்ல வேண்டும். 'அவர் ஏதாவது நினைத்துக்கொள்வாரோ?' என்று அனைத்தையும் மனதுக்குள் போட்டு மூடி வைப்பதுதான் ஒரு நாள் பெரிதாக வெடித்துவிடுகிறது.

4. பெரியவர்களிடம் கேளுங்கள்

முன்பெல்லாம் கூட்டுக்குடும்பமாக இருந்தபோது, சிறியவர்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால் வீட்டுப் பெரியவர்கள்தலையிட்டு தீர்த்துவைப்பார்கள். தனிக்குடும்பங்களில் அது சாத்தியமில்லை என்பதால், குடும்ப பெரியவர்கள் அல்லது மனநல ஆலோசகர்களை அணுகலாம்.

5. சுற்றுலா செல்லுங்கள்

கணவன்மனைவி ஒருவருக்கொருவர் மனம் விட்டு பேசாதது, நேரம் செலவழிக்காதது போன்ற காரணங்களால் பிரச்சினைகள் அதிகரிக்கும். அதனால், இருவர் மட்டும் எங்காவது வெளியே சென்றுவரலாம். அது ஒரு நாள் இன்பச் சுற்றுலாவாக இருப்பது சிறப்பு.

6. பரிசு அவசியம்

கணவன்மனைவி இருவருமே, அவ்வப்போது ஏதாவது திடீர் பரிசு கொடுத்து அசத்தலாம். அது பணம் செலவழித்து வாங்கும் பொருளாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.

7. திட்டமிடுங்கள்

சிலர், 'குழந்தைகள் பிறந்துவிட்டார்கள், வளர்ந்து விட்டார்கள்' என்று அதையே ஒரு காரணமாகச் சொல்லி தாம்பத்திய உறவைத் தவிர்ப்பார்கள். கணவன்மனைவி உறவுக்குள் இதன் காரணமாகவும் இடைவெளி உண்டாகும். அதனால், மாதத்தில் இதற்கென்று சில நாட்களாவது தம்பதியர் திட்டமிட்டு ஒதுக்க வேண்டும்.

**நீங்கள் எழுத்துது'துறையில் தடம் பதிக்க முக்கிய காரணம் என்ன...?**

வாசிப்பது எனக்கு ரொம்ப பிடித்த விடயம் என்னை எழுதத் தூண்டியதும் அந்த ஆர்வமே நான் பார்த்து வளர்ந்த பிரதேசத்தை எழுத்தில் கொண்டு வர வேண்டும் என்பது எனது ஆசையாகும். சமூகத்தை கவனிக்க வைக்கும் விடயங்களை எழுதுவது சிறப்பானது என்பதை உணர்ந்து கொண்டேன். வாசிப்பில் அதிக ஆர்வம் காணப்பட்டாலும் புத்தகங்கள் வாங்கும் அளவிற்கு வசதி காணப்படவில்லை. உதவுவதற்கும் யாரும் முன் வரவில்லை. என்னுள் ஓர் ஆதங்கம் என்னை தள்ளி விட்டு சிரித்தார்கள் முன்னிலையில். நான் எழுந்து நிற்க வேண்டும் என்று,

இவ்வாறு இருந்த சந்தர்ப்பத்தில் 2018 உயர் தர கல்வியை மேற்கொண்டேன். அப்போது A/L Project செய்யும் படி பாடசாலை அதிபர் புர்கான் ஆசிரியர் அனைவருக்கும் கூறினார்கள் அதற்காக நான் தெரிவு செய்த தலைப்பு"உளவளத்துணை" 3மாதத்திற்குள் தயாரிக்கும் படி அனைவருக்கும் கூறினார் நான் அதனை 6வாரங்களில் அதிபரின் பார்வைக்கு வைத்தேன். அதை பார்வையிட்ட அடுத்த கணமே இதனை ஒரு புத்தக வடிவில் வடிவமைப்பு செய்யுமாறு ஊக்குவிப்பு செய்தார். எனது தாயின் உதவியுடன் சிறந்த முறையில் 500 பிரதிகளுடன் வெளியீடு செய்யப்பட்டது.

இதுவே எனது இலக்கு நோக்கி நகர்ந்த முதல் அடி

**உங்களை பாதித்த ...அதிலிருந்து மீண்டு வந்த சம்பவங்கள் ஏதாவது...?**

நான் பிறப்பதற்கு முன்பே எனது தாய் பல துன்பங்களை அனுபவித்து கொண்டு பொறுமையுடன்வாழ்ந்து வந்தார். என்று என்னிடம் கூறுவார். நான் பாடசாலை சென்ற முதல் நாள் எனது தாய் மாத்திரமே என்னுடன் வந்தாள் அதுவே நான் உணர்ந்த முதல் வலி.

நான் ஏழை வீட்டு பிள்ளை என்பதால் ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் என்னை மிகவும் கீழ்த்தரமான முறையில் நடாத்தினார்கள். வீட்டு நிலை கூறும் போது எனது வீட்டுக் கூரை கைகளால் பிடிக்கக் கூடிய அளவில் காணப்பட்டது தகரங்களால் அமைக்கப்பட்டு சீரற்றதாக காணப்பட்டது . கதவு.ஜன்னல்கள் அற்ற வீடாக காணப்பட்டது . மழை காலங்களில் பீரிட்டு ஓடும் சேற்று நீர் வீட்டினுள் நுழைந்து விடும். நான் பாடசாலை சென்ற நாட்களை விட அதிக நேரம் எனது தம்பி தங்கையுடனே எனது நேரத்தை செலவிட்டேன். காரணம் தாய் வேலைக்கு செல்வதால் இவர்களை பார்க்க வேண்டிய நிலை. பாடசாலையில் என்னை சக நண்பர்கள் குடிகாரனின் மகள் என்றே அழைக்கின்றனர். தாயின் அன்பினால் இவை மறந்து படிப்பில் கவனம் செலுத்தினேன். இவற்றுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும் என்று என்னுள் ஓர் ஆதங்கம்.

2015 சாதாரண தர பரீட்சையை எதிர் நோக்கினேன். விடுமுறை காலப் பகுதியில் தாயின் வேண்டுகோள் இனங்க திகாரி அக்ரா நிறுவனத்தில் உளவியல் கற்கை நெறியை பூரணமான முறையில் பூர்த்தி செய்து விட்டு நான் கல்வி கற்ற அதே பாடசாலையில் உதவி ஆசிரியராக இரண்டரை வருடங்கள் பணியாற்றினேன். 2018 உயர் தர கல்வியை மேற்கொண்டேன் இவ்வாறான காலகட்டத்திலும் யாரும் உதவ முன் வரவில்லை.

உயர் தர கல்வியை சில நாட்கள் பாடசாலை சென்று பின்னர் குடும்பத்தில் வறுமை அதிகரிப்பு காரணமாக மீண்டும் வேலைக்கு தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு சென்றேன். இதற்கிடையில் தனியார் கல்வியின் முலம் உயர் தர பரீட்சையை முடித்து விட்டேன்.

எனது முதல் புத்தக வெளியீடு 2017ம் ஆண்டு நடைபெற்றது. புத்தக வெளியீட்டின் பின்னர் என்னை தள்ளிவிட்டு சிரித்தவர்கள் எல்லாம் என்னுடன் இணைந்து கைகோர்க்க ஆரம்பித்தார்கள். இதுவே மனித குணம் என்பதை அறிந்து கொண்டேன்.

30.01.2021 திருமணம் முடித்தேன் கணவர் ரிஹ்மி ஹகீம். ஒரு ஊடகவியலாளர். திருமணத்திற்கு முன் எனது தாய் எனக்கு உறுதியாகத் திகழ்ந்தார்.இப்போது எனது இலக்கு நோக்கி செல்ல எனக்கு இரண்டு உறுதியான தூண்கள் காணப்படுகின்றன. அத் தூண்கள் எனது அன்புத் தாயாரும் அன்பக் கணவரும் ஆவார்கள்.

நீங்கள் புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறீர்களா...அத்தோடு உங்களுக்கு கிடைத்த விருதுகள்பற்றியும் சொல்லுங்கள்...?

ஆம் நான் வெளியீடு செய்த முதல் நூல் "உளவளத்துணை" 500 பிரதிகளுடன் வெளியீடு செய்யப்பட்டது.

இரண்டாவது நூல் "உள நோய்களும் அதற்கான தீர்வுகளும்"

மூன்றாவது நூல் " இலங்கை வாழ் இனத்தவர்கள் யாவர்"

இரண்டாவது மற்றும் மூன்றாவது நூல் இன்னும் வெளியீடு செய்யப்படவில்லை.

எட்டு விருதுகளையும் 50 சான்றிதழ்களையும் பெற்றுள்ளேன்.

விருதுகள்.

★இளம் எழுத்தாளர் விருது
★எழுத்தின் இனிமை விருது
★ எழுத்துப் பணி விருது
★ Woman Excellence award
★ மங்கையர் போற்றுக் கவி விருது
★ சிந்தனை மேதகு மகளீர் விருது
★ தூய்மை கவிஞர் விருது
★ தாய்மொழி கவிஞர் விருது

இந்தியாவில் நாடாத்தப்பட்ட உலகசாதனை ஆயிரம் கவிஞர் ஆயிரம் கவிதைகள் என்ற நூலில் எனது கவிதை 523வது இடத்தை பிடித்துள்ளது.

இந்தியாவில் இயங்கி வரும் முத்தமிழ் இலக்கிய மன்றம் குழுமத்தில் இலங்கை ஒருங்கிணைப்பாளராக உள்ளேன். பல போட்டி நிகழ்ச்சிகளில் நடுவராகவும் நெறியாளராகவும் கலந்து கொண்டுள்ளேன். மற்றும் சம்மாந்துறையில் இயங்கி வரும் Talent plus TV நிறுவனத்தின் General Director ஆகவும் பணியாற்றுகிறேன்.

லயத்துக்கு ஒரு கோடி என்ற நூலில் எனது கவிதை நான்காம் இடத்திலும் உள்ளது. இரண்டு முறை கொழும்பு றோயல் கல்லூரியில் நடுவராக கலந்து கொள்ள வாய்ப்பு கிடைத்தது அல்ஹம்துலில்லாஹ்.

**நேர்காணலின் இறுதியாக சொல்ல விரும்புவது..?**

வாசிக்க வேண்டும். வாசிப்பு முக்கியமானது வாசிப்பில் ஆர்வம் உள்ளவர்களால் மட்டுமே எழுத முடியும். அத்தோடு படைப்புக்கள் பற்றிய அறிவும் முக்கியமானது. தாம் வாழும் சமூகத்தை கூர்ந்து கவனிக்க வேண்டும். அவற்றை மனதில் உள் வாங்கி எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்த வேண்டும். எமது காலத்தைப் போன்ற சூழல் தற்போது இல்லை. மாற்றங்கள் நிறைந்த வசதி வாய்ப்புக்களுடன் கூடிய சுழல் காணப்படுகின்றது. ஆகையால் சந்தர்ப்பத்தைப் பயனுள்ளதாக்குங்கள்.

நீங்கள் எளிமையான பின்னணியில் இருந்து வருபவராக இருக்கலாம். உங்களுடைய ஆங்கிலம் குறித்த ஒருவித தயக்கம் இருக்கலாம். ஆனால் இவை எதுவுமே உங்களுக்கு சாதிப்பதற்கு ஒரு தடை அல்ல.

நானும் இதே சூழ்நிலையில் இருந்து, படித்து, இன்று இந்த சிறந்த நிலைக்கு காரணம் என்கிற முறையில் உங்களுக்கு சொல்வது இதுவே. உங்கள் நம்பிக்கையும் முயற்சியுமே உங்கள் வெற்றியை நிர்ணயிக்கும் காரணிகள்.

**நம் சமூகத்தில் பெண் பிள்ளையை குடும்பப் பொறுப்பினை சுமப்பதையே முன்னிறுத்தி, அவர்களுடைய தனிப்பட்ட லட்சியங்களை பின்னிக்குத் தள்ளுவது இன்னும் தொடர்ந்து வரும் நிலையில், பெற்றோருக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

சமத்துவம், பெண் முன்னேற்றம் என்பது நிச்சயம் வீட்டில் இருந்தே துவங்குகிறது. உங்கள் பிள்ளைகளுக்கு நம்பிக்கையாய் ஆதரவாய் நீங்கள் இருந்தால் உங்கள் வீட்டுப் பெண்களும் சாதிக்க முடியும்.

நேர்காணல்
பாத்திமா நளீரா



# "சினிமாவில் பத்து வருடங்கள் தாக்குப் பிடிப்பதே கஷ்டம்தான்"

பரத்

நடிகர் பரத்தின் 50வது படமான 'லவ்' படத்தின் இசை மற்றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று பேசிய அவர், "சினிமாவை பொறுத்தவரை தொடக்கம் நன்றாக இருந்தாலும் போக போக கடினமானதாக மாறிக்கொண்டிருக்கும். 10 வருடங்கள் தாக்குப் பிடிப்பதே கஷ்டம்தான். அந்த மொத்த திரைப் பயணமே கடினமாகத்தான் இருக்கும். இன்று நான் 50 படங்களில் நடித்திருக்கிறேன். அதில் நான் ஒரு சில படங்கள் சொதப்பியிருக்கிறேன்.

படம் முடித்ததிலிருந்து ரிலீஸ் தேதி அறிவிப்பது வரை பெரும் மன உளைச்சலை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் மீறி ஆடியோ வெளியீட்டு விழா நடத்தி படத்தை சரியான நபரிடம் சேர்த்து ரிலீஸ் செய்வது மிகப்பெரிய விஷயமாக உள்ளது. சினிமா... ஓடிடி, தியேட்டர் என இரண்டாக பிரிந்துவிட்டது. அதைப்பற்றி பேசினால் அது பெரும் விவாதமாகிவிடும். இந்தப் படம் ஒரு நல்ல கன்டென்ட் படம். இதனை வழக்கமான படமாக பார்க்காதீர்கள். படம் உங்களை போராடிக்காமல் என்டர்டெயின் செய்யும். சினிமாவை பொறுத்தவரை நாம் ஒன்று நினைத்திருப்போம். அது நடக்காது. நினைக்காதது சில சமயங்களில் நடக்கும். எது எப்படியோ லவ் படம் உங்களை நிச்சயம் ஏமாற்றாது" என பேசினார்.



தொடர்ந்து செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது, "அன்று காதல் படத்தில் நடித்தேன். இன்று என்னுடைய 50வது படமாக 'லவ்' படத்தில் நடித்திருக்கிறேன். 'கண்டேன் காதலை' போன்ற காதல் படங்கள் எனக்கு கைகொடுத்திருக்கின்றன" என்றார்.



# சம்பளத்தை உயர்த்திய கீர்த்தி சுரேஷ்

நடிகையர் திலகம் படத்தில் தேசிய விருது பெற்ற கீர்த்தி சுரேஷ் மளமளவென அதிக படங்களில் நடித்து முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். ரஜினி முருகன் முக்கிய படமாக அமைந்தது. விஜய்யுடன் பைரவா, விக்ரமுடன் சாமி 2, தனுசுடன் தொடரி, ரஜினிகாந்துடன் அண்ணாத்த என்று பெரிய நடிகர்கள் படங்களில் தொடர்ந்து நடித்தார். பின்னர் கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் கதையம்சம் கொண்ட படங்களில் நடிக்க தொடங்கினார். ஆனாலும் அவரது படங்கள் பெரிய அளவில் வெற்றி பெறவில்லை என்று பேசப்பட்டது. இந்த நிலையில் உதயநிதியுடன் நடித்து சமீபத்தில் திரைக்கு வந்த மாமன்னன் படம் வசூல் சாதனை நிகழ்த்தி வெற்றி படமாக அமைந்துள்ளது. இதையடுத்து கீர்த்தி சுரேஷ் சம்பளத்தை உயர்த்தி விட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. இதுவரை ரூ.2 கோடி வாங்கியவர் இப்போது ரூ.3 கோடி கேட்பதாக கூறுகின்றனர். தற்போது கதாநாயகிக்கு முக்கியத்துவம் அளிக்கும் கதையம்சம் கொண்ட கண்ணிவெடி படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளார்.



# ராஷ்மிகா மந்தனாவை எமோஷனல் ஆக்கிய படம்

நடிகை ராஷ்மிகா மந்தனா தென்னிந்தியாவில் முன்னணி ஹீரோயின்களில் ஒருவராக இருந்து வருகிறார். அடுத்து அவர் புஷ்பா 2 படத்தில் நடித்து வருகிறார். மேலும் ஹிந்தியில் ரன்பீர் கபூர் நடிக்கும் அனிமல் படத்தில் ஹீரோயினாக நடித்து இருக்கிறார். ராஷ்மிகா தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டா உடன் காதலில் இருப்பதாக கூறப்பட்டு வருகிறது. அவர்கள் ஜோடியாக வெளிநாட்டுக்கு சென்று வருகிறார்கள்.

ஆனால் காதலை பற்றி வெளிப்படையாக அவர்கள் அறிவிக்கவில்லை. இந்நிலையில், தற்போது விஜய் தேவரகொண்டாவின் தம்பி ஆனந்த் தேவரகொண்டா ஹீரோவாக அறிமுகம் ஆகி இருக்கிறார், பேபி என்ற அந்த படத்தினை பற்றி தற்போது ராஷ்மிகா ஒரு பதிவை போட்டிருக்கிறார். "அந்த படத்தை பார்த்து தியேட்டரிலேயே அழுதுவிட்டேன். ஒவ்வொரு காட்சியும் என் இதயத்தில் நீண்ட காலத்திற்கு இருக்கும்" என அவர் கூறி இருக்கிறார்.



# மேடையிலேயே கண்கலங்கிய சிவகுமார்



தமிழ் சினிமாவில் சுமார் 40 ஆண்டுகளாக ஹீரோ, குணச்சித்திர கதாபாத்திரங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தவர் தான் நடிகர் சிவக்குமார். இவருக்கு பின்பு அவருடைய இரண்டு மகன்களான சூர்யா மற்றும் கார்த்தி இருவரும் கோலிவுட்டில் தற்போது கலக்கிக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில் சிவக்குமார், மகன்களை மேடையில் வைத்துக்கொண்டே கண் கலங்கினார். இதை அவருடைய இரண்டு மகன்களும் பார்க்க முடியாமல் தலை குனிந்து வருத்தப்பட்டனர். சிவக்குமார் கல்வி அறக்கட்டளையின் 44வது ஆண்டு நிகழ்வு சென்னையில் சமீபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவில் தமிழகத்தில் இருக்கும் 12 ஆம் வகுப்பு ஏழை மாணவர்களுக்கு ஊக்கத் தொகையும் விருதும் வழங்கப்பட்டது. அப்போது கலந்து கொண்டு பேசிய சிவக்குமார், குடும்ப சூழ்நிலையினால் படிப்பை நிறுத்தி விடக் கூடாது என அவருடைய சிறு வயது கதையை சொல்லி கண் கலங்கினார். சிவக்குமார் தன்னுடைய தந்தை கருப்பா சிவப்பா என்று கூட பார்த்ததில்லை. அவர் 10 மாத குழந்தையாக இருக்கும்போதே அவருடைய தந்தை இறந்து விட்டார். அதன் பின்பு இவருக்கு 4 வயதில் இருக்கும்போதே குடும்ப பாரத்தை சுமக்க இருந்த அண்ணனும் 14 வயதில் பிளேக் நோயில் இறந்து விட்டார். அவர்கள் ஊரில் மழை பெய்யாததால் சோளம், ராகி என எந்த விளைச்சலுமே இல்லை. ஆனால் எருக்கன் செடியும், அரளி செடியும் வளர்ந்து நின்றது. புருஷனும் போய்விட்டார், குடும்பத்தைத் தூக்கி நிறுத்த வேண்டிய மகனும் இறந்துவிட்டார் என்ற விரத்தியில், அன்று என்னுடைய தாய் அரளிக் கொட்டையை அரைத்து எனக்கு கொடுத்திருந்தால் அன்றே கதை முடிந்திருக்கும். ஆனால் அந்த அப்பாவிமக அதை செய்யாமல் விட்டதால்தான் இன்று இங்கே நிற்கிறேன் என்று மேடையில் கண்கலங்கி அழுதார். இதை சிவக்குமார் அங்கிருக்கும் மாணவர்களுக்கு ஏழ்மை கல்விக்கு தடையாக இருக்கக் கூடாது என்பதை உணர்த்துவதற்காகவே பகிர்ந்து கொண்டார். ஆனால் அதே மேடையில் இருந்த சூர்யா மற்றும் கார்த்தி இருவரும் தந்தை பட்ட கஷ்டத்தையும், அவர் கண்கலங்கி நிற்பதையும் நிமிர்ந்து கூட பார்க்க முடியாமல் அவர்களும் கண் கலங்கியபடி தலைகுனிந்து அந்த மேடையில் அமர்ந்திருந்தனர். இந்த வீடியோ தற்போது சோசியல் மீடியாவில் வைரலாக பரவுகிறது.





# நயன்தாரா திருமணத்தால் விஜய் சேதுபதிக்கு கிடைத்த 20 கோடி ரூபா..!

நயன்தாராவின் திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டதால் மக்கள் செல்வன் விஜய் சேதுபதிக்கு ரூ. 20 கோடி கிடைத்திருக்கிறது. நடித்தால் ஹீரோவாக மட்டுமே நடிப்பேன் என்றெல்லாம் அடம்பிடிக்காதவர் விஜய் சேதுபதி. சக ஹீரோக்களுக்கு வில்லனாக நடித்து மிரட்டுகிறார். விஜய் சேதுபதி ஒரு படத்தில் வில்லனாக நடிக்க ஒப்புக் கொண்டால் ஹீரோவுக்கு நிகராக பெயர் வாங்கிவிடுகிறார். சில சமயங்களில் ஹீரோவையே ஓவர்டேக் செய்துவிடுகிறார். இந்நிலையில்தான் ஜவான் படத்தில் பாலிவுட் சூப்பர்ஸ்டாரான ஷாருக்கானுக்கு வில்லனாக நடித்திருக்கிறார். அப்படி ஷாருக்கானுடன் மோத விஜய் சேதுபதிக்கு ரூ. 20 கோடி சம்பளம் கொடுத்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. கடந்த ஆண்டு நடந்த நயன்தாரா, விக்னேஷ் சிவன் திருமணத்தில் விஜய் சேதுபதி கலந்து கொண்டார். அங்கு ஷாருக்கானை பார்த்ததும் அவரிடம் சென்று, ஜி உங்கள் படத்தில் வில்லனாக நடிக்க ஆசையாக இருக்கிறது என்று கூறியிருக்கிறார் விஜய் சேதுபதி. இதையடுத்து அட்லியை அழைத்து விஜய்யையே நம் படத்தில் வில்லனாக்கிவிடலாம் என்று கூறினாராம் ஷாருக்கான். அப்படித்தான் ஜவான் படத்தில் வில்லனாக நடிக்கும் வாய்ப்பு விஜய் சேதுபதிக்கு கிடைத்தது.

# காஷ்மீர் சென்றார் SK



மடோன் அஸ்வின் இயக்கத்தில், சிவகார்த்திகேயன் நடித்த 'மாவீரன்' படம் வெள்ளிக்கிழமை வெளியானது. வரவேற்பைப் பெற்றுள்ள இந்தப் படத்தில் அதிதி ஷங்கர், சரிதா, மிஷ்கின், யோகிபாபு உட்பட பலர் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தின் புரமோஷனுக்காக, 'எஸ்கே 21' படத்தின் படப்பிடிப்பில் இருந்து கடந்த வாரம் சென்னை வந்தார். ஹைதராபாத், கேரளா, சென்னை என புரமோஷன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சிவகார்த்திகேயன், பட ரிலீஸுக்கு மறுநாள் 'எஸ்கே 21' படத்துக்காக காஷ்மீர் சென்றார். இந்தப் படத்தில் சாய் பல்லவி நாயகியாக நடிக்கிறார். ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்கும் இப்படத்தை ராஜ்குமார் பெரியசாமி இயக்குகிறார். இதில் ராணுவ வீரராக சிவகார்த்திகேயன் நடிக்கிறார். கமல்ஹாசனின் ராஜ்கமல் பிலிம்ஸ் இன்டர்நேஷனல் நிறுவனம் தயாரிக்கிறது.

# திருமணம் செய்து கொள்ளாதது ஏன்? | நடிகை சதா விளக்கம்

'ஜெயம்' படம் மூலம் தமிழில், நடிகையாக அறிமுகமானவர் சதா. இந்தப் படம் 2003ம் ஆண்டு வெளியானது. தொடர்ந்து எதிரி, வர்ண ஜாலம், அந்நியன், பிரியசகி, உன்னாலே உன்னாலே, திருப்பதி உட்பட பல படங்களில் நடித்த அவர், தெலுங்கு, இந்தியிலும் நடித்து வந்தார். இந்நிலையில் 39 வயதான சதா, சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில் திருமணம் செய்துகொள்ளாதது ஏன் என்பதற்கு விளக்கம் அளித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது: திருமணம் செய்து கொண்டால் சுதந்திரத்தை இழக்கிறோம். அதனால் திருமணம் பற்றி யோசிக்கவில்லை. இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நான் விரும்பியதைச் செய்கிறேன். திருமணம் செய்துகொண்டால் இது முடியுமா என்பது தெரியவில்லை. திருமணப் பந்தத்தில் புரிந்துகொள்பவர் கிடைத்தால் பரவாயில்லை. இல்லை என்றால் அது சரியாக அமையாது. இந்தக் காலகட்டத்தில் பலர் ஆடம்பரமாகத்திருமணம் செய்துகொண்டு, சில நாட்களிலேயே பிரிந்துவிடுகிறார்கள். அதற்குத் திருமணம் செய்யாமலேயே இருக்கலாமே? இவ்வாறு சதா தெரிவித்துள்ளார். அவரின் இந்தக் கருத்து சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.



# விஷாலுடன் இணைந்த பிரியா பவானி சங்கர்



விஷால் 34 படத்தின் கதாநாயகி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. விஷால் தற்போது திரிஷா இல்லனா நயன்தாரா, அன்பானவன் அசராதவன் அடங்காதவன் போன்ற படங்களை இயக்கிய ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் 'மார்க் ஆண்டனி' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தின் நாயகியாக ரித்து வர்மா நடித்துள்ளார். மேலும் எஸ்.ஜே.சூர்யா மற்றும் செல்வராகவன் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்திருக்கிறார்கள். ஜி.வி பிரகாஷ் இசையமைத்துள்ள இப்படம் விநாயகர் சதுர்த்தி அன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இதைத்தொடர்ந்து விஷாலின் 34வது படத்தை சாமி, அருள், ஆறு, சிங்கம் உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குனர் ஹரி இயக்கவுள்ளார். இப்படத்தை ஜீ ஸ்டுடியோஸ் சவுத் மற்றும் இயக்குனர் கார்த்திக் சுப்பராஜின் ஸ்டோன்பெஞ்ச் ஃபிலிம்ஸ் இணைந்து தயாரிக்கின்றன. இந்த படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு சமீபத்தில் தொடங்கியது. விஷாலுடன் இணைந்த பிரியா பவானி சங்கர்

இந்த நிலையில், விஷால் 34 படத்தின் கதாநாயகி குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. அதன்படி, இந்த படத்தில் நடிகை பிரியா பவானி சங்கர் கதாநாயகியாக நடிக்கிறார். இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளது. விஷாலுடன் பிரியா பவானி சங்கர் முதல் முறையாக இணைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# வீட்டில் தனியாக இருக்கும் குழந்தைகளுக்கு கற்றுத்தர வேண்டியவை

வீட்டின் கதவு தட்டப்படும் ஓசை கேட்டதும், ஓடிச் சென்று கதவை திறக்கும் ஆர்வம் குழந்தைகளிடம் அதிகமாக இருக்கும். அவர்கள் வீட்டில் தனியாக இருக்கும் போது யாராவது கதவைத் தட்டினால், முதலில் வெளியில் இருப்பவர் யார்? எதற்காக இங்கே வந்திருக்கிறார்? என்று கவனிப்பதற்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில், குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக பெற்றோர் இருவரும் பணிக்குச் செல்ல



வேண்டிய கட்டாயம் உள்ளது. இதனால், பிள்ளைகளை வீட்டில் தனியாக விட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு பெற்றோர் தள்ளப்படுகிறார்கள். அத்தகைய சமயத்தில் குழந்தைகளின் பாதுகாப்பு குறித்த கவலைதான் பெற்றோரின் மனதில் உழன்று கொண்டிருக்கும். இதைத் தவிர்க்க சில அடிப்படை விஷயங்களை குழந்தைகளுக்கு கற்பித்தால் பதற்றமின்றி பெற்றோர் தங்கள் பணிகளை மேற்கொள்ளலாம்.

பெற்றோர் வீட்டில் இருந்தாலும், வெளியில் இருந்தாலும் தங்கள் குழந்தைகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பது அவசியம். பல குழந்தைகள் வீட்டில் தனியாக இருக்கும்போது டிஜிட்டல் சாதனங்களில் மூழ்கிக் கிடக்கிறார்கள். எனவே டிஜிட்டல் சாதனங்களை பயன்படுத்துவது, படிப்பது, வீட்டுப் பாடங்களை முடிப்பது என ஒவ்வொன்றுக்கும் நேரம் ஒதுக்கி அட்டவணையை தயார் செய்து செயல்பட குழந்தைகளுக்கு பெற்றோர் உதவ வேண்டும். தினமும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பெற்றோரில் ஒருவருடன் தொடர்பில் இருக்க குழந்தைகளுக்கு அறிவுறுத்துவது சிறந்தது. இதனால் தேவையற்ற பதற்றம் குறையும்.

வீட்டில் குழந்தைகள் தனியாக இருக்கும்போது, ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால் பெற்றோரையும், மற்றவர்களையும் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும்? அத்தகைய நேரங்களில் எப்படி செயல்பட வேண்டும்? என்பதை குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் தொடர்பு எண்கள், அவசர உதவி எண்கள் ஆகியவற்றை எழுதி வீட்டின் முக்கியப் பகுதிகளில் எளிதில் பார்வையில் படும்படி ஒட்டி வைக்க வேண்டும். முக்கிய அழைப்புகளுக்கு பதில் அளிப்பது குறித்த பயிற்சியையும் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுப்பது நல்லது.வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், சில விஷயங்களை சோதித்து பார்ப்பதில் குழந்தைகளுக்கு அதிக ஆர்வம் இருக்கும். எனவே தீக்குச்சிகள், கத்தி ஆகியவற்றை அவர்களுக்கு எட்டாத உயரத்தில் வைக்க வேண்டும்.

# குழந்தைகளுக்கு புத்தகம் பரிசளிக்கும்போது நினைவில்கொள்ள வேண்டியவை



குழந்தைகள் கிழித்தாலும், தூக்கி எறிந்தாலும் பரவாயில்லை என மீண்டும் அவர்கள் கையில் புத்தகத்தை எடுத்துக் கொடுப்பது சிறந்தது. புத்தகம் பற்றிய செயல்பாட்டை ஆரம்ப கட்டத்தில் இருந்தே அவர்கள் தெரிந்துகொள்ள, இது ஒரு சிறந்த நடைமுறை பழக்கமாகும். குழந்தைகளுக்கு பிறந்த நாள் மற்றும் சிறப்பு நாட்களின்போது பொம்மைகள், துணிகள், இனிப்பு வகைகள் ஆகியவற்றை பரிசளிப்பது அனைவரதும் வழக்கம். தற்போது, வாசிக்கும் ஆர்வத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்தும் விதமாக, பலரும் புத்தகங்களை பரிசளித்து வருகிறார்கள். புத்தக வாசிப்பு அடுத்த தலைமுறைக்கும் செல்ல வேண்டும்.

குழந்தைகளுக்குப் புத்தகங்களை அறிமுகப்படுத்துவதற்கு தனிப்பட்ட வயது வரம்பு இல்லை. பொம்மைகளை அறிமுகப்படுத்தும் போதே, புத்தகத்தையும் அறிமுகம் செய்யலாம். புத்தகங்களை கிழித்து விடுவார்கள் என்ற பதற்றத்தில் அவர்களை மிரட்டுவது, அடிப்பது, திட்டுவது போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கலாம். இவை புத்தகங்கள் மீது அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தக்கூடும். குழந்தைகள் கிழித்தாலும், தூக்கி எறிந்தாலும் பரவாயில்லை என மீண்டும் அவர்கள் கையில் புத்தகத்தை எடுத்துக் கொடுப்பது சிறந்தது. புத்தகம் பற்றிய செயல்பாட்டை ஆரம்ப கட்டத்தில் இருந்தே அவர்கள் தெரிந்துகொள்ள, இது ஒரு சிறந்த நடைமுறை பழக்கமாகும். நடக்கப் பழகாத குழந்தைகளுக்கு பல வண்ணப் படங்கள் இருக்கக் கூடிய, கெட்டியான அட்டைகள் உள்ள புத்தகங்களை முதலில் வாங்கிக் கொடுக்கலாம். குழந்தைகள் நடக்க ஆரம்பித்த பின்னர், ஒரு பக்கம் முழுவதும் படங்களும், மறுபக்கம் முழுவதும் பெரிய அளவு எழுத்துக்களால் எழுதப்பட்ட ஒரு சில வார்த்தைகளும் இருக்கக்கூடிய புத்தகங்களை தேர்வு செய்யலாம். பேச ஆரம்பிக்கும் குழந்தைகளுக்கு, படங்களுடன் கூடிய பெரிய எழுத்துக்களால் ஆன ஒரு வரி கதைகள் கூறும் புத்தகத்தை வாங்கிக் கொடுக்கலாம்.

# இயற்கை அழகு குறிப்புகள்

பெண்கள் அழகிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர், அத்தகைய அழகை வெளிப்படுத்த சருமத்தைப் பராமரிப்பது மிகவும் அவசியமாகிறது. அந்த அழகை பராமரிக்க இயற்கையான சில "இயற்கை அழகு குறிப்புகள்" கீழே கொடுக்கப்பட்டுள்ளன.




அரிசி கழுவிய நீரில் முகம் கழுவினால் சருமத்தில் உள்ள அழுக்குகளை மட்டும் நீக்காமல் உள்ளிருக்கும் அதிக எண்ணெய் மற்றும் கரும்புள்ளிகளையும் அகற்றும். முகம் பளபளக்க புதினா சாறு, எலுமிச்சை சாறு இரண்டையும் வெந்நீரில் கலந்து மூன்று நாட்களுக்கு ஒரு முறை முகத்தில் ஆவி பிடித்தால் அழுக்குகள் அகன்று சுத்தமாகவும் வசீகரமாகவும் இருக்கும். கசகசா ஒரு ஸ்பூன் எடுத்து தண்ணீருடன் கலந்து அரைத்து முகத்தில் பூசிக் கொண்டு அரை மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான வெந்நீரில் கழுவி வந்தால் முகம் பளிச்சென்று இருக்கும். தினமும் சீரகத் தண்ணீர் குடித்து வந்தால் முகத்தில் பருக்கள் வராது.குளிர்ந்த நீர் சிறிதளவு அதனோடு பால் சேர்த்து துணியில் தொட்டு முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து முகத்தை கழுவி விடவும்.

இதை தொடர்ந்து செய்வதால் முகம் பளபளப்பாகவும் மிருதுவாகவும் மாறும்.

# குமரன் இசைக்குழுவின் மாபெரும் இசை நிகழ்வு



குமரன் இசைக்குழுவின் மாபெரும் இசை நிகழ்வு சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், தினகரன், தினகரன் வாரமஞ்சரி, அமுதமழை நேரலை ஆகியவற்றின் ஊடக அனுசரணையில் அண்மையில் கிளிநொச்சி இளந்தென்றல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளரும் அமுதமழை நேரலையின் உரிமையாளருமான சாந்தனின் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸினால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ்களும் வழங்கப்பட்டு கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.



மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டு விழாவை முன்னிட்டு இரத்தினபுரி நிவித்திகலை தமிழ் வித்தியாலயத்தில் மலையக மகாஜன சேவா சமாஜம் "எமது மக்களிற்கு 200 ஆண்டு "என்ற தொனிப்பொருளில் நடத்திய நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சமாஜம் தலைவர் ஸ்ரீலஸ்ரீ தர்மராஜா குருக்கள் தலைமையில் நடைபெற்றது

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## உயிர் எழுத்துக்களை அதற்குரிய படங்களுடன் இணையுங்கள்



இ
ஈ
அ
ஓ
ஔ
ஏ
ஒ
ஐ
எ
ஆ
ஊ
உ

## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்







# தென்கிழக்கின் கலை, இலக்கியப் பரப்பில் பல்துறைப் படைப்பாளியாகத் தடம் பதித்த கலைஞர் எம்.எச். கரீம்

தென்கிழக்கின் கலை, இலக்கியப் பரப்பில் பல்துறைப் படைப்பாளியாகத்தடம் பதித்தவர் மூத்த கவிஞரும்,கலைஞருமான மருதமுனை எம்.எச்.ஏ.கரீம். தென்கிழக்கின் கலை, இலக்கியப் பரப்பில் மிக நீண்டகாலப் படைப்பாளியாகப் பயணித்து ஆழமாகத் தடம்பதித்திருக்கின்ற ஒருவர் கவிஞர் எம்.எச்.ஏ.கரீம். இவர் இதுவரை கவிதை, மெல்லிசைப் பாடல், நாடகம், நடிப்பு, வில்லுப்பாட்டு, சிறுகதை என்பவற்றுடன் பல நாடகங்களை எழுதி இயக்கி மேடையேற்றி நடித்துமுள்ளார். பல் துறையிலும் தடம்பதித்த இவர் இன்று வரையும் எழுதிக் கொண்டிருக்கின்றார். பாடசாலைக் கல்வி கற்றலோடு நிறைவான இலக்கியப் பணியில் தடம்பதித்துள்ளார்.

எல்லோருடனும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும், நட்பாகவும் சிரித்த முகத்துடன் பழகும் தன்மை கொண்ட இவர் சிறிய தேநீர் கடையுடன் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார். பல மேடைகளில் அதிகமான நாடகங்களை நடித்துள்ளார். நகைச்சுவை நாடகங்களை நடித்து ரசிகர்களின் பாராட்டை பெற்றுள்ளார். பல மேடைகளில் அறிவிப்பாளராகவும், பாடகராகவும் தன்னை அடையாளப்படுத்தியுள்ளதுடன் பல கவியரங்கு மேடைகளிலும் கவிதைகளையும் பாடியுள்ளார். இவர் 1960-07-08ஆம் திகதி மருதமுனையைச் சேர்ந்த மர்ஹூம்களான முகம்மது ஹனீபா, இப்றாஹிமும்மா தம்பதிபதிக்கு மகனாகப் பிறந்துள்ளார். இவர் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் பழைய மாணவருமாவார்.



## பத்திரிகை

இவரது முதல் கவிதை 1978ஆம் ஆண்டு தினகரன் பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து தினகரன், தினகரன் வாமஞ்சரி, வீரகேசரி, வீரகேசரி வாரவெளியீடு, சிந்தாமணி, மித்திரன் வாரமலர்சூடாமணி, இடி, நவமணி, தினக்கதிர், தினமுரசு, ஜனனி. மெட்ரோ நியூஸ், எங்கள் தேசம், தமிழன் உள்ளிட்ட இலங்கையின் தேசியப் பத்திரிகைகளில் இவரது படைப்புக்கள் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சஞ்சிகைகள்

அதிகமான வாழ்த்துக் கவிதைகளையும், இரங்கள் கவிதைகளையும், எழுதியுள்ளதுடன் அதிகமான சஞ்சிகைகளிலும், நினைவு மலர்களிளும் கவிதைகளை பிரசுரமாகியுள்ளன. அத்துடன் அல்ஹஸனாத், தடங்கள், அல்மருதமுனை, வெண்ணிலா கவிதை மஞ்சரி, சமாதானம் ஆகிய சஞ்சிகைகளிலும் கவிதைகள் பிரசுரமாகியுள்ளதுடன் பல பாடசாலைக் கீதங்களையும் இயற்றியுள்ளார்.



## வானொலி

மேலும் இலங்கை வானொலியில் ஒலி மஞ்சரி, வாலிப வட்டம், பாவளம், கவிதைக் கலசம், இளைஞர் இதயம்,விகட தடாகம், இளைஞர் மன்றம், பூவும்பொட்டும் மங்கையர் மஞ்சரி போன்ற நிகழ்ச்சிகளிலும், பிறை எப்.எம். வானொலியிலும் இவரது படைப்புக்கள் ஒலிபரப்பாகியுள்ளது. இலங்கை வானொலியில் உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத் தொகுத்து வழங்கிய ஒலிமஞ்சரி நிகழ்ச்சியில் கரீமின் கவிதைகளை பி.எச். அப்துல் ஹமீத் ரசித்துருசித்து வாசித்திருக்கின்றார்.

இவர் இயற்றிய 25திற்கும் மேற்பட்ட மெல்லிசைப்பாடல்கள் இலங்கை வானொலி அரங்கேற்றம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பாகியுள்ளது. மேலும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையிலும் இவர் இயற்றி எண்பதுக்கும் மேற்பட்ட இஸ்லாமிய கீதங்கள் ஒலிபரப்பாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை வானொலியின் இசைக் குழுவின் இசையில் இலங்கையின் முன்னணி மெல்லிசைப் பாடகர்கள் இவரது பாடல்களைப் பாடியுள்ளனர்.







## மேடை நாடகமும் புத்தக வெளியீடும்

இருபதிற்கும் மேற்பட்ட மேடை நாடகங்களை எழுதி இயக்கி நடித்துள்ளார். அத்துடன் ஏனையவர்கள் எழுதி இயக்கிய நாடகங்களிலும் நடித்துள்ளார். மேலும் நகைச்சுவை நாடகங்களை நடிப்பதிலும் ஓரங்க நாடகங்களை நடிப்பதிலும் மிகவும் திறமை உள்ளவர். 1998ஆம் காலத்தின் காலடியில் என்ற தலைப்பில் கவிதை நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

## விருதுகள்

யூ.ஜே.மீடியா என்ற பிரைஸ் விருது-2013, கல்முனை பிரதேச கலாசார ஆய்வு நிலையத்தின் கலைஞர் விருது-2008, இஸ்லாமிய இலக்கிய ஆய்வுப் பொன் விழா விருது-2016, சர்வதேச தடாக கலை, இலக்கிய வட்டம் தமிழ்ச்சுடர் விருது-2018, கல்முனை கலாசார மத்திய நிலைய சேவை பாராட்டு விருது-2019, கல்முனை பிரதேச செயலக "கலைஞர் சுவதம்"விருது-2020.

கௌரவிப்பு சின்பா சினி ஆட்ஸ் 1990, அந்நுஸ்ரத் 1990, மருதமுனை ஈஸ்டன் யூத் விளையாட்டக் கழகம் 2006, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் ஊடாக கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம். நஸீர் தலைமையில் பிதேச செயலக கலாச்சார அதிகார சபையினால் 20210224ஆம் திகதி இவருக்கு "கலைஞர் சுவதம் விருது" வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. இவர் சேமித்து வைத்த இலக்கிய படைப்புக்கள் அனைத்தும் சுனாமி அனர்த்தத்தில் அள்ளுண்டு போனமை கவலைக்குரியதாகும்.

## கலை, இலக்கிய மன்றம்

மருதமுனை புலவர்மணி ஆ.மு. சரிபுத்தீன் கலை. இலக்கிய மன்றத்தின் தலைவராக இருந்து வழி நடாத்திவருகின்றார். அத்துடன் பல கலை, இலக்கிய மன்றங்களில் உறுப்பினராக இருந்தும் செயற்பட்டுவருகின்றார். கிழக்கு மாகாண வித்தகர் விருது,மத்திய அரசின் கலாபூசண விருது என்பவற்றைப் பெறுவதற்குத் தகுதியானவர் இது வரை இவருக்கு இந்த விருதகள் வழங்கப்படவில்லை. இன்று வரை கலை. இலக்கியப் பணியில் ஈடுபட்டு வரும் இவர் தனது பணியைத் தொடர செந்தூரம் வாழ்த்துகின்றது.

–பி.எம்.எம்.ஏ.காதர்–
(மருதமுனை தினகரன் நிருபர்)

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# ஜமீலை எழுதும் ஆயத்

ஜமீல் கவிதை போலக் கதை சொல்லுகிறார்; அல்லது கதை போலக் கவிதை சொல்லுகிறார். நிகழுலகின் யதார்த்தங்களையும் கற்பனைகளையும் தன்னை அண்மித்த வாழ்வனுபவத்தின் சொல்கொண்டு ஜமீல் படைக்கும் உலகு அற்புதமானது அலாதியானதுளூ அழகானது.

ஜமீல் தன்னை நிர்ணயித்த வெளியொன்றில் சங்கமிக்க சொல் எனும் பறத்தலுக்குச் சிறகெடுக்கிறார். அந்தச் சிறகு வண்ணத்துப்பூச்சியினாலானது.

அதன் வர்ணங்களொத்த லயிப்பு ஜமீலுடையது கவிதையில் ஒன்றிப்போதலெனும் லயிப்பு யதார்த்தம் தப்பாத லயிப்பு அதனாற்றான் கவிதை கதை சொல்லுதல் போல் அவருக்கு வாய்ப்பாகி விடுகிறது.

ஹயா என்ற குழந்தை இயக்கம் அவரது மனசுக்கு நெருக்கமானது. அந்த இயக்க வழி அவர் கண்டடையும் உலகுதான் அவரது கவிதை இயக்கம்.

சம்பவங்கள் கவிதையா அல்லது கவிதைகள் சம்பவமா என்கிற கேள்வி மிதப்புக்கொண்ட தற்காலப் புலத்தில் ஜமீல் கவிதைகளின் சம்பவங்கள் புரிகின்றன. குழந்தைச் சம்பவங்கள் நிறைந்த உளவியலுலகு உள்ளுணர்த்தும் மெல்லுலகு இது.

ஆணின் தாய்மை ஜமீலின் கவியுலகமென பின்னெழுதும் லறீனா அப்துல் ஹக் ஜமீலின் மனமும் சிந்தனை வெளியும் கவிதையாலானவை. உள்ளார்ந்த நுண்தளங்களை ஆழமாக ஊன்றிக் கவனிக்கும் அக்கறை நிறைந்த துப்பறிவாளனைப்போல ஜமீலின் கவிதை மனம் செயல்படுகிறது என்பார்.

'வெறும் மாயவெளிக்குள் தன்னை அடையாளப்படுத்திக்கொள்ளாத ஜமீல் உண்மைக்கும் புனைவுக்குமிடையில் கவிதைகளோடு விளையாடுகிறார்'' என்பார் பின்னட்டையில் டீன்கபூர்.

மின்மினாகளின் வனம் முதல் ஈதல் ஈறாக வியப்புறும் ஆயத் ஜமீலை எழுதுகிறதுளூ ஜமீலின் மனசை எழுதுகிறது




ஜமீலின் உலகை எழுதுகிறது பத்தாவது ஆயத்.

குழந்தைகளுக்கான சுதந்திர உலகைத் தன் கவிதைகளில் பதியாமல் ஒரு தொகுதியையேனும் ஜமீல் தந்ததில்லை. ஆயத்தும் அப்படித்தான். மின்மனிகளின் வனத்தில் வீடு இருளில் கிடக்கிறது. இருளை வாசிக்க கண்ணாடிக் குவளையில் மின்மினிகளை அடைக்கிறார் தந்தை. 'அது பிரகாசமாக ஒளிர்ந்த போதும் மூச்சுத்திணறி இறந்து விடலாமென அஞ்சி பச்சாதாபப்பட்டு தாமதியாது திறந்து விடுகிறாள். அறையெங்கும் விண்மீன்களென பறந்து திரியும் விண்மீன்களோடு அவளும் ஒரு மின்மினியென அலாதியாகப் பறந்து திரிந்தாள். சந்தோசத்தின் உச்சத்தில் அவள் இதழ் வழிந்த சிரிப்பு அறையெங்கும் ஒளியெனப் பெருகி மின்மினிகளின் வனமானது வீடு'என ஹயாக்களின் உலகை ஜமீல் வரைகிறார்.

# உரையாடல் ஒத்தாடல் எதிர்த்தாடல்

அழகியல் இலக்கியத்தின் பால் கோலோச்சும் அற்புதத்தை இலக்கியவரலாறு நெடுகிலும் காணுகிறோம். அழகியல்வாதிகள் இலக்கியமொன்றின் அழகு வெளிப்பாட்டுக்கு முதலிடமளிப்பர். கலைகலைக்காக என்ற ஆதிக்கோஷம் இதன் பாற்பட்டடது. தரமான தனித்துவமான கனதியான படைப்பாக்கத்துக்கு இந்நிலை வழி செய்ததென்பர்.

இந்த அழகியல் நோக்கு படைப்பின் வெளியழகை அல்லது அதன் புறப்பெறுமானத்தை மையப்படுத்தியதேயொழிய அதன் உட்பொருளை அகப்பெறுமானத்தைச் சிரத்தை கொள்வதில்லையென்ற கருத்தியல் தளத்தில் இயங்குவோருமுளர். கலை சமூகத்துக்காக என்கிற அடிநாதம் அவர்களுடையது.

உண்மையில் இலக்கியப்பெறுமானம் அக, முகப் பெறுமானங்களின் கூட்டுத்தான் என்பதனை இலக்கிய வெளியில் கண்டு வந்திருக்கிறோம். அவ்வாறெனில் அழகியலும், சமுதாயவியலும் கலக்குமிடத்தில் இலக்கியத்தின் காத்திரமிருக்கிறது.

சமூகவியலைப் பறந்தள்ளிய அழகியலோ அழகியலைப் புறமொதுக்கிய சமுதாயவியலோ இலக்கியத்தில் நின்று வேர்பிடிப்பதில்லை என்கிற நோக்கில்த்தான் இவ்விரு கோட்பாடுகளை அணுக வேண்டியுள்ளது.

தமிழ்இலக்கிய வரலாற்றில் பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் அழகியல் புனிதமென நோக்கப்பட்டதெனினும் அதற்குள் மிளிர்ந்த சமூகவியல் நோக்கு தலுக்குரியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் சமூக உணர்வு சாதாரண தனி மனிதனுக்குரிய பெறுமானம் மேலெழுந்த நவீன இலக்கியங்களில் அழகியல் அற்புதத்தைக் காணுகிறோம். இத்தகைய இடைவினை மறுதலிக்க முடியாதது.

அழகியல்வாதிகள் சமுதாயவியல்காரர் என்கிற வேறுபாடு இலக்கியப் பொது வெளியில் இனியும் பொருத்தமாக இருக்கப்போவதில்லை.

# ஔவன் கவிதை

சலனமொரு காலம்
மென்னுயிர்த்த
பெருமூச்சின் சலனமொன்று
கருகியுதிரும் காற்றிலெந்தன்
மார்பறையும்
வெம்மையூற்றிய பாலை
வெடிப்பிலூறும்
பாதச்சுவடுமொரு சுமை
தண்மை பொங்கி வழியுமொரு
தடத்திலொரு காலடி பூக்குமாக

மேற்குமிருள்
கிழக்குமிருள்
கனவுக்குள்
இறுகிக்கிடக்குமொரு காலம்
ஒளிச்செண்டு கொண்டு வரும்
புன்னகையை
எங்கு மறைத்தாய்
உய்கிறேன்
மென்னுயிர்த்த பெருமூச்சின்
சலனமொரு காலம்

# விதிக்கப்பட்ட கதை 06

'உச்சி வெய்யில் உடலை வெப்ப மேற்றி முதுகை நனைக்கிறது. மேடு, பள்ளம் என்று சைக்கிள் மிதித்ததில் கால்விரல்களில் ஊமைவலி'' எனக் கதை தொடங்குகிறார் மு.பஷீர்.

பஷீர் மாயச் சொற்புனைவுகளற்ற யதார்த்த மொழிக்காரர்; விஷயச் செறிவார்ந்த கதை சொல்லி; எளிமையும் உணர்வு ததும்பலுமாக கதை பஷீர் கதைகள் வாசக மனசைப் பற்றவல்லன.

எல்லா ஊருக்கும் எல்லாத் தெருக்களுக்கும் எல்லா மனிதருக்கும் அறிமுகமான தபால்காரன் கதை தெளிவு எங்களூரின் மணல் புதைந்த தெருக்களில் சைக்கிளை தள்ளிக்கொண்டு வரும் தபால்காரன் என் நினைவில் நிற்கிறார்;. உறவுகளிடமிருந்து வரும் கடிதத்துக்காக அவரை எதிர்பார்த்து பூவரசு நிழலில் கால்கடுக்க நின்ற நீள் பொழுதுகள் நினைவில் ஊறுகின்றன.

காக்கிச்சட்டையும், தபால் கட்டுக்களுமாய் அலையும் தபால்காரனுக்குப் பின்னால் அவனது கதைகள் பல இருக்கின்றன.

அத்தகைய கதைகளிலொன்று தெளிவு. 'கையில் கடிதக்கட்டுடன் வியர்வை நெடியோடு ஊர்வலம் வருகிறேன்'' எனத் தன்னை அறிமுகம் செய்யும் தபால்காரன் பாறுக்கின் கதையை பஷீர் எழுதுகிறார்.

தபால்காரன் பாறுக், அவன் மனைவி சுலைஹா, மகள் பாத்தும்மா, பரம பக்தன் நிஷ்தார், கடைக்கார ஹாஜியார், மைமூன்கிழவி, மகள் சரீனா என பாத்திரங்கள் இயங்கும் தெளிவில் பாறுக் கதை சொல்லியாகிறான்.

எளிமையான சொல்லாடல், கிராமிய வழக்க உரையாடல், உரைகளில் உணர்வாடல், மனவிடை தோயும் எண்ணங்களினோட்டம் எனக் கதாசிரியர் அழகியதாக தெளிவைச் செதுக்குகிறார்.

ஒரு சமூகத்தின் கதை,வறுமை, போலிமை, ஏமாற்றம், உறவு அநீதம், மனச்சாட்சி நீதத்தை முன்னிறுத்தலென மு.பஷீர் தெளிவாகச் சொல்கிற விடயம் தான் கதையின் மையம்.

தபால்காரனின் வறுமை வாழவழியற்ற சரீனாவின் தயவை எதிர்பார்த்து ஏமாறி மீளமீள எதிர்பார்ப்பிலிருந்த சகீனாக் கிழவிக்குரிய பணத்தை அபகரிக்கும் மனச் சலனத்தை ஏற்படுத்துகிறது. அவனது மனிதம் வெல்லுமிடத்தில் நீதம் மேலெழுகிறது. படிப்பினையூட்டும் கனதியான கதை தெளிவு.

கதை சொல்முறையில் கதாசிரியர் வென்று நிற்கிறார். காட்சிகளை வாசகர் கண்முன் அவர் வரைந்து காட்டும் விதம் அழகானது. ''நிழல் படுத்துறங்கும் செம்மண்பாதை வெள்ளைப்புறாக்கள் துள்ளிக்குதிக்கும் கலவன் பாடசாலை விழுது பரப்பி அடர்ந்து செறிந்த ஆலமரம்...... செயற்கை முகம் தரிக்காத கிராமத்துப் புன்சிரிப்புக்கள்...' என விரியும் அழகு பஷீருடையது.

கிராமத்தின் மொழிதலை மண் வாசனையில் பிசைந்தப்பிய விதம் அழகூட்டுகிறது. ''எங்களுக்கு கடிதம் இருக்கியா', ''ஏன்ட மகள் சரீனா சவூதி பெயித்து மூணு மாசமாவுது மகன்! சல்லியுமில்லை, காயிதமுமில்லை பச்சப்புள்ள மூண்ட ஏண்ட தலேல, பாரம் சாட்டிட்டு பெய்திட்டா... ''ஏண்ட பேரனுக்கு நெருப்பு மாதிரிக் காயுது. டொக்டருக்கிட்ட போவ எண்டாலும் எனக்கிட்ட ஐஞ்சி சதமாலும் இல்ல கல்பு கேட்குதில்ல. இண்டக்கி எண்டாலும் மகள்ட கடிதம் என்னத்தையும் ஈக்கியா...'' பேச்சோசையின் யதார்த்தப் புனைவு தெளிவு.

பாறுக்கின் ஏழ்மை, மைமூன் கிழவியின் வறுமை ஏற்படுத்தும் உணர்வுக்கவிச்சி இக்கதையில் பெறுமானம் பெறுகிறது.

கிழவியின் தரிசனம் வேண்டி சைக்கிள் விரைகிறது எனக்கதை முடியுமிடத்தில் மனிதம் சுரக்கத் தொடங்குகிறது.

மு.பஷீர் ஈழத்தில் கம்பஹாவின் எழுத்தைத் தமிழுக்குத் தந்த முக்கிய ஆளுமை.

# "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்" நூல் வெளியீட்டு விழா












தினகரன், வாரமஞ்சரி பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர்,அமரர் கலாசூரி இ.சிவகுருநாதனின் 20 ஆம் ஆண்டு நினைவாக ஐங்கரன் விக்கினேஸ்வரா(அவுஸ்திரேலியா) தொகுத்த "இலங்கை இதழியலில் சிவகுருநாதன்"நூல் வெளியீடு கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் தினகரன், வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக பணிப்பாளர் ஆசிரியர் பீடம், லேக்ஹவுஸ் சிசிர பரணதந்திரி, சிறப்பு விருந்தினர்களாக ஏ.எம்.நகியா (உறுப்பினர் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு)எழுத்தாளர் லெ.முருகபூபதி (அவுஸ்திரேலியா), முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா, அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரும் IDM நேஷன்ஸ் கம்பஸின் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறையின் தலைவருமான அதி வணக்கத்திற்குரிய பிதா அருட் கலாநிதி எஸ் சந்துரூ பெர்ணான்டோ, வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன் ஆகியோருடன் முன்னிலை வகித்து முதற்பிரதியை இலக்கிய புரவலவர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார்.






















# கலைஞர் ஜோசப் பர்னாந்துக்கு மணிமகுடம் சூட்டும் விழா












## நதுநசியின் நூல் வெளியீட்டு விழா

தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் மாதாந்தம் நடத்தும் "மாதம் ஒருவரை கௌரவிக்கும் நிகழ்வு" எதிர்வரும் 2023.07.29ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்துலாம்பு சந்தியில் உள்ள பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இம்முறை விழாவை கலைஶ்ரீ மன்றமும் ஐயப்பன் படக் குழுவினரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

புரவலர் ஹாசிம் உமர் முன்னணியில் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில், கலைஞரும் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சமாதான நீதிவானுமாகிய ஜோசப் பர்னாந்து கௌரவிக்கப்படவுள்ளார். ரூபவாஹினி ITNஇல் ஆடும் வானம்பாடி ஒளி ஒலி மூலம் அசத்தியவர் கலைஞர் ஜோசப் பர்னாந்து என்பது குறிப்பிடத்தக்கது. ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் பிரதம அதிதியாகவும் சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸ், அகில இலங்கை கிராமிய கலைகள் மன்றத்தின் தலைவர் எஸ். விஜேராஜ், கலைஶ்ரீ மன்றத்தின் தலைவர் கலைஶ்ரீ ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்து கொள்வார்கள். இவ்விழாவில் வைரவிழா கலைஞன் போல்ராஜின் நடன நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

தினகரன் வாரமஞ்சரியில் நதுநசி என்ற புனைப் பெயரில் கவிதைகளை எழுதி வந்தவர் முல்லைத்தீவு, உடுப்புக்குளத்தைச் சேர்ந்த ஆசிரியரான நா. நகுலேஸ்வரன். இவர் தினகரன் வாரமஞ்சரியில் பிரசுரமான கவிதைகளை வைத்து நூல் ஒன்றை அச்சிட்டுள்ளார். இவரின் இந்த நூல் வெளியீட்டு விழாவும் இங்கு இடம்பெறவுள்ளது. கவிஞர் மேமன் கவி நூலின் விமர்சன உரையை நிகழ்த்தவுள்ளார்.






## குறும்படத்துக்கான பிரதியாக்கப் போட்டி

புதிய அலை கலை வட்டம் நடத்தும் எவோட்ஸ் 2023 கலை, கலாசார போட்டித் தொடருக்கான குறும்படப் பிரதி ஆக்கப் போட்டி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான நிபந்தனைகள் பின்வருமாறு.....

1) கதையின் கரு தங்களது சொந்த விருப்பதிற்கு ஏற்றதாக இருக்கலாம்.

2) கதைக்கான நேரம் 10நிமிடங்கள் முதல் 50நிமிடங்கள் வரை இருத்தல் வேண்டும்.

3) கதை தங்களது தனித்துவமான படைப்பு என்பதையும் இதில் வேறு தழுவல்கள்சேர்ப்புக்கள் பிரதிபண்ணல்கள் இல்லை என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

4) கதை மூன்று அங்க அமைப்புகள்(Three Act Structure) எனப்படும் ஆரம்பம்திருப்பம்முடிவு என்பதற்கு ஏற்ப அமைக்கப்பட வேண்டும்.

5) கதைக்கான பாத்திரங்கள் அவற்றின் செயற்பாடு,காட்சி அமைப்பு அதற்கான இடங்கள் மற்றும் வசனமற்ற காட்சிப் படுத்தல்களின் விபரங்கள்,உருவகப்படுத்தப்படும் அம்சங்கள் போன்ற யாவும் எழுத்துவடிவத்தில் அமைந்திருக்க வேண்டும்.

6) இக் கதை முன்னர் படமாக்கப் பட்டதாகவோ அல்லது வேறு போட்டிகளுக்கு அனுப்பபட்டதாகவோ இருத்தல் கூடாது.

7) பிரதி கட்டாயம் ரைப் செட்டிங் செய்து அனுப்ப படவேண்டும் பேனாவால் எழுதி அனுப்பபடுபவை ஏற்றுக் கொள்ள பட மாட்டாது.

8) பிரதியை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

9) ஒருவர் ஒரு பிரதியை மட்டுமே அனுப்ப முடியும் பிரதி யை puthiyaalaikalaivaddam 1980@gmail.com அல்லது 0754880172 என்ற வட்சப் இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

10) நடுவர்களின் முடிவே இறுதியானது.

**பரிசு விபரங்கள்**

**முதலாம் பரிசு**

10.000 ரூபா சான்றிதழ்

**இரண்டாம் பரிசு**

7.500 ரூபா, சான்றிதழ்

**மூன்றாம்பரிசு**

ரூபா 5.000, சான்றிதழ்.

*மேலதிக விபரங்களை பெற*

077 6274099, 0777412604, 077111906, 0762002701


இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுலை மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.